# நாணயம்



புலோலியூர்

க. சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

புலோலியூர் க. சதாசிவம்

11.12.80.

Noolaham Foundation
06 DEC 2021
LIBRARY

704531 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAANAYAM
(NOVEL)

**Written by: Puloiyoor K. Sathasivam**
Kalai Aham,
Puttalai,
Puloly.

**First Edition 29th November 1980**
**Copy-Right to the Author**
**Printer: Badulla Printers, Badulla.**

*முதற் பதிப்பு: ரௌத்திரி கார்த்திகை 1980*
பதிப்புரிமை ஆசிரியருக்கே

விநியோகஸ்தர்கள்:

**பராசக்தி அம்மன் ஸ்டோர்ஸ்**
**71, பிரதான வீதி,**
**பண்டாரவளை**

**நாவலர் புத்தக சாலை**
**புலோலி தெற்கு,**
**புலோலி**

**விலை ரூபா 11-50**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கீரன் அவர்கள்

## எழுதும்

## முன்னுரை

நாவலைப்பற்றி நீண்ட விளக்கங்கள், கருத்துக்கள் எத்தனையோ இருக்கின்றன. எனினும், இவை அனைத்தும் பொதுவான ஒரு கருத்தை ஒப்புக்கொள்கின்றன. நாவல் மனிதனின் கதையாகும்; அவனது வாழ்க்கையின் விளக்கமாகும் என்பதுதான் அது. நாவல் என்ருல் என்ன என்பதற்கு இதையே சுருக்கமான ஒரு விளக்கமாகவும் கொள்ளலாம்.

புதிய இலக்கியம் தோன்றியதிலிருந்து இன்று வரை சிறு கதை, கவிதை, நாடகம் இவைகளைவிட நாவலுக்குத்தான் வாசகரின் செல்வாக்கு அதிகம். பிறரைப்பற்றி அறிய ஆர்வப்படும் மனிதனின் ஒரு பொது இயல்புதான் இதற்குக் காரணம். அடுத்தவரைப்பற்றித் தமக்குள் பலதும் கதைப்பதே வாழ்க்கையின் ஓர் அம்சமாக இருப்பதை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம் நாவல் மனிதனைப்பற்றிச் சொல்வதால் இந்த இயல்பு அதில் ஊக்கிவிக்கப்படுகிறது. அதுவும் மனிதனை – அவன் வாழும் ஊர், சஞ்சாரம் செய்யும் இடங்கள், சூழல், கலாசாரம் ஆகியவற்றுடன் ரசிக்கத்தக்க ஒரு கலைவடிவில் சித்திரிப்பதால் மனிதனின் இந்த இயல்பு நாவலில் தரிக்கிறது. தான் இருந்த அல்லது இருக்கும் ஊரை; அங்கு வாழ் மனிதர்களை, தன்னைச் சேர்ந்தவர்களை, தான் விரும்புகிறவர்களை வெறுக்கிறவர்களை; தான் பார்க்க–அநுபவிக்க ஆசைப்படுவதை: தான் விரும்பும் இலட்சியங்களை, கொள்கைகளை, கருத்துக்களை–இப்படித் தனக்குள் இருக்கும் பலதையும் நாவலில் முழுமையாகத் தரிசிக்க முடிகிறது. இதனுல்தான் நாவல் வாசகனின் செல்வாக்கை அதிகம் பெற்றுள்ளது.

ஒரு நாவலுக்குரிய இந்த இலட்சணங்கள் அனைத்தும் உங்கள் கையில் இருக்கும் 'நாணயம்' என்னும் இந்நாவலில் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவலின் களம் யாழ்ப்பாணக்குடா நாட்டில் உள்ள வடமராட்சிப் பகுதியாகும். யாழ்ப்பாணக்குடா நாட்டின்-சிறப்பாக வடமராட்சியின் குணவிசேஷங்களை யதார்த்த பூர்வமாகவும், சுவையாகவும் இந்நாவலில் சித்திரிக்கிறது. சுருங்கச் சொன்னால் வடமராட்சியின் வாழ்க்கை, முழுமையான மண்வாசனையோடு நம்முன் காட்சியாகப் படைக்கப்பட்டுள்ளது.

தற்போது தொழில் நிமித்தமாக மலையகத்தில் வாழும் இந்நாவலாசிரியர் வடமராட்சியைச் சேர்ந்தவர். வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையகத்திற்கான முதற் பரிசினைப்பெற்ற புலோலியூர் க. சதாசிவம் மிகத்தரமான ஒரு யாழ்ப்பாணப் பிரதேச நாவலைப் படைத்துள்ளமை, தான் வாழும்-வாழ்ந்த-சூழலை சமூகவியலாளனின் கூர்மையான பார்வையோடும் கலையுணர்வோடும் நோக்கும் திறனைக் காட்டுகிறது.

வாழ்க்கைப் பிரச்சினைக்கு இந்நாவலில் தீர்வு காணும் மார்க்கத்தில் எனக்குக் கருத்து வேறுபாடு இருப்பினும், ஆசிரியரின் ஆற்றொழுக்கான கதையோட்டம், ஆழ்ந்து அவதானிக்கும் பண்பு இவற்றால் பெரிதும் கவரப்பட்டு, பாத்திரங்கள், கதை நடைபெறும் களங்கள் எல்லாமே உயிருள்ளதாக என் கண்முன் தெரிய இந்நாவலைப் பல தடவைகள் படித்துச் சுவைத்தேன்.

நல்ல சிறுகதைகள் மூலம் தன்னை ஒரு தரமான படைப்பாளியாக உருவாக்கிக் கொண்ட சதாசிவம், தரமான ஒரு நாவலாசிரியராகவும் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறார். இவ்வகையில் பொதுவாகத் தமிழ் நாவலுக்கும் சிறப்பாக ஈழத்து நாவலுக்கும் தன்பங்கைச் செலுத்தியிருக்கிறார் என்று கூறலாம்.

சதாசிவம் அவர்கள் தொடர்ந்தும் பல நாவல்களைப் படைத்து தமிழ் இலக்கியத்துக்குத் தன் பங்களிப்பை மேலும் செலுத்துவார் என நம்புகிறேன்.

அவருக்கு என் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

## நாகராஜ ஐயர் சுப்பிரமணியம், M.A.

**துணை விரிவுரையாளர்,**

**தமிழ்த் துறை,**

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

குறிப்பிட்ட ஒரு பிரதேசச் சூழலின் தனித்தன்மை வாய்ந்த குணும்சங்களினடியாகத் தோன்றும் சமூகப் பிரச்சினைகளைக் கதைப் பொருளாகத் தேர்ந்து சித்திரிக்கும் 'மண்வாசனை' அல்லது 'பிரதேச' இலக்கியமுயற்சி ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத் துறையில் முனைப்புப்பெறத் தொடங்கி ஏழாண்டுகள் கடந்துவிட்டன. இக்குறுகிய காலகட்ட வரலாற்றின் இன்றைய பிரசவமாக எமக்குக் கிடைத்திருக்கும் 'நாணயம்' என்ற இந்த நாவல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தின் மண்வாசனை நாவல் என்ற சிறப்புக்குரியது.

'நாணயம்' ஆசிரியரான புலோலியூர் க. சதாசிவம் அவர்கள் சமூகப் பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டு பிடிக்கும் ஆர்வத்தால் உந்தப்பட்டு இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்தவர்; அக்காரணிகளைப் புலப்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம் என்ற நம்பிக்கையுடையவர்; சமூக முரண்பாடுகளைக் கலை நயத்துடன் சிறுகதைகளாகப் படைத்து ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் தனது முத்திரையைப் பதித்துப் பரிசும் பாராட்டும் பெற்றவர்; இந்த அநுபவங்களுடன் சிறுகதைத் தொகுதியில் 'யுகப்பிரவேசம்' செய்த அவர் 'நாணய'மாக நாவலிலக்கியத் துறையிலும் அடியெடுத்து வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வுக்குத் தேவையான அடிப்படைகளில் ஒன்று சொல்லும் செயலும் முரண்படாத நேர்மை; இன்னொன்று பணம். முதலாவதின் தளத்தில் நின்றே இரண்டாவது ஈட்டப்பட வேண்டும் என்ற தொடர்பு கருதிப் போலும், ஆன்றோர் இரண்டையும் 'நாணயம்' என்ற ஒரே சொல்லாற் சுட்டினர். நாணயமான வழிகளில் ஈட்டப்படாத 'நாணயம்' நன்மை பயவாது என்பது மட்டுமன்றி ஈட்டுபவனுக்கும் அவனது சந்ததிக்கும் தீமையே விளைவிக்கும் என்பது உலகந் தழுவிய பொது அறப்போதனையாகும். கால தேச வர்த்தமானங்களைக் கடந்த இந்தப் பொதுமையை யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேச சமூக மாந்தரிற் பொருத்திச் சித்திரித்த வகையில் பாரம்பரியமான பண்பாட்டு விழுமியங்களுக்குத் தனது பங்களிப்பைப் புலப்படுத்தியுள்ளார் க. சதாசிவமவர்கள்.

நாணயமற்ற வழிகளில் உறவினரையும் பிறரையும் சுரண்டிக் கொழுத்த வட்டிக்கடை வைத்திலிங்கம் தனது கண்முன்னாலே தனது பரம்பரை கெட்டழிவதைக் கண்டு அக்கவலையென்னும் காலனாலே உயிரிழக்கிறார். கொள்ளி வைக்கக்கூடப் பிள்ளை வந்து சேராத நிலையில், அவருடைய சுரண்டலால் பாதிக்கப்பட்டு வெறுத்துநின்ற அண்ணன் பொன்னையாவே அவருக்கு கொள்ளிவைத்துக் குடமுடைக்கிறார்; இதுதான் கதையம்சம். வைத்திலிங்கத்தின் மகன் இராமலிங்கத்தின் தீயொழுக்கம், மகள் மங்களத்தின் மனைமாண்புக்கு மாறான சொல்லும் செயலும் ஆகியன கதையை வளர்த்துச் செல்லும் அம்சங்கள். இவை நாணயத்தின் ஒரு பக்கம். தம்பியால் பாதிக்கப்பட்ட பொன்னையாவின் குடும்பவறுமையும் உரியவயதில் மணம் முடிக்க முடியாமல் ஏங்கிநிற்கும் மகள் வள்ளிநாயகியின் நிலையும் நாணயத்தின் மற்றப்பக்கம்.

திருமண உறவுக்கு அந்தஸ்து, வீடு. பணம், உயர் கல்வி, உயர்பதவி என்பவற்றை அடிப்படைத் தேவைகளாகக் கொள்ளும் தமிழரின்—சிறப்பாக வடமாகாணத் தமிழரின்-உளப்பாங்கு, சமூக ஏற்றத்தாழ்வுச் சூழல், ஜனநாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் என்ற பெயரில் நிகழும் பணநாயகம், பொது நிறுவனங் களில் அரச ஆதரவுடனான ஊழல், ஆன்மீக ஈடேற்றத்திற் குரிய ஆலயத்தை அந்தஸ்துப் போட்டிக்கான கேளிக்கைக் குப் பயன் படுத்தும் சீரழிவு ஆகியவற்றின் தளத்தில் 'நாண யம்' உருண்டு செல்கிறது; இந்தத் தளமாக அமைவது அரசடி யூர் என்ற கற்பனைக் கிராமம். ஆசிரியர் தாம்பிறந்து வாழ்ந்து பழகிய வடமராட்சி மண்ணின் பல்வேறு கிராமங்களுக்கும் காட்டுருவாக இக்கற்பனைக் கிராமத்தை அமைத்துள்ளார் எனலாம்.

கதைமாந்தர் பெயர், அவர்கள் உரையாடுமுறை, கிராம நிகழ்ச்சிகள் முதலியவற்றிலே கிராமிய மணத்திற்கு அதிக கவனம் செலுத்தியுள்ளார். பேச்சு வழக்கு எவ்வித தடையுமின்றி அவருக்கு கைகொடுத்துள்ளது. ஈழத்தமிழ்ப் புனைகதையில் மொழிபற்றி ஆராய்பவர்களுக்கு நாணயம் பயன்படத்தக்க ஆதாரமாகும். யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்பர் இலக்கிய கலாநிதி பண்டித மணியவர்கள். இந்நாவலில் இக்கலாசாரம் கதையம் சத்தில் தீயவரை இறையருள் தண்டிக்கும் என்ற பாவிகமாகவும் புராணப்படிப்பு என்ற நிகழ்ச்சியாகவும் ஊடுருவி நிற் கின்றது.

தனிமனித குணும்சங்களும் சமூக நிகழ்ச்சிகளும் விவ ரணமாக சித்திரிக்கப்படும் இந் நாவலின் கதையையும் பண்பாட்டம்சங்களையும் தொடர்பு படுத்தும் முக்கிய கதை மாந்தராகத் திகழும் சிங்கப்பூர்ப் பென்சனர் சின்னையா வின் பாத்திரப்படைப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

சமூக பண்பாட்டம்சங்களை இலக்கியத்தில் நிலைத்த வாழ்வு பெறச் செய்ய வேண்டுமென்பதில் ஆசிரியர் காட்டி யுள்ள மிதமிஞ்சிய ஆர்வம் நாவலின் கட்டமைப்புக்கு ஓரளவு ஊறுவிளைவித்துள்ளது என்பது குறிப்பிட்டு நோக்கவேண்டிய தொன்றாகும். தம்பி வைத்திலிங்கம் மரணமானதைக் கேட்டு குமுறியபடி ஓடிவரும் அண்ணன் பொன்னையாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி வெளிப்பாட்டுடனும் தம்பிக்குத்தானே கொள்ளிக் கடன் செய்ய முயல்வதுடனும் கதையம்சம் நிறைவு பெற்று விட அப்பால் பிரேத ஊர்வலம் மயானக்காட்சி என்பன ஆசிரியரது சமூக பண்பாட்டுச் சித்திரிப்பு நோக்கில், மிகை யாக அமைகின்றன.

நாவலிலக்கிய முயற்சியில் 'நாணயம்' நூல் வடிவம் பெறும் முதல் படைப்பு என்ற வகையில் ஆசிரியரது ஆர்வ மும் ஆற்றலும் விதந்து பாராட்டத்தக்கன என்பதற்கைய மில்லை. நூற்பிரசுர முயற்சிகள் வற்றிப்போய், கையெழுத் துப்பிரதிகள் நிலத்தடி நீராகத் தவமியற்றும் ஈழத்துத்தமிழ் நாவலின் இன்றைய சூழ் நிலையில் 'நாணயம்' ஒரு பாலைவனப் பசுந்தரையாகக் காட்சி தருகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூல் எனது ஆக்க இலக்கிய முயற்சியின் இரண்டாவது அறுவடையாகும். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வெளியாகிய எனது 'யுகப்பிரவேசம்' என்ற நூலுக்குக் கிடைத்த பாராட்டுதல்களைக் கேட்டபொழுது வானோக்கி வளர்ந்து வரும் 'ஈழத்து இலக்கியம்' என்ற மணிமண்டபக் கட்டிடத்திற்கு நானும் கல்சுமந்த பூரிப்படைந்தேன். அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பிரதேச நாவல் போட்டியில் மலையகத்திற்கான முதற்பரிசை எனது கன்னிப்படைப்பு பெற்றபொழுது, அந்த மணிமண்டபத்தில் கல்பதித்த களிப்படைந்தேன்.

இலக்கிய உலகில் பிரவேசம் செய்த காலந்தொட்டு ஆக்க இலக்கியத்தில் மண்வாசனை என்ற பண்பின் முக்கியத்துவத்தையும் பயனையும் நான் நன்றாக உணர்ந்தவன். பிரதேசப் பேச்சு வழக்கின் துணையுடன், அங்கு வாழ் மக்களின் பெருமூச்சுகளுக்கான அவல நிலையையும் அதற்குரிய காரணத்தின் ஆணி வேரையும் காணவேண்டுமென்பதே என் இலக்கியப் பயணத்தின் குறிக்கோளாகும்.

இந் நாவலின் கதையம்சத்தை அதன் சூழலுக்கேற்ற பாத்திரப்பண்புகளுடன் உருவாக்கியுள்ளேன். சமூகவியல் ஏனைய துறைகளிலும் ஊடுருவி நிற்கும் இக்கால கட்டத்தில் ஆய்வறிவாளர்களுக்குக் காத்திரமான பல கருத்துக்கள் இந் நாவலில் காத்திருக்கின்றன என்பதைத் துணிவுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் நாடித்துடிப்பு, மனித உறவுகளைப் பிணைக்கும் பந்தமாகிய சடங்குகள், நம்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் பண்பாட்டம்சங்கள், எண்ணக் கருத்துக்களின் உயிர்த்துடிப்பான வெளிப்பாட்டின் ஊடகமான பேச்சு வழக்கு ஆகியவற்றைக் கன்னிமைகெடாத தூய்மையுடன் வெளிக்கொணர வேண்டுமென்ற பெருவிருப்புடன் அறிவு பூர்வமாக அணுகி உணர்ச்சி பூர்வமாக வடித்துள்ளேன்.

நேர்மையான இலக்கிய ஆர்வமும் பழகுவதற்கு இனிய பண்புள்ளவருமான திரு. செ. சற்குருநாதன் குறைந்த செலவில் இந்நூலை அச்சுப்பதிவு செய்து கொடுத்துள்ளார். அவருக்கு நான் மட்டுமல்ல ஈழத்து இலக்கிய உலகமுமே கடமைப்பாடுடையது. இந் நாவலுக்குக் காத்திரமான முன்னுரை வழங்கிய முதுபெரும் நாவலாசிரியர் இளங்கீரன் அவர்களுக்கும், குறுகிய காலத்தில் ஆழமான ஆய்வுரை வழங்கிய திரு. நா. சுப்பிரமணியம் எம். ஏ., துணைவிரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்கும் நான் என்றும் நன்றியுடையேன். இந் நாவல் நூல்வடிவம் பெறத் துணைநின்ற என் அருமை நண்பனும் நாவலாசிரியருமான திரு. தி. ஞானசேகரன் அவர்கட்கும், அச்சுப் படிவங்களைத் திருத்துவதற்கு உதவிய இளம் எழுத்தாளன் ஸ்ரீ தேவகாந்தன் அவர்கட்கும் என் இதய பூர்வமான நன்றி. அழகான அட்டைப்படம் வரைந்துதவிய நண்பன் வெலி-மடை திரு. எம். நிஸார் ஆசிரியர் அவர்கட்கு நெஞ்சம் நிறைந்த நன்றி.

விரைவில் வெளிவர விருக்கும் 'வீரகேசரி வெளியீடா'கிய எனது மலையகப் பரிசு நாவலில் மீண்டும் சந்திப்போம்.

க. சதாசிவம்

'கலையகம்'
புற்றளை,
புலோலி.
29-11-80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்

கலியாண வீடு களைகட்டிவிட்டது.

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் ஏகபுத்திரியின் திருமணமல்லவா! கோயில் திருவிழாவைப் போல் திருமண வைபவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பேர்போன மேளம், 'லயிற்மெஷின்', ஒலிபெருக்கி, கொட்டகைப்பந்தல், சப்பரமணவறை, இத்தியாதி...... சிறப்புக்கள் பெருவிழாக் கோலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இரவைப் பகலாக்கி, வீட்டையும் வெளி வீதியையும் ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது மின்சாரம்.

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் அந்தப்பென்னம் பெரிய, சுற்றுமதில் சூழ்ந்த வீட்டின் 'கேட்' வாசலில் இரு பெரிய கதலி வாழைகள் பழுத்த குலையுடன் கம்பீரமாக நிற்கின்றன. தலைவாசலிலிருந்து பந்தல்வரையும் வர்ணக் கடதாசியின் சோடனைகள் சோழகக்காற்றிலே ஆடி அசைந்துகொண்டிருக்கின்றன. ஒலிபெருக்கி தற்காலத்துப் பிரபல்யம் வாய்ந்த சினிமாப்பாடல் ஒன்றை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது. வீட்டு முற்றமெல்லாம், வல்லிபுரக் கோவிலடி வெண்மணல் பரப்பப்பட்டிருக்கிறது.

கலியாண வீட்டிற்கு ஆட்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஒய்யாரக்கொண்டைகள், ஒளிதுலங்கும் நகைகள், செல்வச்செழிப்பைக் காட்டும் பட்டுப்புடவைகள் .......! பந்தலின் வாசலில் வட்டிக்கடை வைத்திலிங்கமும், அவரது ஏகபுத்திரன் 'சியமன்' இராமலிங்கமும் அங்கு வருபவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்று, உபசரித்துக்கொண்டிருக்கிறார்கள். பிரமாண்டமான, பளபளக்கும் அந்தப் பந்தலுக்குள் புகுபவர்களுக்கு இரு சிறுமிகள் சந்தனமும், குங்குமமும் கொடுக்கிறார்கள். வெற்றிலைத் தட்டுகள் பரிமாறப்படுகின்றன.

எல்லாம் செவ்வனே நடக்கிறதா என்று நோட்டம் விட்டுக்கொண்டிருந்த, மலாயன் 'பென்சன்' காரரான சிங்கப்பூர் சின்னையா, எடுபிடி வேலைகளுக்கு நின்றவர்களுக்கு வேண்டிய ஆணைகளை இட்டபின், மணவறைக்கு முன் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்குகளுக்கு எண்ணெயை ஊற்றி விட்டுத் தலை வாசலுக்கு வருகிறார். அவரது கண்கள் யாரின் வரவையோ எதிர் நோக்குகிறது. யார் யாரோ எல்லாம் வருகிறார்கள், ஆனால் அவர் தேடுபவர் மட்டும் வரக் காணோம். 'அந்தாள் வாறதெண்டால் இவ்வளவுக்கு வந்திருக்கும்.' சின்னையாவுக்கு அவர் இதுவரை வராதது பெருங் கவலையைக் கொடுக்கிறது. மனக்கவலையை மாற்ற முனைந்து அருகில் நின்ற வைத்திலிங்கத்திடம் உரையாடுகிறார். ''சுணங்கக்கூடாது மச்சான், தோழனை அழைக்கத் தொடங்குவம், போகக்கை வயிரவர் கோயிலடியாலபோவம் போன பாதையால திரும்பி வரக்கூடாது தானே, வரக்கை வடலியடைப்புப் பாதையால வருவம்.''

''ஓம் மச்சான்'' வைத்திலிங்கத்தார் சுருக்கமாகப் பதில் சொல்கிறார் அவரது மனமும் கண்களும் யாரையோ தேடுகின்றன. அவளும் மோனும் வருவினமோ?

அருகில் நிற்கும் இராமலிங்கத்தின் கண்கள் தூரத்தில் வரும் ஒருவரை இனங்காணத்துடிக்கிறது. அவன் தேடும் 'அவர்' தானோ அவர்?

அந்த அரசடிக்கிராமமே இதுவரை இப்படி ஒரு கலியாணத்தைக் காணவில்லை, என எல்லோரும் வியக்குமளவிற்கு ஏற்பாடுகள் செய்திருந்த இராமலிங்கத்திற்கு, அந்த ஊரில் சில மாதங்களுக்குமுன் நடைபெற்ற மணியகாரனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனான 'மனேஜர்' மாணிக்கவாசகரின் வீட்டுக்கலியாண வீட்டை இது உச்சிவிட்டதென்ற மனப்பூரிப்பில், மாணிக்க வாசகரே நேரில் இதனைப்பார்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றுகிறது கிராமச்சங்கத்தில் 'சியமன' கவந்து, புகழ் தேடுவதற்கு எடுக்கும் தனது முயற்சியில் முட்டுக்கட்டையாக இருந்த மாணிக்கவாசகர் இச்சிறப்பைப் பார்த்துத் தலைகுனிய வேண்டும். இராமலிங்கத்தைச் 'சியம'னுக்கு வதற்கு ஆதரித்த கிராமச்சங்க அங்கத்தவர்கள் ஒத்தாசையாகவும் உற்சாகமாகவும் பங்குபற்றுகிறார்கள்; மாணிக்க வாசகரின் ஆதரவாளர்கள் ஒருவருமே வரவில்லை. எல்லோருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன;

இராமலிங்கத்திற்குத் தன்கண்களையே நம்பமுடியவில்லை. மாணிக்கவாசகர்தான் வந்துகொண்டிருக்கிறார். இராமலிங்கம் கைகளைக் கூப்பி, முகமலர வரவேற்று, பன்னீர் தெளித்து, பந்தலுக்குள் மாணிக்கவாசகரை அழைத்துச்செல்கிறான்.

சின்னையா மீண்டும் உள்வீட்டுக்குள் புகுந்து, பெண்கள் காய்கறி வெட்டிச் சமைத்துக்கொண்டிருக்கும் பகுதிக்குப்போகிறார். எல்லாவற்றையும் தலையில் சுமந்து செய்துகொண்டிருக்கும் இராமலிங்கத்தின் மனைவி லட்சுமி இரகசியமாகச் சின்னையாவுக்கு ஏதோ சொல்ல, அவர் தலையாட்டிவிட்டு, கிணற்றடிப்பக்கமாக அடுப்புக்கள் மூட்டிக் கிடாரங்கள் ஏற்றப்பட்டுள்ள கொட்டிலுக்குள்ளே சென்று சோறு ஆக்குவதற்குப் பொறுப்பாக இருந்த குடிமக்களில் ஒருவனான கிட்டிணனிடம் இன்னும் ஒரு கிடாரம் அரிசி போட வேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

மீண்டும் சின்னையா வீட்டுவாசலுக்கு வருகிறார். கண்கள் கிழக்குப்பக்கத்து ஒழுங்கையை ஆவலுடன் நோக்குகின்றன. அவர் தேடுவது வேறுயாரையுமல்ல, வைத்திலிங்கத்தின் உடன் பிறந்த தமையனான பொன்னையாவையே. 'பேச்சுப் பறைச்சல்' இல்லாமல் இருக்கும் வைத்திலிங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தையும் பொன்னையாவையும் இந்தக் கலியாணத்துடன் உறவாக்கிவிட வேண்டும் என்ற முயற்சியின் ஆரம்ப நடவடிக்கையாக வைத்திலிங்கத்தைத் தமையன் வீட்டிற்குப்போய் நேரில் சொல்லவைத்தார்.

பொன்னையா கட்டாயம் வருவார். வைத்திலிங்கத்தின் மனைவி இறந்துவிட்டதால் பொன்னையாவையும் மனைவியையும் தாரைவார்த்துக்கொடுக்க ஏற்பாடு செய்யலாம்; இதற்குப்பிறகு அவர்களது பழைய கோபதாபங்கள் மறைந்துவிடும் என்கின்ற நம்பிக்கை நேரம் செல்லச் செல்ல ஆட்டம் காண்கின்றது.

வைத்திலிங்கத்திற்குத் தமையனைப்பற்றி உள்ளூர எவ்வித அக்கறையும் இல்லை. சின்னையாவின் ஆக்கினையாலும் ஊர் உலகத்திற்காகவுமே வீடு தேடிச்சென்று தமையனுக்குச் சொன்னார், அவர் இப்பொழுது எதிர்பார்ப்பது........? வைத்திலிங்கத்தின் வட்டிக்கடை இருக்கும் மாத்தளையில், பத்து வருடங்களுக்கு முன் மனைவியை இழந்துவிட்ட அவருக்கு ஒரு வைப்பாட்டி இருக்கிறாள் என்பது ஊரறிந்த இரகசியம். அவளுடைய தொடர்பு மனைவி உயிருடன் இருக்கும் பொழுதே இருந்தது என்பது சிலர் மட்டும் அறிந்த உண்மை. கடந்த எட்டு மாதங்களாக அவரைப் பிரயாணம் செய்யக் கூடாதென வைத்தியர்கள் கண்டிப்பான உத்தரவு இட்டிருக்கிறார்கள். திடீரென்று ஒரு நாள் இரவு வந்த தாங்க முடியாத நெஞ்சுவலி அவரை ஓர் இருதய நோயாளியாக்கிவிட்டது; உணவு தொடக்கம் உறக்கம் வரை கட்டுப்பாடாகவே இருந்துவரும் வைத்திலிங்கத்திற்கு அவளை நேரில்காண ஆவலாகவே இருக்கிறது. அவள் இக்கலியாணத்தை ஒரு சாட்டாக வைத்து வரமாட்டாளா என அவரது உள்ளம் ஏங்குகிறது.

இன்றைய சிறப்பையும், பந்தலில் கூடியிருக்கும் சனக்கூட்டத்தையும் பார்த்து மனம் பூரிப்படைய, வைத்திலிங்கம் தனது வாழ்க்கை வரலாற்றை எண்ணிப்பார்க்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையனுரான பொன்னையாவுடன் புகையிலைத் தோட்டம் செய்ய விரும்பாது, ஐந்து ரூபாய்க்காசுடன் பதினைந்து வய திலே ஊரை விட்டுக் கொழும்புக்கு ஓடி, அங்கு ஒரு யாழ்ப் பாணச் சுருட்டுக்கடையிலே சமையற்காரனுக வேலை செய்து, படிப்படியாகக் கணக்குப் பிள்ளையாக முன்னேறி, அடுத்த கடையான செட்டியாரின் நகைக்கடையிலே கணக்குப்பிள்ளை யாகப்பதவியேற்றது ; இரண்டாவது உலக மகாயுத்தம் ஏற்பட்ட பொழுது, யப்பான் காரன் குண்டுபோட, இருந் ததை அபகரித்துக் கொண்டு ஊருக்கு ஓடி வந்து, இந்தியா வுக்குப் போயிருந்த முதலாளிக்கு எல்லாவற்றையும் பறி கொடுத்து விட்டதாக அறிவித்துவிட்டு, அதனை முதலாகக் கொண்டு மாத்தளையில் நகைக் கடையும், வட்டிக் கடையும் ஆரம்பித்தது ; பணத்தைக் கொண்டு, பலவகைகளிலும் பணத்தைப் பெருக்கி, வியாபாரத்தினை பல வழிகளிலும் விருத்தியாக்கி, ஊரில் காணி பூமிகளை வாங்கி, பெரும் புள்ளியாகியது......

வைத்திலிங்கம், இராமலிங்கத்தை யாழ்ப்பாணத்தி லுள்ள பிரபல்யம் வாய்ந்த பாடசாலை ஒன்றில் 'போடிங்' கில் விட்டுப் படிக்க வைத்தார். மகனை ஒரு 'டொக்டரா'க்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை; பணத்தைக் கொட்டி, தனது விருப்பத்தை நிறைவேற்ற முனைந்தும், மகன் ஒத்துழைக்காது படிப்பைக் குழப்பிக் கொண்டு ஊர்சுற்றி ஊதாரியாகத் தொடங்கியதும் மாத் தளையில் தனது வியாபாரத்தைக் கவனிக்கக் கூட்டிச் சென்றூர், அங்கும் அவனது விளையாட்டுத்தொடர, கலியா ணத்தைக் கட்டிக் கொடுத்து கால் கட்டுப்போட்டால் திருந்திவிடுவான் என எண்ணி, உடுப்பிட்டியில் இரும்புக் கடை அருளம்பலத்தின் மகளைக் கட்டிக் கொடுத்தார்.

அரும்பாடுபட்டுத் தன்னுல் தேடிவைக்கப்பட்டுள்ள பொருள் பண்டத்தை மகன் பெருக்காமல் கரைக்கிருன் என்று அவருக்குத் தீராத கவலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மகளான மங்களத்தையும் மாத்தளையிலுள்ள ஒரு முதலாளி நண்பனின் மூலம், கொழும்பில் பிரபல பாடசாலை ஒன்றில் சிறுவயதிலிருந்தே 'போடிங்'கில் விட்டுப் படிப்பித்தார். தந்தை தடுத்தும் கொழும்பு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டதால் அவ்வாழ்க்கையைத் தொடரவிரும்பி, பொழுது போக்கிற்காக 'டைப்பிஸ்ற்'ருக 'கொம்பனி' ஒன்றில் வேலை செய்தாள் வைத்திலிங்கம் மங்களத்திற்கு மாப்பிள்ளையை என்றே மனத்தில் திட்டப்போட்டுவிட்டார். தனது கடையில் கணக்கப்பிள்ளையாக வேலை செய்த கந்தப்புவின் மகன் செந்தில்நாதன் 'டொக்டரு'க்குப் படிக்கும் பொழுதே அவர் ஆவன செய்ய தொடங்கி விட்டார். செந்தில்நாதன் இறுதிச் சோதனையில் மிகத் திறமையாகச் சித்தியடைந்து மேற்படிப்புக்காக லண்டனுக்குப் போய் திரும்பி வரும் வரையும் காத்திருந்தார். அதற்குள் மங்களத்தின் போக்கு விபரீதமாகப் போய்விடுமோ என்று பயந்து விட்டார். எல்லாம் நல்லபடியாக நிறைவேறி இன்று மங்களத்திற்குக் கலியாணம்.

மேளக் கச்சேரி உச்சக்கட்டத்தை அடைகிறது. சிற்றுண்டியாகப் பலகார வகைகள் பந்தலுக்குள் விநியோகிக்கப்படுகின்றன.

மாப்பிள்ளைத் தோழனுக்குக்கட்டிய தலைப்பாகையைச் சரிசெய்துவிட்டு, தோழனைப் பந்தலுக்குள் அழைத்து வந்து முத்துச் சப்பர மணவறையில் அமர வைக்கிறார் சின்னையா.

மீண்டும் வாசலுக்கு வந்து பார்த்த சின்னையா, 'இனி எங்கை வரப்போருர்' என்ற ஏக்கப்பெருமூச்சுடன், மனத்தில் நப்பாசைஒன்று ஒளிவிட,வைத்திலிங்கத்தைத்தேடிச்சென்று காதுடன் வாயைப்பொருத்தி இரகசியமாகக் கேட்கிருர். ''மச்சான் நான் ஒருக்கால் பொன்னையாத்தானெட்டைப் போட்டுவரட்டே. நான் போய் நேரை கேட்டால் வந்தாலும் வருவர்; தாரைவார்த்துக் குடுக்கிறது அவர் செய்யிறது தானே நல்லது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா கிட, உனக்கென்ன விசரே. அவர் பெரிய குருவே; பார்! இந்தச்சபை சந்தியிலே, செம்பாட்டு வேட்டியோடை சீரழிஞ்சு திரியிற மனுஷனுக்கு வாறத்துக்குக் குடுத்துவைக்கணும். கூடப்பிறந்த குற்றத்திற்காக நான்நேரை போய் கலியாண வீட்டுக்குச் சொன்னன். இப்ப அவர் இருக்கிற நிலவரத்திற்கு இனிப்போய் என்ன வரச்சொல்லிக் கும்பிடுறதே பெடியன் இராமலிங்கமும் மனுஷயும் தாரை வார்த்துக் குடுக்கட்டும். நீ போய் உன்ரை அலுவலைப்பார்.''

சின்னையா மனம் சோர்ந்து, முகம் வாடப்பந்தலுக்குள் போகிருர்.

மாப்பிள்ளைத் தோழனே ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் செல்கிருர்கள். மக்கள் கூட்டம் ஊர்வலத்தில் செல்கிறது.

அந்தக் கிராமத்து ஒழுங்கைகளில் ஒளி வீசிக்கொண்டிருந்த பால் நிலவை, ஊர்வலத்தில் முன்னும் பின்னும் எடுத்துச் செல்லப்படும் 'பெற்ருேல் மாக்ஸ்' ஒளி துரத்திச் செல்கிறது.

# 2

மணமகளான மங்களம் ஓர் அறையில் தனியாக இருக்கிறுள். வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கொழும்பில் கழித்த மங்களத்திற்கு இந்தஊரில் நடைபெறும் சடங்குகள், நம்பிக்கைகள் எல்லாம் அர்த்தமற்றதாகவே படுகின்றன. 'வேள்வு' கொண்டு போனது, ஆண்கள் பிரதிநிதியாக ஒரு பையனைக் கூட்டிக்கொண்டு சொந்தக்காரர் வீடுகளுக்குச் சென்று கலியாண வீட்டிற்குச் சொன்னது, பெண்கள் கூடிப் பலகாரம் சுட்டது, 'பால்ருெட்டி' என்னும் பலகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கவில்லை என்று அண்ணி கவலைப்பட்டது. வண்ணன் இரவிரவாக வீடு முழுக்க வெள்ளை கட்டியது...... இவைக ளெல்லாம் கேலிக்கூத்தாகவே அவளுக்குத் தோன்றின. இன்று காலையில் நடந்த சடங்கை எண்ணும் பொழுத மங்க ளத்திற்குச் சிரிப்பாக இருக்கிறது தலையில் வெள்ளைத்துணி ஒன்றைப் போட்டு, கையிலே இரு வெற்றிலைச் சுருள்களைக் கொடுத்து அவளை அழைத்துச்சென்று, நிறைகுடத்தின் முன் கிழக்குப்பக்கமாகப் பார்த்தபடி ஒரு பலகைக் குற்றியில் இருக்கச் செய்து, பெண்கள் ஒவ்வொருவராக வந்து அருகி லிருந்த பசும் பாலும் அறுகம் புல்லும் உள்ள தட்டிலிருந்து பால் அறுகை எடுத்து அவளின் தலையிலே வைத்தது; பின், நிறைகுடத்தைச் சுற்றி வலம் வந்ததும் கிணற்றடிக்குச் சென்று, அங்கு தலையிலே தண்ணீர் ஊற்றியது...... !

'நான் இவரைத்தான் கட்டுவன் எண்டு ஒரு நாளும் நினைக்கேல்லை. காதலிச்சவர் என்னை ஏமாற்றுவார் எண்டு எதிர்பார்க்கவும் இல்லை எல்லாம் நன்மைக்குத்தானே? அவர் ஒரு 'சப் இன்ஸ்பெக்டர்' தானே. ஆனால் இவரோ ஒரு 'டொக்டர்', சாதாரண 'டொக்டர்' அல்ல, 'ஸ்பெச லிஸ்ற்' செந்தில்நாதன் M B.B.S., M.R.C.P., D.P.M.

மங்களத்திற்குப் பெருமையாக இருக்கிறது.

''மச்சாள் இனி வெளிக்கிடுங்கோவன். மாப்பிளை அழைச்சுக்கொண்டு வந்திடுவினம்'' அண்ணி லட்சுமியின் அழைப்பு மங்களத்தின் சிந்தனையைக் கலைக்கிறது.

மணப்பெண்ணை அலங்கரிப்பதற்கென பிரத்தியேக மாக அழைத்து வரப்பட்ட நடன 'ரீச்சர்' மங்களத்தின் அறைக்குள் புகுகிறாள். சிங்காரிப்பது ஆரம்பமாகிறது. நேரம் போவதே தெரியவில்லை தூரத்தே வெடிச்சத்தம் கேட்கிறது மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வருகிறார் கள்; லட்சுமி பம்பரமாகச் சுழன்று ஆயத்தங்களை செய்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலம் வருகிறது. இதுகாலவரை இப்படி ஒரு திருமண ஊர்வலத்தை அரசடியூர் காணவில்லை பூத்த ணாடிகை பிடித்து, நிலப்பாவாடை விரித்து மாப்பிள்ளையை அழைத்து வருகிறார்கள். வெடிச்சத்தம் காதைப்பிளக்கிறது. வாண வேடிக்கைகள் கண்ணைப் பறிக்கின்றன. சந்திக்குச் சந்தி மேளச்சமா நடக்கிறது. சின்னையா முன் பின் ஓடி வழியில் கும்பம் வைத்திருப்பவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிறார்,

மாப்பிள்ளை வீட்டு வாசலுக்கு வந்து விட்டார். வாழைப்பழத்தின் மீது திரிவைத்து, எரிந்துகொண்டிருக்கும் தட்டத்தை மூன்று தடவைகள் சுற்றிப் பெண்கள் ஆலாத்தி எடுக்கிறார்கள்.

சப்பரமணவறைக்குள் மாப்பிள்ளை அமருகிறார். பந்தல் நிறைந்து வடிகிறது.

ஐயர், கோலம் போட்டு, கும்பங்கள் வைத்து, ஓமம் வளர்த்து ஏற்பாடுகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருக்கிறார். ஐயரின் சடங்குகளை மாப்பிள்ளைக் கோலத்தில் இருக்கும் 'டொக்டர்' குறிப்பாகக் கவனிக்கிறார். நேற்று, பொன் உருக்கும் சடங்கில் தட்டான் சாணத்தில் பிள்ளையார் பிடித்து, அறுகம் புல் செருகி, நிறை குடமும் குத்து விளக்கும் வைத்து, பயபக்தியோடு உமிச்சட்டியில் தாலிக்குருக்கிய தங்கத்தை வெற்றிலையில் மடித்து, பஞ்சள் குங்குமம் பூசி, தீபம் காட்டி, உடைத்த முடித்தேங்காய்க்குள் வைத்துக்கொடுத்ததை நினைத்துப் பார்க்கிறார். 'ஆன்மீக ஈடேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கைக்குச் சடங்குகள் புனிதத்தை ஏற்படுத்துகின்றன' என்ற இந்து சமயத் தத்துவத்தை எண்ணிப் பார்த்துவிட்டு, மனித வாழ்க்கையில் சடங்குகளுக்கு உள்ள முக்கியத்துவத்தைச் சமூகவியல் நோக்குடன் சிந்திக்கிறார். உறவினர்களை இணைக்கும் பந்தங்களாகவும்; சமுதாய அமைப்பின் நிரந்தரத் தன்மையைக் காட்டும் சின்னங்களாகவும்; மக்களின் நம்பிக்கைகளையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதீகங்களையும் காட்டும் 'கருவிகளாகவும் சடங்குகள் இருப்பதை உணர்கிறார்.

மாப்பிள்ளையின் அக்கா தோழியாகி, மணப்பெண்ணுக்கு மொட்டாக்கிட்டு மெல்ல நடை நடத்தி, தோளில் ஒரு கையும் இடையில் ஒரு கையுமாகப் பந்தலுக்குள் அழைத்து வருகிறாள்.

சின்னையாவுக்கு மீண்டும் அந்தக்கவலை தலைகாட்டுகிறது. மாப்பிள்ளையின் தந்தையும் தாயும் ஐயர் மந்திரம் ஒதி நீர் ஊற்ற மாப்பிள்ளைக்குத் தாரை வார்த்துக் கொடுக்கின்றனர்- அவர் எதை எதிர்பார்த்தாரோ அது நடக்கவில்லை வைத்திலிங்கத்தின் தமையனான பொன்னையா வரவில்லை. இராமலிங்கமும் லட்சுமியும் பெண்ணுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கின்றனர்: தலையில் தலைப்பாகையைக் கட்டி நின்று சின்னையா தேங்காயடிக்கிறார்: தாலி, கூறை, தேங்காய், பழங்கள் வைத்திருந்த தட்டத்தை மாப்பிள்ளையின் தந்தை கையில் ஏந்தியவண்ணம் ஆண் பகுதியினரின் ஆசிர்வாதம் பெறுவதற்குச் சுற்றி வருகிறார். சபையினர் அவற்றை இரு கைகளாலும் தொட்டு, தம் கண்களில் ஒற்றிக்கொள்கின்றனர்: பெண்கள் பகுதிக்கு மாப்பிள்ளையின் தாய் எடுத்துச் செல்கிறாள். தோழி மணமகளை அறைக்குள் அழைத்துச் செல்கிறாள்; சிறுமிகள் சிலர் மணப்பெண்ணைத் தொடர்ந்து அறைப்பக்கம் ஓடுகிறார்கள்:

அடிக்கடி கைக்டிகாரத்தை பார்த்துக் கொண்டிருந்த சின்னையா முகூர்த்தம் நெருங்குகிறது என்பதை ஐயருக்குக் கைச்சாடையின் மூலம் நினைவூட்டுகிறார்.

கூறை கட்டிய மணப்பெண்ணைத் தோழி அழைத்து வந்து, மணவறையில் இருத்துகிறாள். இப்பொழுது மணப்பெண்ணின் தலையில் மொட்டாக்கில்லை.

மாப்பிள்ளை, கொட்டு மேளம் கொட்ட தாலியை மணமகளின் கழுத்தில் கட்டுகிறார். மாலைகள் மாற்றப்படுகின்றன. 'படம் பிடிப்பாளர்கள் துரிதகதியில் இயங்குகின்றனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாடி வெள்ளை பிடிக்க, மணமக்கள் ஒருவருக்கொருவர் பாலும் பழமும் ஊட்டுகின்றனர். எங்கிருந்தோ ஒரு பசுக்கன்றை சின்னையா தூக்கிவந்து, 'மாப்பிள்ளை—பொம்பிள்ளை'யின் முதற்தரிசனத்திக்குக் காட்டுகிறார். மாப்பிள்ளைத் தோழன் முன் செல்ல, கை கோர்த்தவண்ணம் ஓமகுண்டத்தை மணமக்கள் வலம் வருகின்றனர். அம்மி மிதித்து, அருந்ததியும் காட்டப்படுகின்றது.

அடுத்து, அறுகரிசி போடுகிறார்கள். முதலில் ஆண்கள் வரிசையில் வந்து, தலையில் சால்வையைக்கட்டி அரிசியை அள்ளி மூன்று தடவைகள் மணமக்களது காலிலும் தோளிலும் தலையிலும் போடுகிறார்கள். ஆண்கள் போட்டு முடிந்ததும், "இனி பெண்டுகள் எழும்புங்கோவன்'' என்று சின்னையா பெண்கள் பகுதியைப் பார்த்துச் சொல்கிறார்.

திருமணப் பரிசளிப்புப் படலம் ஆரம்பமாகிறது: 'டொக்டர்' வேலை செய்யும் மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர்கள் வாழ்த்துமடல் வாசித்து அளிக்கிறார்கள். வைத்திலிங்கத்துடன் வியாபாரத் தொடர்புடைய பிரமுகர்கள், சியமன் இராமலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் மணமக்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஆசிர்வதிக்கின்றனர். யாழ்ப்பாண பகுதிக்கே மன நோய்களுக்குப் பொறுப்பான 'டொக்டர்' செந்தில் நாதனின் உதவியை நாடியவர்கள், கைக்கூலி எதுவுமே வாங்காத அவருக்குப் பிரதி உபகாரம் செய்ய ஓர் அரிய சந்தர்ப்பமாக இப்பொழுது அன்பளிப்புப் பார்சல்களுடன் நிற்கிறார்கள்.

மணமகளான மங்களம் ஒரு கணம் அதிர்ச்சியடைகிறாள். பரிசுப் பொருளுடன் எதிரே நிற்பது யார்? யார் தன்னை ஏமாற்றியவர் என்றெண்ணினளோ......, அவர்! கம்பீரமான தோற்றமுடைய அவரேதான். 'பொலிஸ்' சீருடையுடன் வந்து நிற்கிறார். தன்னையே மாப்பிள்ளைக்கு ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்துகிறார். "நான் மோகன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சப் இன்ஸ்பெக்டராக' வவுனியாவில் வேலை செய்கிறேன்; வல்வெட்டித் துறைக்கு ஒரு 'கேஸ்' விடயமாக வந்தேன். வழியில் உங்களையும் வாழ்த்தி விட்டுப் போக வந்தேன்.'' என உரத்தகுரலில் கூறிக்கொண்டு, மாப்பிள்ளையின் கைகளைப்பற்றிப் பலமாகக் குலுக்குகிறான். மங்களத்தைப் பார்த்தவாறே 'மிஸ்ஸிஸ்' செந்தில்நாதன் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்று கூறுகிறான்.

மோகன் வாழ்த்திவிட்டுப் போய்விட்டான். அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டது அடுத்து வாழ்த்தியவரின் வாழ்த்துக்குப் பின்புதான்.

பூதாக்கலத்திற்காக மணமக்கள் அறைக்குள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சபை நடத்துவதற்கு ஆயத்தங்கள் சின்னையாவின் மேற்பார்வையில் நடக்கிறது. வீட்டுவிருந்தையில் கட்டாடி சேலை விரிக்க, வாழையிலைகள் நிரையாகப் போடப்படுகின்றன. இலைகளுக்குக்கறிபோட, சின்னையா தண்ணீர் நிறைந்த செம்புகளைக் கொண்டுவந்து வைத்திலிங்கத்திடம் கொடுக்கிறார். அவர் அதனை வாங்கி முக்கியமான சிலரிடம் கொடுக்கிறார். 'மனேஜர்' மாணிக்கவாசகர் செம்பைப் பெறவில்லை; தான் செவ்வாய்க்கிழமை விரதம் என்று ஒதுங்கி வெளியே செல்கிறார். சின்னையா, மாணிக்கவாசகரையும் வேறுசிலரையும் அழைத்துச் சென்று பலகாரம் கொடுக்கிறார்.

மாப்பிள்ளையை முதற் சபையில் இருத்திவிட்டு, சால்வையை வேட்டிக்குமேல் அரையில் கட்டிக்கொண்டு சபை நடத்துவதை நேரிலே கவனிக்கிறார் சின்னையா. ''அண்ணை! இஞ்சாலை இவற்றை இலைக்குச் சொதியில்லை'' என ஒருவர், அடுத்தவர் மேல் சுமத்தித்தனது தேவையை அறிவிக்கிறார்; சின்னையா சொதியைக் கேட்பவரின் இலைக்கே முதலில்விட்டு, பின் அடுத்தவருக்கும் விடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் சபை முடியப் பெண்கள் சபை ஆரம்பமாகிறது. மங்களம் பெண்கள் சபைக்கு வேண்டா வெறுப்பாகச்சாப்பிட அழைத்து வரப்படுகிருள். பலவிதமான கறிகளின் வாசனைகள் கலந்த கதம்பமாக ஒரு வாசனை வீசுகிறது. சபை முடிந்து இலையெறியும் கோடியில், எச்சிற்கையை உடலிலிருந்து தூர நீட்டி, மடக்கிப் பிடித்துக்கொண்டு கைகழுவுவதற்கு நிற்கும் ஆட்களைப் பார்த்துக்கொண்டு, அழுக்கேறிய பனையோலைப்பெட்டிகள் ஏந்தியவண்ணம் ஒரு கூட்டம் சோற்றுக்காகக்காத்துக் கிடக்கிறது. வேளாளர்களுக்குக் குடிமை வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட மக்களில் பஞ்சப்பட்டவர்கள் இவர்கள்? பெண்கள் சபை முடிந்ததும், குடிமக்களுக்குச் சாப்பாடு போடும் கைங்கரியத்தைச் சின்னையா கவனிக்கிருர். பஞ்சப்பட்டவர்களை யாருமே கவனிக்கவில்லை!

வைத்திலிங்கம் எதிர்பார்த்த அவள் வரவேயில்லை.

கோடிப்பக்கமாக வந்த வைத்திலிங்கத்தை நோக்கி, அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு கிழவி சொல்கிருள். ''நயினர் எங்களையும் கொஞ்சம் கவனிக்கவாக்கும்'' ''பொறுங்கோடி உங்களுக்குத்தான் இப்ப அவசரம்'' சீறி விழுந்து கொண்டு போகிருர் அவர். கோபமடைந்த கிழவி அருகிலிருந்தவளிடம் சொல்கிருள், ''தமையன் பொன்னையாக் கமக்காரன் ஒரு தங்கப்பவுண் அந்தா வின்ரை தோட்டத்திலை நான் வெங்காயம் வைக்கிறகாலத்திலை எங்களுக்குச் சாப்பாடு தந்திட்டிடுத்தானே கமக்காரன் தான் சாப்பிடும். நேத்தும் தெருவாலை போகக்கை படலையிலை நிண்டது, என்னைக் கூப்பிட்டு 'என்ன கறுப்பி நல்லாய் ஒடுங்கிப்போனுய்' எண்டு சொல்லி நல்ல ஒடியல் புட்டும் நெத்தலியும் தந்தது. இந்தாள் ஒரு ஈப்பிணி போல கிடக்கு''

கலியாண வீட்டிலிருந்து திரும்புவர்களுக்கு மங்கள வாசத்தின் வாசலில் வைத்து, மணமக்களின் பெயர்கள் அழகாக அச்சிடப்பட்ட தாம்பூலம் தாங்கிய சிறுவண்ணக்கடதாசிப் பைகொடுத்துவிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாண வீட்டுக்கலகலப்புக் குறைகிறது மிகநெருங்கிய சொந்தக்காரர்கள் மட்டும் தங்கிவிட மற்றவர்கள் வீடு திரும்புகிருர்கள்.

சின்னேயா, வைத்திலிங்கத்திடம் விடைபெற்று வீடு திரும்புகிருர். இவ்வளவு விமரிசையாகக் கலியாண வீடு நடைபெற்றும், பொன்னேயா வராதது வைபவத்தை நிறைவு செய்யாதது போல சின்னேயாவுக்குப் படுகிறது. வேதனேயுடன் மனத்தில் இதற்குரிய காரண காரியத்தை எண்ணிப்பார்க்கிருர். 'பொன்னேயாத்தான் நாணயமான மனுஷன். வைத்திலிங்கம் செய்தது அநியாயந்தானே; கூடப்பிறந்தது எண்டும் பாக்காமல், நம்பிக்கைக்காக ஈட்டுக்கு எழுதின அந்த ரேட்டுக்கரைக் காணியைச் சித்தாரீக்கலாமே. பாவம் ஒரு பெம்பிளேப் பிள்ளேக்கு வீடு கட்டிக்குடுக்கிற தெண்டெல்லே அந்தக் காணியை வைச்சிருந்தது. இண்டைக்கு இதிலே வீட்டைக் கட்டி மோளுக்குச் சீதனமாகக் குடுத்து, கலியாண வீடும் நடத்தி முடிச்சுப் போட்டான் இவன் மனுஷன்.'

வெளியே அலறிக்கொண்டிருந்த ஒலி பெருக்கி ஓய்கிறது. எங்கிருந்தோ சாமக்கோழிகூவுவது, பனேமர வட்டிலிருந்த ஆந்தையின் அலறலில் அமுங்குகிறது.

# 3

சோழகக்காற்றுச் சுழன்று சுழன்று வீசுகிறது. நீண்டுயர்ந்து, ஓங்கி வளர்ந்த பனேமரங்கள் தலேவிரிகோலமாக ஆடுகின்றன. கடந்த இரு நாட்களாக் காற்றின் மூர்க்கத்தனம் அதிகமாகவே இருக்கிறது. அந்தப் பிரதேசம் முழுவதும் சோழகக் காற்றின் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது கீழ் வட்டுக்குள் வந்து விட்டது. அப்பொழுது தான் வள்ளிநாயகி மாட்டுக் கொட்டிலைக் கூட்டித் துப்புரவு செய்துவிட்டு, அடிவளவுக் காணிக்குள் காற்றுக் குப்பையிலிருந்து கொட்டப்பட்டிருக்கும் பன்னுடை, கொக்காரை, கங்குமட்டை ஆகியவற்றை அடுப்பு எரிப்பதற்காகப் பொறுக்கிக் குவிக்கிறாள். நேற்று அவளது காலில் தைத்த முள் இன்று நோவைக் கொடுக்கிறது. குற்றிய முள்ளை வெளியே எடுக்கும் போது, அது உள்ளே முறிந்து விட்டது. அவள் அதை யாருக்குமே சொல்லவில்லை.

வள்ளிநாயகிக்கு இந்த வருடம் சித்திரை இருபத்தெட்டுப் பிறந்ததும், வயது முப்பத்திரண்டு முடிந்து, முப்பத்தி மூன்று பிறந்துவிட்டது. அவளது அப்பு பொன்னையா ஒவ்வொரு வருடமும் சோழகக் காற்றைக் கொண்டு வரும்' — 'சித்திரை இருபத்தெட்டுக் குழப்பம்' என்றழைக்கப்படும் — பருவப் பெயர்ச்சி மாற்றம் ஏற்படும் பொழுது அவளது வயதை எண்ணிக்கொள்வார். பருவத்தில் கொழுகொம்பிற் படராத கொடியின் வாட்டம் வள்ளிநாயகியின் முகத்தில் நிரந்தர வடிவெடுத்து, அவளது இயற்கை வடிவைக் குறைத்துக் காட்டுகிறது. பருவப்பூரிப்புக் குன்றி, சதா விரக்தி குடிகொண்டு முகத்தின் சதைப்பிடிப்புகள் வற்றி எலும்புகள் தெரிகின்றன.

அவளுடன் கூடப் படித்தவர்கள் குழந்தை குட்டிகளுடன் இருக்கிறார்கள். அவர்கள் தம்பதிகளாக அரசடிப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் வருவதை, பனையோலையால் அடைக்கப்பட்ட வேலிகளினூடேயிருக்கும் ஈவுகள் வழியாகப் பார்த்து எத்தனை நாள் பொருமியிருப்பாள்.

மாப்பிள்ளை - 'பொம்பிளை'யை ஏற்றிக் கொண்டு அந்தக் கார் கோயிலுக்குப் போவது, காணிக்குள் நின்று பார்க்கும் பொழுது பனை மரங்களுக்கூடாகத் தெரிகிறது. வேதனையின் வெளிப்பாடாகப் பெருமூச்சொன்றை விடுகிறாள் வள்ளிநாயகி. நேற்றுக் கலியாணம் செய்த சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பஞரின் மகள் மங்களம் வள்ளிநாயகியை விட எட்டு வயது இளையவள்.

'காசு பணம் இல்லாததுகள் பாவம் செய்ததுகள்: அப்பு பத்து வருஷமா எனக்குக் கலியாணம் பேசிறூர். இன்னும் ஒரு முடிவையும் காணேல்லை பேசிப் போகும் கலியாணங்கள் குழம்புவதற்கு சீதனந் தானே முக்கிய காரணமாயிருக்கு. வீடுவளவு, காணிபூமி, நகைநட்டு இது மட்டுமே சீதனமாகக் கேட்கினம். இனுமாக ஆயிரக் கணக்காகக் குடுக்க வேணுமாம். கல்வீடு கட்டின கடனை அடைக்க அப்பு வயது போன நேரத்தில மண்ணடிச்சுப் படுகிற கஷ்டம். எங்கடை நிலவரத்தில இனுமாகக் குடுக்கிறதுக்குக் காசுக்கு எங்கை போறது? அடுத்த வீட்டுக் குட்டி மாமாவும் ஏதோ ஒரு அடுக்குப் பண்ணிறூர். மாப்பிள்ளை வீட்டுக்காரர் வீடு வளவு முழுக்கவும், அப்பு தோட்டம் செய்கிற தோட்டத் தறை முழுக்கவும் சீதனமாக இருபதினுயிரமும், இனுமாகப் பத்தாயிரமும் கேக்கினமாம். அவை கேக்கிற மாதிரி குடுக்கிறதெண்டால் எங்களெட்டை ஒண்டுமே மிச்சம் இருக்காது; அப்பு வின்ரை முதுசக் காணியிலை ஒண்டை குஞ்சி அப்பர் அமத்திப் போட்டார். இன்னும் ஒரு காணி தானே இருக்கு. அதுவும் கோயிலுக்கு முன்னுல் காணியெண்டு மனமாய் ஒருதரும் வாங்காயினம். அந்த நாலு பரப்பையும் வித்தாலும் பத்தாயிரம் தானே மட்டுமட்டாய் வரும். மிச்சம் பத்தாயிரம் எங்கையாலும் கடன் வாங்கித் தானே கட்ட வேணும். இப்ப ரெண்டு மூண்டு வருஷமா வெங்காயம், போயிலை நல்ல விலை வித்ததாலை ஒரு மாதிரிக் கடனை அழிச்சு வந்திட்டம். எனக்காகக் கடன்பட்டு அப்பு எந்த நாளும் கடன்காரனுக இருக்கிறதே இன்னும் இரண்டு பெம்பிளைப் பிள்ளைகளிருக்கு. சரசு பெரிய பிள்ளையாகி நாலு வருஷமாச்சு. அவள் படிக்கக் கூடியவள் படிப்பிக்க வேணும். மூத்த தம்பி உத்தியோகமாகி எல்லாத்தையும் என்னெண்டு பாக்கிறது. மற்ற இரண்டு தம்பிமாரையும் சின்னவள் கமலாவையும் ஆளாக்கி விட வேணும். எனக்குக் கலியாணமே வேண்டாம். இப்பிடியே இருந்துவிட்டால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிநாயகி ஆரம்பத்தில் தனது கலியாணத்தைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் கற்பனையில் மிதப்பாள். உடலிலும் உள்ளத்திலும் இன்ப உணர்ச்சி பாய, கைப்பிடிக்கப்போகும் கணவனைப் பற்றியெல்லாம் கனவுகள் காண்பாள். சில நாட்களுக்குள் கலியாணப் பேச்சுக்கள் முறிய, கற்பனைகள் முளையில் கருகிவிடும். பல தடவைகள் கருகிய உள்ளம் இன்று வரண்டு மரத்து விட்டது.

அடிவளவுக்குள்ளிருந்து முற்றத்துக்கு வந்த வள்ளி நாயகி, வெளி விறுந்தையில் சுருண்டு கிடக்கும் தாய் பொன்னம்மாவைப் பெருமூச்சுடன் பார்க்கிறாள்.

பொன்னையாவின் தம்பியாரான வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் மகளின் கலியாணத்திற்கு ஏற்பாடுகள் நடைபெறத் தொடங்கிய நாளிலிருந்து பொன்னம்மாவின் முகத்தில் கவலை அப்பியிருந்தது. அவளது நெஞ்சில் வேதனை குடிகொண்டிருப்பது பேச்சிலும் செயலிலும் தெரிகிறது. தோட்டத்திலிருந்து மிளகாய் ஆய்ந்து கொண்டு வந்தவள், 'தேத்தண்ணி' மட்டும் குடித்துவிட்டு, 'கிறுதி'யாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, உடுத்த முந்தானையை விரித்துக்கொண்டு விறுந்தையில் படுத்திருக்கிறாள்.

சோழகக் காற்று தன் வீரியத்தைக் காட்டி, பனை மரத்துக் காவோலைகளைப் படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது.

வள்ளிநாயகி தனது விதிப்பலனை நொந்து கொள்கிறாள். 'ஏன் எனக்கு ஒரு விடிவும் வராதாம்.' அவள் தனக்குக் கலியாணம் பேசத் தொடங்கிய ஆரம்ப காலத்தைப் பெருமூச்சுடன் எண்ணிப் பார்க்கிறாள்.

'மூத்தம்மான், தோட்டம் செய்யிற தன்ரை மோனுக்கு என்னைக் கட்டிக் குடுக்க, வீடு தேடி வலிய வந்து கேக்கேக்கை அம்மா சொன்னா, 'அண்ணை உதை ஒரு கதை எண்டு வந்து கேக்கிறியளே' எண்டு. இண்டைக்கு அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையிட்ட இருக்கிற காசு! அவரைக் கட்டினவள் ராசாத்தி மாதிரி பிள்ளை குட்டியோடை இருக்கிறாள்.'

அவளுக்கு இப்பொழுது நினைக்கவே வெட்கமாக இருக்கிறது. ''பென்சன்' இல்லாத உத்தியோக மாப்பிளை யை அப்பு பேசிக் கொண்டுவர நான் தானே பாவி அதை வேண்டாமெண்டு சொல்லி சாப்பிடாமல் 'முகக்கிடை' கிடந்தன். சின்ன உத்தியோகமெண்டால் அப்ப கனக்கச் சீதனமில்லாமல் செய்திருக்கலாம், அரைவாசி வீட்டோடை ஒப்பேத்தியிருக்கலாம்.'

இன்று பிரச்சனை புதிய தரிசனத்தைக் கொடுக்கிறது. மறைந்த ஆண்டுகள் வயதுருவத்தில் வந்து பிரச்சனையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. சில இடங்களில் வயது கூடிய காரணத்தால் வள்ளிநாயகி ஒதுக்கப்பட்டாள். அவளது வயதுக்கேற்ப மாப்பிள்ளைகள் இருக்கும் இடங்களில் வேறு பிரச்சனைகள் இருந்தன. அங்கும் அவளைப் போல் கலியாண மாகாத பெண்கள் இருந்தனர்; கலியாணமாகாத தங்கை களுக்கு மாற்றுக்கு மாப்பிள்ளை கேட்டனர்.

'மாற்றுக்கு மாப்பிள்ளை' என்று நினைத்ததும் 'பெரிய தம்பி' சொன்னவற்றை அவள் எண்ணிப் பார்க்கிறாள். ''அக்கா நான் மேல்படிப்புப்படிச்சுக் கொண்டிருந்தால் எங் கடை பிரச்சனை ஒண்டும் தீராது. நான் உத்தியோகமானத் தான் எங்களுக்கு ஒரு வழி பிறக்கும். அக்கா 'கிளறிக்க' லுக்கு வந்தால் நான் போகப் போறன்; எங்கடை சமுதா யத்தில பெடியங்கள் படிக்கிறது அக்கா தங்கை மாருக்குச் சீதனம் தேடத்தானே! ஔவையார் அண்டைக்கு 'கொடிது கொடிது இளமையில் வறுமை' எண்டு பாடினார். இண் டைக்கு அவர் இருந்தால் 'அதனிலும் கொடிது சீதனக் கொடுமை' எண்டு பாடியிருப்பார். அக்கா இண்டைக்கு ஏன் இப்பிடிக் காத்தடிக்குதெண்டு உனக்குத் தெரியுமே? குஞ்சியப்பு வீட்டில லட்சத்துக்கு மேல சீதனம் குடுத்துக் கலியாண வீடு நடக்க எங்கடை அரசடியூரில உள்ள வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லாத குமருகள் எவ்வளவு பெருமூச்சு விடுங்கள். அது தான் சோழகம் இவ்வளவு வீச்சாக அடிக்குது......''

வள்ளிநாயகிக்கு, தம்பி கணபதிப்பிள்ளையின் புத்திக் கூர்மையும், இந்தச் சிறுவயதிலேயே அவன் தங்கள் குடும்பக் கஷ்டத்தை உணர்ந்து நடப்பதையும் எண்ணி மனம் பூரிக்கிறாள். 'பாவம் வகுப்பில எல்லாப் பிள்ளைகளும் ஊர் சுற்றிப் பார்க்கப் போக அவன் எங்கடை தாற்பரியத்தை நினைச்சுப் போகாமல் விட்டவன் எல்லே தம்பியும் இனிப் பள்ளிக்கூடத்தாலை வந்திடுவன். நானும் குளிச்சிட்டு நிண்டால் அவனுக்குச் சாப்பாட்டைக் குடுத்திட்டுச் சாப்பிடலாம்.' அவள் தினமும் வீட்டு வேலையை முடித்துவிட்டு, தம்பி பள்ளிக்கூடத்தால் வந்த பின்புதான் சாப்பிடுவாள்.

''சூ - சூ ஹாய்... ஹாய்... ஊரா வீட்டுக் கோழியெல்லாம் நெல்லுக் குடிக்குது. உவள் கமலா எங்கை போட்டாள். பெடி பெட்டையளுக்குக் கண்கடை தெரியுதே! கோதாரியிலை போவாரே! உங்களுக்கென்ன கண் கெட்டுப் போச்சே? எடி பிள்ளை! உங்கை நீ என்ன செய்யிறாய். உந்த நெல்லை அள்ளிப் போட்டு மற்றதுகளைச் செய்யாதையன்.'' பொன்னம்மாவின் விரக்தி பேச்சில் விரவி நிற்கிறது. எழுந்து கோழியைத் துரத்துகிறாள்.

வள்ளிநாயகி அவசரமாக வந்து முற்றத்தில் பனுட்டுப்பாயிலே காய்ந்து கொண்டிருக்கும் புழுக்கிப் போட்ட நெல்லைக் கடகத்தில் அள்ளுகிறாள்.

பொன்னம்மா போட்ட சத்தம், அடுத்த வீட்டுச் சின்னம்மாவுக்கு விடுப்புப் பார்க்கும் விருப்பத்தை ஏற்படுத்துகிறது. நல்ல தண்ணீர் அள்ளும் சாட்டில் குடத்துடன் வந்து பொன்னம்மாவுடன் பேச்சுக் கொடுக்கிறாள்.

''அடிப்படலைக்கை இருந்துகொண்டு உங்களை எட்டிப் பார்க்கக் கூட எனக்கு நேரப்பொரியில்லை. அது பின்னேரப் பாட்டுக்கு குடிச்சிட்டு வந்துதெண்டால், அதுக்கு மறுமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கட்டாது. கதையோட கதை. அக்கை! நேத்து தம்பியாற்றை கலியாண வீட்டுக்கு பொன்னையாண்ணை வந்த சிலமன் இல்லை.''

''ஓம் சின்னம்மா, அவர் செய்த செய்கைக்கு இந் தாள் எந்த முகத்தோடை போறது? அவையும் அவை யின்ரை பணச் செருக்கும்; நாங்களும் எங்கடை பிச்சைப் பெட்டியும்.''

''அக்கை உதெல்லாம் ஊரை ஏமாத்தி எப்பிடிச் சம் பாரிச்ச தெண்டு எங்களுக்குத் தெரியுந் தானே.''

''ஊரை மட்டுமே ஏமாத்தினுன் பாவி, தாய் தேப் பன்ரை சொத்துக்களையும் அம்பாளிச்சினம். பெட்டகம், தாயின்ரை கடுக்கன், என்னும் எத்தினையோ சாமான்களை எல்லாம் அவையள் தானே சுருட்டிப் போட்டு எங்களுக்கு ஒரு காணித் துண்டைப் பூச்சாண்டி காட்டிச்சினம். இவர் எப்பவும் இளிச்சவாயன் தானே கடைசியிலை அந்தக் காணி யையும் அவன் மனுசன் பறிச்சுப் போட்டான்.''

''போனது தான் போச்சுதெண்டாலும் இப்ப அண் ணன் முட்டுப்பட்டுப் போனுரெண்டு ஏதாவது உதவி செய்ய லாம் தானே''

''ஐயோ சின்னம்மா இவையாலை எங்களுக்கு வாய்க் கைபோடுற ஒரு சுண்ணும்புக் கட்டி எண்டாலும் பிரயோ சனமிருக்கே?''

''உலகம் தலை கீழாத்தானே நடக்குது தமக்கை யிருக்கத் தங்கைக்கு ஒரு கலியாணம். மெய்யே அக்கை! உங்கடை பெடிச்சிக்கு வைத்திலிங்கத்தாற்றை பெடிச்சியி லும் நாலைஞ்சு வயது மூப்பெல்லே?''

''என்ன சின்னம்மா புது நாணயக்கதை கதைக்கிருய்? இவள் சரியா அவளை விட எட்டு வயசு மூப்பு''

''அக்கை! நிலவு பதிஞ்சைசுநாள் இருட்டும் பதினைஞ்சு நாள். இப்பதான் கடவுளும் கண் திறந்திருக்கிருர். புளியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுப்பிள்ளையண்ணன் வீட்டிலை கேட்டுப் பாருங்கோ. அது கட்டாயம் சரிவரும்......எங்கடை படலைக்கையும் காருப்பிச்சுக் கேக்குது. அது வந்திட்டுது போலை கிடக்கு. இக்கணம் என்னைக் காணேல்லை எண்டு சமா வைக்கப் போகுது.''

சின்னம்மா போகிருள். பொன்னம்மா மீண்டும் விருந்தையில் சரிகிருள்.

சுழன்றடிக்கும் சோழகக் காற்று மண்ணையள்ளிக் கண்களுக்குள் கொட்டுகிறது.

படலை திறக்கும் சத்தம் கேட்கிறது.

''சின்னையாண்ணனே! வாருங்கோ. அந்தக் கதிரையிலை இருங்கோ. இப்பதான் தோட்டத்தால மிளகாய் ஆஞ்சு கொண்டு வந்தனுன். கிளியளின்ரை கொடுமை பெரிய கொடுமை; எல்லாத்தையும் கோதிக் கொட்டுதுகள்...... பஞ்சியாய் கிடந்துது. ஒல்லுப்போலை இதிலை சரிஞ்சிட்டன்'' என்று சொல்லிக் கொண்டே விரித்திருந்த சேலைத் தலைப்பை உதறிச் சேலையைச் சரி செய்து எழுந்திருக்கிருள் பொன்னம்மா.

''பொன்னம்மா! அத்தான் எங்கை போட்டார்?'' சின்னையா கதிரையிலிருந்து கொண்டே கேட்கிருர்.

''அவர் எரு எத்தப் போட்டார். நேற்றும் பொழுது மைம்மலுக்கை தான் வந்தவர்.''

''இண்டைக்கு எந்தப் பக்கம் எரு ஏத்தப் போச்சினமோ தெரியேல்லை. காலம்பறை தும்பனைக்கு நடுவில் மகன் வீட்டை போட்டு வரக்கிள்ளை வீர பத்திர கோயிலடியைத் தாண்டி வாற முதல் வீட்டு மனுஷி என்னை இஞ்சத்தையில் ஆள் எண்டு தெரிஞ்சிட்டுது போல, ''அண்ணை உங்களுக்கு பொன்னையாண்ணனைத் தெரியுமே; ஒருக்கால் அவரிட்டை மறந்து போகாமல் சொல்லி விடுங்கோ, எருவுக்கு இரண்டு மூண்டு பேர் வந்து கேட்டு ஆக்கினைப் படுத்துகினம்; சுணங்காமல் ஏத்தச் சொல்லி. பொன்னையாண்ணனுக்குத் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒவ்வொரு வருஷமும் குடுக்கிறது. நாணயமான மனுசன் எண்டு சொல்லிச்சுது.''

''ஊரெல்லாம் நாணயமான மனுசன் எண்டு பேர் தான்; வீட்டிலே ஒரு நாளும் விடிவில்லை''

''ஏன் பொன்னம்மா அப்பிடிச் சொல்லிறு. அரசடிப் பிள்ளையார் உங்களைக் கைவிடப் போருரே. அதுசரி நேற்று நல்ல வேலை செய்து போட்டார். நான் நினைச்சனுன் தம்பிச் காரன்ரை மோவின்ரை கலியாண வீட்டுக்குக் கட்டாயம் வருவார் எண்டு''

''அண்ணை அவற்றை வருத்தெரிச்சல் அவருக்குத் தான் தெரியும்; நான் போகச் சொல்லவும் இல்லை. போகவேண்டாம் என்று சொல்லவும் இல்லை; அந்த ரோட்டுக்கரைக் காணியை அமத்தினதாலை அவருக்கு மனத்திலை வைராக்கியம் தொட்டிட்டுது.''

''உண்மைதான் பொன்னம்மா. அந்தக் காணி இருந்தால் நீங்கள் ஒரு காலத்திலை ஒரு பெம்பிளைப் பிள்ளைக்கு வீடு வாசலைக் கோலலாமெல்லே''

''அண்ணை நீங்கள் ஊரடிபட்ட மனுஷன் உங்களுக்குச் சொல்ல வேணுமே! ஐஞ்சு பெம்பிளைப் பிள்ளையை விட்டிட்டு கொண்ணரும் மனுஷியும் ஓடித்தப்ப, தாயும் தேப்பனுமாய் இருந்து ஒவ்வொண்டாகக் கரை சேர்த்துக் கொண்டு வாறியள். ஒரு குமரை இந்த நாளையிலை கரை சேர்க்கிறதெண்டால் லேசுப்பட்ட காரியமே. அண்ணனுக்கு மூண்டு பெம்பிளைப் பிள்ளை இருக்குதெண்டு கொஞ்சமாவது மனமிரங்கினனே பாவி. இவர்தானே தாய்தகப்பன்ரை பாடுபறப்புகளை யெல்லாம் பார்த்தது. அந்நாள் தந்திரமாய்த் தன்ரை அலுவல்களை முடிச்சுக் கொண்டு வருகுது. ம்...... கடவுளும் அவையின்ரை பக்கந்தானே'' பெருமூச்சுடன் பொன்னம்மா கூறுகிருள்:

படலையை யாரோ திறக்கும் சத்தம் கேட்கிறது.

இயனக்கூடு சத்தஞ் செய்ய, பின்புறத்தில் முட்டி தொங்கக் கந்தன் வீட்டிற்குள் பிரவேசிக்கிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கந்தன் எப்பிடி உன்ரைபாடு. சோழகம் பிறந்தாப் போல பனையளெல்லாம் வத்தியிருக்கும்'' சின்னையா கந்தனை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு கேட்கிறார்.

''நாம் தானே, கள்ளைத் தொட்டும் பாக்கிறதில்லை. கோயில் குளம், புராணப்படிப்பு எண்டு திரியுதாக்கும்''

''அது கிடக்கட்டும் வைத்திலிங்கத்தாற்றை கலியாண வீட்டைப் பற்றி ஊரிலை என்ன கதைக்கினம்.''

''நல்ல டீங்காம். நாம்தானே நிண்டு எல்லாத்தையும் நடத்திச்சுதாம்'' கந்தன் பேச்சைச் சிறிது நிறுத்தி, பெருமூச்சு விட்டுக் கொண்டே தொடர்கிறான். ''ம்......தமையன்ரை காணியை அமத்தி வீடும் கட்டி பொடிச்சியை டாக்குத்தருக்கும் கட்டிக் குடுத்திட்டுது. எல்லாம்வெளிப்பவர் தானே. கலியாண வீட்டாலை போக்குள்ளை கறுப்பி திட்டிக் கொண்டு போறாள். எரிஞ்ச சோறும் குழைகாயும் தான் கிடைச்சுதாம். அந்தாள் ஒரு மனுஷனே. பொன்னையாக் கமக்காரன்ரை குணத்துக்கு ஏணி வைச்சாலும் எட்டுமே? வாக்கு நாணயமில்லாத மனுஷன். என்னையுமெல்லே பேய்க்காட்டிப் போட்டுதாக்கும். தோட்டஞ் செய்யத் தாறன் எண்டு கல்லுப் பிரட்டிச்சு நல்ல தோட்டத்தறையாக்கி விச்சுப் போட்டு கடைசியில கையை விரிச்சுப் போட்டுது. இண்டைக்கும் பொன்னையாக் கமக்காரன் எனக்கு தன்ரை தறையைக் குத்தகைக்குத் தந்திட்டு தான் மலட்டு உடையார் கோயிலுக்கு எழுதின தறையில தோட்டஞ் செய்யுது.''

''கந்தன் ஐஞ்சு விரலும் ஒரே மாதிரி இருக்குமே'' சின்னையா சொல்கிறார்.

''நாம் இருந்து பாக்கவும் இந்தாள் உழைச்சு வைச்சதையெல்லாம் செலவழிக்கத்தான் மோன் பிறந்திருக்கிறான். அவர் இப்ப எங்கடை சாமான்கள் ஒண்டும் பாவிக்கிறதில்லை. சீமைக்குடிவகை. அது மட்டுமே அந்தச் சிலக்கேட்டை ஏன்க்கும் பேசுவான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வட்டி வாங்கிற காசு தங்காதெண்டு சொல்லு வினம். உண்மை போலதான் கிடக்கு'' சின்னையா அபிப் பிராயம் கூறுகிறார்.

''மெய்யேயாக்கும் சீதனம் பெருவாரியாகக் குடுத் திருக்கிறாராமே?''

''ஓம் கந்தன். வீடுவளவு, தோட்டத்தறை நூறுபட்டி, நகைநட்டுகள், கார், இனமாக ஒரு இலட்சம், பெடிச்சி யெண்டை பேரிலை ஐம்பதினாயிரம்.''

''கந்தப்பருக்கும் இரண்டு குமர் வீட்டோடை இருக்கு. டாக்குத்தர்ப் பெடியனாலை வாற ஒரு இலட்சம் ரூபாவிலையே அதுகளைக் கரை சேர்க்கிற யோசனை போல'' என்கிறான் கந்தன்.

''எங்களைப் போல காசுபணம் இல்லாததுகள் பாவஞ் செய்ததுகள். ம்......வாழாப் பிள்ளை தாயோடை'' பெரு மூச்சுடன் பொன்னம்மா சொல்கிறாள்.

உரையாடல் நடைபெறும் இடத்திற்குத் தன் உருவத் தைக் காட்டாது, சுவர் மறைவில் இருந்து இது வரை நடந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த வள்ளிநாயகிக்கு, தாய் கடைசியாகக் கூறியதைக் கேட்டதும் கண்கள் கலங்கி, விம்மலாக உருவெடுக்கிறது. கிணற்றடியை நோக்கிப் போகிறாள். அவர்கள் வீட்டில் ஒளிவுமறைவின்றி தந்தைக் கும் தாய்க்கும் நடக்கும் உரையாடல்களைக் கேட்டுக் கொண் டிருக்கும் அவளுக்கு சில வேளைகளில் உட்பொருள் நெஞ் சைத் தொட்டு, வேதனையைத் தரும் பொழுது, தண்ணீர் அள்ளும் சாட்டில் தனிமையை நாடி கிணற்றடிக்குப் போவாள்.

வள்ளிநாயகி கிணற்றுக்கற்கட்டிலிருந்து முகத்தில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்கிறாள்.

சோழகம் பேரிரைச்சலுடன் பேய்க் காற்றாக வீசு கிறது. செழித்து வளர்ந்திருக்கும் கிணற்றடித் தென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களைத் தழுவிய சோழகக்காற்று வீட்டுக் கோடியில் தன்னந்தனியாக நிற்கும் ஒரு சோடைப் பனையைச் சுழற்றி ஆட்டி அலைக்கிறது.

University of Peradeniya
06 DEC 2021
LIBRARY

## 4

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் மருமகனான டொக்டர் செந்தில்நாதன், மங்களவாசத்தின் முன் மாடத்திலுள்ள ஒரு கதிரையில் அமர்ந்திருக்கிறார். அவர் முன்பாக மருத்துவசஞ்சிகை ஒன்று விரித்தவண்ணம் இருக்கிறது. ஆனால் அவரின் சிந்தனையோ எங்கெல்லாமோசென்று வட்டமிடுகிறது.

திருமணம் முடிந்து இன்றுடன் இரண்டு வாரங்கள் முடிகின்றன. இரு வாரங்களாக ஆஸ்பத்திரிக்குப் போய் நோயாளர்களைப் பார்வையிடாதது அவரது மனதில் ஒருவித முழுமையற்றதன்மையை ஏற்படுத்துகிறது. சில நோயாளர்களைப்பற்றிய நினைவுகள்... ; அவர்கள் குணமடைந்திருப்பார்களா? நல்ல வகையில் கவனிக்கப்படுகிறார்களா? புதிய 'கேஸ்' கள் பலவந்திருக்குமா...?

அவரது சிந்தனை தற்பொழுது தன் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை எண்ணிப் பார்க்கிறது.

திருமணம் முடிந்து, யாழ்ப்பாணத்தில் பேர்போன கோவில்களுக்கெல்லாம் போனார்கள். அவரை ஒன்றுமே கேளாது, ஏற்பாடுகள் யாவற்றையும் மாமனும் மச்சானும் செய்தார்கள். அவர் வெறும் கைப்பொம்மையைப் போல, அவர்கள் சொல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று வந்தார். அவர்களது செயல்களில் அந்தஸ்து, பணச்செருக்கு முதலியவற்றை இனங்கண்டபொழுது, செந்தில்நாதனுக்குக் கவலையாக இருந்தது.

704531
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் ஆழமாகவும் காரண காரியங்களுடனும் சிந்திக்கும் செந்தில்நாதன், பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமுதாய ஏற்றத்தாழ்வில் வகிக்கும்பங்குபற்றித் தற்பொழுது சிந்திக்கிறார். 'நமது சமுதாயத்தில் உள்ள சீதன அமைப்பு முறை உண்மையில் படித்த ஆண்களைப் பணம் படைத்தவர்கள் விலைக்கு வாங்கும் வியாபாரம் போலாகிவிட்டது.

மச்சானுன இராமலிங்கத்தின் போக்கு, செந்தில்நாதனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர் தனது அக்காவின் கணவனுக்கு இன்றும் கொடுக்கும் மரியாதை.! பெரிய பட்டமும் பதவியும் உடைய செந்தில்நாதன் ஒரு சின்ன உத்தியோகம் பார்க்கும் மச்சானைக் கண்டதும்,இன்றும் ஆசனத்தில் இருந்தால் எழுந்துவிடுவார். இங்கு இராமலிங்கம் செந்தில்நாதனுக்குரிய மரியாதையைக் கூடக் கொடுப்பதாகத் தெரியவில்லை. யாரும் பிரமுகர்கள் வந்தால் மட்டும் கைகுலுக்கவைத்து, அறிமுகம் செய்து பகட்டாக நடித்து, தனது தங்கையின் கணவன் என்று பெருமை பேசுவான்.

மாமன் வைத்திலிங்கம் எதையும் நேரில் சொல்ல மாட்டார். வெளியில் மரியாதை காட்டுவது போல நடித்துக்கொள்வார். அவரது தகப்பனுன கந்தப்பருக்கு ஒரு சம்பந்திக்குக் கொடுக்கும் மரியாதையைக் கொடுக்காமல் இருப்பது வைத்திலிங்கத்தின் பேச்சில், நடையில் தெளிவாக தெரிகிறது; இந்தளவிற்கு இருக்குமென அவர் எதிர் பார்க்கவில்லை.

திருமணம் பேசிவந்த பொழுது பணம் படைத்த குடும்பத்தில் பல சிக்கல்கள் இருக்கலாம் என செந்தில் நாதன் எண்ணியதுண்டு: ஆனுல் தான் வாழும் சமுதாய அமைப்பில் இதைவிட வேறு வழியில்லை என்ற நிலைக்கு அவர் கட்டாயமாக வர வேண்டியிருந்தது.

படிப்பு முடிந்து உத்தியோகம் கிடைத்ததும் வீட்டில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் இரு தங்கைகளுக்கும் வழி செய்ய வேண்டிய கடமை அவரை எதிர்நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தது. அவர் உழைத்து, இரு தங்கைகளுக்குச் சீதனம் தேடுவதென்ருல் இன்றைய யாழ்ப்பாணத்து நிலையில் வாழ் நாள் முழுவதும் பிரமச்சாரியாகவே இருக்க வேண்டும். 'டொனேசன்' ஆகவாங்கி, தங்கைமார்களுக்கு அதைச் சீதனமாகக் கொடுத்துக் கரை சேர்த்து விட்டுக் கலியாணம் செய்யும்படி லண்டனில் இருந்து வந்தநாள் முதல் தந்தை வற்புறுத்தினர். தந்தையும் தாயும் சிறிய கோட்டைச் செந் தில்நாதன் என்றுமே தாண்டியதில்லை. ஆழமாக யோசித் தார். தங்கைகளுக்கு வயது கூடிக்கொண்டு போவதையும், அவர்களது மனே நிலையைக் கவனிக்கும் போதும் காலம் தாழ்த்தாது கலியாணம் செய்து கொடுப்பது நல்லது போல அவருக்குப் பட்டது.

கந்தப்பர் தேவையின் நிமித்தமாக முதலாளி வைத்தி லிங்கத்தின் வலையில் சிக்கினர். வைத்திலிங்கம் கொடுத்த 'டொனேசன்' காசைக்கொண்டு மூத்தவளைக் கரை சேர்த்து விட்டார். மற்ற மகளுக்குக் கலியாணப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது.

ஆனல் செந்தில்நாதனின் நெஞ்சம் தனது நிலையை எண்ணிக்குமுறுகிறது. கலியாணம் முடிந்ததும் செந்தில் நாதன் மனைவியைத் தனது தந்தை வீட்டிற்கு அழைத்துச் சென்றர். அவர்களது வீடு சிறியது; அவரது மனைவி மங்களத்திற்கு அங்கு போனதும் இருப்புக்கொள்ளவில்லை: எவ்வளவு விரைவில் திரும்ப முடியுமோ, அவ்வளவு விரைவில் திரும்பிவிட்டாள். செந்தில்நாதனின் பாடு பரிதாபகரமாகி விட்டது.

செந்தில்நாதனின் சொந்தகாரர்கள் சிலர், "நாங்கள் இருக்கிறது கொட்டிலும் குடிசையும் எண்டபடியால் முழிப் பில்லாமல் போட்டுதோ! பெரிய இடத்துக்குப் போனப் போல முட்டுப்பட்ட எங்களை மறந்திட்டானே!!" என்று குறை பட்டதைக்கேட்டு அவர் மன வருத்தமடைந்தார். மனைவிக்குச் சுகமில்லை என்று சொல்லி' அவர்கள் வீடுகட் கெல்லாம் தான் மட்டும் தனியாகவே சென்று வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்கு முன்பு மங்களத்தைச் சந்திக்கும் பொழுது, செந்தில்நாதனால் அவளைப்பற்றி ஆழமாக எதை யும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவளது நாகரீகமான உடை நடை பாவனையையும், நளினமான பேச்சுக்களையும் தான் குறுகிய நேரச் சந்திப்பில் அவரால் காண முடிந்தது. இப்பொழுது இரண்டுவார காலமாகவே மங்களத்தின் போக்கையும் நோக்கையும் அவர் இனங்காண்கிறார். 'வறு மையின் ஒளி படாததாலும், கொழுப்பு வாழ்க்கையில் பழக் கப்பட்டதாலும், யாழ்ப்பாணப் பழக்க வழக்கங்களில் பரிட் சயம் குறைவாக இருக்கிறாள், நாளடைவில் சரியாகிவிடும்' என்றே அவர் நம்புகிறார்.

இராமலிங்கம் தொடர்ந்து இந்த வீட்டில் இருப்ப தால் ஏற்படும் தாக்கத்தை செந்தில்நாதன் எண்ணிப்பார்க் கிறார். அரசடியூர்க்கிராம சபை 'சியமனாக' இருப்பதாலும், தனது செல்வாக்கை இவ்வூரில் பயன்படுத்துவதற்காகவும், இராமலிங்கம் உடுப்பிட்டியில் சீதனமாகக் கொடுத்த வீட் டைவிட்டு, மங்களவாசத்தில் மனைவியுடன் வந்திருக்கிறான்.

இராமலிங்கம் லட்சுமியை மனைவியாகப் பெற்றது உண்மையில் ஒரு பெரும் பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் குறுகிய காலத்துள்ளேயே செந்தில் நாதன், லட்சுமியின் பொறுமையையும், பொறுப்பாக வீட்டு வேலைகளைக் கவனிக்கும் திறமையையும் கண்டு திகைப் படைந்துவிட்டார். இராமலிங்கம் செய்யும் கூத்துக்களுக் கெல்லாம் ஈடுகொடுத்து அவள் செலுத்தும் அன்பு......! 'மங்களமும் லட்சுமி போல் மாறமாட்டாளா?'

நினைவுலகிலிருந்து மீண்ட செந்தில்நாதன் சஞ்சிகை யின் பக்கங்களைப் புரட்ட ஆரம்பிக்கிறார்.

யாரோ 'கேற்' வாசலில் நின்றுகொண்டு, ''நாய் கட்டியிருக்கோ?'' என்று சத்தமிடுவது கேட்கிறது.

செந்தில்நாதன் எழுந்துவந்து பார்க்கிறார். ஆங்கிலத் தில் வணக்கம் தெரிவித்துவிட்டு, உள்ளே வருபவரை டொக் டர் பார்க்கிறார்; அது சிங்கப்பூர் சின்னையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு இருக்கும் ஆங்கில அறிவைக் காட்டி செந்தில் நாதனுடன் ஆங்கிலத்தில் பேசினுல், தன்னைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்வார் என்ற காரணத்தால் போலும், ஆங்கிலத்தில் தன்னை அறிமுகம் செய்து வைக்கிறுர் சிங்கப் பூர் சின்னையா.

செந்தில்நாதனின் பதில் தமிழில்வரவே, அவரும் தமி ழில் பேசுகிறுர். சிங்கப்பூர் சின்னையாவைப்பற்றி செந்தில் நாதன் கேள்விப்பட்டிருக்கிறுர். ஊரில் கலியாண வீடு, செத்த வீடு என்றுல் முன்னுக்கு நின்று நடத்துபவர், பெரிய சீட்டுக்கள் பிடிப்பவர்; அவரை அரசடிப் பிள்ளையார் கோவி லில் செந்தில்நாதன் பல தடவைகள் கண்டிருக்கிறுர்.

''டொக்டர் உங்களைப்பற்றி நான் கனக்கக் கேள்விப் பட்டிருக்கிறன் எங்கட ஊருக்கு எவ்வளவு பெருமை தெரியுமே. உங்கட 'பாதரு'க்கு என்னை நல்லாத் தெரியும். சுந்தப்பண்ணர் சோலிசுறட்டுக்குப் போகாதவர், தானும் தன்ரைபாடும்''

டொக்டர் புன்சிரிப்புடன் தலையை மட்டும் ஆட்டுகிறுர்.

சின்னையாவே தொடர்கிறுர். ''எனக்கு ஒரு பெரிய யோசனை பாருங்கோ. முந்தின காலத்தில எங்கட ஊரில்- பொதுவாக வடமராட்சியிலயே வெளியிடத்தில சம்மந்தம் செய்யிறதில்லை ஆனுல் இப்ப இப்ப படிச்ச பெரிய உத்தி யோகமானவங்கள் எல்லாம் ஊரைவிட்டுப் போட்டாங்கள். இதுவும் ஊருக்கு ஒரு பெரிய இழப்புத்தானே''

செந்தில்நாதன் ஒன்றுமே பேசவில்லை தனக்குள் சிரித்துக் கொள்கிறுர்.

''எப்பிடி டொக்டர் உங்கடை மற்றத் தங்கச்சிக்கு எங்கையெண்டாலும் ஒட்பேறி வந்திட்டுதோ?''

''ஐயா இந்த விஷயமாகத்தான் ஓடித்திரியிறுர் ஒண் டும் இன்னும் சரிவரேல்லை''

இப்ப டொக்டர் இலேசில மாப்பிள்ளை எடுத்துக் கொள்ளேலாது. 'மார்க்கட் ரயிற்' எனக்கு இதில பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவம். உங்களுக்குத் தெரியுமோ தெரியாது எனக்குப் பிள்ளையள் இல்லை. என்ரை அண்ணருக்கு ஐஞ்சும் பெம் பிள்ளைப் பிள்ளையள், அண்ணரும் மனுஷியும் மோசம் போட் டினம். நான்தான் இதுகளை வளத்துக் கரைசேர்த்துக் கொண்டுவாறன். இன்னும் இரண்டு பேர் இருக்கினம்''

செந்தில்நாதன் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டு. அவரை ஒரு நோயாளியைப் பார்ப்பது போல ஏற இறங்கப் பார்க்கிறார். தற்பொழுது தான் செய்து கொண்டிருக்கும் 'மனோவியாதிகளுக்குரிய சமூகக் காரணங்கள்' என்ற ஆராய்ச்சிக்கு இவரைப் போன்றவரின் பழக்கம் உதவலாம் என எண்ணுகிறார்

சிறிது நேரம் அமைதி நிலவுகிறது.

''டொக்டர் உங்களை ஒண்டு கேக்கலாமா?'' ஆங்கி லத்தில் பீடிகை போட்டுவிட்டு, சின்னையா தொடர்கிறார்.

''என்ர மூண்டாவது பெருமோள் கலியாணம் செய் தது தும்பளைக்கிள்ளை. அந்த மாப்பிள்ளையின்ரை சிறிய தேப்பன்ரை மகன் உங்களிட்டைத்தான் வைத்தியம் செய் விக்கிறார், பெயர் நடராசா. எப்படி டொக்டர் ஏதாவது பிளைப்படுத்துமோ?''

''அவருக்குப் பாருங்கோ பயப்படுகிறதுக்கு ஒண்டு மில்லை, Anxiety Neurosis கெதியாய் சுகம் வந்திடும்''

''டொக்டர் ஏன் அந்தாளுக்கு இந்த நோய் வந்தது? பாவம் தாய் மனுஷி உரல் இடிச்சு, நெருப்புத் திண்டு வளத்தது. மோனுக்குச் சுகம் வரவேணுமெண்டு நெல்லண் டைப்பத்திரகாளி அம்மனுக்கு 'மடிப்பிச்சை' எடுத்து, குளிர்த்தி செய்யப் போறனெண்டு நேத்து எனக்குச் சொல் லிச்சுது''

''நடராசா கலியாணம் செய்தபகுதி கொழும்பில் நெடுகச் சீவிச்சனைவ. இவர் வறுமையில வளர்ந்தவர். இத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் இவருக்கு Complex,-தாழ்வுணர்ச்சி வந்திட்டுது. இப்ப மருந்து கொடுத்து, தேவையான புத்திகள் சொல்லி நல்ல முன்னேற்றம் இருக்கு''

''அப்ப டொக்டர் 'தனக்கெளியது சம்பந்தம்'எண்டு சொல்லுறது சரிதான்''

சின்னையா சொன்னதை செந்தில்நாதன் மனதில் வைத்து எடை போடுகிறார்.

லட்சுமி இருவருக்கும் தேநீர் கொண்டு வருகிறாள்.

''எங்க பிள்ளை உங்கண்டை மச்சாளையும் காணேல்லை மாமாவின்ரை சிலமனையும் காணேல்ல''

''அவ உள்ளுக்க படுத்திருக்கிறா, மாமா இண்டைக்கு விரதமெல்லே மந்திகை அம்மன் கோயிலுக்குப் போட்டார்''

''ஓம் பிள்ளை வைகாசிக் கடைசியில தானே இந்த முறை அம்மன் கோயில் காவடி வருகுது''

''தேத்தண்ணி ஆறப் போகுது குடியுங்கோ'' என்று சொல்லிக் கொண்டு லட்சுமி குசினிப்பக்சமாகப் போகிறாள்.

அப்பொழுது கார் ஒன்று வந்து 'கேட்' வாசலில் நிற்கிறது. வேலைக்காரப் பெடியன் ஓடிச்சென்று 'கேட்'டைத் திறக்கிறான்.

ஆடம்பரமாக உடுத்திய பெண் ஒருத்தி காரிலிருந்து இறங்கி உள்ளே வருகிறாள்

சின்னையா எழுந்து கொண்டே சொல்கிறார் ''டொக்டர் உங்களைச் சந்திச்சது பெரிய சந்தோஷம், நான் போட்டு வாறன் டொக்டர்''

''அடிக்கடி வாருங்கோ'' என்று சொல்லி வழியனுப்பி விட்டு, அந்தப் பெண்ணை வரவேற்கிறார். அவள் மந்திகை ஆஸ்பத்திரி டி. எம் ஓ. சிவநேசனின் மனைவி.

மங்களத்தைத் தேடித் தான் அவள் வந்திருக்கிறாள் என்பதைச் சொல்லாமலே அறிந்த செந்தில்நாதன் 'உள்ளே இருக்கிறா' என்று சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிவநேசன் மங்களத்தைத் தேடி, நேராகப் படுக்கையறைக்குள் புகுகிறுள். செந்தில்நாதன் கதிரையில் இருந்து மருத்துவசஞ்சிகையைப் புரட்டுகிறுர்.

இவ்வளவு நேரமும் படுக்கையில் கிடந்த மங்களம், இப்பொழுது கலகலப்பாகப் பேசுவது செந்தில்நாதனின் காதுகளில் வந்து மோதுகின்றது. இரு வாரத்துக்குள் இருவரும் இப்படி ஐக்கியமாகி விட்டதைக் காரண காரியத் தொடர்புடன் எண்ணிப் பார்க்கிறுா செந்தில்நாதன்.

உள்ளே அற்ப விஷயங்களை ஆராவாரத்தோடு பேசிக் கொள்கிறுர்கள். உயர் வகுப்பினரின் பிரச்சினைகள் பேச்சில் எடுத்தாளப்படுகின்றன. தரம் குறைந்த நகைச்சுவைகளை ரசித்துச் சுவைக்கின்றனர்.

செந்தில்நாதனுக்கு ஏனோ சிங்கப்பூர் சின்னையா குறிப்பிட்ட அந்த மனேவியாதிக்காரன் நினைவுக்கு வருகிறுன். அவர் சொன்ன, 'தனக்கு எளியது சம்பந்தம்' என்ற வாசகத்தை ஆய்வு செய்கிறுர். சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வினுல் அமுக்கப்பட்டு, வறுமைச் சூழலிலே வளர்ந்து, கல்வியறிவு பெற்று முன்னேறி, செல்வச் சூழலிலே வாழும் பொழுது ஏற்படும் மாற்றங்கள், மனப்பாதிப்புகள் இவற்றை செந்தில்நாதன் எடைபோடுகிறுர்.

படுக்கை அறையினுள்ளே எதற்காகவோ மங்களமும் திருமதி சிவநேசனும் பலமாகச் சிரிப்பது நாரசமாகச் செந்தில்நாதனின் காதுகளிலே வந்து ஒலிக்கின்றது.

# 5

தகிக்கும் வெய்யிலின் அகோரத்தைப் பெருமூச்சுடன் ஊதித்தள்ளுகிறுர் பொன்னையா. அப்பொழுதுதான் தோட்டத்தால் வந்தவர், தலையைச் சுற்றியிருந்த துண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைக்கழற்றித் தலையணையாக வைத்து வெளி விறாந்தை யிலே உடலைச் சரித்துக் கொள்கிறார்.

''புள்ளோய் எப்பன் தண்ணி கொண்டுவா மோனை'' அவரது குரல் கரகரத்து ஒலிக்கிறது. இந்த வருடம் புகை யிலைக்கன்று நடுவதற்கு தோட்டத்திற்குப் பசளையாக ஊர் மனைகளிலிருந்து எரு ஏற்றிக் கொண்டு வரும் வேலையைக் கடந்த ஒரு வாரகாலமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

''இண்டையோட பத்து வண்டில் எரு ஏத்தியாச்சு: காணுதுதானே அப்பு; வெங்காயச் சாட்டிக்கு எரு போடத் தானே வேணும்.''

''ஓம் பிள்ளை எரு காணுதுதான், கனகன்ரை மாடு ஒண்டுக்குச் சுகமில்லை. நான் தான் வேண்டாமெண்டு சொன்னனான் மோனை''

இன்று அவர் எரு ஏத்துவதை ஒரு நடையுடன் நிற் பாட்டிவிட்டார். வண்டில்காரக் கனகனுக்கு மற்ற நடை போகவிருப்பந்தான். வண்டில் இழுக்கும் மாடுகளில் ஒன் றான 'புகரி' கலட்டி ஒழுங்கையில் வண்டிற் சில்லு மண்ணுக் குள் புதையும் பொழுது பட்டபாட்டை சில்லெடுக்கும் பொழுது பொன்னையா கண்டு இரக்கப்பட்டார். அந்த மாட்டிற்கு நேற்றிலிருந்து உடம்பு சுகமில்லை என்று கனக னிடமிருந்து அறிந்ததும் அதையே எருஏற்றும் கடைசிப்பார மென அவர் தீர்மானித்தார்.

வள்ளிநாயகி இரு கரங்களையும் நீட்டித் தகப்பனிடம் செம்புத் தண்ணீரை கொடுத்துவிட்டுத் திரும்புகிறாள். பொன்னையா பெரு மூச்சுடன் மகளைப் பார்க்கிறார்.

எருக்கும்பி கிடந்த இடத்தில் நட்ட புகையிலைக்கன்று போல மதாளித்து வளர்ந்த வள்ளிநாயகி இப்பொழுது எவ் வளவோ ஒடுங்கி விட்டாள்.

'பாவம் கலியாணங்கட்டிப் பிள்ளை குட்டியோட வாழுற வயதில்...... அரசடியானே குட்டியர் துவக்கிவிட்ட புளியடி வீட்டுக்காரற்றை சம்மந்தமெண்டாலும் சரிவர வேணும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையோ நினைத்த பொன்னையா மகளைப் பார்த்துக் கேட்கிறார் ''சின்னையா வந்தவரே?''

',ஓம் அப்பு. நேத்துப் பின்னேரம் போல வந்து போனவர்.''

''ஒண்டும் சொல்லேல்லயோ மோனை''

''உங்களை குஞ்சிஅப்பு வீட்டுக் கலியாண வீட்டுக்கு ஏன் வரேல்லை எண்டு கேட்டவர்'' என்று சொல்லிவிட்டு அவள் குசினிப் பக்கமாகப் போகிறாள்.

பொன்னையாவுக்குத் தம்பியாரான வைத்திலிங்கத்தின் நினைவு வருகிறது. 'இவன் ஒரு ஆனவன் எண்டால் இப்பிடிக் கயிட்டம் எனக்கு வருமே. ஊர் உலகத்திலயெல்லாம் சகோதரங்களுக்கு விட்டுக்கூட்டி நடக்குதுகள் எங்கடை சின்னையா, தமையன்ரை பெடிச்சியளை தன்ரை பிள்ளையள் மாதிரி வளர்த்துக் கொண்டுவாறார். எனக்குக் குடுத்துவைச்சது இவ்வளவு தான். எனக்கு ஒண்டு நடந்திட்டால் பிள்ளையள் அந்தரிக்கப் போகுதுகள்...! நம்பிக் கைத்துரோகம் செய்தவன் வீட்டு முத்தத்தை என்னெண்டு மிதிக்கிறது?'

கடைசியாக வைத்திலிங்கம் வீட்டிற்குப் போய் சந்தித்துப் பேசியதை அவர் மனம் அசைபோடுகிறது.

பொன்னையா தனக்குச் சீதனமாக வந்த மண்வீட்டை இடித்து, கல் வீடு கட்டத் தொடங்கும் பொழுது காசு தேவைப்பட்டது. ஊரில் உள்ள புதுப் பணக்காரர்களிடம் போய் கைநீட்டிக் காசுவாங்க அவர் விரும்பவில்லை; கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கேன் அலைவான் என எண்ணித் தம்பிக்காரனிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்குவதென அவர் தீர்மானித்தார். கூடப்பிறந்த சகோதரம் என்றாலும் எவ்வித பொறுப்புமில்லாமல் காசுவாங்க அவர் விரும்பவில்லை. ரோட்டுக்கரைக் காணியை ஈட்டுக்கு எழுதித் தம்பிக்காரனிடம் காசைப் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வருடங்கள் பறந்தோடிவிட்டன. அதற்குள் அவருக்கு எத்தனை பிரச்சினைகள் தலைகாட்டின. மகனுக்குச் சுகமில்லாமல் மூளாய், தெல்லிப்பழை என்று அலைந்தார். கடைசி மகளின் பிரசவத்திற்கு முன்னும் பின்னும் பொன்னம்மா மாதக் கணக்கில் பாயில் கிடந்து பட்ட கஷ்டம்...... புகையிலையும் வாய்க்காது அவரை நான்கைந்து ஆண்டுகட்கு ஏமாற்றிவிட்டது.

காலக்கெடு தப்பிவிட்டது: அந்தக் காணியில் புதுவீடு கட்டப் போவதாகவும், பிறகு காணி தேவைப்படும் பொழுது உதவி செய்வதாகவும் மாத்தளையிலிருந்து கடையில் நின்ற கந்தப்பு மூலமாகத் தம்பியார் சொல்லியனுப்பினர். பொன்னையா குழப்பமடைந்த நிலையில் பதில் அனுப்பாமல் இருக்கவே, வைத்திலிங்கம் நொத்தாரிசு மூலம் சித்தாரிச்சு 'நோட்டீ'சும் அனுப்பிவிட்டார். தம்பியார் இப்படிச் செய்வார் என பொன்னையா நினைக்கவே இல்லை.

பொன்னையா திராத கவலையும் வேதனையும் அடைந்தார். வெறிக்குட்டியர் பலதடவைகள் ஓதினர். ''உப்பிடிச் செய்ய விடுறதே. உந்தக்காணியை வேறை ஆருக்கும் வித்தெண்டாலும் வைத்திலிங்கத்தைட்டையிருந்து காணியைப் பறிக்கோணும்: அப்புக்காத்து அருணாசலத்தைப் போய்ச் சந்திப்பம்.'' பொன்னையா இதனை விரும்பவில்லை. ''பிரம சத்திபிடிச்ச கோட்டுக்கும் மனுஷன் போறதே. அவன் பெரிய மனுஷனா இருக்கட்டும்'' என்று சொன்னார்.

கடைசியாக பொன்னம்மாவின் ஆக்கினையால், மாத்தளையிலிருந்து வைத்திலிங்கம் ஊருக்கு வந்திருந்த பொழுது வீடு தேடிச் சென்று நேரில் கேட்டுப் பார்த்தார்.

வைத்திலிங்கம் சொன்னார், ''உண்ணாணை அண்ணை எனக்கு சித்தாரிச்சு நோட்டீஸ் அனுப்ப கொஞ்சம்கூட விருப்பமில்லை. நான் ஆள் சொல்லி அனுப்ப நீ ஒரு மறு மொழியும் சொல்லி அனுப்பேல்லை; முந்தியே காசுதரக்கை பொறுப்புக் கேட்டனானே; நீதானே ஈட்டுக்கு இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியை எழுதோணும் எண்டுநாண்டுகொண்டு நிண்டாய்.
உன்ரை நிலவரத்தைப் பாத்துப் போட்டுத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தனான். நான் உன்னுடை காசுக் கணக்குப் பாக்கேல்லை. உனக்குத்தந்த அந்தப்பத்தாயிரம் இண்டைக்கு என்னெட்டை இருந்தால் பத்து லட்சமாய் பெருகியிருக்கும். 'ஊர் அப்புக்காத்து.' குட்டியர் ஏதோ சொல்லித்திரியிறு ராம் எண்டு கேள்விப்பட்டன். அதுதான் உறுதியிலை எழுதின எழுத்துக்காக சித்தாரிச்சு நோட்டீசு அனுப்போணும் எண்டு நொத்தாரிசு விடாப்பிடியாய் நிண்டார். எனக்கு இதாலை சரியான கவலை. நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. இந்தா, இதில காசு இரண்டாயிரம் இருக்கு. வீடு கட்டின கடன் இருக்குத்தானே அதைக்குடு நான் வீடு கட்டிறதுக்கு 'கொன்ருக்'கெல்லாம் பேசி 'அட்வான்'சும் குடுத்திட்டன். அண்ணை பின்னிட்ட நேரம் உனக்கும் பெம்பிளைப் பிள்ளை யள் இருக்கு. நான் வசதிவாற நேரம் ஒரு காணித் துண்டை வாங்கித்தாறன்.''

பொன்னையாவிற்குக் கோபத்தால் முகம் சிவந்து உடல் நடுங்கியது. ''டேய் உன்ரை நாய் தின்னுக் காசு எனக்கு வேண்டாமெடா. அழுகிற பிள்ளைக்குச் சொல்லுற நியாயமெல்லே எனக்குச் சொல்லுருய். என்ரை மூத்தவன் உழைக்கத் துவங்கினுப் போலை இந்தக் காணியை மீளலாம் எண்டிருந்தன். சரி நீ இப்பிடிச் செய்து போட்டாய். எனக் குக் காசெல்லடா பெரிசு, நாணயம் தான்ரா பெரிசு. இண் டைக்குத் தான்ரா உன்ரை வீட்டு முத்தம் கடைசியாக மிதிக்கிறன். நீயும் என்ரை முகத்திலை முளிக்கக் கூடாது...... வேணுமெண்டால் நான் செத்தாப்போல வந்துபார்''

பொன்னையாவிற்கு இளவயது நினைவுகள் ஓடிவருகின் றன. அவருக்கு வைத்திலிங்கம் ஆசைக்கு ஒரு தம்பிதான். எவ்வளவு அன்பாக வளர்த்தார், இன்றைக்கு......? 'காசு பணம் கூடிவிட்டால் மனுஷனே மாறிவிடுகிருனே!'

படலையைத்திறந்து கொண்டு பொன்னம்மா உள்ளே வருகிருள். அவள் புறுபுறுப்பது வெளியே விளம்பரமாகக் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கறிக்கடை காத்தாப் பறக்குது. நாலு சூடையை வைச்சுக் கொண்டு அவள் ஒரு ரூபாச் சொல்லுருள். அவ களும் அப்படித்தானே சொல்லுவகள். ஆம்பிளையள்தானே கறிக்கடையிலை மொச்சுக்கொண்டு நிக்கிருங்கள்''

ஆலடிச் சந்தையால் வந்த பொன்னம்மா சேலையை மாற்றிவிட்டு 'கறி' கழுவுவதற்கு, முற்றத்திலே குடை விரித் திருக்கும் வேப்பமரத்தடிக்கு வருகிருள்.

''மெய்யப்பா இண்டைக்கு நாலுமணி சென்டாலும் மண்டகப்படி பூசையாகாது போல கிடக்கு''

''நாங்கள் என்ன கவுண்மேந்து உத்தியோகத்தரே, பன்னிரண்டு மணிக்கு மேசைச் சாப்பாடு சாப்பிட, பாவம் செய்த எங்களுக்கு ஒரு உத்தியோக மாப்பிள்ளை கூட வாரு ராங்களில்லை''

புகையிலைக் கெட்டு எடுக்கப்போய் இலை முறிந்து விட்டது.

நெஞ்சில் முட்டிநிற்கும் வேதனையைக் குறைக்க மனு ஷியுடன் கதையைக் கொடுத்தவருக்கு, அவளின் வெடிசுடுப் பேச்சு வேதனையின் விளிம்பிற்கே இட்டுச் செல்கிறது. பெரு மூச்சொன்றை உதிர்த்த வண்ணம் குட்டியர் தொடங்கிய பேச்சுக் காலைப்பற்றிச் சிந்திக்கிருர்.

பொன்னம்மா சொல்கிருள், ''இஞ்சாருங்கோ காலம்பிறை சின்னம்மா சொன்னவள் நேத்து புளியடிக்குப் போய் வந்தவளாம், மாப்பிள்ளை வீட்டுக்காரர் வீடுவளவு முழுக்கவும், தோட்டத்தறை முழுவதையும் அதோடை இரு பத்தையாயிரம் காசும் கேக்கினமாம். அதில பதினைஞ்சை அவையளுக்கு இணமாக் குடுக்கோணுமாம். வாறகிழமை எங்கடை பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கு மாப்பிளை வாருராம். பேசி எப்பிடியும் ஒரு முடிவெடுக்க வேணும்.''

பொன்னையா ஒன்றுமே பேசவில்லை: திடமான ஒரு முடிவைச் சொல்ல முடியாது சிந்தனை சில்லெடுக்கிறது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவை நேக்கிற மாதிரி வீடுவளவு, தோட்டத்தையும் முழுக் கக் குடுத்திட்டு, இன்னும் ரெண்டு பெம்பிளேப் பிள்ளையள் இருக்கு. அதுகளுக்கு எங்கை போறது. கிடந்த ஒரு காணித் துண்டையும் அந்தப் பாவி பறிச்சுப் போட்டான்'

கழுவும் கறிக்குத் தண்ணீர் கொண்டு வந்திருக்கும் வள்ளிநாயகி, அப்பு என்ன சொல்லப் போகிறார் என்ற ஆவ லுடன் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு, வேப்பமரக்கிளை யொன்றிலிருந்து மீனேக் கௌவிக் கொண்டு, போவதற்கு இலக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் காகத்தை விரட்டு கிருள்.

''என்னப்பா பிடிச்சு வைச்ச பிள்ளையார் மாதிரி இருக்கிறியள் ஒண்டும் சொல்லாமல்'' பொன்னம்மா சலிப் புடன் கேட்கிருள்.

''இண்டைக்குச் சின்னேயா வரும்; அவரோடை ஒருக் கால் கதைச்சுப் போட்டு ஒரு முடிவுக்கு வருவம். எத்தனை நாளேக்குத்தான் குமரையும் சிறை வைச்சிருக்கிறது''

வேப்பமரத்தில் இருந்த காகம் பறந்து வந்து கறிச் சட்டிக்குக்கிட்ட வந்துவிட்டது. வள்ளிநாயகி ஓடிவந்து, கையில் இருக்கும் தடியை வீசி அக்காகத்தைத் தூரத் துக்குத் துரத்துகிருள்.

# 6

அரசடியூரில் நடுநாயகமாக அமைந்திருக்கிறது அந்தப் பிள்ளேயார் கோவில். ஆனி மாதத்துப் பௌர்ணமி யைத் தீர்த்தமாகக் கொண்டு, பத்து நாட்கள் திருவிழா வருடா வருடம் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வருடம் கோயிலின் கொடிக்கம்பத்தில் கொடிச் சீலை ஏறிவிட்டது. அந்த ஊர் ஒரே கலகலப்பாக இருக்கின்றது பிற ஊர்களில் உத்தியோகம் பார்ப்பவர்கள், வேறு தொழிலின் நிமித்தம் வேற்றூர்களில் இருப்பவர்கள் அனைவரும் திருவிழாவை மையமாக வைத்து ஊருக்கு வந்து விடுவார்கள். ஊர் நிரம்பி வழியும். உறவினர்களைச் சந்திக்க சந்தர்ப்பங்கள் கிடைப்பதால் உறவுகள் புதுப்பிக்கப் படும். மாப்பிள்ளைமார்கள் ஊரில் நிற்பதால் பல கலியாணப் பேச்சுக்கள் நடைபெறும் திருவிழாவிற்கு முன் அந்த ஊரில் புகையிலைத் தோட்டக் காரர்கள் புகையிலை உலர்த்தி விற்று விடுவார்கள். வானம் பார்த்த பூமியில் வயல் செய்பவர்கள் தை-மாசியில் நடைபெற்ற அறுவடைக்குப் பின், கோயில் திருவிழா முடிந்து ஆடி பிறந்ததும் தேடி வயல் நிலங்களை உழுவார்கள். அந்தக் கிராமத்தின் பெருவிழாவாகத் திருவிழா அமைந்திருக்கும்.

இன்று இரண்டாம் திருவிழா. இத் திருவிழாவை 'மணியகாரன்ரை திருவிழா' என்றே அழைப்பார்கள். மணியகாரன் செத்து எத்தனையோ ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் அந்தத் திருவிழாவின் பெயர் மட்டும் இன்னும் மறைந்து விடவில்லை. இன்றைக்கு மணியகாரனின் மகன் மனேஜர் மாணிக்கவாசகர் உபயகாரனாகத் திருவிழாவை நடத்துகிறார். அவரது செல்வச் செழிப்பைப் பறை சாற்றி, குடும்பக் கௌரவத்தை நிலைநிறுத்தும் ஒரு வைபவம் போல இரண்டாம் திருவிழா அமைந்திருக்கிறது.

கோயில் வீதி யெல்லாம் மாவிலைத் தோரணங்கள், குலை தள்ளி நிற்கும் வாழைகள், சவுக்கு மரக் கொப்புகள், நுங்குகள் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன. கோபுர வாசலில் சிகரம் கட்டப்பட்டிருக்கிறது. உள் மண்டபம் மணி மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது.

பகல் திருவிழா ஆரம்பித்து விட்டது. ஆண்களும் பெண்களும் அழகாக உடுத்திய வண்ணம் கோயிலை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்; மேளச் சமா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயகாரஞன மாணிக்கவாசகர் கைவிரலில் தர்ப்பை அணிந்து, பட்டுவேட்டி சால்வை சகிதம், நெஞ்சிலே சங்கிலி தொங்க, திருவிழாப்பார்க்க வந்தவர்களது கண்ணிலேபடும் படியாக மேளச்சமா நடைபெறும் இடத்தைத் தாண்டிப் பல தடவைகள் கோயிலுக்குள் போவதும் வருவதுமாக இருக்கிருர்.

மாணிக்கவாசகர் பாரம்பரியமாக வந்த சொத்துக்களின் அதிபதி. தந்தையாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அவ்வூர்ப் பாடசாலை தனியார் பாடசாலையாக இருந்த காலத்தில் மனேஜராகக் கடமையாற்றியவர். தந்தை உயிருடன் இருந்த காலத்தில் நொத்தாரிசு, திருமணப் பதிவுக்காரர், 'கொறனர்' ஆகிய பதவிகளால் ஊரில் செல்வாக்கும் மேலதிக வருமான'மும் பெற்றவர். நீண்ட காலமாக அரசடியூர் கிராமசபையின் சியமஞக இருந்து வந்தவர். கடந்த தேர்தலில் தான் அவர் இராமலிங்கத்தால் தோற்கடிக்கப்பட்டார் அவரது பிள்ளைகள் இருவரும் வெளி நாட்டில் இருக்கிருர்கள். ஒரு மகன் சம்பியாவில் என்ஜினியர். மற்றவன் நைஜீரியாவில் டொக்டர்.

மேளச்சமா உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

கண்ணைக் கவரும் காஷ்மீர் சேலை உடுத்து, மேளச்சமாவை இரசிக்கும் பாவனையில் முன் வரிசையில் இருக்கும் டொக்டர் சிவநேசனின் மனைவி, திருமதி செந்தில்நாதனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள். ''மூன்று மணிக்கு முந்திக் கட்டாயம் வந்திடுவன் எண்டு சொன்னவ; நேரம் நாலு மணியாகுது இன்னும் காணேல்லை என்ன சங்கதி?'

• • • •

டொக்டர் செந்தில்நாதன் மந்திகை ஆஸ்பத்திரியை விட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிருர். மனைவி திருவிழாவிற்குப் போக வேண்டுமெனவும் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு முன் வரும்படியும் காலையில் சொன்னதை அவர் மறந்து விடவில்லை. ஆனால் அதற்குள் இரண்டு சம்பவங்கள் நடந்து விட்டன. கொழும்பிலிருந்து மருத்துவப் பேராசிரியர் தொலைபேசியில் அவருடன் தொடர்புகொண்டு அவரது கட்டுரை ஒன்று லண்டனில் வெளியாகும் பிரபல மருத்துவ சஞ்சிகையில் வெளியாகியிருப்பதைத்தெரிவித்து, அதன் பொருளடக்கத்தைப் பெரிதும் பாராட்டினார். அடுத்து ஒரு புது நோயாளி அவரது 'வார்ட்'டுக்கு அனுமதிக்கப் பட்டான்.

காரில் வந்து கொண்டிருக்கும் செந்தில்நாதன் மனம், பேராசிரியர் பாராட்டிய அக்கட்டுரையை எண்ணிப் பார்க்கிறது. அவர் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் ஆராய்ச்சியின் ஆரம்ப முயற்சியே அக்கட்டுரை,

'ஒரு காலத்தில் குடியேற்ற நாடுகளாக இருந்து, இப்பொழுது வளர்முக நாடுகளாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மேற்கத்திய கலாச்சாரத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்றங்கள் அந்நாட்டு மக்களின் மனப்பாங்கை எப்படிப் பாதித்திருக்கிறது'; என்பது அக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. மனோவியாதிகளின் தோற்றத்துக்கு மேற்கத்திய கலாச்சாரத்தின் பங்கினைச் செந்தில் நாதன் மிக அழகாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார்; அந்த உண்மையை நிரூபிப்பது போல இருந்தது அப்பொழுது வந்த நோயாளியின் நிலை. அந்நோயாளி ஓர் இளைஞன். தனக்குக் கிடைக்கவிருந்த உத்தியோகம் குடும்பப்பகையுள்ள வேறோர் இளைஞனுக்குக் கிடைத்து விட்டதால் ஏற்பட்ட விரக்தியும், தாழ்வுணர்ச்சியுமே அவனது நோய்க்குக் காரணமாகும்.

இவற்றையெல்லாம் தன் மனைவிக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆவலுடன் காரைவிட்டு இறங்கி வீட்டிற்குள் புகுகிறார் செந்தில்நாதன்.

கோயிலுக்குப்போக ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மங்களம் கணவனைக் கண்டதும் பாம்பு போலச் சீறுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுக்கு என்னத்துக்குக் கலியாணம் விசரர்—பைத்தியக்காரர்களுக்கு வைத்தியம் செய்து கொண்டு இருந்திருக்கலாமே. மிஸிஸ் சிவநேசன் பார்த்துக் கொண்டிருக்கப்போரு. சிவநேசனும் ஒரு டொக்டர் தானே ''

செந்தில்நாதன் பாம்பை மிதித்தவர் போலாகிருர்; எதை எதிர்பார்த்து வீட்டுக்கு வந்தாரோ அதற்கு மாருகவே மனைவியின் பேச்சும் வரவேற்பும் அமைந்திருக்கின்றன.

அவர் ஆறுதலாகவே சொல்கிருர். ''மங்களம் இண்டைக்கு 'புறவெசர்' ஜெருட்ரிகோ என்னைப் பாராட்டி... ''

''ஸ்ரொப் தற் நொன்சென்ஸ் எனக்குக் கோயிலுக்குப் போக நேரஞ் செண்டு போச்சு. காரைப் பாத்துக் கொண்டு எவ்வளவு நேரமெண்டு நிற்கிறது. டொக்டர் சிவநேசனைப் பாருங்கோ. தானே உழைச்சு ஒரு கார் வாங்கினதால அவையளிட்டை இரண்டு கார் இருக்குது. நீங்கள் என்ரை சீதனக் காரை வைச்சுக் கொண்டு ஓடித்திரிஞ்சால் போதுமே ...''

உடற் களைப்புடன் வந்த செந்தில்நாதன் உள்ளே வந்து கதிரையில் உட்காருகிருர்.

''இருக்கிறியள்... எழும்புங்கோவன் திருவிழா எல்லாம் முடிஞ்சாப் போலேயே கோயிலுக்குப் போறது?''

மங்களம் செந்தில்நாதனுக்கு தேநீர் கொண்டு வந்து கொடுக்கவில்லை.

பெருமூச்சுடன் அறைக்குள் புகுந்து, பட்டுவேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு கோயிலுக்குப் புறப்படுகிருர் மருத்துவக் கலாநிதி செந்தில்நாதன்.

• • • •

கோயிலில் ஒரு கூட்டு மேளம் அடித்து முடிந்து அடுத்த கூட்டு மேளச்சமா ஆரம்பித்து விட்டது என்பதை வீட்டிலிருந்தே ஒலிபெருக்கியின் ஒலியிலிருந்து வள்ளிநாயகி தெரிந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியடி வேலுப்பிள்ளை வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார் பொன்னையா.

கோயில் திருவிழாவுக்கு மாப்பிள்ளை வந்திருப்பதாகவும், நேரில் போய் மாப்பிள்ளை வீட்டுக்காரரைக் கேட்டுப் பார்க்கும் படியும் அடுத்த வீட்டைச் சின்னம்மா காலையில் சொல்லியிருந்தாள்.

பொன்னையா நம்பிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறார். 'எப்படியும் இது ஒப்பேறிவிடும்' என்பது அவரது அங்கலாய்ப்பு. 'இவள் பிள்ளைக்கு பங்கை வயசும் முப்பதைக் கடந்திட்டுது இந்த உத்தியோக மாப்பிள்ளையைக்கை நழுவ விட்டிடக் கூடாது நாங்கள் குடுக்கிற சீதனம் எங்கட பிள்ளைக்குத் தானே. இனுமாக் கேட்கிற பதினைஞ்சை பத்தாகக் குறைக்கச் சொலவி நேரில் கேட்டுப் பாப்பம். பிள்ளையாரே எண்டு குறைச்சின மெண்டால் சின்னையா விட்டை மாறிக்குடுக்கலாம். பெடிச்சியின்ரை பேரில போடுற பத்தாயிரத்துக்கு கோயிலுக்கு முன்னாலை இருக்கிற பழைய வளவுக் காணியைப் பொறுப்பாக எழுதுவம். கையிலை காலிலை முள்ளுக்குத்தாமல் இருந்தால் உழைச்சுக் காணியைத் திருப்பி எழுதி விக்கலாம் பெடிச்சியும் அந்த நாள் தொட்டு எங்களோட சயிறு மாலைப் படுகுது.'

வள்ளிநாயகிக்குத் தோட்ட வேலைகளில் உள்ள சிரத்தையையும் ஈடுபாட்டையும் பொன்னையா மானசீகமாக வாழ்த்துகிறார்

அவளுக்குத் தோட்டவேலை என்றால் எவ்வளவு ஆசை. ஏடு தொடக்கிப் பள்ளிக் கூடத்திற்குப் போகத் தொடங்கிய வருடமாகத் தான் இருக்க வேண்டும். வள்ளிநாயகி இளம் புகையிலைக் கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றவென்று சின்னதாகப் பனை ஓலைப்பட்டை ஒன்றை அப்புவிடம் அழுது கோலுவித்தாள் தோட்டத்திற்குப் போய் அப்புவுடன் சிறுமியான அவளும் புகையிலைக் கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். மாடு கன்று, ஆடு கோழி என்றால் அவளுக்கு நல்ல விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையாவிற்கு வல்லிபுரக் கோவிலை அடுத்துள்ள குடத்தனை என்ற குக்கிராமத்தில் வேலன் என்பவனுடன் பங்காகச் செம்மறி ஆட்டுப்பட்டி இருக்கிறது. செம்மறி ஆடுகளை இலகுவில் ஒன்றிலிருந்து இன்னொன்றை வேறு படுத்திக் காட்ட முடியாது. வள்ளிநாயகி அப்புவிடமிருந்து குறிப்புகளை அறிந்து ஒவ்வொன்றின் தனி இயல்புகளை வேறு படுத்திச் சொல்வாள். சிறு வயதில் அவள் 'தேத்தண்ணி' சாப்பாடு கொண்டு போகும் தாயுடன் தோட்டத்துக்குப் போவாள். தனியாகப் போகும் பராயம் வந்ததும் அப்பு வுக்குப் பல வழிகளிலும் ஒத்தாசை புரிவாள். பக்குவப் பட்டதும் தோட்டத்துக்குப் போவது நிறுத்தி வைக்கப் பட்டது. அவளுக்குத் தோட்டப் பயிர்களைக் காண ஆசை யாக இருக்கும். அப்புவைக் கேட்கும் கேள்வியில் அந்த ஆசை தொனிக்கும்.

"அப்பு! மேல் தறை இந்த வருஷம் பொயிலைக் கண்டு தானே' வெண்காயச் சாட்டிக்கு தாய்க் கொத்துக்குப்பிறகு குழை போட்டால் நல்லது தானே அப்பு!"

அவளது கைராசியில் பொன்னையாவிற்கு நல்ல நம் பிக்கை. நாற்றுப் போடுவதற்கு விதைகள் அவள் கையால் வாங்கிப் போட்டால் தனது தேவையைப் பூர்த்தி செய்து எஞ்சுவதை மற்றவர்களுக்கும் கொடுப்பார் தோட்டத்தில் 'சம்பளகாரர்' வேலைக்கு வந்தால் வள்ளிநாயகி மனங் கோணாது சாப்பாடு சமைத்துத்தாயிடம் கொடுத்து விடுவாள்.

புகையிலை உலர்த்துக் காலம் வந்துவிட்டால் அவள் பம்பரமாக வேலை செய்வாள். அரிக்கன் லாம்பு வெளிச்சத் தில் தம்பி, தங்கைகளுடன் வண்டிலில் வந்த சீவிய புகை யிலைக் கட்டுகளை, பனைகளுக் கிடையில் காய்வதற்குத் தோரணம் போலத் தொங்கவிடுவாள். புகையிலைக் குடி லிலிருந்து அவிழ்த்து வைக்கப்படும். புகையிலைகளை அவளும் அப்புவும் எடுத்துப் பாடம் போடுவார்கள். புகைப் போடு வதற்குப் பொச்சுமட்டை, ஊமல் இவற்றை அவளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் குவிப்பாள். அப்பு குடிலுக்குள் நெருப்பு மூட்டி விட்டால் 'அங்காலை இஞ்சாலை' அசையமாட்டார். வள்ளி நாயகி மூச்சுத் திணற வைக்கும் புகையையும் பொருட் படுத்தாது அடுத்த நாள் செய்ய வேண்டிய புகையிலை வேலை பற்றி அப்புவுடன் ஆலோசித்துக் கொண்டிருப்பாள்.

'பாவம் அது படுகிற ஆறணிவுக்கு உத்தியோக மாப்பிள்ளையைக் கட்டிக் குடுத்திட்டால் ராசாத்தி போலை இருக்கும்'.

வளைந்து, கிளைகளாகப்பிரிந்து செல்லும் குறுக்கு ஒழுங் கைகளைத் தாண்டி, புளியடி ஒழுங்கைக்கு வந்துவிட்டார் பொன்னையா. இதோ தெரிகிறது புளியடி வேலுப்பிள்ளை யின் தகரப் படலை வீடு? பொன்னையா ஆவலுடன் படலை யைத் திறக்கிறார்.

• • • •

பகல் திருவிழா இன்னும் முடியவில்லை. அரசடிப் பிள்ளையார் கோயிலில் நல்ல திருவிழா என்றால் பகல் திரு விழா முடிய இரவு வந்துவிடும். இரவுத் திருவிழா முடியப் பகல் வந்துவிடும்.

கோயில் மணி தொடர்ந்து அடித்து, அந்தக் கிராமம் முழுவதும் ஓசை எழுப்புகிறது. இப்பொழுதான் வசந்த மண்டபப் பூசை ஆரம்பிக்கப் போகிறது.

''அப்பனே பிள்ளையாரே'' வீட்டில் இருந்து கொண்டே பொன்னம்மா தனது இருகைகளையும் குவித்துப் பிள்ளை-யாரைக் குப்பிடுகிறாள். அவள் திருவிழா நடைபெறும் பத்து நாளும் விரதம். ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போய் வந்துதான் சாப்பிடுவாள்.

இன்று குளித்துவிட்டுக் கோயிலுக்குப் போவதற்கு முன், புளியடி வேலுப்பிள்ளை வீட்டுக்கு மகளின் கலியாணப் பேச்சாகப் போன கணவரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போய்க் கன நேரமாகுது இன்னும் காணேல்ல...'

அரசடிப் பிள்ளையார் இந்தக் கலியாணத்தை ஒப்பேற்றி வைப்பார் என அவள் பூரணமாக நம்புகிறாள்.

அரசடிப் பிள்ளையாரிடம் வரம் கேட்டுப்பிறந்த வள்ளி நாயகிக்கு அக் கோயிலிலேயே சடை இறக்கி, சோறு தீத்தினார்கள் அவர் சன்னிதானத்திலே ஏடு தொடக்கப்பட்டது. அவளுக்கு விக்கினங்கள் வரும்போதெல்லாம் கண் திறந்து காப்பாற்றிய 'அரசடியானை', அவளை ஒரு உத்தியோக மாப்பிள்ளையின் கையில் ஒப்படைக்க அருள வேண்டுமென ஒவ்வொரு நாளும் வேண்டுகிறாள்.

நல்ல முடிவுடன் அவர் வருவார். அவர் வந்ததும் பிள்ளையாரிடம் போய் வந்து சாப்பிடலாம் என எண்ணிக் கொண்டு படலையைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்.

பொன்னையா படலையைத் திறந்து கொண்டு வளவிற்குள் வருகிறாள். ஆவலுடன் அவரது முகத்தைப் பார்க்கிறாள் பொன்னம்மா அவளுக்கு அவரைப் பார்த்ததும் புரிந்து விட்டது. கடந்த முப்பத்தைந்து வருடங்களாக அவருடன் வாழ்ந்து வரும் அவள் பெரு மூச்சுடன் நினைக்கிறாள் 'நாடி விழுந்து போய் அழுவாரைப் போல வாறார். மனுஷன் போன காரியம் சரி வரேல்லைப் போல'.

பொன்னையா ஒன்றுமே பேசாது உள்ளேபோய் உடுத்திருந்த வெள்ளை வேட்டியை மாற்றி செம்மண் படிந்த நாலு முழ வேட்டியைக் கட்டிக் கொண்டு, வெளியே வந்து ஆடுகளுக்குப் பூவரசங்குழை வெட்டிக் கொண்டு நிற்கும் வள்ளி நாயகியைப் பெரு மூச்சுடன் பார்க்கிறார். அந்த மௌனம் பொன்னம்மாவிற்கு அனைத்தையும் உணர்த்துகிறது.

''இஞ்சாருங்கோ! ஏன் அவையள் சீதனம் காணாதாமோ?'' பொன்னம்மா கேட்கிறாள்.

''என்னப்பா செய்யிறது பெம்பிளைப் பிள்ளைகளைப் பெத்த நாங்கள் எல்லார் வீட்டுப் படலையையும் திறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பலனைப் போச்சு. குடிகாரன் பேச்சைக் கேட்டு மூக்கிழினைப்பட்டுப் போனன். வீணை வாய் வச்சதுதான்; நான் போக வேலுப்பிள்ளையார் மாறியிட்டார். பெண்சாதி மோனுக்கு இப்ப காலம் கூடாதாம் எண்டு சொல்லிப் போட்டா...''

''சிவ சிவா அப்பிடியே சங்கதி''

''நான் வரேக்கே வழியிலே செம்பாட்டு வளவுச் செல்லையாவைச் சந்திச்சினன். அவன்ரை பாடும் பெரிய சீரழிவு நடுவில் பெடிச்சி காய்ச்சல் வந்து சன்னியாக்கி ஆஸ்பத்திரியில விட்டிருக்காம். அவன் ஒரு சங்கதி சொன்னன். ஓட்டு வீட்டுச் சரசு ஐம்பதினயிரம் காசாத் தாறன் எண்டு கேட்டுப் போட்டாளாம். அங்கதான் செய்யிற அடுக்குப் போலை கிடக்குதாம். அதோடை செல்லையற்றை பெண்சாதிக்குக் கோயிலடியிலை புளியடி வேலுப்பிள்ளை பெண்சாதி சொன்னவாம், 'எங்கட பெடியனுக்கு பொன்னையரவையும் கேக்கினம். எங்களுக்கு அங்க சம்பந்தம் செய்யத் துண்டா விருப்பமில்லை. அது சடம்பம் கூடின இடம்' எண்டு.''

''அம்மா! திருவிழாவில கனக்கப் பலூன் விக்கிறுங்கள். பார்க்க ஆசையாக் கிடக்கு. ஒரு இருபத்தைஞ்சு சதம் தாணை. நான் போய் வாங்கிக் கொண்டு வாறன்......'' கடைசி மகள் கமலா ஓடி வந்து, தனது கைகளைத் தாயின் கழுத்தில் மாலையாகப் போட்டு ஒரு பக்கத்திற்குத் தாயை இழுத்துக் கொண்டு கெஞ்சும் குரலில் கேட்கிருள்.

''போடி அங்கால, மனுஷன் படுகிற பாட்டுக்கு அவவுக்குப் பலூன் வேணுமாம் பலூன்...'' என்று சொல்லிக் கொண்டே கையால் ஓங்கிக் கமலாவின் கன்னத்தில் அடிக்கிருள் பொன்னம்மா.

''ஐயோ அம்மா'' என்று அலறியவளை பொன்னம்மா தன் அடித்த கரங்களால் அணைத்துக் கொண்டே ''அழாதே ராசாத்தி'' என்கிருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா தாயின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ''அக்கா! அக்கா!!'' என்று கூப்பிட்டுக்கொண்டு மாட்டுக் கொட்டிலுக்கு முன் மாடுகளுக்குச் சேர்வை சீவிக் கொண்டிருக்கும் வள்ளிநாயகியை நோக்கி ஓடுகிறாள்.

''எனக்கு என்ன கோயிலும் குளமும். இண்டைக்கு நான் கோயிலுக்குப் போறேல்ல. கண் கெட்ட கடவுள் பெடிச்சிக்கு ஒரு வழியைக் காட்டாரராம்'' என்று சொல்லிக் கொண்டே பொன்னம்மா கொட்டாவியுடன் குசினிப்பக்கம் போகிறாள்.

தன்னைத் தேடிவந்த தங்கையை கொஞ்சும் மொழியில் வள்ளிநாயகி தேற்றுகிறாள். ''கமலா இண்டைக்கு உனக்கு நொங்குகள் இருக்கு. நான் வெட்டித் தாறன். அழாதை குஞ்சு''

சீக்காய்களை வெறித்துப் பார்த்துவிட்டு, இளம் நுங்கு களை வள்ளிநாயகியின் கண்கள் தேடுகின்றன.

கோயில் மணி உச்சஸ்தாயியில் ஒலிக்கிறது;

அரசடிப் பிள்ளையார் கோயிலில் வசந்த மண்டபப் பூசை நடக்கிறது.

''அப்பனே பிள்ளையாரே அவரையும், நான் பெத்தது களையும் காப்பாத்து'' பொன்னம்மா தன்னையறியாமல் கோயில் திக்கைப் பார்த்து இரு கரங்களையும் கூப்புகிறாள்.

# 7

இன்று மூன்றும் திருவிழா; 'வட்டிக்கடை' வைத்தி லிங்கத்தின் மூன்றும் திருவிழா, மணியகாரனின் இரண்டாம் திருவிழாவிலும் எழுப்பம்' என அரசடியூர் ஆட்கள் புகழ வேண்டும் என்பதே இராமலிங்கத்தின் ஒரே நோக்கம். ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப் பெரிய மேளம், இரண்டு கூட்டுச் சின்ன மேளம், இரண்டு சிகரங்கள், வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளைக் குறித்து, 'மின்சார தீபத்தால் அலங்கரிக்கப்பெற்ற முத்துச் சப்பரத்தில் விநாயகப் பெருமான் வீதிவலம் வந்தருள்வார். அவ்வமயம் அன்பர்கள், அடியார்கள் பெருமானைத் தரிசித்து அனுக்கிரகம் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்' என 'நோட்டிஸ்' அடித்து, மணியகாரனின் திருவிழா அன்று விநியோகிக்கப்பட்டு விட்டது.

ஒரு கிழமைக்கு முன்புதான் இராமலிங்கம் மாத்தளையிலிருந்து வந்தான். முதலாளியைக் காணவில்லை எனத்தலையை அடித்துக்கொண்டிருந்த சண்டியன் சங்கரப்பிள்ளை, இராமலிங்கம் வந்ததும் இரண்டாம் திருவிழா நிகழ்ச்சி நிரல்களைச் சொல்லி, அதனை உச்ச என்ன செய்யலாம் என்றும் ஆலோசனை வழங்கினான். உடனேயே ஏற்பாடுகளைச் செய்யும்படி இராமலிங்கம் சொல்ல, சங்கரப்பிள்ளை தனிக் கார் பிடித்து, ஒரு நாள் முழுவதும் அலைந்து அச்சவாரம் கொடுத்தான்.

பகற் திருவிழா முடிந்து இரவுத் திருவிழா ஆரம்பமாகி விட்டது.

காற்றிலே தவழ்ந்து ஊரெல்லாம் ஒலிபரப்பும் தவில்-நாதஸ்வர இனிய கச்சேரியும், கோயில் வீதியைத் தாண்டி தெருவரை ஒளி பரப்பி நிற்கும் மின்சார அலங்காரமும் தூரத்தே வரும் பொழுதே இரவுத் திருவிழா களைகட்டி விட்டது என்பதைப் பறைசாற்றுகின்றன. கோயிலுக்கு அருகில் வந்ததும் கோபுரவாசலில் மின்சார ஒளியின் அழகில் புதுநகரம் போலச் சிகரங்கள் காட்சிதருகின்றன. கோயிலைச் சூழ்ந்திருக்கும் மகிழ மரங்கள் இன்று வர்ண ஒளிபெற்ற வண்ணத்தில் சிலிர்த்து நிற்கின்றன. இந்தப் பின்னணியில் குழுமி நிற்கும் மக்களைப் பார்க்கும் பொழுது ஒரு புதிய உலகம் சிருஷ்டிக்கப் பட்டிருப்பது போலத் தோன்றுகிறது.

நேற்றையவிட இன்று திருவிழாவிற்குச் சனத்திரள் அதிகமாக இருக்கிறது. சனம் இரவு முழுவதும் கலையாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கு யுக்தியாக வெவ்வேறு நிகழ்ச்சிகள் மாறி மாறி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் வில்லுப்பாட்டு, பின் இரண்டு கூட்டுப் பெரிய மேளம், தொடர்ந்து இன்னிசைக்கச்சேரி. இப்பொழுது இரண்டு கூட்டுப் பெரிய மேளச் சமா நடந்து கொண்டிருக்கிறது. தவில் வித்துவான்களின் தனித்துவத்தைக் காட்டும் மேளச்சமாவின் உச்சக் கட்டம். தவில் வாத்தியம் தரும் ஓசையின் தாக்கம் திருவிழா உபயகாரனை வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் தற்போதைய உடல் நிலையைப் பாதிக்க, கோயில் உள் வீதிக்குப் போய் பெரிய தூண் ஒன்றுடன் சாய்ந்த வண்ணம் அமர்ந்திருக்கிறார். அவருக்கு இன்றைய திருவிழாவில் நடைபெறும் செலவுகளை நினைக்கும் போது பெருங்கவலையாக இருக்கிறது. சில நிகழ்ச்சிகளைக் குறைத்து, செலவையையும் எவ்வளவோ சுருக்கியிருக்கலாம். ஐந்து கூட்டுப் பெரிய மேளம் பிடிப்பதால் அவர்களிடம் முழு வேலையையும் வாங்க முடியாது, ஆனால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய முழுக்காசையும் கொடுத்தேயாக வேண்டும். இப்படித்தானே எல்லா நிகழ்ச்சிகளும் என எண்ணி மகன் இராமலிங்கத்தின் போக்கினை வேதனையுடன் எடை போடுகிறார். 'இந்தத் திருவிழாச் செலவுகள்... போலத்தான் அவனின் செலவுகள் அரசடிப் பிள்ளையார்தான் காப்பாத்தவேணும்.'

பிள்ளையாருக்கு அவர் திருவிழா செய்யத் தொடங்கி இருபது வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவரது வியாபாரம் கொடிகட்டிப் பறந்த காலம் அது. கோவில் திருவிழா ஒன்றினை நடத்தினால் பிள்ளையாரின் கருணையைப் பெறுவதுடன் தானும் ஊரில் ஒரு பெரும் புள்ளியாக மதிக்கப்படுவார் என அவர் எண்ணங்கொண்டிருந்தார். நாணயமற்ற முறையில் தான் இவருக்கு மூன்றும் திருவிழா கிடைத்தது. அரசடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும் பத்துத் திருவிழாக்களில் ஒன்றையாவது எடுத்து நடத்துவதென்பது முயற்கொம்பாக இருந்தது. ஆடம்பரமில்லாது கோயிற் பொறுப்புடன் நடத்துபவர்களும் தங்கள் திருவிழாவின் உபயத்தைக் கைவிட மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு மூன்றாந் திருவிழா தாழ்த்தப்பட்ட மக்களின் திருவிழாவாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் உபயமிட, கமக்காரன் ஒருவர் பொறுப்பேற்று நடத்துவார். அந்த வருடம் அவர்களது திருவிழா வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. சின்ன மேளச்சமா களை கட்டிவிட்டது. அன்று வழக்கத்திற்கு மாறாக வானம் கறுத்து கோடைமழை ஒன்று பெய்தது. திருவிழா பார்க்க வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் தாழ்வாரத்தில் ஒதுங்கினர். ஆட்களை ஒதுக்கி நாட்டாண்மை, காட்டிக்கொண்டு நின்ற பழைய விதானையார் இச்சிறுவர்களைப்பிடித்து அடித்து உதைத்தார்.

''கீழ்ச் சாதிக்காரரும் கோயிலுக்குள்ளை போற அடுக்கோ எங்கடை ஊரில இந்தப் பருப்பு அவியாது.''

தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்தனர். திருவிழா அல்லோலகல்லோலப்பட்டது. அதுவே அவர்களது கடைசித் திருவிழா. அதற்குப் பிறகு அரசடிப் பிள்ளையாரை மறந்தார்கள், தங்கள் ஐயனார் கோயிலைப் புனருத்தாரணம் செய்தனர்.

இப்பொழுது நாதஸ்வரக்காரர்கள் ஒன்றாகத் தங்கள் வித்துவத் திறனை வெளிக் காட்டுகிறார்கள்.

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் வியாபாரத் தந்திரத்தால் கைக்குள் போடப்பட்ட கோயிற் குருக்கள் தாழ்த்தப்பட்ட மக்களால் கைவிடப்பட்ட மூன்றாம் திருவிழாவை அதற்கு முன்பு திருவிழா செய்யக் கேட்ட பிரமுகர்களுக்குக் கொடுக்காது இவருக்கே கொடுத்தார்.

வைத்திலிங்கம் தேவையோடு மட்டும் செலவு செய்து, குறைந்த செலவில் கூடிய புகழைப்பெற்றார். இராமலிங்கம் தோளுக்கு மேல் வளர்ந்து, பொறுப்புக்கள் சில பெற்றதும் டாம்பீகமாகச் செலவு செய்தான். வைத்திலிங்கம் ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்தி வந்தார். இந்தவருடம் அவருடன் அவன் எதுவுமே யோசிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மேளம், சின்ன மேளம் மற்றும் எல்லோருக்கும் வைத்திலிங்கம் வீட்டில்தான் விருந்து. அதற்காக சண்டியன் சங்கரப்பிள்ளை ஆட்டுக்கடா வெட்டிச் சமைத்து, சாராயம் பரிமாறுவதையும் எண்ணும் பொழுது வைத்திலிங்கத்திற்குப் பெருங்கவலையாக இருக்கிறது.

நான்கு தவில்காரர்களும் நாதஸ்வரக்காரர்களும் ஒன்றாக எழுப்பும் பேரொலி வைத்திலிங்கத்தின் காதுகளை இடியோசை போல அதிரவைத்து உடலை நடுங்க வைக்கிறது. பெரிய மேளச்சமா முடியும் தருவாயில் இருக்கிறது.

ஒரு கார் வந்து வெளி வீதியில் உள்ள மகிழமரத்தடியில் நிற்கிறது. அழகான இரு இளநங்கைகள் காரைவிட்டு இறங்குகிறார்கள். ''சின்ன மேளம் வந்திட்டுது'' என்று சத்தம் போட்டுக்கொண்டு சிறுர்கள் காரை மொய்க்கிறுர்கள்: சண்டியன் சங்கரப்பிள்ளை யாரோ ஒரு புண்ணியவான் கட்டிவிட்ட மடத்துக்குள் சின்ன மேளத்தைக் கூட்டிச் செல்கிறுன். அது கொக்குவில் கோவிந்தசாமி செற். இன்று யாழ்ப்பாணத்தில் பேர்போனதும் 'றேற்' கூடிய 'செற்றும்' அதுதான். சண்டியன் சங்கரப்பிள்ளை சின்ன மேளத்தை மடத்துக்குள் விட்டுவிட்டு, தங்கச்சங்கிலி கழுத்திலே கம்பீரமாகத் தொங்கும் கோவிந்தசாமியைக் கூட்டிச் சென்று இராமலிங்கத்திற்கு அறிமுகம் செய்து வைக்கிறுன். ''இராமலிங்கம் அரசடியூர்க் கிராம சபைச் சியமன், அரசடியூர் எம். பி. சி. எஸ். தலைவர், அந்தத் தொகுதியின் ஆளும் கட்சி அமைப்பாளர், மிக விரைவில் அவருக்கு ஜே. பி. பட்டம் கிடைக்கப் போகிறது'' என்பவற்றை எடுத்துக் கூறுகிறுன். இவற்றை அறிந்த கொண்ட கோவிந்தசாமி அவனை இந்த ஊரின் முக்கிய பிரமுகர் எனக்கணித்துப் பெருமதிப்புக் கொடுக்கிறுன்.

இராமலிங்கம் தனக்கு அருகில் நிற்கும் தன் நண்பன் தயாவைக் கோவிந்தசாமிக்கு அறிமுகம் செய்கிறுன்; அவன் மாத்தளையில் பிரபல வியாபாரி என்றும் திருவிழா பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்பதாகவும் இராமலிங்கம் சொல்லி வைக்கிறன். கோவிந்தசாமியின் ஆங்கில அறிவை மெச்சிக் கொண்டு, இராமலிங்கம் உரையாடலை ஆங்கிலத்தில் தொடர்கிறன்.

''ஒரு சதத்திற்குக் கணக்குப் பார்த்து, வாயை வயிற்றைக் கட்டிச் சம்பாதிக்கும் யாழ்ப்பாணத்து மக்கள் ஏன் ஓர் இரவில் முடியும் திருவிழாவிற்கு இவ்வளவு பணத்தைக் கொட்டுகிருர்கள்?'' என தயா விஞவுகிறன்.

''இதுதான் யாழ்ப்பாணத்து மக்களின் பண்பாடு, நாகரிகம். திருவிழா, கலியாண வீடு இரண்டையும் அவர்கள் திறமாகத் தான் செய்வார்கள். அது அவர்களின் தனிப் பண்பு'' பெருமையுடன் சொல்கிறன் கோவிந்தசாமி.

தயா ஆடம்பரமாக நடந்த இராமலிங்கத்தின் தங்கையின் திருமணத்தை அசை போட்ட வண்ணம் தலையை ஆட்டுகிறன்.

சின்ன மேளச்சமா தொடங்கப் போகிறது. சுவாமியை இழுத்துச் செல்வதற்கு வெளியில் விடப்பட்ட சகடையில் ஏறி குதியன் குத்திக்கொண்டிருக்கும் சிறுவர்கள், கோயிலடியில் நித்திரை கொண்டிருக்கும் நண்பர்கட்கு மூக்குத் தூள் போட்டுத் திகைக்கவைக்கும் திருவிளையாடலைச் செய்து கொண்டிருக்கும் இள வட்டங்கள் சின்ன மேளம் பார்க்க முன்னுக்கு இடம் பிடிக்கிருர்கள். சின்ன மேளச்சமாவிற்கு அளவாக 'செக்கன் சோ' படம் பார்த்துவிட்டு விழுந்தடித்துக்கொண்டு சயிக்கில் 'பாரிலும்' கரியரிலும் வாலிபர்கள் வந்து இறங்குகிருர்கள். கோயில் வீதியிலும் தேர்முட்டியிலும் கூடியிருந்து, நடுவில் கடலை பரப்பிக் கொறித்துக் கொண்டு, பலதும் பத்தும் பேசிய வெளியூரில் உத்தியோகம் பார்க்கும் இளைஞர்கள் தங்கள் மகாநாட்டை நிறைவு படுத்திக்கொண்டு கோயில் முன் வீதியை நோக்கி முன்னேறுகிருர்கள். வடக்கு வீதியில் 'டைனமோ' சத்தத்தையும் பொருட்படுத்தாது கடதாசி விளையாடிக் கொண்டிருந்தவர்கள் தங்கள் ஆட்டத்தை முடித்துக் கொண்டு சின்ன மேள ஆட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தைப் பார்க்க எழுந்து விட்டார்கள். வீட்டில் நித்திரை கொண்டுவிட்டு சின்ன மேளச்சமா நேரத்திற்கு வந்தவர்கள் உற்சாகமாக நிற்கிறார்கள். வீதியிலும் தீர்த்தமாடும் மடத்திலும் அடித்துப் போட்டவர்கள் போலக் கிடந்தவர்கள் துடித்துப் பதைத்துக் கொண்டெழுந்து கண்களைக் கசக்கிக் கொண்டு விரைகின்றனர். சிலர் கோயில் கிணற்றில் முகத்தைக் கழுவிக் கொண்டு புகிய தெம்புடன் நிற்கிறார்கள். பெரிய மேளச்சமா நடக்கும்போது தூங்கி விழுந்த வயோதிபர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள்.

சின்ன மேளச்சமா தொடங்கி விட்டது. எங்கிருந்து தான் இவ்வளவு சனம் வந்ததோ! கோவில் முன் வாசல் நிரம்பி வழிகிறது. சண்டியன் சங்கரப்பிள்ளை ஆட்களை ஒதுக்குகிறான். சால்வையை எடுத்து வீசி ஆட்களுக் கூடாக முன்னேறிக் கொண்டு சொல்கிறான் ''இரு...இரு...முன்னுக்கு நிக்கிற ஆக்கள் எல்லாம் இருங்கோ. எத்தனை தரம் உங்களுக்குச்சொல்லுறது. பின்னுக்கிருக்கிறாக்கள் உங்கடை தலை மண்டையையே பாக்கிறது? இரு...இரு...'' அவன் வாயில் மது மணக்கிறது.

சின்ன மேளம் கடவுள் வாழ்த்துப்பாடி முடிந்து, சினிமாக் காதல் பாட்டுப்பாடத் தொடங்கி விட்டார்கள். குழுமியிருப்பவர்கள் அணில் ஏறவிட்ட நாய்போலப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இராமலிங்கத்திற்கு அருகில் சின்ன மேளம் பார்த்துக் கொண்டிருக்கும் தயாவுக்கு ஒரு சபலம் தட்டுகிறது. நல்ல முக வெட்டும், நளின நாகரிகமாகத் தோற்றமளிக்கும் இவர்கள்...? மாத்தளையில் தீராத விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் இவனுக்கு இது இயல்பான ஆசையாகவே தெரிகிறது. யாழ்ப்பாணத்திற்குவந்து ஒருவாரமாகத் தொட்டுப்பாராத ஒன்றில் மனம் பற்றுகிறது. அவன் இரகசியமாகத் தன் விருப்பத்தை இராமலிங்கத்திற்குச் சொல்கிறான். இராமலிங்கம் சிரித்துவிட்டு, சிறிது நேரம் யோசித்தபின், ''முயற்சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போம்'' என ஆங்கிலத்தில் சொல்கிறான்: இராமலிங்கத்திற்கும் ஆசை தொற்றுகிறது.

பாட்டு முடிந்து, நடனத்திற்காகச் சின்ன மேள ஆட்டக்காரர்கள் ஆடைகள் மாற்றும் மடத்திற்குள் போகிறார்கள். சிறுவர்கள் பின் தொடர்கிறார்கள். இராமலிங்கம் காருக்குள் இருக்கும் கோவிந்தசாமியிடம் வலிந்து சென்று, சமாமுடிந்ததும் விருந்திற்கு வீட்டுக்கு வரும்படி கேட்கிறான். நடன ஆட்டத்துடன் 'கோவிந்தசாமி செற்றின் சமா முடிகிறது: மற்றக் கூட்டுக்கு ஆர்மோனியத்தைச் சுருதி சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இராமலிங்கமும் நண்பனும் ஒரு காரிலேறி வீட்டுக்குப் போகிறார்கள். கோவிந்தசாமி 'செற்' வந்த கார், தீர்த்தமாடுவதற்குக்கேணி இறைக்கப்பட்டதால் ஏற்பட்ட சேற்றில் தடுமாறித் திரும்பிக் கொண்டு இராமலிங்கம் வீட்டை நோக்கிப் போகிறது.

வீட்டுக்கு வந்த இராமலிங்கம், சின்ன மேளத்திற்குச் சாப்பாடு கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்துவிட்டு, கோவிந்தசாமியின் முன் 'விஸ்கி'ப் போத்தல் ஒன்றை உடைத்து வைக்கிறான். மூவரும் கலந்து கொள்கிறார்கள்.

கோவிந்தசாமி தன் எல்லையைத் தாண்டி விடுகிறான்:

இராமலிங்கம் தன் மனத்திலிருந்த ஆசையைச் சூசகமாகச் சொல்லி, கோவிந்தசாமியின் மனக்கிடக்கையை அறிகிறான்: சாதகமான பதில், ஐந்து நூறு ரூபா நோட்டுக்கள் கோவிந்தசாமியின் கையில் திணிக்கப்படுகின்றன:

அரசடிப்பிள்ளையார் கோவிலில் மற்றக் கூட்டுச் சின்ன மேளம் பாடும் ''விநாயகனே வினை தீர்ப்பவனே'' என்னும் துதிப்பாடல் காற்றிலே மிதந்து வருகின்றது: கோவிந்தசாமி செற் அன்றைய பிழைப்பை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்புகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் முன் வாசலில் ஒதுக்குப்புறமாக, அழகாகக் கட்டப்பட்ட முத்துச்சப்பரம் மின்சார ஒளிபொருந்திய அழகுடன் சுவாமியை ஏற்றி வலம் வரத்தயாராக இருக்கிறது. சின்ன மேளச்சமா நடந்து முடிந்து ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது! கோவில் வாசல் வெறிச்சோடிக் கிடக்கிறது. சனங்கள் எப்படித்தான் போனுர்களோ?

கோயிலுக்குள்ளே பூசை முடிகிறது. சிங்கப்பூர் சின்னையா வெளியே வந்து அங்கும் இங்கும் நின்றவர்களை இரங்காத குறையாக சுவாமியைத் தூக்கி வரும்படி கேட்கிறுர்.

கண்ணைக் கவரும் சாத்துப்படியுடன் முத்துச்சப்பரத்தில் அரசடிப் பிள்ளையார் பவனி வருகிறுர். 'கணவனுக்கு நோயற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும்படி' இறைஞ்சிக் கொண்டு இராமலிங்கத்தின் மனைவி லட்சுமி வீதிவலம் வரும் சுவாமியைப் பின் தொடர்கிறுள்.

குருவி வாணங்கள் வீதியின் குறுக்கே பாய்கின்றன: மத்தாப்புக்கள் வானில் வெடித்து வர்ணஜாலம் காட்டுகின்றன. வெடிகள் காதைப் பிளக்கின்றன.

விடிகிறது. இன்னும் இரவுத் திருவிழா முடியவில்லை: இராமலிங்கமும் சண்டியன் சங்கரப்பிள்ளையும் பெரிய மேளம் தொடக்கம் சாத்துப்படி செய்த பண்டாரம் வரைக்கும் கணக்குத் தீர்க்கிறுர்கள்.

பகலின் இயற்கை ஒளி, மின்சார ஒளியைப் பகட்டொளியாக்கிக் கொண்டு இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

சோழகக் காற்றின் வேகம் ஏனோ இன்று குறைவாக இருக்கிறது. சிங்கப்பூர் சின்னையா நேரம் கிடைக்கும் போதெல்லாம் பொன்னையா வீட்டிற்குப் போய் ஊர்ப்புதினங்கள் பேசிக்கொண்டிருப்பார். இன்று அவரின் பேச்சைப் பொன்னையாவும் பொன்னம்மாவும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொன்னையா நேற்றுத் தோட்டத்திற்குப்போய் வரும் பொழுது, வழியில் சந்தித்த சின்னையா ஒரு அங்கலாய்ப்பை ஏற்படுத்தி விட்டார். ''அத்தான், நல்லதொரு மாப்பிள்ளை இருக்கு. சீதனத்தைப் பற்றி யோசிக்க வேண்டாம். தங்கமான பெடியன். நீங்கள் என்ன சொல்லுறியளோ தெரியேல்ல எல்லாத்துக்கும் நாளைக்கு நான் வாறன்''

சின்னையா விறாந்தையில் உள்ள கதிரையில் இருக்கிறார். பொன்னையா விறாந்தையில், உடலைச் சுவரில் சாய்த்த வண்ணம் இருக்கிறார். பொன்னம்மா விறாந்தைக்கு முன்னால் இறக்கப்பட்ட ஒத்தாப்பில் பலகைக் கட்டை ஒன்றில் அமர்ந்திருக்கிறாள்.

''என்ன சின்னையா நேற்று ஒருகதை சொன்னாய். ஆர் அந்த மாப்பிளை?'' பொன்னையா ஆவலுடன் கேட்கிறார்.

''எங்கடை சொந்தத்துக்குள்ளை தான். கிளிநொச்சியில் வயல் செய்யிற அண்ணாவி ஆழ்வாற்றை பேரன்''

மலர்ந்திருந்த பொன்னம்மாவின் முகம், மாப்பிள்ளை உத்தியோக மில்லாதவர் என்பதைக் கேட்டதும் கூம்பிச் சிறுக்கிறது. பொன்னம்மாவைக் கடைக்கண்களால் பார்த்து விட்டுச் சின்னையா தொடர்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உத்தியோகம் உத்தியோகம் எண்டு ஆலாப்பறக்கிறியள். உத்தியோகம் பாக்கிறவை என்னத்தைச் சம்பாரிக்கினம். சீதனமாக வாங்கி அதை அப்படியே தங்கடை மக்களுக்குச் சீதனமாகக் குடுக்கிறது தானே அவை செய்யிறது. இப்பஇருக்கிற சிலவுசித்தாரத்துக்கு கொழும்பிலை குடும்பமாயிருந்தால் ஒரு வெள்ளைச்சல்லி மிச்சம் பிடிக்கேலுமே? நான் கட்டிக் குடுத்த மூண்டு பெடிச்சியளுக்கிள்ளை நடுவிலாளெட்டைத்தான் காசு கூடப்பிழங்குது. அப்ப எல்லாரும் பேசினவை ஒரு சின்ன உத்தியோகத்தனுக்கெண்டாலும் பார்த்துக் கட்டிக் குடுக்கிறதுக்கு என்னெண்டு. கடவுளேயெண்டு இப்ப அவையெளுக்கு என்ன குறையெண்டு கேக்கிறன்: விவசாய மன்னன் எண்டு கவுண்மேந்து தெரிஞ்ச மூட்டம் ஊரவை வாயிலை கையை வைச்சினம்.''

பொன்னையாவும் பொன்னம்மாவும் ஒன்றுமே பேசவில்லை. சின்னையாவே பேசுகிறார்.

''கிளிநொச்சிக்கு என்ரை பேத்தியெட்டைப்போட்டு வரேக்கை ஒவ்வொரு முறையும் அந்தப் பெடியன்ரை கமத்துக்கும் போட்டுத்தான் வாறனான். அதையேன் பேசுவான். ரெண்டு ரைக்டர் நிக்குது. வாழைத் தோட்டம், தென்னந்தோப்பு, மாட்டுப்பட்டி, கோழிப்பண்ணை...... பெடியனும் வலு பிரயாசைக்காரன், 'வடமராட்சியான்ரை உழைப்பெல்லோ உழைப்பு' எண்டு தீவுப்பெடியன்கள் சொல்லுவாங்களாம்''

பொன்னையாவின் முகம் மலர்கிறது. பொன்னம்மாவின் முகத்தில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை.

''இது மட்டுமே பெடியனும் ஒரு நாணயமானவன் கொடுக்கல் வாங்கலில் 'கட்டன் றைற்' குடியேற்றத்திட்டத்தில இந்தியாக்காரரை வைச்சு வேலை செய்விச்சுப் போட்டு, கள்ளத்தோணியள் எண்டு 'பொலிஸ்'சில பிடிச்சுக்குடுக்கிற ஆக்களோடை பாக்கேக்கை உண்மையில ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயமான பெடியன்தான். கூலிக்காரர் இவனெண்டை வேலை செய்யிறதெண்டால் விழுந்தடிச்சுக்கொண்டு வருவாங்களாம்''

''சின்னையா இந்த அடிகொடி எங்களுக்குத் தெரியுந் தானே. அண்ணாவி ஆழ்வாற்றை பேரன் எல்லே. அண்ணாவியார் ஒரு நாணயமான மனிசனெல்லோ. உனக்கு அவரைப் பற்றித் தெரியாது. நீ அப்ப சிங்கப்பூரில இருக்கிறாய். அந்த மனுஷன் இப்பவும் என்ரை கண்ணுக்கை நிக்குது: எங்கடை ஊரில எத்தனை நாட்டுக் கூத்துக்களைப் பழக்கி ஆடுவிச்சிருப்பர். வருசா வருசம் மந்திகை அம்மனுக்கு வைகாசிப் பொங்கல் அண்டைக்கு பெடியங்களைப் பழக்கி ஆட்டக்காவடி ஆடுவிப்பர்''

''என்னெட்டை தோதாக ஒரு பெடிச்சி இருந்தால், உண்ணைச்சொல்லுறன் இந்த மாப்பிள்ளையை நான் எடுத்துப்போடுவன். வீடு வளவு கூட வேண்டாம். நல்ல குடும்பத்தில வடிவான ஒரு பெடிச்சி மருமோளாக வந்தால் போதுமெண்டு தாய் மனுஷி சொல்லிச்சுது''

பொன்னையா சொல்கிறார்: ''எனக்கெண்டால் மனம் படியுது. பெண்டுகளின்ரை விருப்பம் எப்பிடியோ?''

''பெடிச்சியெண்டை சாதக ஓலையை ஒருக்கால் தாருங்கோ. பெடியன்ரை ஓலை என்னெட்டத்தான் கிடக்கு: பொருத்தம் எப்படி இருக்கெண்டு பாப்பம்''

''அவளின்ரை தலையெழுத்து இப்படி அமைஞ்சிருக்கு. இவற்றை தம்பியாற்றை பெடிச்சியின்ரை கழுத்தில தாலி ஏற முன்னம் எங்கட பெடிச்சியின்ரை கழுத்தில தாலி ஏற வேணுமெண்டு எனக்கொரு வைராக்கியம். அதுதானே சரிவராமல் போச்செண்டாலும் ரெண்டு மூண்டு மாதத்துக்குள்ளை இதை ஒப்பேத்திப் போடோணும். எடி சரசு, இறங்குப்பெட்டிக்கு அடியில கொக்கான்ரை சாதக ஓலை கிடக்கு எடுத்துக் கொண்டந்து மாமாட்டைக் குடு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினிக்குள் விரதத்திற்காகப் புதுப் பானையில் பொங்கிவரும் உலைக்குக் கறுப்பன் நெல்லில் குற்றிய ஊர் அரிசியை இடுகிறாள் வள்ளிநாயகி.

''வீட்டில் இருந்தால் படிக்க விடாதுகள் அம்மா சும்மா கூப்பிட்டபடிதான்'' என்று சொல்லிக் கொண்டு சரசு அக்காவின் சாதக ஓலையைக் கொண்டு வருகிறாள்.

சாதக ஓலை எத்தனையோ தடவைகள் சாத்திரியார் வீட்டிற்குப் போய் வந்ததால் முறிந்திருக்கிறது.

சரசுவிடமிருந்து சாதக ஓலையை வாங்கிய சின்னையா அவளைப் பார்த்துச் சொல்கிறார், ''பிள்ளை நீ 'சயன்ஸ்' பாடத்தில் வலு கெட்டிக்காரியாம். பெடிச்சி மல்லிகா அடிக்கடி சொல்லுவள். நீ தான் பிள்ளை எங்கட ஊரில வாற முதல் லேடி டொக்டர்''

''மாமாவுக்கு எப்பவும் என்னைக் கண்டால் பகிடி தான். நான் டாக்குத்தராகத்தான் வராட்டியும் அப்பு, அம்மாவிற்குப் பாரமாக இராமல் என்ரை பாட்டைப் பாக்கத்தக்க ஒரு சின்னத் தொழிலுக்கெண்டாலும் போக மாட்டனே''.

''பேந்தேன்பேசுவான். அவன் தம்பி படி படியெண்டு படிச்சுப்போட்டுக் கிளறிக்கலுக்கு எழுதிப் போட்டான்; ஒரு முடிவையும் காணேல்லை. இவவுக்கு உத்தியோகம் கிடைக்கப்போகுதாம்: போடி அங்காலை ஒரு அடக்க ஒடுக்கமில்லை. வயசு கூடின ஆக்களுக்கு முன்னாலை வளவளெண்டு கதைக்சுக் கொண்டிருக்கிறாள்.'' பொன்னம்மா கோபத்தொனியில் சொல்கிறாள்.

''சின்னையா, இவள் சரசு சரியாத்தாயைப் போலை, கதை குடுத்திட்டால் தப்பேலாது. சும்மாவே சொன்னாங்கள் 'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலை' எண்டு'' பொன்னையா சொல்கிறார்:

''சரியாச் சொன்னியள் அத்தான். சரசு தாயைப்போல, மூத்தவள் உங்களைப்போல சரி... சரி... வெய்யிலும் ஏறுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாதச் சீட்டுக்காசு எல்லாம் வாங்க வேணும்'' சின்னையா சொல்லிக் கொண்டே படலையை நோக்கிப் போகிறார்.

பொன்னையாவும் பொன்னம்மாவும் தனிமையில் விடப்படுகின்றனர். சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது. இருவர் சிந்தனைகளும் எங்கெல்லாமோ செல்கின்றன. பொன்னம்மா மௌனத்தைக் கலைக்கிறாள்

''என்னத்தைச் சொன்னாலும் உது எங்களுக்குப் பெரியதொரு விழுக்காடுதான். எப்படியோ உத்தியோக மாப்பிளை போல வருமே''

அப்போது படலையைத் திறந்து கொண்டு கணபதிப் பிள்ளை ஓடி வருகிறான். ''அம்மா..! அம்மா! எனக்குக் கிளறிக்கலுக்கு வந்திட்டுது. காயிதம் வந்திருக்கு''

''அரசடிப்பிள்ளையாரே இப்பதான் கண் திறந்தியோ' பொன்னம்மா தன்னை மறந்து பெருங்குரலில் சொல்கிறாள். பொன்னையாவின் கண்கள் ஆனந்தத்தால் பனிக்கின்றன:

வள்ளிநாயகியும் சரசும் விறாந்தைக்கு ஓடி வந்து விட்டார்கள். வள்ளிநாயகி ஆனந்தக் கண்ணீர் சொரிகிறாள். சரசு தமையனின் கையிலிருந்த கடிதத்தைப் பறித்துப் பார்க்கிறாள். அது சிங்களத்தில் இருக்கிறது; மறுபக்கத்தில் ஆங்கில மொழிப்படிவம் நிரப்பப்படாமலேயே கிடக்கிறது. ஆங்கிலத்தில் வெற்றிடமாக இருக்கும் படிவத்தி லுள்ள பகுதிக்கு வேண்டியதைச் சிங்களத்திலிருந்து எடுத்து. அடுத்த மாதம் வேலைக்குக் கொழும்பிற்குப் போக வேண்டு மென்பதைச் சிரமத்துடன் கிரகித்துக் கொள்கிறாள்.

''அம்மா, நான் திருவிழா முடிஞ்சு அடுத்த கிழமை கொழும்புக்குப் போக வேணும். அடுத்த மாதம் முதலாம் திகதி வேலையைப் பாரம் எடுக்கவேணும்'' என்று சொல்லிக் கொண்டே குசினிப்பக்கம் போகிறான் கணபதிப்பிள்ளை.

பொன்னையாவும் பொன்னம்மாவும் மகனுக்குத் தொழில் கிடைத்ததால் ஏற்படப்போகும் புதிய பிரச்சனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். கணபதிப்பிள்ளைக்குக் கொழும்புக்குப் போவதற்கு 'சூட்கேஸ்', உடுப்புக்கள் எல்லாம் வாங்க வேண்டும். அவனிடம் இப்பொழுது இரண்டு வேட்டியும் இரண்டு 'சேர்ட்'டும் தானே இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் காசு வேண்டுமே.

''மெய்யேப்பா, சின்னையாண்ணையைக் கேட்டுப்பாப்பம். அவர் சீட்டுப் பிடிக்கிறவர் தானே. கையில காசு இருக்கும். நாங்கள் தையில வெங்காயம் கிண்டிப்போட்டுக் குடுப்பம்''

''எல்லாத்துக்கும் அவன் மனிசனைத்தானே கேட்க வேண்டிக் கிடக்கு. வேற என்னத்தைச் செய்யிறது''

கணபதிப்பிள்ளை, சரசு, வள்ளிநாயகி மூவரும் குசினிக்குள் கூடி நிற்கிறார்கள்.

''அண்ணை எனக்கெண்டால் நீ மேல் படிப்புப்படிக்கிறதை விட்டிட்டு உத்தியோகத்துக்குப் போறது பிடிக்கேல்ல. அப்பிளிக்கேசன் போடேக்க செல்லத்துரை மாஸ்டரும், பிரின்சிப்பலும் படிக்கக்கூடிய நீ உதுக்கேன் மினைக்கெடுறாய் எண்டு சொன்னவைதானே'' என்கிறாள் சரசு.

''சரசு நீ விசர்க்கதை கதையாதை, எங்கடை நிலவரத்துக்கு நான் படிச்சுக்கொண்டிருக்கச் சரிவருமே, காசுக்கு எங்க போறது? ஏதாவது தொழில் பாத்தாத்தான் சரிக்கட்டலாம்''

''ஏன் அண்ணை 'பாங்'கில் கடன் எடுத்துப் படிக்கலாம் தானே'' சரசு கேட்கிறாள்.

''பாங்' என்ரை படிப்புக்குத்தானே கடன் தரும். வீட்டுச்செலவுக்கெல்லாம் கடன் தருமே. எனக்கும் தொடர்ந்து படிக்க ஆசைதான். என்ன செய்யிறது? எங்களைப்போல ஏழைகளுக்கு இலவசக் கல்வியால முழுப்பிரயோசனமுமில்லை எண்டு முருகேசு மாஸ்டர் அடிக்கடி சொல்லுறதும் உண்மையாகத்தானே கிடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏதோ வீட்டுப் பாட்டிற்கு அப்பு உழைக்கிருதானே.''

''சரசு உனக்கு இன்னும் உலகம் புரியேல்ல, யாழ்ப் பாணத்தில பெடியன்கள் படிக்கிறது அறிவுக்கு இல்லை, உழைக்கிறது, உண்டு உடுத்துச் சந்தோஷமாக இருக்கிறதுக் கில்ல, சகோதரங்களுக்குச் சீதனம் சேர்க்க''

வள்ளிநாயகி பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டு ஒரு கோப்பையில் சுடச்சுட ஆட்டுப்பால் கோப்பியைக் கொண்டு வந்து கணபதிப்பிள்ளைக்குக் கொடுக்கிருள்.

''தம்பி தண்ணி ஆறப்போகுது குடி''

கணபதிப்பிள்ளை அக்காவின் முகத்தை அர்த்தபுஷ்டி யுடன் பார்க்கிருன்.

# 9

அந்தப் பெரிய வீட்டின் பின் விருந்தையில் உள்ள சாய்மனைக்கதிரையில் படுத்திருக்கிருர் வட்டிக்கடை வைத்தி லிங்கம். இருதய நோயாளியென டொக்டர்கள் ஏகமன தாகத் தீர்ப்பளித்த பின் அவருக்குச் சாய்மனைக் கதிரையே சதம். காலையில் உதயப் பூசைக்கு அரசடிப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்வருவார். இப்பொழுது உத்தியோக பூர்வமாக வியாபாரம் யாவும் இராமலிங்கத்தின் பொறுப் பிலேயே இருக்கிறது. வைத்திலிங்கத்தின் வட்டிப்பணம் உழைத்த கை சும்மாயிருக்காது, வீட்டிலிருந்து கொண்டு நகைகள் அடகு பிடித்தல்; காணிகளை பொறுப்பாகவைத்து, ஈடு பிடித்தல், குறுகிய காலத்துக்கு மீளவேண்டிய நிபந்தனை யுடன் உடன் பிடி அறுதிக்குக்காசை வட்டிக்குக் கொடுத்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டிருக்கிறது. அத்துடன் ஒரு சிலரிடம் வட்டியில்லாது ஒற்றிக்குக் காசு கொடுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாக எழுதப்பட்ட காணியின் முழுப் பிரயோசனத்தை அவர் பெற்று வருகிருர்; சிலர் வாங்கிய கடனைக் குறித்த காலத்தில் திருப்பிக் கொடுக்காததால் அவரது அசையாச் சொத்து அதிகரித்துள்ளது

அரும் பாடுபட்டுச் சேகரித்த சொத்துக்கள் இராமலிங்கத்தின் ஊதாரித்தனத்தால் கரைகிறதே என வைத்திலிங்கம் கவலையில் ஆழ்கிருர். அவரது சிந்தனையைச் செம்பாட்டு வளவுச் செல்லையாவின் குரல் கலைக்கிறது. செல்லையாவைக் கண்டதும் கோபத்தொனியில் வைத்திலிங்கம் பேசுகிருர்.

''என்ன செல்லையா, இண்டைக்குத்தான் நல்ல நாளோ? காசு வாங்கைக்கை கும்பிட்டுக் கூத்தாடுவியள். வட்டிக்காசு தரக்கைதான் நோ. இண்டைக்குத் தேதி எத்தனை? நீ காசு வாங்கைக்கை மாதம் மாதம் வட்டிக் காசு தாறனெண்டு சொன்னபடியால் தானே அந்தப் பெறுமதி குறைஞ்ச சின்னக் காணியைப் பொறுப்பாக வைச்சு இவ்வளவு காசு தந்தனான்'

''அண்ணை நான் இப்ப என்ன காசு தரமாட்டன் எண்டே சொல்லிறன். என்ரை நடுவிலாள் பெரும்பாடாக ஆஸ்பத்திரியில் கிடந்து நேற்றுத்தானே துண்டு வெட்டினது. எங்கடை தோட்டத்து வயிரவர் சுரண்டிப் போட்டார்; நேற்று வயிரவருக்கு வடை மாலை சாத்தினது. எல்லாத்துக்கும் ஊருப்பட்ட செலவாப் போச்சு, அதுதான் இந்த மாசம் கொஞ்சம் சுணங்கி விட்டன்''

''எல்லாருக்குந்தான் கஷ்டம். நான் என்ன நல்ல சுகமாக இருக்கிறனே? அதை விட்டிட்டு.., செல்லையா, இன்னும் இரண்டொரு மாதத்திலை முதலைத் திருப்பித்தந்திடோணும். நான் காசு தரக்கை சொன்னனுன் தானே இந்தக்காசு என்ரையில்லை. கைம்பெண் ஒருத்தி நம்பிக்கைக் குத்தந்தது. ஊரில இப்ப கூடின வட்டி நடக்குது வேறை ஒரு ஆளுக்கு குடுக்கப் போறன் எண்டு மனிஷி பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கினே: உனக்குத் தெரியும்தானே, வட்டி பல மாதிரி நடக்குது; முப்பதுக்கு பேலேயும் சிலர் வாங்குகினம். செல்லையா முதலைத் திருப்பித்தா, அல்லாட்டில் வட்டியைக் கூட்டித்தரச் சம்மதமெண்டால் உனக்காக அந்த மனுஷியிட்டை ஒருக்கால் பேசிப் பாக்கிறன்''

''உங்கை ஒருத்தரட்டையும் இப்ப காசு மாறேலாது. வேற என்னத்தைச் செய்யிறது. வட்டியைக் கூட்டித் தாறன்'' என்று சொல்லிக் கொண்டே மடியிலிருந்து வட்டிக் காசை எடுத்து இரு கைகளாலும் வைத்திலிங்கத்திடம் நீட்டுகிறுர் செல்லையா

வைத்திலிங்கம் காசைப்பல தடவைகள் எண்ணிச் சரி பார்க்கிறுர். செல்லையா, வைத்திலிங்கத்துடன் தமையன் பொன்னையாவின் குணுதிசயங்களை ஒப்பு நோக்குகிறுர். 'இரண்டு பேரும் ஒருதாய் வயிற்றிலே பிறந்ததெண்டு நம்பேலாமலிருக்கு பொன்னையாண்ணனின் ஈவு, இரக்கம், நீதி நேர்மை, யோக்கியம்...' போன போகம புகையிலைக்கன்றுகளுக்கு இறைக்கும் காலத்தில் செல்லையாவின் மெஷின் பழுதாகிவிட்டது; பொன்னையாவின் உதவியை நாடினுர். தனது பயிர்போல செல்லையாவின் பயிரையும் வாடவிடாது உரிய காலத்திற்கு நீர் பாய்ச்சப் பொன்னையா உதவினுர்' இறைத்த காசு கொடுப்பதற்குச் செல்லையா போன பொழுது பொன்னையா காசு வாங்க மறுத்தார். அவர் சொன்னுர் ''காசு பெரிசல்ல மனுஷன்தான் பெரிசு ஒரு தொழில் செய்யிறவை ஒருத்தருக்கு ஒருத்தர் உதவியாய் இருக்கோணும். நாளைக்கு என்ரை மெஷின் பழுதாப்போனுல் மற்றத் தோட்டக்காரரர் என்ரை பயிரை வாடவிடக் கூடாது. முந்தின காலத்திலை கூட்டிறைப்பு எண்டுஒருவருக்கொருவர் எவ்வளவு உதவி ..''

செல்லையாவின் பின் நோக்கிய சிந்தனையை வைத்திலிங்கத்தின் குரல் குழப்புகிறது.

''அப்பசரி.. செல்லையா வாற மாதம் தொடக்கம் முப்பது வீதப்படி வட்டியை குடு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் போட்டு வாறன்.'' செல்லையா வாடிய முகத்துடன் தனது வீட்டை நோக்கிச் செல்கிறார்.

வைத்திலிங்கம் புத்திசாதுரியத்தால் தனது பணத்திற்குச் செல்லையாவிடமிருந்து அதிக வட்டிபெறப்போவதை ண்ணி ஒரு கணம் மகிழ்கிறார். மறுகணம் இராமலிங்கம் தனது சொத்தைக் கட்டிக் காக்காது வீணுக விரயமாக்குவதை வேதனையுடன் எண்ணிப் பார்க்கிறார். நெஞ்சுக்குள் ஏதோ செய்வது போலத் தெரியக் கைகளால் நெஞ்சைப் பற்றிக் கொள்கிறார்.

யாரோ உள்மாடத்தைக் கடந்து விறுந்தையை நோக்கி வரும் சத்தம் கேட்கிறது.

''வா மச்சான் கடவுளைக் கண்டாலும் உன்னைக் காணேலாது போல இருக்கு'' என வட்டிக்கடை வைத்திலிங்கம், அவரைத் தேடிவரும் சிங்கப்பூர் சின்னையாவை வரவேற்கிறார்.

''தெரியாதே மச்சான் எனக்கும் பல சோலிகள். எப்படி உங்கடை பாடுகள் நெஞ்சுவருத்தம் எப்படியிருக்கு?''

''இரண்டு மூண்டு நாளாய் நெஞ்சு கொஞ்சம் கூட நோகுது. நோவாற நேரம் அந்தக் குளிசையைத்தான் விழுங்கிறன்''

''என்ன மச்சான் வீட்டோடை டாக்குத்தர் மருமகனை வைச்சுக் கொண்டு பயப்படுறியள்''

''என்ரை வருத்தத்துக்கு டாக்குத்தர்மார்தான் என்ன செய்யிறது. அது கட்டையோடைதான் போகும் போலகிடக்கு உனக்குச் சொன்னுல் என்ன, இப்பகொஞ்சம் யோசினையும் கூடத்தான்''

''கடவுளேயெண்டு இப்ப உனக்கு என்ன யோசனை? பெடிச்சியைப் பற்றித்தான் கொஞ்சநாள் யோசிச்சுக் கொண்டிருந்தாய். இப்ப அதுவும் ஒப்பேறி முடிஞ்சு போச்சுது தானே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உவன் பெடியன்ரை போக்கு ஒண்டுமே சரியில்லை, நான் ஓடியாடி உலாவித்திரியிறதைக் குறைச்சாப் போலை தன்ரை மூப்புக்குத்தான் எல்லாத்தையுமே செய்யத்தொடங்கிவிட்டான். கண்கடை தெரியாமல் செலவழிக்கிறான். கூட்டாளிமாரும் கூடிப்போச்சு. எங்கடை திருவிழாவுக்கு எவ்வளவைச் செலவழிச்சுப் போட்டான்''

''என்ன ஒரு நாலஞ்சு போயிருக்குமே?''

''என்ன பேய்க்கதை கதைக்கிறாய் மச்சான் பத்தாயிரம் அளவில் முடிஞ்சு போச்சு''

''ஒரு பெம்பிளைப் பிள்ளைக்குக் குடுக்கிற சீதனக்காசு'' என்று சொல்லிக் கொண்டே சின்னையா, பொன்னையா மகளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பத்தாயிரம் தேட எடுத்த முயற்சியையும் அது கைகூடாமல் போனதையும் மானசீகமாக நினைவு படுத்துகிறார்.

''லொறி ஒண்டை வித்துப்போட்டான். ஏனெண்டு கேட்டதுக்கு. அது எஞ்சின் சரியில்லையாம் புதிசாக ஒன்று எடுக்கப் போறானாம். நான் மாத்தளைக்கு இப்ப போகாமல் விட்டாப்போலை அவன்ரை ஆட்டத்துக்கு நல்ல வசதியாப் போச்சு. கூட்டாளிமாரும் கூடிப்போச்சு. திருவிழாக்காட்டிறதுக்கெண்டு ஒரு பெடியனை மாத்தளையிலிருந்து கூட்டிக் கொண்டு வந்தான் அவன்தான் இப்ப இவன்ரை கூட்டாளி. அந்தப் பெடியன் ஒரு பெரிய முதலாளியின்ரை மகன், ஒரு விடு காவடி. அப்பன்ரை சொத்தை அழிக்கப் பிறந்தது. உலகத்திலையுள்ள கெட்ட பழக்கமெல்லாம் அவனெட்டை இருக்கு''

உங்கடை திருவிழா அண்டைக்குக் கோயிலடியில உங்கடை மோனோடை. முன்பின் அறிமுகமில்லாத ஒரு ஆள் நிண்டுது. நான் உந்தாள் ஆர் எண்டு யோசிச்சனான்... அப்பிடியே சங்கதி''

''என்ன மச்சான் செய்யிறது. நீங்கள் எண்டாலும் ஒரு வழி சொல்லுங்கோவன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துள்ளுறமாட்டின்ரை கொடியைக் கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கோணும்; நெடுகச் செலவழிக்கப் போருனே.''

''எனக்கெண்டால் இவன் திருந்துவானெண்ட நம்பிக்கையில்லை இந்தச் 'சியமன்' வேலை வேண்டாமெண்டு எத்தனைதரம் சொல்லியிருப்பன். கேட்டால்தானே. அதுக்கு எவ்வளவு காசை வாரிக் கொட்டிஞன். ஊருக்கையும் எல்லாரோடையும் பகை. பேந்தும் அடுத்தடுத்த மாதத்திலை கிராமச்சங்கத் தெரிவும் வருகுதாம். பிழையில்லை. கிடக்கிறதெல்லாத்தையும் முடிக்கட்டும் எவ்வளவைச் சிலவழிச்சு யூனியன் தலைவராக வந்தான். இப்ப இவன்ரை பேரைச்சொல்லி டேவிட் மாஸ்டர் நல்ல அடி அடிக்கிருராம். டேவிட் மாஸ்டரைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே''

''ஓ அவன் தான் நரியனெண்டு பேரெடுத்தவன். அவன்ரை சொந்தக்காரரே அவனை மதிக்கிறேல்ல; பெட்டிசம் போடுறது தானே அவன்ரை தொழில்.''

''அப்ப பாருங்கோவன் மச்சான் இவன்ரை கூட்டாளிமாரை.''

''மச்சான் நீ கண்டபடி யோசிக்கிருய் உந்த 'காட் அற்ராக்' வியாதிக்குத் துண்டா யோசிக்கக் கூடாது. ஏதோ அரசடிப் பிள்ளையார் உங்களைக் கைவிடமாட்டார். இராமலிங்கம் உன்ரை பிள்ளை தானே. தன்ரை பாட்டில திருந்துவான்''

''நான்தான் பெரிய பிழை விட்டிட்டன். வறுமையில வளர்த்திருந்தால் தான் காசின்ரை அருமை தெரியும். நான் ஒவ்வொரு சதமாக மிச்சம் பிடிச்சுத்தான் இந்தப் பொருள் பண்டம் எல்லாத்தையும் சேர்த்தனுன் நான் பிள்ளைகளை செல்லமாக வளர்த்திட்டன். இப்பதான் தெரியுது. மற்றதும் கூடுதலாப் பாவிக்கிறுன்'' நீயும் கவனிச்சிருப்பாய் ச்சா... குடியோ அது எல்லை தட்டிப் போச்சுது: நானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தரம் புத்தி சொல்லிப்பாத்தன் காதில விழுந்திருனில்லை. நீ யெண்டாலும் ஒருக்கால் சொல்லிப்பாரப்பா''

''சரி மச்சான் நான் ஒருக்கால் கதைச்சுப் பாக்கிறன். உங்கடை சீட்டுக் காசைத் தாருங்கோவன். வேறையும் ரெண்டு மூண்டு வீட்டுக்குப் போகக்கிடக்கு''

செம்பாட்டுவளவுச் செல்லையாவிடம் வாங்கிய வட்டிக்காசை அந்த மாதச் சீட்டுக் காசாகச் சின்னையாவிடம் கொடுக்கிறார் வைத்திலிங்கம்.

ஒரு கையிலே சாப்பாட்டுக் கோப்பையுடனும் மறு கையிலே தேநீர்க் கோப்பையுடனும் வந்த லட்சுமி சாப்பாட்டை மாமனிடமும் தேநீரை சின்னையாவிடமும் கொடுத்துவிட்டு, மீண்டும் உள்ளே போகிறாள்.

''மச்சான் இது ஒரு லட்சுமிதான். இந்தக் காலத்துப் பெடிபெட்டையள்கூட பெத்ததுகளைக் கவனிக்காதுகள். ஏதோ நான் முற்பிறப்பிலை செய்த புண்ணியம் தான் இந்தச் சீதேவி மருமகளாக வந்து வாய்ச்சது. வேறையாருமெண்டால் உவன் செய்யிற கொடுமைக்கு எப்பவோ விட்டிட்டுப் போடுவகள். உவன்ரை கூத்தையெல்லாம் தாங்கிக்கொண்டு மாமன் வீட்டிலை மனமொத்து வந்திருக்கிறாள் தானே.''

சின்னையா கதிரையை விட்டெழுந்து கொண்டே சொல்கிறார். ''அப்ப நான் போட்டு வாறன் மச்சான்''

வைத்திலிங்கம் கேட்காமலேயே சாப்பாட்டிற்குப்பின் உட்கொள்ள வேண்டிய குளிகைகளுடன் ஆறின வெந்நீரையும் கொண்டு வருகிறாள் லட்சுமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

அரசடிப் பிள்ளையார் கோயிலின் ஆறுந்திருவிழா 'பெடியள்' திருவிழாவாகும்.

ஊரிலுள்ள இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு குழுவைத் தெரிவு செய்வார்கள். அக்குழுவினர் ஊரில் காசு சேர்த்து திருவிழாவைத் திறம்பட நடத்துவார்கள். கடந்த ஐந்து வருடங்களாக வேல் முருகனே குழுவின் தலைவனாக இருந்து வருகிறான். கிளிநொச்சியில் கமஞ் செய்யும் அவன் எடுத்த கருமத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றலுள்ளவன் என்பதில் எவருக்குமே ஐயமில்லை. இதனால் அவனிடம் எல்லோருக்கும் ஒரு தனிமதிப்புண்டு.

பெடியள் திருவிழா ஒரு கலைவிழா போலவே தான் நடைபெறும். முத்தமிழ் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து விடுவார்கள். சமயச் சொற்பொழிவு இயற்றமிழ் நிகழ்ச்சியாகவும்; தவில் நாதஸ்வரக் கச்சேரிகள், பிரபல பாடகர்களின் இசைக் கச்சேரி இசைத் தமிழ் நிகழ்ச்சியாகவும்; அவ்வூர் இளைஞர்கள் நடிக்கும் நாடகம் நாடகத் தமிழ் நிகழ்ச்சியாகவும் அமைந்திருக்கும்,

அதிகாலையில் இளைஞர்கள் கூடிக் கோயிலை அலங்கரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாடகமேடை அமைக்கும் வேலையில் மும்முரமாகப் பசியையும் பொருட்படுத்தாது ஈடுபட்டிருந்த வேல் முருகன் பத்து மணிக்குப் பின்னரே காலைச் சாப்பாட்டிற்காக வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்;

• • • •

வள்ளிநாயகி அப்பொழுதுதான் காலை வேலைகளை முடித்து குளித்துவிட்டு அரசடிப் பிள்ளையாரை நினைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தையில் தொங்கிக் கொண்டிருக்கும் பனையோலையால் இழைக்கப்பட்ட குடுவையிலிருக்கும் திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டு விரதத்திற்குச் சமைக்க ஆயத்தமாகிறாள்.

''வீட்டுக்காரர்...! வீட்டுக்காரர்...!'' படலையில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கிறது. தாடி வளர்த்த ஒரு மனுஷனும் ஒரு நடுத்தர வயதுள்ள ஆளும் 'சைபிக்கி'ளைப் படலையில் விட்டுவிட்டு வீட்டுக்குள் வருகிறார்கள்.

''நாங்கள் கரவெட்டியில் இருந்து வாறம். பொன்னையாண்ணன் வீடு இது தானே? ஒரு மாட்டுக்கண்டு விக்கநிக்கிதாம்'' தாடியர் சொல்கிறார்.

''அப்பு குடத்தனைக்குப் போட்டார்; அம்மா ஆலடிச் சந்தைக்குப் போட்டா...'' கூச்சத்துடன் மெல்லிய குரலில் அங்கு தனியாக இருந்த வள்ளிநாயகி சொல்கிறாள்.

''பரவாயில்லைத் தங்கச்சி இவ்வளவு தூரத்திலயிருந்து வந்த நாங்கள். விக்கிற பொருளைப் பாத்திட்டுப் போவம். மனம் படிஞ்சுதெண்டால் பிறகு விலைதலையைப்பற்றிப் பேசலாந்தானே'' மற்றவர் சொல்கிறார்.

வள்ளிநாயகி தயக்கத்துடன் இருவரையும் மாட்டுக் கொட்டில் பக்கமாகக் கூட்டிச் சென்று, விற்க இருக்கும் பசுக் கன்றைக் காட்டுகிறாள். தாடிக்காரன் அக் கன்றை தடவிக் கொண்டே, வள்ளிநாயகியை ஏற இறங்கக் கடைக் கண்களால் பார்த்துவிட்டுக் கூட வந்தவரிடம் கூறுகிறான், ''கண்டு எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு.''

''அதுதானே நான் சொன்னன்; தோட்டக்காரன் வளக்கிற மாடுகண்டு நல்லாயிருக்கு மெண்டு. அம்மான் உங்களுக்குத் தெரியுமே எங்கட ஊரில ஒரு கிழவன் சொல்லுவர் 'ஏழை வீட்டில பெண் எடுக்கோணும், தோட்டக் காரன் வீட்டில மாடு கண்டு வாங்கோணும்' எண்டு''

தாடியர் சிரிக்கிறார்.

வள்ளிநாயகி அடக்கமாக மாட்டுக் கொட்டில் கப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து கொண்டு அவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்கிறாள். தாடியரே சொல்கிறார், "பொன்னையாண்ணை ஒரு நாணயமான மனுஷன் என்று கேள்வி அவரோடு பேசி எப்பிடியும் இந்த நாகு கண்டை அவிழ்கிறது தான்... பிள்ளை இந்த வெய்யிலுக்கை ஒரே தாகமாயிருக்கு, குடிக்கிறதுக்கு எப்பன் தண்ணி தாறியே"

வள்ளிநாயகி ஒரு நொடியில் காலையில் மினுக்கிய பளபளக்கும் செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்து விருந்தைச் சுவரில் வைக்கிறாள்.

தாடியர் தாகம்தீரத் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பவும் விருந்தையில் செம்பை வைக்கிறார். "நாங்கள் போட்டு வாறம் பிள்ளை" தாடியர் சொல்லிக் கொண்டே படலையை நோக்கிப் போக மற்றவரும் பின் தொடர்கிறார்.

வள்ளிநாயகி விரைவில் விலைப்படப் போகும் பசுக் கன்றை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டே நிற்கிறாள்.

• • • •

அன்றைய பகல் திருவிழா கச்சிதமாக நடந்து இரவுத் திருவிழா ஆரம்பமாகி விட்டது. இயல், இசை நிகழ்ச்சிகள் முடிந்து நாடக நிகழ்ச்சி ஆரம்பமாகப் போகிறது. வடக்கு வீதியில் போடப்பட்ட மேடையில் தான் நாடகம் நடைபெறும்.

ஆட்கள் நாடகம் பார்க்க மேடைக்கு முன் கூடுகிறார்கள். சிங்கப்பூர் சின்னையாவுக்கு அருகில் இருக்கும் பொன்னையா சொல்கிறார். "முந்தின காலத்தில அண்ணாவியாற்றை கூத்துக்கும் உப்படித்தான் சனம் வரும். கொஞ்சக் காலம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அண்ணாவியாற்றை கூத்து நடக்கும்"

பொன்னையாவின் மனம் பழைய நிகழ்ச்சிகளை அசை போடுகிறது. அண்ணாவி ஆழ்வாரிடம் பல மாதங்களாகக் கூத்துப் பழகுவது...; இதே கோயிலில் வடக்கு வீதியிலே மூன்று பக்கம் திறந்த கொட்டகை அமைத்து, களரிகட்டி, கப்புகளுக்கிடையே வாழைக் குற்றிகளை நட்டு அவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய்ப் பாதிகளை வைத்து பழஞ்சீலையில் எண்ணெய் ஊற்றிய வெளிச்சத்தில் கூத்தாடுபவர்கள் ஆற்றப் போகும் செயல்களை அண்ணாவியார் சொல்ல, பின் காலிலே சதங்கை ஒலிக்க, மத்தள ஒலியின் பின்னணியில் நின்று சுழன்று சுழன்று ஆடுவது...

இன்று அண்ணாவியாரின் பேரன்தான் நாடகத்தை எழுதி, நெறிப்படுத்தி, பிரதம நடிகனுகவும் பங்கு பற்றுகிறன். ஒவ்வொரு வருடமும் பெடியள் திருவிழாவன்று ஒவ்வொரு நாடகம் நடைபெறும். வேல்முருகன் எழுதும் நாடகத்தின் பொருளில் புதுமை இருக்கும். முன்னேற்றக் கருத்தின் பிரசாரம் இருக்கும், காட்சிகளில் யதார்த்தப் பண்பிருக்கும். சமகாலப் பிரச்சினைகளின் தொடர்பாகவே நாடகம் அமைந்திருக்கும். சில காலத்துக்கு முன் தாழ்த்தப் பட்ட மக்களின் ஆலயப்பிரவேசம் பெரும் பிரச்சினையாக இருந்த காலத்தில், சாதிப் பிரச்சினையை முற்போக்கு நோக்கில் அணுகி எழுதப்பட்ட 'நவீன நந்தனுர்' நாடகம் சீர் திருத்தவாதிகளின் பெரும் பாராட்டைப் பெற்றது. இன்று நடைபெறப்போவது 'நவீன வள்ளி திருமணம்.'

நாடகத்தின் கதை எப்படியிருக்குமென எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். நாடகம் தொடங்குவதற்கு முன் அரசடியூர் இளம் பாடகர்கள் தங்கள் கலையாற்றலைக் காட்டுகிறுர்கள். பிரபல இந்தியப் பாடகர்களின் ஈழத்து வாரிசுகளாகத் தங்களை இனம் காட்டச் சிலர் முயல்கின்றனர்.

நாடகம் ஆரம்பமாகிறது. காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பேறுகின்றது. சீதனப் பிரச்சினையே நாடகக் கருப்பொருளாக அமைந்திருக்கிறது என்பது ஓரிரு காட்சிகளில் வெளியாகிவிட்டது.

புகையிலைத் தோட்டக்காரனின் மகளான வள்ளிக்குப் பல கலியாணங்கள் பேசப்படுகின்றன. பெற்றேர்கள் சாதி பார்த்தலால் சில இடங்களைப் புறக்கணித்தனர். சாதகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்த மற்றதால் சில இடங்களைக் கைவிட்டனர்; சீதனம் பொருந்தி வராததால் பல இடங்களில் கலியாணப் பேச்சுப்பாதியில் முறிந்தது. 'கோழி மேய்ச்சாலும் கோரணை மேந்திலை மேய்க்க வேணும்' என்ற வசனம் அடிக்கடி உபயோகிக்கப்படுகிறது; டொக்டர், என்ஜினியர் ஆகிய உயர்ந்த உத்தியோகத்தர்களை இலக்காக வைத்து ஆரம்பத்தில் கலியாணம் பேசப்பட்டவளுக்கு ஒரு 'கிளறிக்கல்' உத்தியோகக்காரன் கூடக் கிடைக்காமல் போகிறது. கடைசியில் வேலன் என்ற கமக்காரனுக்கு வள்ளியைத் திருமணம் பேசுகிறார்கள்.

எடுத்த கருத்தினை அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடன் உத்தியோகத்தரின் வாழ்க்கையின் அவல நிலை யதார்த்தமாகக் காட்டப்படுகிறது. ஒரு 'கிளறிக்கல்' மாப்பிள்ளையும் மனைவியும் கொழும்பில் புறாக்கூடு போன்ற வீட்டின் ஓர் அறையில் சமைத்துச் சாப்பிட்டு உறங்குவது, பிள்ளைக்கு பால் மாவிற்கு நாயாக அலைவது, இனக்கலவரத்தில் அகதிகளாகக் கப்பலில் உடுத்த சீலையுடன் ஊருக்கு வந்து வயல் செய்யத் தொடங்குவது ஆகிய காட்சிகள் காட்டப்படுகின்றன.

'கிளறிக்கல்' உத்தியோகத்தனாகவும், இளங்கமக்காரனாகவும் இரு வேடந்தாங்கி நடித்த வேல்முருகனின் நடிப்பை எல்லோரும் வியந்து பாராட்டுகிறார்கள். கை தட்டல்கள், விசில்கள் வரவேற்புக் கொடுக்கின்றன.

வேற்றூரில் கமஞ் செய்யும் வேலன் வள்ளியைப் பெண் பார்க்கப் போகும் விதம் அவ்வூர் பழைய மரபின் படியே நடக்கிறது. மாறு வேடம் தாங்கிய வேலன், வீட்டில் யாருமே இல்லாத வேளையாக ஒரு நண்பனை அழைத்துக் கொண்டு வள்ளி வீட்டுக்குப் போகிறான். படலையைத் திறந்துகொண்டு உள்ளுக்குப்போனதும் தாடியனான வேலன் ''வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்...'' எனக் கூப்பிடுகிறான்.

கையிலே அலுவலுடன் நின்ற வள்ளி குரல் கேட்டு வருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாங்கள் கரவெட்டியில் இருந்து வாறம். இங்கை ஒரு மாட்டுக்கண்டு விக்க நிக்குதாமே?'' வேலன் கேட்கிறான்.

வள்ளி மாடு பார்க்க வந்தவர்களை மாட்டுக் கொட்டிலுக்குள் கூட்டிச் சென்று, விற்க இருக்கும் பசுக்கன்றைக் காட்டுகிறாள். தாடிக்காரனான வேலன் அக்கன்றைத் தடவிக் கொண்டே, வள்ளியைக் கடைக்கண்களால் பார்த்தபடி கூறுகிறான் ''கண்டு எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு''

''அதுதானே நான் சொன்னன்; தோட்டக்காரன் வளக்கிற மாடு நல்லாயிருக்குமெண்டு. அம்மான் உங்களுக்குத்தெரியுமே எங்கட ஊரில ஒரு கிழவன் சொல்லுவார் 'ஏழை வீட்டில் பெண் எடுக்கோணும், தோட்டக்காரன் வீட்டில மாடு கண்டு வாங்கோணும்' எண்டு.''

வேலன் சிரித்துக் கொண்டே தாடியைத் தடவிய வண்ணம் சொல்கிறான் ''பிள்ளை உன்ரை கொப்பு ஒரு நாணயமான மனுஷன் அவரோடை விலையைப் பேசி எப்பிடியும் இந்தக் கண்டை அவிழ்க்கிறது தான்... பிள்ளை இந்த வெய்யிலுக்கை ஒரே தாகமாயிருக்கு குடிக்கிறதுக்கு எப்பன் தண்ணீ தாறியே''

நாடகத்தைப் பார்க்க வந்திருப்பவர்களின் கைதட்டல்கள் வானைப் பிளக்கின்றன. விசில் சத்தம் இளைஞர்கள் பகுதியிலிருந்து தாராளமாக வருகிறது. அண்ணாவியாரின் பேரனின் நடிப்பால் கவரப்பட்ட பொன்னையாவின் சிந்தனை பழைய காலத்துக்குப் போகிறது.

அண்ணாவியாரின் கூத்துக்கள் நடக்கும் போது ஒருவர் நடிப்பு கூத்துப் பார்க்க வந்திருப்பவர்களுக்குப் பிடித்து விட்டால் சால்வையில் பணம் முடித்து எறிவார்கள். அதனை அண்ணாவியார் பாட்டு உருவாய் மத்தளதாள இசையுடன் அவைக் களத்தாருக்கு அறிவிக்கும் விதம் அலாதியாக இருக்கும். ''போடப்படும்... இன்னும் போடப்படும்...''

நாடகம் தொடர்கிறது. வள்ளியிடம் செம்பை வாங்கித் தண்ணீர் குடிக்கும் வேலனுக்கு விக்கல் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசிகர்கள் எல்லோருக்கும் வள்ளி திருமணக் காட்சி நினைவுக்கு வருகிறது. சிங்கப்பூர் சின்னையா கந்தபுராணத் திற் கூறப்படும் வள்ளி திருமணத்தின் தத்துவத்தை-முருகன் வள்ளியை மருட்டிப் பிடிப்பதுபோல இறைவன் ஆன்மாக் களை வசப்படுத்துவார் என்பதை—நினைத்துப் பார்க்கிறார். பொன்னையா, அண்ணாவியார் அன்றொருநாள் வள்ளி திரு மணக் கூத்தில் முருகனாகத் தோன்றி, ஓர் இரசிகனின் வெள்ளி நாணயம் முடிந்த பட்டுச் சால்வையைக் களரியில் பரிசாகப் பெற்றதையும் அசை போடுகிறார்!

பொன்னையாவின் நடுமகள் சரசும், சின்னையாவின் பெருமகள் மல்லிகாவும் நாடகத்தின் நகைச்சுவையால் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். அருகிலிருக்கும் ஒரு வயோ திபர் கூறுவது சரசுவின் காதுகளிலே நாராசமாய் கேட் கிறது. ''இந்தக் காலத்தில பெம்பிளை பாக்கிறதெண்டால் பெடியன்கள் திருவிழாவிலவந்து பாக்கோணும். பாருங்கோ, குமரிகள் போடிற சத்தம் பொம்பிளை சிரிச்சால் போச்சு போயிலை விரிஞ்சால் போச்சு எண்டு முன்னுள்ளவன் சொல்லுறது''

சரசுவுக்கு மனங்கொதிக்கிறது. 'இதென்ன கொடுமை யாழ்ப்பாணத்தில பெம்பிளைகள் பிறக்கிற நேரம் அடிமைச் சீட்டு எழுதிப் போடுறதே. குமருகள் சிரிக்கக் கூடாது. பிறகு சீதனக் கொடுமை. ஊரில் எத்தனை பெம்பிளைப் பிள்ளைகள் ஒரு நாளும் சிரிக்காமல் மூலைக்கை கிடந்து அழுதுகொண்டே இருக்குதுகள்.'

அவளுக்கு அக்கா வள்ளிநாயகியின் நினைவு ஓடி வருகிறது.

நாடகம் முடியும் கடைசிக்கட்டம். வேலன் முருகக் கடவுளாக மாறி வள்ளி அருகில் நின்று சபையோரை பார்த் துச்சொல்கிறான். ''பக்தர்களே! நான் இப்போது போகி றேன். என் கருத்துக்களை ஏற்றுப் புதுப்பாதையில் செல் லுங்கள், தவறினால் மீண்டும் நான் வருவேன். முன்பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவை சாதிப் பிரச்சனையைப் பற்றிச் சில கருத்துக்கள் சொன்னேன். ஆனால் இன்னும் சாதி ஏற்படுத்திய சமூகக் குறைபாடுகள் முற்றாகத் தீரவில்லை. சாதிகள் வகுத்த ஏற்றத் தாழ்வுகளையும் சீதனக் கொடுமையையும் வேரோடு சாய்க்க சூரசங்காரம் தேவைப்படுமாயின் நான் கட்டாயம் திரும்பவும் வருவேன்.''

நாடகம் முடிகிறது.

சிறிது தூரத்தில் நின்று திருவிழாப் பார்த்துக்கொண்டிருக்கும் கணபதிப் பிள்ளையை, அருகில் மல்லிகாவுடன் நிற்கும் சிங்கப்பூர் சின்னையா கூப்பிட்டுக் கொழும்புக்குப் போகும் நாளைக் கேட்டறிகிறார். கணபதிப்பிள்ளை மல்லிகாவைக் கடைக் கண்களால் பார்த்துக் கொண்டே பதில் சொல்கிறான்;

வசந்த மண்டபப்பூசை தொடங்கக் கணபதிப்பிள்ளையும் சரசுவும் வீட்டுக்குத் திரும்புகிறார்கள். வீட்டுக்கு வந்த சரசு, தான் பார்த்து இரசித்த நாடகத்தைப்பற்றி விபரமாக வள்ளிநாயகியிடம் கூறி வாயாரப் புழுகிக் கொண்டிருக்கிறாள்.

வள்ளிநாயகியின் சிந்தனைகள்சிறகடிக்கின்றன. அவள் முகம் ஓடிச் சிவக்கிறது.

அரசடிப் பிள்ளையார் கோவிலில், பிள்ளையாருடன் முருகன் வள்ளி தெய்வானை சமேதரராய் உள் வீதி சுற்றி முடிந்து, முத்துச் சப்பரத்தில் வெளிவீதி வலம் வரப் புறப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

அப்பொழுதுதான் மனைவியை டொக்டர் சிவநேசன் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு மீண்டும் 'வார்ட்'டுக்குப்போய், அன்று காலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட புதிய நோயாளியைப் பார்த்துவிட்டு மிகுந்த சோர்வுடன் வீட்டுக்கு வந்து முன் மாடத்திலுள்ள கதிரையில் இருக்கிறார் செந்தில்நாதன். இன்று டொக்டர் சிவநேசனின் மகளின் பிறந்தநாள், மீண்டும் அவர் அங்கு போகவேண்டும்.

''அத்தான்'' என்று அழைத்த வண்ணம் இராமலிங்கம் அவருக்கருகில் உள்ள கதிரையில் இருந்து கொண்டே, ''எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?'' என ஆங்கிலத்தில் பீடிகை போடுகிறான்:

''எனக்கு இயன்றால் கட்டாயம் செய்வேன்''

உங்களால் கட்டாயம் செய்ய முடியும். டொக்டர் மாருக்கும் லோயர்மாருக்கும் உண்மையைச் சொல்ல வேணு மாம், எங்கடை கோயில் திருவிழாவுக்கு வந்து நின்றானே என் சினேகிதன் தயா, அவன் ஒரு சங்கதியில மாட்டுப் பட்டுப் போனான். அவள் ஒரு ரீச்சர்; நாலு மாதமாம்...... வேற வழியில்லை அதுக்கு ஒரு டீ அன் சி (D & C) செய்தால் தான் சரிவரும். கண்டியில இருக்கிற டொக்டர் சில்வா, V. O. G. உங்களின்ரை 'கிளாஸ் மேற்' என்று சொன்னிங்கள்: அத்தான், அவருக்கு ஒரு லெட்டர் குடுத்தால் உதவியாயிருக்கும்.''

செந்தில்நாதன் மின்சாரம் தாக்குண்டவர் போலானார். ''தயவு செய்து இப்பிடி ஒரு உதவியை என்னைக்கேட்க வேண்டாம். என்ர மனச்சாட்சிக்கு விரோதமானது இது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அத்தான் உங்களுக்கு இன்னும் உலகம் பிடி படேல்லை. வெளுத்ததெல்லாம் பாலெண்டு நினைக்கிறியள்; உலகத்திலை நேர்மையாக உழைச்சு முன்னேறலாமா? 'டி. எம் ஓ.'வைப் பாருங்கோ: மந்திரிக்கு வந்து நாலு வருஷந் தான். மனுஷன் நல்லாச் சம்பாரிச்சுப் போட்டார்.''

''நாங்கள் செய்யிறவேலைக்கு 'கவண்மேன்ற்' சம்பளம் குடுக்குது. உழைக்கிறதை நேர்மையாக உழைக்கோணும்''

''உந்தக்கொள்கை இண்டைக்குச் சரிவராது. எடுக்கிற சம்பளத்தில மட்டும் நம்பியிருந்தால் இந்தக் காலத்தில முன்னேறேலாது. நீங்கள் லண்டனுக்குப்போய் படிச்சது தான் இன்னும் உலகத்தைச் சரியாப் படிக்கேல்லை''

அப்பொழுது வெளியே 'கேட்' திறக்கும் சத்தம் கேட்க இராமலிங்கம் எட்டிப் பார்க்கிறான். சிங்கப்பூர் சின்னையா உள்ளே வருகிறார்.

இராமலிங்கம் சொல்கிறான் ''எங்கடை அத்தானுக்கு உலக அநுபவம் பத்தாது. நீங்கள் தான் சரியான ஆள்: உலக அநுபவமுள்ள நீங்கள் ஒருக்கால் புத்தி சொல்லுங்கோ.''

சின்னையா விறைத்துப் போகிறார். யாருக்குப் புத்தி சொல்ல வேண்டுமென்று வந்தாரோ அவரே இன்னுமொருவருக்குப் புத்தி சொல்லும்படி சொன்னால்...!

செந்தில்நாதனுக்கு இராமலிங்கத்தைப் பார்க்க எரிச்சலாக இருக்கிறது. காரை எடுத்துக்கொண்டு எங்கோ புறப்படுகிறார்.

• • • •

மங்கள வாசத்தின் முன் விறாந்தையில் மங்களம் நாற்காலி ஒன்றில் இருந்து காலுக்கு மேல் கால் போட்ட வண்ணம், வெளி நாட்டிலிருந்து வரும் பெண்களுக்கான சஞ்சிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வாசித்துக் கொண்டிருக்கும் அந்தக் கட்டுரை திருமதி சிவநேசன் சொல்லியது போல மிகவும் சுவாரசிய மாக இருக்கிறது. அக்கட்டுரையை மங்களம் வாசிக்க வேண்டுமென்று அச்சஞ்சிகையை அவளே கொடுத்திருந் தாள். கட்டுரையில் பெண்களின் அந்தரங்க ஆசைகளை அமுக்கி வைப்பதால் ஏற்படும் விளைவுகள் ஆராயபட்டிருக் கின்றன.

மங்களத்திற்கு அநுபவிக்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றன போலப் படுகின்றது. 'அவர் என்னைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லையோ, ஒருவித போக்குக் கொண்ட இவரைக் கணவனுகக்கொண்டது எனது அபாக்கியமோ, வைத்தியத் தொழிலால் வெறும் பேரும் புகழும் கிடைத்தால் போதுமா?'

''மங்களம், என்ன சரியாய் யோசிக்கிறுய்?'' என்று சொல்லிக் கொண்டே அறையிலிருந்து வெளியே வந்த இரா மலிங்கம் அவளுக்கு எதிரேயுள்ள கதிரையில் இருக்கிருன்.

அவள் ஒன்றுமே சொல்லவில்லை.

இராமலிங்கம் தொடர்கிருன். ''அத்தான்ரை போக்கு எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. நான் ஒரு உதவி செய்யச் சொல்லிக் கேட்டன்; அவர் மறுத்துப் போட்டார். நீயெண்டாலும் புத்தி சொல்லிப் பாரன். பிழைக்கத் தெரி யாத மனுஷனுகக் கிடக்கு. இவற்றை பதவிக்கு என்னமாதிரி யெல்லாம் உழைக்கலாம். டொக்டர் சிவநேசனைப் பார். நேத்து அவர் வீட்டிலை 'பேத்டே பாட்டி' எவ்வளவு 'கிறுண்'டாக இருந்தது. நாலு வருஷத்தில நல்லா உழைச் சுப்போட்டார். எங்கடை அத்தானுக்கு மூக்கைப் பிடிச்சால் வாயைத் திறக்கத் தெரியேல்ல''

'நீங்கள்தானே பாத்துக் கட்டித் தந்தனிங்கள். நான் தெரிஞ்சதுதானே சரிவராமல் போச்சு'

''மங்களம் இண்டைக்குத்தான் சொல்லுறன், காரி யம் முடிஞ்சுதுதானே. இனி ஒண்டும் செய்யேலாததுதானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தெரிஞ்ச இன்ஸ்பெக்டர் மோகன் உன்னை வெறுத்து வேறு கலியாணம் செய்யேல்லை. நானும் ஐயாவும் திட்டம் போட்டுத்தான் உன்ரை காதலை இல்லாமல் செய்தனுங்கள்''

''அண்ணை... உண்மைதானே எனக்கு ஒண்டும் விளங்கேல்லை''

''அது பெரிய கதை மங்களம். மோகன் கொழும்புச் செட்டி. அவனுக்கு உன்னைக் கட்டிக் குடுத்தால் எங்கடை சாதி, குலம், கோத்திரம் எல்லாம் என்னுகிறது? நீ அவனைத் தான் கட்டுவன் என்று ஒற்றைக் காலிலை நிண்டாய். இதுக்கு என்ன வழியெண்டு யோசிச்சம். ஐயாதான் அந்தத் திட்டத்தைப்போட்டார். ஒரு மாதமாய் உன்னைக் கொழும்பில் இல்லாமல் செய்யவேணும். நீ ஊருக்கு வந்தால் நிற்க மாட்டாய். ஆனபடியால் இந்தியாவிற்கு கோயில் குளங்கள் பாத்திட்டு வரும் சாட்டில் ஐயா மாத்தளையில் உள்ள தனக்குத்தெரிஞ்ச ஆட்களோடை அனுப்பினர். அந்த நாளையில் மோகன் வேலை செய்த பகுதிக்குப் பொறுப்பான 'சுப்பிரீண்டன் ஒவ் பொலிஸ்'சைப் பிடிச்சு, அவனுக்குக் காசைக்கட்டி பல சங்கதிகளைச் செய்தம்; நீ இந்தியாவுக்குப் போய் போட்ட கடிதம் ஒன்று மட்டும் தான் மோகனுக்குக் கிடைச்சுது. மற்றதெல்லாத்தையும் கிடைக்காமல் செய்தம். அவன் உனக்கு அனுப்பிய தந்தி 'தவிர்க்க முடியாத காரணத்தால் கலியாணம் செய்யப் போறேன்! என்னை மறந்து விடு' என்று அதையும் நாங்கள் தான் உனக்கு அனுப்பினனுங்கள்.''

இராமலிங்கம் மங்களத்தின் முகத்தைப் பார்க்கிறன்' அவள் முகம் சிவந்து, அவன் சொல்லும் கதையைச் ஜீரணிக்க முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

''உப்பிடியும் செய்யிறதே?'' பெருமூச்சுடன் மங்களம் தொடர்ந்து கேட்கிறள் ''அவர் எப்பிடி என்னை மறந்து கலியாணம் செய்ய ஒத்துக் கொண்டார்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொறு மங்களம். எல்லாத்தையும் நான் விபரமாகச் சொல்லுறன். தான் போட்ட கடிதத்திற்குப் பதில் வரவில்லை எண்டு மோகன் பல மாதிரி யோசிச்சுக் கொண்டிருந்தான். நான் ஒரு நாள் மோகனைச் சந்திச்சு, 'மங்களத்திற்கும் டொக்டர் செந்தில்நாதனுக்கும் கலியாணம் பேசி முடிவாப்போச்சு. அவளுக்கும் நல்ல விருப்பம்' எண்டு சொன்னன். இதே நேரத்தில சுப்பிரீண்டனும் அவனுக்கு ஒரு கலியாணம் பேசினர். அவர் நெருக்கவே உன் கடைசி முடிவைக் கேட்டுக் கடிதம் போட்டிருந்தான். அதையும் உனக்கு வராமல் நாங்கள் எடுத்துப் போட்டம். ஒரு கிழமைக்குப் பிறகு இந்தியாவிலிருந்து நீ அடிக்கிற மாதிரி ஒரு தந்தி அடிச்சம். '*Dont worry, proceed further*' எண்டு. இந்தத் தந்தி கிடைத்த அடுத்த கிழமையே மோகனுக்குக் கலியாணம் முடிஞ்சுது. நீ இந்தியாவால கொழும்புக்குத் திரும்பி வாறதுக்கிடையில அவனை பதுளைக்கு மாத்துவிச்சுப் போட்டம். நீ சொன்னல் நம்ப மாட்டாய் இதுக்குப் பத்தாயிரத்துக்கு மேலை முடுஞ்சுது''

''இப்பிடியும் அநியாயம் செய்யிறதே'' மங்களத்தின் குரல் கரகரக்கிறது.

''மங்களம் இப்ப உனக்கு என்ன குறை. அத்தான் தானே எங்கடையூரில் *Most Qualified Man* அவற்றை போக்குத்தான் ஒரு மாதிரி. அதைத் திருத்தி எடுக்கிறது உன்ரை கெட்டித்தனம்.''

அப்பொழுது வெளியே 'கேட்'டைத் திறந்துகொண்டு அரசடியூர் கிராமச்சங்கக் கந்தோர் 'பியோ'னும் அரசடியூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பியோனும் வருகிறார்கள். ஏதோ காரியாலய அலுவலாகப் பெரியவரைச் சந்திக்க வந்த பியோன்களைக் கொஞ்ச நேரம் வெளியே நிற்கச் சொல்லி விட்டுத் தனது அறைக்குள் போகிறான் இராமலிங்கம்.

மங்களத்திற்கு'இராமலிங்கம் சொன்னவற்றைக் கேட்டதும் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்த அந்தரம் நெஞ்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கொண்டு சிந்தனையில் உருப்பெறுகிறது: அவளது சிநேகிதியான திருமதி சிவநேசனுடன் மனந்திறந்து இது பற்றிப் பேசவேண்டும் போலத் தோன்றுகிறது.

அதோ, காரில் வந்து கொண்டிருக்கிறுள் அவள் தேடுபவள். கார் வரும் பாதையை எதிர்கொண்டு நோக்கிக் கொண்டிருக்கிறுள் மங்களம்.

# 12

இன்று கணபதிப்பிள்ளை கொழும்புக்குப் பயணமாகிறுன். அவர்கள் வீடு கலகலப்பாக இருக்கிறது, இது காலவரை, தானே தன்னந்தனியனுக சுமந்த வாழ்க்கைச் சுமைக்கு மகனும் தோள் கொடுத்து உதவப் போகிறுன் எனப் பொன்னையாவும் ஓர் ஆசுவாசம். தான் பெற்ற மகன் 'லோங்ஸ்' போட்டு ஒரு 'கவண்மேந்து' உத்தியோகத்தனுகிறுன் என்று பொன்னம்மாவுக்கு ஒரு பெருமை. வள்ளிநாயகிக்கு, தனக்கு ஓர் உத்தியோக மாப்பிள்ளை கிடைக்காவிட்டாலும் தனது கூடப்பிறந்த தம்பி உத்தியோகத்தனுகப் போகிறுன் என்ற மட்டற்ற மகிழ்ச்சி.

கணபதிப்பிள்ளை நெருங்கிய உறவினர்கள் வீட்டுக்கெல்லாம் போய் பயணம் சொல்லிவிட்டு வருகிறுன்.

"தம்பி, சின்னம்மா ஒரு மாதிரியான ஆள். சின்ன விஷயத்திற்கெல்லாம் கருப்பூர் எடுக்கிறவள். அயலுக்குள்ளை, ஒருக்கால் போய்ப் பயணம் சொல்லிப்போட்டு வா மோனை. நல்ல தண்ணிக்கு வரேக்கை ஓடி வாறவள், ரெண்டு மூண்டு நாளா இந்தப் பக்கமே வரேல்லை" பொன்னம்மாவின் வேண்டுகோள் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிப்பிள்ளை வேலிப்பொட்டுக்குள்ளால் அடுத்த வீட்டுக்குப் போகிறன். குசினிக்குள் நின்ற சின்னம்மா அவனைக்கண்டும் காணாதது போல வீட்டுக்குள் நுழைகிறள்.

''மாமி'' கணபதிப்பிள்ளை குரல் கொடுக்கிறன்;

''ஆர் கணபதிப்பிள்ளையே!.வா தம்பி. எப்ப பயணம்? முன்னுக்கு வாவன் மாமாவும் உங்கைதான் நிக்குது.''

காறுய்ப்பித்துத் துப்பி தான் அங்கு இருப்பதைக் காட்டிக் கொள்கிறர் குட்டியர்.

உள்ளேயிருந்து கதிரை ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து விறுந்தையில் வைத்துக் கொண்டு சொல்கிறள் சின்னம்மா,''ஏன் தம்பி நிக்கிறய் இந்தக்கதிரையில் இரன்''

கணபதிப்பிள்ளை கதிரையில் இருக்கிறன்.

குட்டியர், கணபதிப்பிள்ளையை ஒரு தடவை உச்சி முதல் உள்ளங்கால் வரையும் பார்த்துவிட்டுச் சொல்கிறர். ''தம்பி இண்டைக்கோ பயணம் கொழும்பில சிங்கப்பூர் சின்னையற்றை முத்த மோள் வீட்டிலதான் இருக்கப்போறய் எண்டு மடத்தில கேள்விப்பட்டன். தம்பி சின்னையர் இறல் போட்டுச் சுருப்பிடிக்கிறவர். இவர், இந்த அடுக்கெல்லாம் என்னத்துக்கெண்டு தெரியுமே நீ படிச்ச பெடியன் உனக்கெல்லாம் விளங்குமெண்டு நினைக்கிறன். அவர் இப்ப என்னேடை வளமா மாட்டுப்பட்டுப் போனர். குட்டியர் ஆரெண்டு காட்டி வைக்கிறன். எட என்னெட்டை ஒரு சொல்லு சொல்லாமல் எனக்குப் பங்கிருக்கிற சொரியல் காணியின்ரை மற்றப் பங்கை வாங்கியிருக்கிறரே. நான் இப்ப அந்தப் பங்குக் காசு கட்டப் போறன் எண்டதும் ஓடி முளிக்கிறர். இப்ப இணக்கத்திற்கு வாற அடுக்குப்போல. சிங்கப்பூரில வெள்ளைக்காரருக்கு விட்ட விடுகை, எது ... விழுந்த பாட்டுக்குக் குறி சுடுகிறது..., உந்தப்புலுடா இந்தக் குட்டியனிலை சரிவராது''

''சும்மா இருங்கோ. பயணம் சொல்லவந்த பெடியனேடை உதே கதைக்கிறது. உங்களுக்கு எந்தநேரமும் உரஞ்சுப்படுகிற கதைதானே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நேரம் வந்திட்டுது. நான்போய் வெளிக்கிடோணும் அப்ப நான் வாறன் மாமா, வாறன் மாமி'' என்று சொல்லிக் கொண்டு கணபதிப்பிள்ளை எழுந்து நிற்கிறான்.

''சரி தம்பி சுகமாய் போயிட்டுவா'' சின்னம்மா கண பதிப்பிள்ளையைக் குறிப்பாகப் பார்த்தவாறு சொல்கிறாள்.

கணபதிப்பிள்ளை வீட்டிற்கு வந்ததும் குசினியடியில் நின்ற சரசு சொல்கிறாள். '.அக்கா, அக்கா அண்ணன் வந் திட்டுது மூண்டு மிளகாயும் வேப்பமிலையும் எடுத்துக்கொண்டு வா அண்ணனுக்கு நா வூறுக்குக் கழிக்கவேணும்.''

கணபதிப்பிள்ளை சிரித்துக் கொண்டே சொல்கிறான் ''அம்மா தானே நேத்துப் பொழுது படேக்கை மிளகாயும் வேப்பமிலையும் எடுத்து என்னை மூண்டு தடவை தடவி துப்பி விச்சு, அதை எரிச்சு சாம்பலை எடுத்துக் கொண்டுவந்து என்ரை நெத்தியிலை பூசினவ.''

''அண்ணை அது நேத்தெல்லோ. இண்டைக்கு சின் னம்மா மாமியெட்டைப் போட்டு வந்தது, அவவுக்கு கரி நாக்கெல்லோ.''

''என்ன சரசு பகிடி பண்ணுறியோ?''

''இது பகிடிக்கில்லை அண்ணை. நேத்துப் பேப்பரிலை பாத்தனான் நா வூறு பாக்கிறதிலயும் விஞ்ஞான உண்மை இருக்குதாம்.''

''சரசு எல்லாம் நம்பிக்கையள் தானே''

அப்பொழுது வைரவ கோயில் வளவு இராசம்மா கொழும்பில் உள்ள தனது மகனுக்கு கணபதிப்பிள்ளை மூலம் அனுப்பிவைக்க ஒருகட்டு முருங்கைக்காயும் போத்தல் ஒன்றில் நல்லெண்ணெயும் கொண்டு வருகிறாள்.

''அக்கை எங்க போட்டா தம்பி... நீ கொண்டுபோற சாமான்களோடை சேத்து இதையும் கொண்டுபோ மோனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் காயிதம் போட்டிருக்கிறம். வெள்ளவத்தையில தானே எங்கடை தம்பியும் இருக்கிறன். வந்து எடுத்துக் கொண்டு போவன்.''

"ஆர் சின்னையாவே, வா! வா! தம்பி இப்பதான் வெளிக்கிடுகிறன்.'' வீட்டிற்குள் புகுந்த சின்னையாவைப் பொன்னையா வரவேற்கிறார்.

விறாந்தையிலுள்ள கதிரையிலிருந்து கொண்டு சின்னையா பொன்னையாவைப் பார்த்துக் கேட்கிறார். ''அத்தான் செலவுக்கு நான் குடுத்தது காணுமோ''

பொன்னையா பதில் சொல்லுமுன் பொன்னம்மா சொல்கிறாள். ''அது திறுத்தியாப் போதும். நீங்கள் கடவுள் மாதிரி நல்ல நேரத்தில உதவி செய்து கொண்டு வாறியள். உங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போறம்''

''இது பெரிய உதவியே? எங்கடை உறவு ஒரு நாளும் அறுந்து போகாமல் இருக்க வேணும்'' என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் நிற்கும் கணபதிப்பிள்ளையைக் கரிசனைக் கண்கொண்டு பார்க்கிறார் சின்னையா.

பயணம் புறப்பட்ட வண்ணம் முன் விறாந்தைக்கு வருகிறன் கணபதிப்பிள்ளை.

''கொடிகாமத்துக்கு முதல் 'பஸ்'சில போறதுதான் நல்லது. மற்ற பஸ் மட்டுமட்டாத்தான் போகும். முதல் முதல் பயணம் போறது அவதி அவதி எண்டுபோய் அந்தரப் படக்கூடாது.''

வீட்டில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் கூடி நிற்கிறார்கள். பிற இடத்துக்கு வேலைக்குப்போகும் மகனுக்கு எதையெதையோ எல்லாம் சொல்ல வேண்டுமெனத் திட்டம் போட்டிருந்த பொன்னையா அர்த்த புஷ்டியுடன் வீட்டு முகட்டைப் பார்த்த வண்ணம் சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி பிற இடத்தில நாலு பேரோடையும் பிழங்கிறது கவனமாக இருக்க வேணும்.''

சின்னையா இடைமறித்துச் சொல்கிருர், ''நான் உங்கை கனபெடியளைப் பார்த்திருக்கிறன். கணபதிப்பிள்ளை மாதிரி அடக்க ஒடுக்கமான பெடியள் வலு குறைவு. உங்களெட்டை இருக்கிற நேர்மையும் நாணயமும் மகனெட்டையும் இருக்குந்தானே.''

முதல் முறையாக மூத்த மகனைப் பிரிந்திருக்கப் போகும் தாய்ப்பாசம் பொன்னம்மாவைத் தவிக்க வைக்கிறது.

கண்களில் வழிந்தோடும் கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு சொல்கிருள். ''தம்பி ரயில் வசுவில போறது கவனம். நேரத்துக்கு வயிறு நிறையச் சாப்பிடு. தம்பி போய்ச் சேர்ந்த உடனை ஒரு காயிதத்துண்டு எழுதிப் போட்டிடு மோனை''

வள்ளிநாயகி ஒன்றுமே பேசவில்லை. அன்புத்தம்பியின் பிரிவுத் துயரமும், அவன் உழைக்கப் போகிருன் என்ற மகிழ்வும் ஏற்படுத்தும் மனோநிலைகள் ஒன்றையொன்று சமன் செய்ய அவள் வாஞ்சை கலந்த பார்வையால் வழியனுப்புகிருள்.

நடுவிலான் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளையின் தம்பி சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு, சூட்கேசைத் தூக்கிக்கொண்டு அண்ணனைச் சந்திவரை கூட்டிச் சென்று பஸ்சில் அனுப்பிவிட்டு வர ஆயத்தமாக நிற்கிருன்.

சிந்தையில் மோதும் புதிய சிந்தனைகளை மறைத்து, சிரித்த முகத்துடன் நிற்கும் சரசுவைப் பார்த்து கணபதிப்பிள்ளை சொல்கிருன். ''சரசு எனக்குத்தான் மேற்படிப்புப் படிக்க வசதியில்லாமல் போச்சு. நீ படிச்சுக் கட்டாயம் யூனிவேசிற்றிக்குப் போகோணும். உனக்கு என்ன வேணுமெண்டாலும் எழுது. நான் என்னுல் இயன்றதைச் செய்கிறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி சரசைப்பற்றி நீஒண்டும் யோசியாதை அவள் இன்னும் ஏழெட்டு வருஷத்தில டொக்டராக வந்திடுவள் *That is sure*" என்கிறார் சின்னையா.

அண்ணன் காலடியில் நிற்கும் கமலாவைப் பாசத்துடன் பார்த்துவிட்டு 'பொக்கற்'றுக்குள் கையைவிட்டு ஒரு ஐம்பது சத நாணயத்தை எடுத்து, "இந்தா கமலா பயணக் காசு மூத்தண்ணன் உழைச்சுச் சம்பளம் எடுத்து அடுத்த முறை ஊருக்கு வந்து போகேக்கை கனக்கக் காசு தருவன்" என்று சொல்லிக் கொண்டு கமலாவைத் தூக்கிக் கொஞ்சுகிறான் கணபதிப்பிள்ளை.

அதற்குள் அம்மா படலைக்கு முன் போய் முழிவியளம் பார்க்கிறாள். கந்தன் பனைச்சீவ வந்து கொண்டிருக்கிறான். தூரத்தே வரும் கந்தனைப் பொன்னையாவும் கண்டுகொண்டு சொல்கிறார்:

"நல்ல முழிவியளம் வஞ்சகமில்லாத சீவன் கந்தன். நான் பல சங்கதிகளில சோதிச்சிருக்கிறன்; கந்தன் முழி வியளம் வந்தால் போற சங்கதிகள் வெற்றிதான்."

"எங்கடை அரசடிப் பிள்ளையார் ஒருத்தரையும் கை விடார்" இது சின்னையா.

"மாமா நான் போட்டுவாறன்"

சின்னையா கணபதிப்பிள்ளையைக் கீழ்க் கண்களால் பார்த்த வண்ணம் சொல்கிறார். "நல்ல சுகமாய் போட்டு வாரும், *Wish you all the best*"

"அம்மா, அப்பு, அக்கா, சரசு...... எல்லோருக்கும் போட்டு வாறன்."

படலை திறந்து மூடப்படுகிறது; பிரிவின் இறுதிக் கட்டத்தில் கணபதிப்பிள்ளை கடைசியாகச் சொல்கிறான். "அம்மா நான் போட்டு வாறன்" கந்தன் கிட்டவந்து விட்டான். "நான் தாணுக்கும் முழிவியளம் எங்கடை ஐயனார் தம்பிக்கு ஒரு விக்கினமும் வராமல் காப்பாற்றுவார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தனது குலதெய்வத்தை இரு கைகளாலும் வணங்கி நிறைந்த மனத்துடன் வழியனுப்புகிறான் கந்தன்.

புழுதிமண் புதுச்சப்பாத்திலே பட, அந்த ஒழுங்கை வழியாக நடந்து கொண்டிருக்கிறான் கணபதிப்பிள்ளை.

ஊரில் உத்தியோகமான புது மாப்பிள்ளையை, 'பெம்பிளை'ப் பிள்ளைகளைப் பெற்ற எத்தனையோ பேர்கள் கிடுகு வேலிக்கு மேலாகப் பார்த்து மானசீகமாக வழியனுப்புகின்றனர்.

# 13

பொன்னையா வீட்டில் உள்ள பனைகளைச் சீவிவிட்டு வழக்கம் போல வேப்பமர நிழலில் வந்து அமர்கிறான் கந்தன்.

"என்ன கந்தன் பனையெல்லாம் சீவி முடிஞ்சுதே? என்ன சங்கதி இண்டைக்கு நல்லா சுணங்கிப் போச்சு."

விறுந்தைத் தூணுடன் சாய்ந்து கொண்டிருக்கும் பொன்னையா கேட்கிறார்.

"பனைச் சீவத்தொடங்கச் சுணங்கிப்போச்சு. எங்கடை பகுதியில பெரிய அடுக்கொண்டு நடக்குதெல்லே. அதில கொஞ்சம் மெனக்கெட்டுப் போனன்" என்று சொல்லிக் கொண்டு உயரியிருந்து இறக்கிய கள்ளை முட்டியிலிருந்து ஒரு போத்தலுக்குள் விடுகிறான் கந்தன்.

06 DEC 2021

"எதைச் சொல்லுறாய் கந்தன்"

"நாங்கள் குடியிருக்கிற மணியகாரன்ரை காணியை மனேஜர் ஐயா எங்களுக்கே நன்கொடையாத் தரப்போகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் வாற ஞாயிற்றுக்கிழமை. எங்கடை ஐயனுர் கோயிலடியில ஒரு கூட்டம்வைச்சு எங்களுக்கெல்லாம் உறுதிதாறதாம் எங்கடை சிறுபான்மைத் தமிழர் மகா சபையும் இதில சேர்மதியாம்''

''பாத்தியே கந்தன் உலகம் எப்படி எல்லாம் மாறி வருகுது. உனக்கு நினைவிருக்கே மணியகாரன் இருந்த காலத்தில நாட்டாண்மை காட்டின பெரிய வெள்ளாளர் ஒருக்கால் என்ன பாடு படுத்தினவை. வீடுகளெல்லாம் கொழுத்தி உங்களைத் துரத்திறதெண்டு கங்கணம் கட்டினவை. ஏன் மனேஜர் மாணிக்கவாசகற்றை மச்சான் பழைய விதானையார் உங்களை அரசடிப்பிள்ளையார் கோயிலுக்குள்ளை உள்ளட அடுக்குப் பண்ணிறியளெண்டு குடியிருக்கிற காணியை விட்டுத்துரத்தப் போறமெண்டு வெருட்டினவையெல்லே. இப்ப தாங்களாகவே எழுதித் தருகினம் ...... அதில எத்தனை பரப்புக்காணி இருக்கும் கந்தன்?''

''பதினைஞ்சு பரப்புக் காணியில நாங்கள் ஏழு குடும்பம் இருக்கிறமாக்கும். ஒரு பரப்பை வாசிகசாலைக்கு எழுதிக் குடுத்திட்டு மிச்சம் பதினலு பரப்பையும் குடும்பத்துக்கு ரெண்டுபரப்புமேனிதரப்போயினமாம். நாங்கள் ஒவ்வொரு குடும்பமும் ஆயிரம் ரூபா போட்டு மணியகாரன்ரை பேரில ஒரு வாசிகசாலை கட்டப் போறமாக்கும். அதுக்கும் ஞாயிற்றுக்கிழமைதான் நாளுக்கு அத்திவாரம் போடுறது.''

''நல்ல அடுக்குத்தான் கந்தன். எனக்கு நீ சொல்லித்தானே தெரியும். முந்தின காலமெண்டால் மூப்பனைக் கொண்டு பறை அடுப்பிச்சு ஊர் முழுக்கப் பிரசித்தம் செய்வினம்''

''ஏனுக்கும் இப்பவும் நோட்டீசு அடிக்கிறதெண்டு பெடியன்கள் கதைச்சாங்கள். எங்கடபகுதியில சிலபெடியள்களுக்கு, ஏன் என்ரை பெடியன் முருகனுக்கும் இதில் ஏதோ சூது இருக்கு, கிராமச்சங்கத் தெரிவு கிட்டடியில வருகுது தானே, மனேஜர்ஐயா செய்யமனைக வாறதுக்குத்தான் இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் எண்டு சொல்லிக் கொண்டு திரிஞ்சாங்கள் பிறகு அவையின்ரை குரு முருகேசு மாஸ்டரைக் கேட்டிருக் கோணும். அவர் ஏதோ புத்திசொல்லிப் போட்டாராக்கும். இப்ப ஒரு சத்தத்தையும் காணேல்லே.''

''சோழியன் குடும்பி சும்மா ஆடாது. மாணிக்கவாச கரும் ஏதோ கள்ளடியை நெஞ்சில வைச்சுக்கொண்டு தான் இந்த அடுக்குப் போலயிருக்கு. அவருக்கு போன கிராமச் சங்கத் தெரிவில பெரிய விழுக்காடாப் போச்சு. வருஷக் கணக்காக சியமனு இருந்தவரை என்ரை தம்பியாற்றை பெடியன் விழுத்திப் போட்டான்''

''என்னத்தைச் சொன்னாலும் அந்தாள் சியமனு இருக் கேக்கை அரசடி கிராமச்சங்கம் எப்பிடி இருந்தது. எத்தனை ரோட்டைப் போட்டுது, ஆலடிச்சந்தையைப் பெரிப்பிச்சுது, சின்னத் தபாற் கந்தோரை பெரிசாக்கிச்சுது, நயினாருக்குக் கோபம் வந்தாலும் வரும். உங்கடை பெருமோன் இந்த நாலு வருஷத்தில என்னத்தைச் செய்தார்? இவற்றை பேரில எத்தனைபேர் தட்டிச் சுத்துறுங்கள். கனக்க வேண்டாம் எங் கடை யூனியனைப் பாக்கவும். எல்லாம் முடிஞ்சுது. டேவிட் மாஸ்டர் ஒதுக்கிக் கொண்டு போறார்''

''எனக்கேனடாப்பா கோவம் வருகுது. ஊருக்கெல் லாம் தெரியுந்தானே அவனைப்பற்றி. அடுத்த கிராமச்சங்கத் தெரிவுக்கு வாறமாசம் பத்தாம் தேதி காசு கட்டிறது எண்டு எரு ஏத்தக்காசு மாத்தப் போகக்கை சந்தியில தேத்தண்ணிக் கடையில பறைஞ்சாங்கள்''

''ஓமாக்கும் இந்த முறை பெரிய போட்டியெல்லாம் வரும்போல கிடக்கு. சியமனை எப்பிடியும் விழுத்திப்போடோ ணும்எண்டு எல்லாரும் நிக்கினம். ஊரில ஆர்தான் அத்தா னைப்பற்றி நல்லாக் கதைக்கினம். அவை வீட்டில சம்பந்தம் செய்த கந்தப்பரும் களைச்சுப் போனார். ரெண்டு பகுதிக்கு மிடையிலேயும் ஏதோ மனக்கசப்புப் போல தெரியுது கந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரும் அவையின்ரை கடையைவிட்டு விலகி இப்ப'ஈரொட்டு' வியாபாரம் செய்யிருர். நேத்தும் அவை வீட்டுக் காணிக்கை மரஞ் சீவிப் போட்டு வரேக்கை சொல்லி மனவருத்தப் பட்டுது. 'தெரியாமல் போய் விழுந்து போனன் கந்தன் பாவம் என்ரை அருமந்த பெடியனை அவள் போட்டுத்திப்பிலி ஆட்டுருள். அவன்ரை படிப்புக்கும் குணத்துக்கும் என்ன மாதிரி இருக்க வேண்டியவன்' எண்டு''

பொன்னையா ஒன்றுமே பேசாது எதையோ சிந்திக் கிருர்;

''கதையோட கதை பிள்ளையின்ரை பேச்சுக்கால் எந்த மட்டில் நீக்குதாக்கும்''

''அதெல்லாம் சரிவந்திட்டுது சாதக ஓலையும் நல்ல பொருத்தம். இண்டைக்கு காலம்பற அண்ணாவியார் வீட்டைபோட்டு வந்தனுன். அவையளுக்கு நல்ல விருப்பம்''

''ஏதோ ஐயனுற்றை புண்ணியத்தில எல்லாம் நல்ல படியாக நடந்து ஒப்பேருேணும். தங்கமான பெடியன் நல்லாச் சம்பாரிச்சு வைச்சிருக்குதாக்கும். நம்மடை பிள்ளை யின்ரை குணத்துக்கு காகம் கொத்திக் கொண்டு வந்து போட்ட மாதிரி அதோடை பெடியன்ரை தோற்றத்துக்கு நம்மடை பிள்ளையும் நல்லசங்கையாய் இருக்கும். அண்ணாவி யார்தான் இந்தப் பெடியனுக்கு வந்து பிறந்திருக்கிருர். திரு விழாவில ஏதோ நாடகம் போட்டவையாம். அண்ணாவியா ற்றை பேரன்ரை நடிப்பைப்பற்றி ஊரில பேராக் கதைக்கி னம். எனக்கு இப்பவும் அண்ணாவியார் ஆடின கூத்துக்கள் கண்ணுக்கை நிக்குதாக்கும். எங்கட பக்கத்துப் பெடியளுக் கும் அண்ணாவியார் ஆட்டக் காவடி பழக்கினவரல்லே''

''ஓம் கந்தன் உங்கடை ஆக்கள் அரசடிப் பிள்ளையார் கோயிலில் திருவிழா நடத்தின காலத்தில உங்கடை பெடி யன்கள் வருசாவருசம் நேத்திக்கடனுக்கு ஐயனுர் கோயிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஆட்டக் காவடி எடுத்துக் கொண்டு வந்து பிள்ளை யார் கோயில்ல இறக்கிறவங்களெல்லே''

''அண்டைக்கும் சொல்லுறதெண்டிட்டு அயத்துப் போனனுக்கும். என்ரை பெடியன் முருகன் எங்கடை கல் வீட்டுக் கணபதியின்ரை 'ரைக்ரர்' ஓடுறவனெல்லே. போன கிழமை ஏதோ அலுவலாக கிளிநொச்சிக்கு மெஷின் கொண்டு போனவனும். ஏதோ சாமான் உடைஞ்சு போச் சாம். அண்ணையியாற்றை பேரன் தான் தன்ரை 'ரைக்ரரில' இருந்ததைக் கழட்டி இதுக்குப்பூட்டி, அதை கிளிநொச்சிக்கு வாற ஆரட்டையும் திருப்பிக் குடுத்துவிடலாம் எண்டு சொல்லி அனுப்பினதாம். 'இப்பிடி உதவி செய்யிறவையும் உலகத்தில இருக்குதுகள் தானே' எண்டு பெடியன் சொன்னன்.''

''ஏதோ கந்தன் நாங்கள் பட்ட கயிட்டத்துக்கு இது ஒரு நல்ல சம்பந்தம் போலத்தான் தெரியுது''

''எப்பவாக்கும் கலியாண வீடு வைக்கிற யோசினை''

''ஆவணியில வைச்சிடலாம் தான் கந்தன். அதுக்கு பெடியன்ரை பிறந்த மாதம். புரட்டாசியில நல்ல காரியம் செய்யக் கூடாது. ஐப்பசியிலதான் வைக்கப்போறம்''

''கந்தன் இதைக் கொண்டுபோய் உன்ரை பேரன்ரை கையில குடு. ஐஞ்சாறு பொரிவிளாங்காய் செய்தனுங்கள் தம்பிக்குக் குடுத்துவிட வேண்டு'' என்று சொல்லிக் கொண்டே கடதாசிப் பார்சலைக் கந்தனிடம் கொடுக்கிருள் வள்ளிநாயகி.

இரு கைகளையும் நீட்டி வாங்குகிருன் கந்தன்.

''மப்பும் போடுதாக்கும் நான் போட்டு வாறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

ஐயனர் கோயிலடியில் ஒலிபெருக்கி அலறிக்கொண்டிருக்கிறது. கோயிலைச்சுற்றி வளர்ந்திருந்த கள்ளிமரங்களும்காரைப்பற்றைகளும் கற்றுளைகளும் வெட்டி வீசப்பட்டு, நெருஞ்சியும் ஒட்டொட்டியும் குப்பை வாரியால் இழுத்து நெருப்பு வைக்கப்பட்டு வேள்விக்கு அடுக்குச் செய்வதுபோல துப்புரவாக்கப்பட்டிருக்கின்றது. விழுதுகள் விட்டிருக்கும் ஆலமரத்திற்கு அருகே அழகான மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

இன்று ஒரு பொதுக் கூட்டம். கோயிற் பிரவேசப் பிரச்சினை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் இன்றுபோல் ஒரு பொதுக் கூட்டம் ஐயனர் கோயிலில் நடைபெற்றது: அப்பொழுது அந்தக் கூட்டத்தில் சிறுபான்மைத் தமிழர் மட்டுந்தான் பங்குபற்றினர்கள். இன்று நடைபெறும் கூட்டத்தில் அத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொள்கிறர்.

சிறுபான்மைத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காரைத்தோட்டத்திற்கும், அவர்களைச் சிறுபான்மையாகக் கொண்ட வடலியடைப்புக்கும் நடுவேதான் ஐயனர் கோயில் அமைந்திருக்கின்றது. இப்பொதுக் கூட்டம் ஒதுக்கப்பட்ட மக்களின் குலதெய்வமான ஐயனரின் வாசலிற்கு எல்லோரையும் அழைத்திருக்கின்றது. மணியகாரனின் மகனை மாணிக்கவாசகருக்குச் சொந்தமாக உள்ள காணியை அதில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்று நன்கொடையாகக் கொடுக்கும் வைபவம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் ஆரம்பமாகி விட்டது. அரசடியூர் காந்திய சேவா சங்கத்தின் தலைவர் 'எக்கவுண்டன்' ஜெயராசா கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். இன்று நடைபெறும் காணி வழங்கும் வைபவத்தின் கதாநாயகனை அவர் விதந்து பாராட்டிவிட்டு, நிலமில்லாதவர்களுக்கு நிலமுடையவர் தானம் செய்வது காந்தியின் கொள்கைகளில் முக்கியமான தொன்றென்றும் வினோபாஜியின் பூமிதான இயக்கத்தைப் பற்றி பிரஸ்தாபித்துவிட்டு; அரசடியூர் இதற்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது, மாணிக்கவாசகர் இன்று செய்யும் பூமிதானம் பலருக்கு ஒரு முன் மாதிரியாக அமைய வேண்டும் என்றும் கூறினார்.

கூட்டத்தின் அமைப்பாளரான மாணிக்கவாசகர் முருகேசு மாஸ்டரையும் ஒரு பேச்சாளராகப் போட்டிருந்தார்.

முருகேசு மாஸ்டர் உணர்ச்சியுடன் பேசுகிறார்'' நமது கிராமம் என்றுமே முற்போக்குக் கொள்கைகளுக்கு முன்னோடியாக இருந்து வருகிறது. இந்நாட்டின் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான 'ஜெயம்' என்றழைக்கப்பட்ட செயல் வீரன் பிறந்தது இந்த மண்ணிலேதான். வட பகுதியில் இருந்து முதலில் ஓர் இடதுசாரிக் கட்சியை பாராளுமன்றம் அனுப்பிய பெருமை வடமராட்சி மண்ணையேசாரும். இன்றும் நாம் ஒரு முற்போக்கான செயலைத் தான் செய்கிறோம்; சில தோழர்கள் மாணிக்கவாசகரின் பூமிதானத்திற்கு ஏதும் உட்காரணங்கள் இருக்கலாம் என எண்ணலாம். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. இதனை நாம் சமுதாய மாற்றத்தின் ஒரு படியாகவே காணவேண்டும்.

மணியகாரனும் அவரைப் போன்ற நிலவுடமையாளர்களும் நிலவுடமைச் சமுதாய அமைப்புக் கொடிகட்டிப் பறந்தகாலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களைக்கொண்டு தொண்டு செய்விப்பதற்காக காணி கொடுத்து, அவர்களை அடிமைகளாக வைத்திருந்தனர். இன்று நடந்து சென்ற அடிகள் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக்கூடாது என்பதற்காக காலில் காவோலை கட்டிச் சென்றனராம். இவர்கள் கிணறுகள் வெட்டிக் கொடுத்தார்கள், ஆனால் தண்ணீர் வந்து கிணற்றுப் பொங்கல் பொங்கிய பின் இவர்கள் அந்தக் கிணறுகளில் தண்ணீர் அள்ளக் கூடாது. பெண்கள் சட்டை போடக் கூடாது. குறுக்குக்கட்டு கட்ட வேண்டும். மீறி சட்டை போட்டால் கொழுக்கந் தடியால் கிழிக்கப்பட்டது. இப்படி எத்தனை எத்தனையோ......! சமுதாயம் மாறத் தொடங்கி விட்டது. என்றாலும் நிலவுடமைச் சமுதாயத்தின் எச்ச சொச்சங்களான சாதிமான்கள் அவர்களுக்குத்தொல்லை கொடுத்துக் கொண்டுதான் வந்தார்கள். சாதிச் சண்டைகள் வரும் போதெல்லாம் அவர்களைக் குடி எழுப்புவதற்காக குடிசைகளுக்கு நெருப்பு வைத்தார்கள். இன்று பொதுவுடமைக் கொள்கையின் அடிப்படையான காணிச் சீர்திருத்தச் சட்டம் இவர்களைக் காணியில் இருந்து எழுப்ப முடியாமல் பாதுகாத்து நிற்கிறது. ஆனால் காணிகள் அவர்களுக்குச் சொந்தமாக வேண்டுமென்று சட்டம் சொல்லவில்லை. அப்படிச் சொல்லக்கூடிய சட்டமுள்ள அதாவது எல்லோருக்கும் எல்லாம் சொந்தமான பொதுவுடமை ஆட்சி மலர வேண்டும் .....''

இளைஞர்கள் கரகோஷம் செய்கின்றனர்.

அடுத்து சிறுபான்மைத் தமிழர் மகா சபைத் தலைவர் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் பல கட்டங்களை எடுத்துக் காட்டி, ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்றழைக்கப்பட்டவர்கள் இன்று சிறுபான்மைத்தமிழர் என அழைக்கப்படுமளவிற்கு முன்னேறி இருப்பதைச் சுட்டிக் காட்டினார். சாதி வெறிகள் நடத்திய அட்டூழியங்களை எடுத்துக்காட்ட, இதே வட்டாரத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சீவல் தொழிலாளியை வேட்டைக்குஎனக் கூட்டிச்சென்று நடுக்காட்டில் வைத்துத் துப்பாக்கியால்சுட்டு எரித்துச் சாம்பலாக்கிய சம்பவத்தை நினைவுபடுத்தினார். அதே காரைத் தோட்டத்தில் இன்று இப்படி ஒரு முன்னேற்றமான நிகழ்ச்சி நடப்பதைப் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத் தோட்ட வட்டாரத்து அங்கத்தவனான முரு கனையும் ஒரு பேச்சாளனைப் போட்டிருந்தார் மாணிக்க வாசகர்.

முருகன் தனது பேச்சில் "சிறுபான்மைத் தமிழர்கள் இவ்வளவு காலமும் மற்றவர்கட்கு உழைத்துக் கொடுத்தார் கள். இப்பொழுது தான் தங்களுக்காக உழைக்கத் தொடங் கியிருக்கிறார்கள்." என ஆரம்பித்து படிப்படியாக அரசடி யூர்க் கிராமத்து அரசியலுட் பிரவேசித்தான். கிராமச்சங் கத்திலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் நடை பெறும் ஊழல்களையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் புட்டுக் காட்டினான். ஒரு ஆட்சித் தலைவர்தான் அவ்வாட் சியில் நடைபெறும் ஊழல்களுக்குப் பொறுப்பு என்று கூறி சியமன் இராமலிங்கத்தையும் மறைமுகமாகத் தாக்கினான் முருகன்.

"மாணிக்கவாசகர் ஐயாவின் ஆட்சி பிற்போக்கானது என்று சொல்லி நாம் முற்போக்கான கொள்கையுடையவர் என்று ஒரு தலைவரை சென்ற தேர்தலில் தெரிவு செய்தோம். ஆனால் எமக்கு பெரிய ஏமாற்றமாகப் போய்விட்டது. விரை வில் நடைபெறவிருக்கும் கிராமச்சங்கத் தேர்தலில் நல்ல தொரு பாடம் புகட்ட வேண்டும்" என்றும் சொன்னான் முருகன்.

பிரதம பேச்சாளரான அந்தத் தொகுதிப் பாராளு மன்ற உறுப்பினர் தமது பேச்சில் தனது தொகுதியிலு ருக்கும் அரசடியூர் மக்களையும் மாணிக்கவாசகரையும் பாராட்டிவிட்டு, சாதிப் பிரச்சினை எமது முக்கியமான பிரச் சினை அல்ல என்றும் எமக்கு எல்லோருக்கும் பொதுவாக உள்ள எரியும் பிரச்சினை ஒன்றைக் கூறி அதற்காக எல்லோ ரும் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்; அத் தோடு அடுத்த பொதுத் தேர்தலைக் கவனத்திற்கொண்டு அங்கு வந்திருக்கும் பொது மக்களைக் கும்பிட்டு, உரையாடி, சுகம் விசாரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து மாணிக்கவாசகர் தனது காணியில் குடியிருப்பவர்களுக்கு உறுதிகளைக் கையளித்துவிட்டு, எல்லோருக்கும் நன்றி கூறினர். இறுதியாக மணியகாரனின் பேரில் கட்டப்படவுள்ள வாசிகசாலையின் அடிக்கல்லை அந்தத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் நாட்டிவைத்தார்.

அன்று அந்த ஊரில் உள்ள மக்கள் மனேஜர் மாணிக்கவாசகரின் பணியை பல கோணங்களிலும் பகுப்பாய்வு செய்து கொண்டிருந்தார்கள்,

# 15

இராமலிங்கத்தின் மனம் கடந்த ஒரு வாரகாலமாக வெட்கத்தால் கூம்பி இருக்கிறது.

ஊரில் எல்லாவற்றுக்கும் முன்னுக்கு நிற்க வேண்டுமென என்றுமே எதிர்பார்க்கும் இராமலிங்கத்திற்கு, மனேஜர் மாணிக்கவாசகர் ஐயனர் கோயிலில் ஏற்பாடு செய்த கூட்டத்திற்குத் தன்னை அழைக்காதது திட்டமிட்டு ஒதுக்கிய செயலாகப்படுகிறது. மாணிக்கவாசகரை எப்படிப் பழி தீர்க்கலாம் என்ற குரோத உணர்வே சிந்தனையில் மேலோங்குகிறது.

அக்கூட்டத்திற்கு அத்தொகுதி எம். பி., முருகேசு மாஸ்டர் இவர்களெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை எண்ணும்போது மாணிக்கவாசகர் எதிர்வரும் கிராமச்சங்கத் தேர்தலுக்குத் தான் இந்தத் திட்டம் எல்லாம் போடுகிறார் என்பது இராமலிங்கத்திற்கு நிதர்சனமாகிறது.

அவன் 'சியமனாக' இருக்கும் கிராம எல்லைக்குள் இப்படி ஒரு வைபவத்திற்கு அழைக்காமல்விட்டதிற்கு மாணிக்கவாசகர் மீது மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட எல்லோர் மீதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குக் கோபம் கோபமாக வருகிறது. 'அரசாங்கத்தில் ஓர் உதவியென்டால் தலையைச் சொறிஞ்சு கொண்டு வருவாங்கள். எங்கடை எம். பீ.மார் செய்து குடுக்க முடியாத எத்தனை வேலைகளை நான் செய்து குடுத்திருக்கிறன்.'

இன்றைக்கு வழக்கத்திற்கு மாருக இராமலிங்கம் கூடுதலாகவே குடித்திருக்கிருன். இரண்டு மூன்று நாட்களாகக் காலையில் குடிக்காமல் ஒன்றுமே எழுத முடியாத அளவிற்கு கைகள் நடுங்குகின்றன. காலையில் சண்டியன் சங்கரப்பிள்ளையைப் பிணை எடுக்கப் பருத்தித்துறை பொலிஸ் ஸ்டேசனுக்குப் போகும் போது 'ஜின்' கொஞ்சம் குடித்துவிட்டுத் தான் போனுன்.

தற்பொழுது உள்ள மனநிலைக்கு டேவிட் மாஸ்டரை ஒருக்கால் சந்திக்க வேண்டும்போல இருக்கின்றது அவனுக்கு. இராமலிங்கத்திற்கு திட்டங்கள் வகுத்துக்கொடுப்பது டேவிட்மாஸ்டர் தான். இராமலிங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தாலும் உபதலைவரான டேவிட் மாஸ்டரிடம் தான் முழுப் பொறுப்பையும் விட்டிருக்கிருன். அவரில் இராமலிங்கத்திற்கு அவ்வளவு நம்பிக்கை.

வெளியே யாரோ 'கேட்' திறக்கும் சத்தம் கேட்கிறது. இராமலிங்கம் யன்னல் சீலையை விலக்கிவிட்டு வெளியே பார்க்கிருன். அது வேறுயாருமல்ல, டேவிட் மாஸ்டரேதான். சைக்கிலை 'கேட்' தூணுடன் சாத்திவிட்டுமூக்குக் கண்ணுடியினூடாகக் கீழ்க்கண்ணுல் முன் மாடத்தைப் பார்க்கிருன்.

இராமலிங்கம் துள்ளிக் குதித்துக்கொண்டு முன்னுக்கு வருகிருன். ''வாருங்கோ மாஸ்டர். உங்களுக்கு ஆயுள் நூறு இவ்வளவும் உங்களைப்பற்றித் தான் யோசிச்சுக் கொண்டிருந்தன்.''

கையில் புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்டை எறிந்துவிட்டு வியர்வை வோர்த்துக்கொண்டிருந்த வழுக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த தலையைச் சால்வையால் துடைத்துக்கொண்டு இராமலிங்கத்தைப் பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறார் டேவிட் மாஸ்டர்.

''இருங்கோவன் மாஸ்டர்''

செல்லவண்டி என்று அழைக்கப்படும் முன் சரிந்த தொந்தியைத் தடவிக்கொண்டு கதிரையில் இருந்தபடி மாஸ்டர் சொல்கிறார் ''நூறு வருச ஆயுள் இருந்தென்ன முதலாளி எங்கடை எதிரியள் எங்களை நிம்மதியா இருக்க விட மாட்டாங்கள் போல இருக்கு.''

''உவங்களைப்பற்றித் தான் மாஸ்டர் யோசிச்சுக் கொண்டு இருக்கிறன்; வடுவாக்கள் ''

''உவன் மாணிக்கவாசகன் திட்டம் போட்டுத்தானே ஒரு சேமனை கூப்பிடாமல் கூட்டம் வைச்சிருக்கிறான்......; முருகன், முருகேசு மாஸ்டர் எல்லாரும் கூட்டத்தில பேசிச்சினமாம்.''

''அதையேன் கேக்கிறியள். முருகனெண்ட பொறுக்கி எங்களெட்டை எவ்வளவு உதவியைப் பெற்றிருப்பான்; அவங்கடை பக்கத்துப் பொடியளுக்கு எவ்வளவு உதவியைச் செய்திருப்பம். கிண்ட வீட்டுக்கி ரண்டகம் செய்யிற புத்தி அவங்களை விட்டுப் போகாது. எங்கடை கிராமச்சங்கத்தில ஊழல் இருக்காம். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கள்ளர் குகையாம்...... தெரியாமல் கேக்கிறன் அந்தக் கூட்டத்தில இவருக்கேன் இந்தக் கதை. முதல்ல இவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்கோணும்; இவனை இந்த முறை காரைத்தோட்டத்தில மெம்பராக வரவிடக் கூடாது: அதுக்கு ஐடியா என்னட்டை இருக்குது முதலாளி.''

''மாஸ்டருக்கா ஐடியாவுக்குப்பஞ்சம் சொல்லுங்கோ''

''எங்கடை யூனியன் 'போட்'டில இருக்கிறானே முருகன்ரை பக்கத்து கல்வீட்டு கணபதி. அவனுக்கும் முருகனுக்கும் இடையில் இப்ப சரியான பகை. கணபதியின்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரைக்டரில' உவன் வேலைசெய்தவன்; சம்பளம்காணாது. வேலைநேரம் கூட எண்டு ஏதோ கதை வழிப்பட்டு இருக்கிறான். கணபதி அவனை வேலையை விட்டு நிப்பாட்டிப் போட்டான். இப்ப கணபதியை குறையாச் சொல்லிக் கொண்டு திரியினமாம், அதுதான் முதலாளி யோசிக்கிறன். கணபதியை இந்த முறை காரைத் தோட்ட வட்டாரத்துக்குப் போட்டு உவனைவிழுத்தோணும் போனமுறையைப்போல இந்தமுறையும் போட்டியில்லாமல் முருகன் தெரிவு செய்யப் படுவன் எண்ட திட்டத்தில தான் மாணிக்கவாசகர் தான் சேமனுவாறதுக்கு உவனைக் கைக்குள்ளை போடுறார்.''

''சரியாச் சொன்னியள் மாஸ்டர்''

''இவன் மாணிக்கவாசகர் இப்ப வயசுபோனாப்போல எல்லோ உப்பிடி இருக்கிறான். முந்தி படு போக்கிரி. பள்ளிக் கூட மனேஜரா இருக்கேக்கை செய்த திருகுதாளம் கொஞ்ச நஞ்சமே. நீங்கள் அப்ப சின்னப் பொடியன். பள்ளிக்கூடத்தில ஒரு வாத்தியாரை எடுக்கிறதெண்டால் கட்டிடத்திற்கு காசு குடு எண்டு கேப்பினம். கவுண்மேந்து குடுக்கிற சம்பளத்தில அரைவாசியை எடுத்துப் போட்டுத்தான் குடுப்பாங்கள் அவை வச்சதுதானே சட்டம். வாத்திமார் அடிமையளைப்போல. இது மட்டுமே முதலாளி மற்ற விஷயத்திலயும் மாணிக்கவாசகர் எப்படிக் கொத்தவரெண்டு தெரியுமே?'' இராமலிங்கம் ஆவலுடன் மாஸ்டர் சொல்லப் போவதை எதிர்பார்த்து அவரது வாயையே பார்த்தபடி இருக்கிறான்.

மாஸ்டர் தொடர்கிறார்.''முந்தி அரசடிப் பள்ளிக்கூடத்துக்கு அல்வாயில் இருந்த ஒரு பெடிச்சி படிப்பிக்க வந்தது. 'தையலக்கா' எண்டு சொல்லுறது. தாய் ஒரு கைம்பெண் முட்டுப்பட்டதுகள் தான். தின்ன வழியில்லாட்டாலும் நாணயமானதுகள். பெடிச்சி நல்ல வடிவானவள். இவன் மனிசனெல்லோ ஒரு நாள் வீடு தேடிப்போட்டான். தாய் மனிஷி மாப்பிள்ளைக்கு விளக்கு மாத்தால் ஆலாத்தி எடுத்து அனுப்பி வைச்சவள். பாரன் அவனின்ரை நரிக்குணத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெடிச்சிக்கு கரைச்சல் குடுத்து படிப்பிக்கிறதை நிப்பாட்டிப் போட்டான். பிறகு அந்தப் பெடிச்சி மிஷனில சேர்ந்து படிப்பிச்சது.''

''எங்கடை கவுண்மேந்து வந்துதானே பள்ளிக்கூடத்தை தேசியமயமாக்கி உப்பிடிப்பட்டவங்கடை அக்கிரமங்களை ஒழிச்சது.''

''சரியாச்சொன்னியள் முதலாளி இதுகளை,கொம்மியுனிஸ்' முருகேசு மாஸ்டரும் முருகனும் மறந்து போனுங்கள். உது மட்டுமே மாணிக்கவாசகர் காணியை நன்கொடையாகக் குடுக்கிறதெண்டு புலுடா விடுருரே. இதுக்குக் காரணம் எங்கடை கவுண்மேந்து கொண்டுவந்த நிலச் சீர்திருத்தச் சட்டந்தானே. இப்ப குடியிருக்கிற காணியில இருந்து அவங்களை எழுப்பேலாது. மனேஜர் ஆள் கொம்பன். போன முறை வடலி அடைப்பு வட்டாரத்தில ஐஞ்சு வோட்டால தானே வெற்றி எடுத்தார். இந்த முறை தோத்துப்போவன் எண்ட பயத்திலதான் அவங்களுக்குக் காணியை பிரிச்சுக் குடுத்து தந்திரமா அவங்கடை வோட்டுக்களை எடுக்குறதுக்குத்தான் அடுக்குப் பண்ணுகிறுர் மாணிக்கவாசகர். நாங்கள் இதுக்குள்ளை ஒரு விளையாட்டு விடோணும் முதலாளி. இந்த முறை நீங்கள் அரசடி வட்டாரத்தோட வடலியடைப்பு வட்டாரத்திலயும் மாணிக்கவாசகருக்கு எதிராகப் போட்டி போடோணும். கோப்பிரட்டிவில வேலை செய்யிற பெடியளும் இருக்கிறுங்கள். எங்களுக்கு அலுவல் பாப்பங்கள்.''

இராமலிங்கத்தின் முகத்தில் சிரிப்புத் தவிழ்கிறது. சிறிது யோசித்துவிட்டு ''அது சரி மாஸ்டர் இவர் எக்கவுண்டன் ஜெயராசா அண்டைக்குக் கூட்டத்திற்கு தலைமை வகிச்சாராம். அவருக்கேன் உந்த வேலை''

''நீங்கள் பெருந்தன்மையோட பாக்கிறியள். இது மனேஜரின்ரை நரிவேலை. அரசடி வட்டாரத்துக்கு எதிராக ஜெயராசாவைப் போடுறது அடிக்கும்போல கிடக்கு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதுகுமொரு நடப்புத்தான். அவருக்குக் கட்டுக் காசு கிடைக்குமே. நான் நினைக்கேல்ல உந்தாள் இதில மினைக்கடுமெண்டு. பென்சன் எடுத்துப் போட்டு கோயில் குளமெண்டு திரியிறவர், நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டவர் இதில மெனக்கெடமாட்டார்.''

''ஆருக்குத்தான் பதவி ஆசை இல்லை. நான் இண்டைக்குச் சொல்லுறன் இருந்து பாருங்கோ, அவர் அரசடி வட்டாரத்துக்கு காசு கட்டாட்டி, அவர் உத்தியோகமா இருந்த காலத்தில பல சங்கங்களுக்கு தலைவர் - செயலாளராக இருந்திருக்கிறார்.''

''சரி பாப்பமே இன்னும் ரெண்டு கிழமை தானே கிடக்குக் காசு கட்ட.''

அப்பொழுது கார் ஒன்று வந்து 'கேட்' வாசலில் நிற்கிறது. மங்களம் இறங்கி உள்ளே வருகிறாள்.

''முதலாளி நான் வரப்போறன். நீங்கள் ஒருக்கால் இண்டைக்கு யூனியனுக்கு வரோணும். ரெண்டு மூண்டு செக் கையெழுத்துப் போடக் கிடக்கு காலமை உங்களை வருமெண்டு பாத்தனான் காணேல்ல''

''காலமை பொலிஸ்ரேசனுக்குப் போய்வர கொஞ்சம் சுணங்கிப் போச்சு மாஸ்டர்''

''ஏன் பொலிஸ்ரேசனில என்ன சங்கதி''

''அதையேன் கேக்கிறியள் மாஸ்டர்! நேத்து எங்கடை சண்டியன் சங்கரப்பிள்ளை ஆலடிச் சந்தித் தேத்தண்ணிக் கடை குருசாமிக்கு அடிச்சு, கடையெல்லாம் உடைச்சுப் போட்டானும்''

''ஏன் முதலாளி ரெண்டு பேருக்குமிடையில என்ன பிரச்சினை''

''உவன் குருசாமி தேத்தண்ணிக் கடையில சாராயம் விக்கிறவன் தானே. சங்கரப்பிள்ளைக்கு பழைய சாராயக் காசே நூறு ரூபாவுக்கு வந்திட்டுது. பிறகும் போய் கடனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயம் கேட்டிருக்கிறுன் போல. குருசாமி குடுக்க மறுத்திட்டானுக்கும். உவன் கையை வைச்சிட்டான். உவனுல பெரிய கரைச்சல் மாஸ்டர். பாவமெண்டு ஆலடிச் சந்தையைக் குத்தகைக்கு எடுத்துக் குடுத்தன். சந்தை வாடைக் காசை வீ.சி.க்கு ஆன வாயில கட்டாமல் குடிச்சுக் கொண்டு திரியிருன்.''

''பரவாயில்லை முதலாளி இப்படிக் கொத்தாக்களும் எங்களுக்கு வேணும். சண்டித் தனத்தைக்கொண்டு ஊரில எத்தனையை செய்விக்கலாம்.''

''பொலிசுக்குப் போய் எங்கடை எதிரியள் ஒண்டும் செய்யேலாது. இப்ப இருக்கிற இன்ஸ்பெக்டர் என்ரை கூட்டாளி. இவர் இந்த மாத முடிவில் நீர்கொழும்புக்கு மாறிப் போமுராம். இனி வாறவரும் நம்மடை கூட்டாளி தான். பெயர் மோகன்''

''அப்படியே சங்கதி?''

''ஓம் மாஸ்டர் இப்ப வவுனியாவிலே இன்ஸ்பெக்டராக இருக்கிறுன். வாற மாசம் பருத்தித்துறைக்கு மாறி வாருன்.''

''அப்ப நான் வாறன்'' என்றபடி வெளியே செல்கிருர் டேவிட் மாஸ்டர்.

உள்ளே தனது அறையில் இருந்த மங்களம் இராமலிங்கம் கடைசியாகச்சொன்னவற்றைக் கேட்டுத் திடுக்குற்றவளாய் 'மோகன் ஏன் பருத்தித்துறைக்கு மாறி வாருர்' என்ற மனக்குளப்பத்துடன் வெளியே வருகிருள். மங்களத்துக்கு கடந்த ஒருவாரகாலமாகப் பீடித்துள்ள இருமல் இப்பொழுது தொடர்ந்து வருகிறது.

''நானும் கவனிச்சுக் கொண்டு வாறன். இருமிக் கொண்டு இருக்கிருய். மிஸ்டர் ஒரு டொக்டர். ஏன் உதுக்கு மருந்து இல்லையாமோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் தந்த மருந்து ஒண்டும் சரிவரேல்ல. இண்டைக்கு 'டீ.எம்.ஓ' வெட்டைப் போய் ரத்தம் சோதிச்சது. 'பிளட் கவுண்டில' 'இயோசிஞேபீலியா' கூடவாம். இதுக்கு ரெண்டு கிழமைக்கு தொடர்ச்சியா மருந்து சாப்பிட வேணுமாம்: மிஸ்சிஸ் சிவநேசன் சொல்லுரு இது சூட்டில வாறதாம். டீ.எம்.ஓ. அவை வரிச முடிவில நீர்கொழும்புக்கு மாறிப் போகினம்; நாங்களும் மாறி கொழும்புக்குப் போகலா மெண்டு யோசிக்கிறன்.''

''இந்த வரண்ட ஊர் உனக்கு ஒத்து வராது. அவர் இதுக்கு ஒத்துக்கொள்ள மாட்டார், ஏதோ ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிருராம். நாலு வருஷம் முடிஞ்சு தான் யாழ்ப்பாணத்தை விட்டுப்போறதெண்டு சொன்ஞர்''

''ஏன் கொழும்பில இருந்து கொண்டு உதைச் செய்ய லாம்தானே. கொழும்பு யூனிவேசிற்றியில 'சைக்கற்றிக்' புரவசருக்கு இவரில நல்ல விருப்பமெண்டு அண்டைக்குச் சொன்னவர். அவரைப் பிடிச்சால் அடுத்த மாதமே மாறிப் போடலாம்''

''மிஸ்சிஸ் சிவநேசன் காரிய காரிதான். பொலிஸ் இன்ஸ்பெக்டர் நீர்கொழும்புக்கு மாறிப்போக இவவும் நீர் கொழும்புக்கு மாறிப்போக ஒழுங்கு செய்து விட்டாள்'' என்று சொல்லிக் கொண்டு அர்த்தபுஷ்டியுடன் சிரிக்கிருன்.

மங்களம் எழுந்து தனது அறைக்குட் போகிருள். தொடர்ந்து வரும் இருமலால் அவளது உடல் களைக்கிறது; பலவித சிந்தனைகளாலும் அவளது மனம் அலைக்கழிகிறது.

## 16

ஆவணி மாதம் பிறந்து விட்டது; நீலம் பாவித்து அங்கொன்று இங்கொன்ருக வெண்முகில்கள் விளையாடிய வானத்திலே கருமேகங்களைக் காணக்கூடிய காலம் வந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் வேளைகளில் அதிக வெப்பமும் மாலை வேளைகளில் மப்பும் மந்தாரமும் மழைக் கோலமும் உள்ள காலநிலை. இது வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றான வாடைக் காற்றுப் பெயர்ச்சிக்குக் கட்டியம் கூறுவது போலிருக்கிறது.

பொன்னையா வீட்டில் குசினிப் பக்கமாகப் போடப் பட்ட பந்தலில் விரிக்கப்பட்ட நீளமான பாயில் பிளைந்த பனாட்டுக் காய்ந்து கொண்டிருக்கிறது. பொன்னம்மாவும் வள்ளிநாயகியும் பனங்காய்களை உரித்து ஒரு பெரிய கடகத் திலே போட்டு, இருக்காழிப் பனங்காயிலுள்ள செத்தோம பியை புளிக்க வைத்து எடுத்த பனங்காடியை விட்டுப் பிளைந்து, கொட்டையை அப்புறப்படுத்திவிட்டு, களியைச் சீலைத்துண்டால் வடிக்கிறார்கள்.

களியை வெய்யிலில் காயவைப்பதற்குப் பந்தலில் உள்ள பாயில் பரவும் பொழுது பொன்னம்மா சொல்கிறாள். "பிள்ளை இன்னும் ரெண்டு களிவாத்தால் போதும். மழை யும் ஒரு குணம் கொள்ளுது"

பனங்காய் பிளைவது அரசடியூரில் விரல்விட்டு எண் ணக்கூடிய ஒரு சிலர் வீட்டில்தான் இப்பொழுது நடைபெறு கிறது. அரிசிவிலை விஷம் போல ஏறிய பொழுது பொன் னையா வீட்டில் பனாட்டு வயிறார உணவாகியது.

'சடம்பம்' உள்ள பொன்னையாவின் குடும்பத்தேரை இழுப்பதில் பொன்னம்மாவின் பங்கு கணிசமானதே.

பொன்னம்மா ஒரு நாளாவது கால் நீட்டிக் களைப் பாறியது கிடையாது. அந்தநாள் தொடக்கம் ஆலாய்ப் பறந்து உழைக்கிறாள். கோழி வளர்ப்பில் வரும் வருமானம் 'கறிபுளி' வாங்குவதற்கு உதவும். வளர்க்கும் ஆடு மாடுகளை நம்பித்தான் ஒரு சின்னச் சீட்டுப் பிடிச்சிருக்கிறாள். 'வாயி ருந்தால் வங்காளம் போய் வரலாம்' என்று அவரை அடிக் கடி கண்டிக்கும் பொன்னம்மா, தன் வாயாடித் திறனால் பணத் தேவை வரும் பொழுது எங்காவது சென்று காசு புரட்டிக் கொண்டு வந்து விடுவாள். 'சுமக்காரனைப் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல கமக்காறிச்சி ஒரு சதத்துக்குக் கணக்குப்பார்க்கிறது' என்பது சம்பளகாரரது கணிப்பு. பொன்னம்மா ஒரு சதத்துக்காசுக்காகத் தோட்டக்காய்பிஞ்சுகளை ஆலடிச் சந்தையில் விற்காது பருத்தித்துறைச் சந்தைக்குத் தலைச்சுமையிலேயே கொண்டு போய் விற்பாள்.

இப்பொழுது முதுமையிலும் நோயின் தாக்கத்திலும் எதிர் நீச்சலடிக்கும் பொன்னம்மாவின் உழைப்பின் வெற்றிக்கு வள்ளிநாயகியே துணையாக நிற்கிருள்.

''நாங்களும் வாறம்'' என்று சொல்லிக் கொண்டு சின்னம்மா கிணற்றடிப் பக்கமாக உள்ள பொட்டுக்குள்ளால் பனங்காய் பிணையும் இடத்திற்கு வந்து விட்டாள். குட்டியர் காறித்துப்பும் சத்தம் கிணற்றடியில் கேட்கிறது.

கழிகறந்தெடுத்த பனங்கொட்டைகளை அள்ளிச் சென்று குவியலில் போட்டுத்திரும்பும் வள்ளிநாகிக்குக் குட்டி மாமாவும் மாமியும் ஒன்ருக வீட்டுக்கு வருவது பெரும் வியப்பைத்தருகிறது. அடுத்த வீடாக இருந்தாலும் இருவரும் ஒன்ருகத் தங்கள் வீட்டிற்கு வருவது அபூர்வம். 'அப்பு துலாவால் விழுந்து பெரும்பாடாகக் கிடக்கைக்க ஒருக்கால் வந்தவை பிறகு அம்மா, கமலாவை வயிற்றில இருக்கைக்கை காயாசுவாதம் வந்து அறிவு கெட்டுப்போய் நாங்கள் குளற இரண்டு பேரும் ஓடி வந்தவை. இப்ப என்னதான் நடந்து போச்சு ..'

குசினிப் பக்கத்திலுள்ள விருந்தையில் குட்டியர் இருக்கிருர். சின்னம்மா ''சும்மா வந்தனுங்கள்'' என்று ஆரம்பித்துவிட்டு அதிக நேரம் சுற்றிவளைக்காது விடயத்துக்கு வருகிருள்.

''புளியடி வேலுப்பிள்ளை அண்ணன் ஆள் சொல்லி அனுப்பி நான் காலமை போட்டு வந்தனுன். உங்களோடை மாத்துச் சம்பந்தமாச் செய்ய நல்ல விருப்பமாம். சீதனத்தைக் குறைச்சுப் போட்டினம் ... காசு வேண்டிறேல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வீட்டையும் தோட்டத்தில அரை வாசியையும் எழுதுங்கோ அவை வீட்டில அரைவாசியை எழுதுகினமாம்''

குட்டியர் சொல்கிறார் ''அவை அரைவாசி வீட்டை எழுதிறதே பெரிய காரியம். ஏனெண்டு கேக்கேல்ல அவன் ஸிறிக்கல் ரெண்டாங் கிளாசு பாஸ்பண்ணினவனெல்லே. உங்கடை பெடியன் இப்ப தானே எடுபட்டிருக்கிறான். அவை யின்ரை மாப்பிளைக்குப் பங்கை ஐம்பது பவுணுக்கு மேல சம்பளம் வரும். இனிக் கச்சேரியில வேலை செய்யிறவன். தெரியாதே வெட்டுக் கொத்தும் பிளையில்லை.''

வள்ளிநாயகி நெருப்பை மிதித்தவள் போலாகிறாள். 'எனக்கும் தம்பிக்கும் மாத்துச் சம்பந்தமா?'

''நாங்கள் அண்ணுவியார் வீட்டுக்கு ஓம் சொல்லிப் போட்டம். இவர் சொன்ன சொல்லு லேசில மாற மாட்டார்; என்ன சொல்லுறாரோ தெரியேல்லை'' என்கிறாள் பொன்னம்மா.

''உதென்ன கதை பொன்னம்மா. கொப்பி போட்டிட்டு போட்ட கொப்பியைக் கிழிச்சு எறியிறுங்கள். உதென்ன சும்மா சாதகம்பாத்து ஓம் எண்டு சொன்ன அள விலதானே கிடக்கு'' என்கிறார் குட்டியர்.

சின்னம்மா சொல்லுகிறாள் ''என்னத்தைச் சொன்னு லும் உத்தியோக மாப்பிள்ளை மாதிரி வருமே. பாவம் மூத்த பெடிச்சி. அந்தநாள் தொடக்கம் உங்களோடை கிடந்து கயிறு மாலைப்படுது. அண்ணுவியாற்ரை பேரனைக் கட்டினு லும் கிளிநொச்சிக்குப் போய் கயிட்டப்பட வேணும்தானே. இதெண்டால் சொகுசான சீவியந்தானே''

''அது மட்டுமே கிளிநொச்சியில வயல் செய்து உங்கை எத்தினைபேர் ஒழிஞ்சிருக்கினம்; வெள்ளாண்மை சூதாட்டம் மாதிரித்தானே. ஒருக்கால் வாய்க்கும் ஒருக்கால் சறுக்கும். அண்டைக்குக் கோப்பிறேசனில பேப்பரிலபாத்தன் ஏழாலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியனொருத்தன் கிளிநொச்சியில கமஞ்செய்து சரியா நட்டப்பட்டு பெண்டிலின்ரை தாலி, நகையெல்லாம் ஈட்டி லயாம். பொடியன் கடன் மீள மாட்டாமல் பொலிடோல் குடிச்சிட்டுதாம்'' குட்டியர் காருப்பித்துக் கொண்டு சொல்கிருர்.

பொன்னம்மா இடி விழுந்தவளைப்போல இருக்கிருள்:

''அண்ணுவியாற்றை பேரனைப்பற்றிப் பெரிசாக் கதைக்கிறியள். ஆருக்குத் தெரியும் உண்மை பொய். உப் பிடித்தான் செம்பாட்டுவளவுச் செல்லையற்ரை மோளைக் கட்டின மணியத்தைப்பற்றிப் பேராக் கதைச்சினம். கடைசி யில அந்தப் பொடியன் இருந்தாப்போல செத்துப்போக வெல்லோ தெரிஞ்சுது எல்லாப் பொட்டுக்கேடும். பெட்டையின்ரை சழுத்திலை கையிலை ஒண்டுமில்லையாம். எல்லாம் அடைவாம். செல்லையர் உத்தியோக மாப்பிள்ளை யை அண்டைக்குக் கட்டிக் குடுத்திருந்தால் இண்டைக்கு அந்தப் பொடிச்சிக்கு என்னபயம். பென்சன் வரும். காலாட் டிக்கொண்டிருந்து சாப்பிடுவள்''

பொன்னம்மாவின் கண்கள் சிறகடிக்கின்றன.

இரண்டு மூன்று நாளாக வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் பெயர்ச்சிக்கு அறிகுறியாக கச்சான் காற்று வீசி யது. இன்று மீண்டும் சோழகமே வீசுகிறது.

''உவன் சின்னையா உங்களைக் கொண்டு போய் பாண் கிணத்தில விழுத்திறதுக்கு அடுக்குப் பண்ணுறுன். உவனுக்கு நான் செய்யிறன் வேலை என்னை ஒரு கதை கேளாமல் சங் கரப்பிள்ளையெட்டைக் காணிவாங்கினவரெல்லோ. உவனைக் கோட்டுக்கு இழுத்து நாலு கேள்வி கேட்டு பரிசுகெடுத்தி காணியும் இல்லாமல் பண்ணுறன். என்ரை கண்ணிலை சிக்குப்படுருனில்லை. நாலு கேள்வி கேட்கலாமெண்டால்'' என்கிருர் குட்டியர்.

''சும்மா கிடவுங்கோ. உங்களுக்குக் கொழுத்தாடு பிடிக்கிற குணம் போகாது. அந்தக் கதையெல்லாம் இப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னத்துக்கு, வந்த கதையை முடிச்சுக் கொண்டு போற துக்கு......மாப்பிளை வல்லிபுரக் கோயில் தீத்தத்தோடை அண்டி வாருராம். ஒரு முடிவு எடுத்துக் கொண்டு போக. சரிவந்துதெண்டால் ஐப்பசி முதல் நாவிலயே செய்து போடலாம்''

''பாக்கப் போனல் நீங்கள் சொல்லுறதும் ஒரு வழிக் குச் சரிபோல தான் கிடக்கு. ஏன் வலியவாறதை விடுவான். எல்லாத்துக்கும் அவர் வரட்டும். எங்கடை தோட்டத்துக் குப்பட்டியடைக்க செம்மறி ஆடுகளைக் கொண்டுவர வலிக் கண்டிக்குப் போட்டார். வந்தவுடனே சொல்லி 'சட்டுப் புட்டு' எண்டு விசயத்தை முடிப்பம். தம்பி இப்போதைக்குக் கலியாணம் செய்யிறேல்ல எண்டு சொன்னவன். இதுக்கு ஒத்துக்கொள்வானே தெரியேல்ல.''

''முதல் பிள்ளையின்ரை விஷயத்தை முடிப்பம். தம் பிக்கு கலியாணத்தை எழுதிவிடுவம். பிறகு ஆறுதலாகச் செய்யலாந்தானே''

வள்ளிநாயகிக்குத் தலைசுற்றுகிறது. 'எனக்காக பெரிய தம்பியைக் கொண்டுபோய் மாட்டுவதா! பாவம் அவன் எங்கடை கஷ்டத்தைப் பார்த்திட்டு மேற்படிப்பை நிறுத்தி விட்டு உத்தியோகத்துக்குப் போனவன். பயணம் போற அண்டைக்கும்தான் எக்கவுண்டனுக வந்துதான் கலியாணம் செய்யிறது எண்டவன்; இதுக்கு அப்பு என்ன சொல்லு வாரோ? தம்பி கலியாணம் செய்து போனல் எங்கடை குடும்பத்தை ஆர் பாக்கிறது? அப்பு சாகுமட்டும் மண்ண டிச்சு மாள வேண்டியது தானே. ஆர் சரசைப் படிப்பிக் கிறது? பெரிய தம்பி குடும்பமாப் போனல் அவனுல எங்க ளுக்கு ஒரு ஐஞ்சு சதம் அனுப்ப முடியுமே?'

கச்சானுக்குள் கருக்கொண்ட மேகத்தை வேகமாக வீசும் காற்று சிதைவாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

மனேஜர் மாணிக்கவாசகர் வெள்ளை வேட்டி கட்டி மடிப்புக் குலையாத சால்வை ஏகவடமாகத் தோளிலே தொங்க, தகப்பன் மணியகாரனின் முதுசச் சொத்தான வெள்ளிப்பூண் போட்ட கைத்தடியை எடுத்துக் கொண்டு கையிலே சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தபடி மனைவிக்கு விடை கொடுத்துப் புறப்படுகிருர்.

அரசடிப் பிள்ளையார் கோவிலுக்குக் கிட்ட வந்ததும் கோயிலில் புராணம் படிப்பது இரவின் அமைதியில் தூரத்தே வரும் பொழுதே தெளிவாகக் கேட்கிறது. கோயில் வாசலுக்கு வந்ததும் சால்வையைத் தோள்களிலிருந்து அகற்றி தலையைக் குட்டிக் கும்பிட்டுவிட்டு உள்ளே பார்க்கிருர். பலிபீடத்துக்கு அப்பால் உள்ள நிருத்த மண்டபத்தில் புராணப் படிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. சிங்கப்பூர் சின்னையா பாடல்களை வாசிக்க பண்டிதர் பரமகுரு ராகம் இழுத்து உரை சொல்கிருர்.

வெளியே விரல்விட்டு எண்ணக் கூடிய தொகையினர் தான் இருக்கிருர்கள். தந்தை மணியகாரன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தை அவர் எண்ணிப்பார்க்கிருர். அப்போதெல்லாம் கோவில் நிறைந்திருக்கும். இன்று......? 'இதுவும் காலமாற்றத்தின் ஒரு வெளிப்பாடுதானு?'

தான் தேடிப் போகும் எக்கவுண்டன் ஜெயராசா புராணப் படிப்பிற்கு வந்திருப்பாரோ என்ற எண்ணத்தில் வெளியே நின்று கொண்டிருந்தவரிடம் கேட்டறிகிருர்.

''அவருக்கு ஒரு 'ஆசூசம்'. அதுதான் வரேல்லை; அல்லாவிட்டால் கட்டாயம் வந்திருப்பார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பிள்ளையாரிடம் கும்பிட்டு விடைபெற்று எக் கவுண்டன் ஜெயராசா வீட்டை நோக்கிப் புறப்படுகிருர். பண்டிதரின் உரை அவரது காதுகளுடன் வந்து மோது கின்றது. மாணிக்கவாசகர் சிறுவயதிலே தகப்பனுரின் ஆக் கிஞையால் அண்ணுவி ஆழ்வாரிடம் கந்தபுராணம் படித்தவர். இன்று கோவிலில் அசுர காண்டம் படிக்கப் படுவதையும், அசுரர்களது கொடுமைகளைப் பற்றி சிவபெருமானிடம் முறையிடுவதற்கு இந்திரன் மற்றைய தேவர்களோடு திருக் கைலாய மலைக்குப் போகும் கட்டமே படிக்கப்படுகிறது என் பதையும் கிரகித்துக் கொள்கிருர்.

மாணிக்கவாசகர், எப்படியாவது தனது திட்டத்திற்கு எக்கவுண்டன் ஜெயராசாவை சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்.

கிராமச்சங்கத் தேர்தலுக்குக் காசு கட்ட இன்னும் ஒரு கிழமை தான் இருக்கிறது. இந்தத் தடவை எப்படியா வது சியமனுக வர வேண்டும் என்பதே அவரது இன்றைய இலட்சியம் இருபத்தி ஆறு வருஷமாக அரசடியூர் கிராமச் சங்க சியமனுக இருந்த அவர் சென்ற தேர்தலில் சியமனுக வர முடியாமைக்கு முழு முதற் காரணம் இராமலிங்கம் தான்; அவனுக்கு இந்தத் தேர்தலில் ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென்று மனம் கறுவிக் கொள்கிருர்.

முதலில் தனது வட்டாரமான வடலியடைப்பை அவர் காப்பாற்ற வேண்டும். சென்ற தேர்தலில் அவர் தனது வட்டாரத்தைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. வடலிய டைப்பு வட்டாரத்தில் அரைவாசிக்குக் குறைவாகவே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ருர்கள்; போன தேர்த லில் இவருக்கு எதிராக நடேசன் என்னும் தாழ்த்தப்பட்ட வன் போட்டியிட்டு இவர் எதிர்பார்க்காத அளவுக்கு வாக்கு கள் எடுத்தான். ஐந்து வாக்குகள் அதிகப்படியாகவே எடுத்து அரும் பொட்டாகவே தனது வட்டாரத்தைக் காப் பாற்றினுர் வேளாளர்களைமட்டும் நம்பியிருப்பதில் பிரயோ சனமில்லை என்பதை அவர் அனுபவ ரீதியில் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். கிராமச்சங்கத் தேர்தல் தானே என்று வேளாளர்களில் பலர் வாக்களிக்கப் போக மாட்டார்கள். மேலும் வெளியூரில் வேலை செய்யும் வாக்காளர்கள் கரிசனையுடன் ஊருக்கு வந்து வாக்களிக்க மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களோ ஒற்றுமையாக நடேசனுக்கு வாக்களிப்பார்கள் என்ற பயம் மாணிக்கவாசகரைப் பற்றிக் கொண்டிருந்தது.

தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குக்களைப் பெற நீண்ட நாட்களாகத் திட்டம் போட்டார். அவர்கள் குடியிருக்கும் தனது நிலத்தை அவர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களின் அனுதாபத்தைத் தேடிக்கொண்ட தனது சூரத்தனத்தை தனக்குள் எண்ணி மெச்சிக் கொள்கிறூர். 'இந்தக் காணியிருந்தும் ஒரு பிரயோசனமுமில்லை. இப்ப கவுண்மேந்து கொண்டு வந்த நிலச்சீர் திருத்தச் சட்டத்தின்படி குடியிருக்கிறவையைக் காணியிலிருந்து எழுப்பேலாது.'

இந்தத்தடவை தனது வட்டாரத்தில் அமோகவெற்றி கிட்டும் என்பதை அவர் ஊர்ஜிதப்படுத்தியதும், அடுத்த நடவடிக்கையாக சியமன் பதவியைப் பற்றி யோசிக்கலானுர்.

அரசடியூர்க் கிராமச் சங்க மற்றைய வட்டாரங்களில் வெற்றிபெறக் கூடியவர்கள் தன்னைச் சியமனுக்க ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை துளிர்விடுகிறது. புற்றளை, மாரக்காய், ஆலடி ஆகிய வட்டாரங்களில் வரக்கூடிய அங்கத்தவர்களைப் பற்றி அவருக்குப் பயமில்லை. இப்பொழுது அவரது யோசனை எல்லாம் அரசடி வட்டாரத்தைப்பற்றியதே.'இராமலிங்கம் சியமன் பதவிக்கே போட்டியிடாத வகையில் அரசடிவட்டாரத்துக்கு அங்கத்தவராகத்தெரிவுசெய்யப்படாது படுதோல்வியடையச் செய்ய வேண்டும்' என்பதே அவரது ஆசை. இதற்கு ஒரே வழி எக்கவுண்டன் ஜெயராசாவை அரசடி வட்டாரத்துக்குப் போட்டியிட வைப்பதே, என்பதை பலநாட் சிந்தனையில் அவர் எடுத்த முடிவு. ஜெயராசாவை மாணிக்கவாசகருக்கு நன்ருகத் தெரியும். நீதி நேர்மைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டவர். ஊரில 'அவருக்கு நல்ல மதிப்பு இருக்கு' என்பதை மாணிக்கவாசகர் மதிப்பிட்டு வைத்திருக்கிறார்

எக்கவுண்டனாக இருந்து பென்சன் எடுத்து ஊருக்கு வந்தநாள் தொட்டு ஜெயராசா அரசடியூரில் பல நல்ல சமூக சேவைகளைச் செய்து வருகிறார். அரசடி வாசிகசாலையின் தற்போதைய தலைவரவர். வாசிகசாலையில் எத்தனையோ புதிய வேலைகளைச் செய்து வருகிறார். அவ்வூரில் நெசவுசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தவர் இவரே. ஆகவே எப்படியும் அவரைச் சம்மதிக்கச் சொல்லலாம் என்ற நம்பிக்கையுடன் எக்கவுண்டன் வீட்டுக்குள் நுழைகிறார்.

"வாருங்கோ இந்தக் கதிரையில இருங்கோ" என்று மனேஜர் மாணிக்கவாசகரை அன்பொழுக வரவேற்கிறார். எக்கவுண்டன் ஜெயராசா

சம்பிரதாயமாகப் பல சங்கதிகளைப் பேசிவிட்டுத் தான் வந்த காரியத்திற்கு அடியிடுகிறார் மனேஜர்.

"ஏன் பாருங்கோ இந்த முறை புராணப்படிப்பிற்குப் போகேல்ல?"

"என்ரை அண்ணன்ரை மகள் பிள்ளைப் பெத்ததுடக்குப் பாருங்கோ"

"நான் இப்ப வரேக்க படிப்பு நடக்குது வெளியில நிண்டு கேட்டிட்டுத்தான் வாறன். நல்லதொரு படலம் நடக்குது"

"என்ன படலம்?" என்று ஆவலுடன் கேட்கிறார் ஜெயராசா.

அசுர காண்டத்திலுள்ள அந்தப் படலத்தைப் பற்றி மாணிக்கவாசகர் சொல்லுகிறார். ஜெயராசா அது தொடர்பாகப் பல கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

"யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்று பண்டிதமணி அடிக்கடி சொல்லுவர். பாருங்கோ யாழ்ப்பாணத்தில இப்பவும் பல கோயில்களில் புராணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு நடக்குதாம். இளம் பொடியள் கூடச் சிலர் புராணம் படிக்கிருங்கள். ஏன் எங்கடை புராணம் படிக்கிறதை நாங் கள் கை விட்டமோ எங்கடை கலாச்சாரத்தைக் கைவிட்ட மாதிரி ''

மாணிக்கவாசகர், தான் கூற வந்ததுக்குத் தக்க தரு ணம் வந்து விட்டதை உணர்கிருர்.

''இப்ப பாருங்கோ எங்கடை ஊரிலயும் அசுர ஆட்சி தானே நடக்குது. தேவர்கள் சிவபெருமானெட்டை முறை யிட்ட மாதிரி நான் உங்களுக்கு இதுபற்றிச் சொல்லவந் திருக்கிறன். நீங்கள் நல்லா நோட் பண்ணியிருப்பியள் கிராமச் சங்கத்தில நடக்கிற ஊழல்களை. நீங்கள் அண் டைக்கு கோயிலடியில சொன்னியள், வாசிகசாலை விடய மாக சியமன் இராமலிங்கத்தைச் சந்திக்கப் போனதெண்டு அவன் நல்ல வெறியில நின்டானெண்டு. அரசடி வாசிக சாலை அரசடி, வடலியடைப்பு ரெண்டு வட்டாரத்துக்கும் பொதுவான ஒரு பெரிய வாசிகசாலை இதுக்கு நான் சியமன் இருக்கேக்க எவ்வளவு உதவியைச் செய்தன் இப்ப ஒண்டு மில்லையே. கிராமச் சங்கக் காசில ரேட்டுப் போடுறதெண்டு நல்லா விளையாடுருங்கள். இது மட்டுமே உந்தப் பெடியன் தான் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தலைவரா இருக்கிருன். அதையெல்லாம் ஒழிவிச்சுப் போட்டான். ஒரு சிறங்கை மல்லி சங்கக் கடையில வாங்கேலாது. அங்கு வாற மல்லியை வெளிக் கடையளில ஐஞ்சாறு ரூபாக்குடுத்து வாங்க வேண்டி யிருக்கு. உங்களைப் போல படிச்ச நீதி நியாயம் தெரிஞ்ச ஆக்கள் இருக்குள்ளை உள்ளட்டால் தான் எங்கடை கிராமம் முன்னேறும். அதை விட்டிட்டு கடைப்புளிகள், குடிகாரர் கள் சியமன், தலைவரா இருந்தால் உருப்படுமே. நல்லா இதை ஓருக்கால் யோசிச்சுப் பாருங்கோ.''

ஜெயராசா தலையைச் சற்றுவேகமாக ஆட்டுகிருர்.

''அது தான் பாருங்கோ நாங்கள் நாலைஞ்சு பேர் யோசிச்சு உங்களை அரசடி வட்டாரத்துக்குத் தெரிவுசெய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமெண்டு யோசிக்கிறம். பண்டிதர் பரமகுருவும் சங்கக்க டை பழைய மனேஜர் சாம்பசிவமும் நேத்துச் சொல்லிச்சி னம். நீங்கள் தான் இதுக்குத் தோது எண்டு. என்னை ஒருக் கால் உங்களோடை போய்க் கதைக்கச் சொல்லி''

''ச்சாய்...... உதுக்குள்ளை போனல் பெரிய புடுங்குப் பாடு''

''உப்பிடிச் சொல்லாதேங்கோ ஒரு கிராமத்துக்குச் சேவை செய்யிறதெண்டால் கிராமச் சங்கத்துக்கூடாகக் கன விஷயங்களைச் செய்யலாம். உங்களுக்கெல்லாம் நான் இதுகளைச் சொல்லோணுமே. அண்டைக்கு வாசிகசாலைக் கூட்டத்தில பனைவளத்தைப் பற்றிப் பேசினியள், பனம் பொருளில சிறு கைத்தொழில் ஊரில தொடங்கோணும் எண்டு சொன்னியள். இதுக்கெல்லாம் கிராமச் சங்கத்துக்கு உள்ளட்டால் உருப்படியா எவ்வளவு காரியத்தைச் செய் யலாம். மகாத்மா காந்தி ஏன் அரசியல்ல ஈடுபட்டார்?''

ஜெயராசா ஆழமாக யோசிக்கிறுர்.

''நாங்களும் உப்பிடி விட்டிட்டமெண்டால் நாளைக்கு எங்களுக்குத்தானே கேவலம். அரசடியூர்க் கிராமச் சங்கத் தில ஊழல் எண்டால் அரசடியூரில உள்ள ஒவ்வொருவருக் கும் வெட்கம் தானே''

ஜெயராசா எதற்காகவோ தலையாட்டுகிறுர்.

''நான் வரப் போறன். ஏதோ யோசிச்சு ஓமெண்டு சொல்லுங்கோ. நீங்கள் முடியாதெண்டாலும் நாங்கள் விடப்போறதில்லை''

எக்கவுண்டன் ஜெயராசா அவரது வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்த, மகாத்மா காந்தியும் நேருவும் அன் புடன் அளவளாவிக் கொண்டிருக்கும் படத்தை இன்று புதிய அர்த்தத்துடன் பார்க்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

மங்கள வாசம் பரபரப்பின் வாசல் தலமாக இருக்கிறது.

கிராமச் சங்கத்தேர்தலில் இந்தத் தடவையும் எப்படியாவது நியமனமாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமென்பது இராமலிங்கத்தின் ஒரே இலட்சியமாகும். அவன் மிகத் துரிதமாக இயங்கிக் கொண்டிருக்கிருன். அரசடி வட்டாரத்துக்கு எக்சவுண்டன் ஜெயராசா தனக்கெதிராகப் போட்டியிடுவதையிட்டு அவரைவிட இதற்குத் தூண்டுதலாக இருந்த மனேஜர் மாணிக்கவாசகர் மேல்தான் மனத் தாக்கல் அதிகமாக இருக்கிறது. அவரது திட்டம் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கி, கொட்டத்தை அடக்க வேண்டுமென்று இராமலிங்கம் அல்லும் பகலும் அயராது உழைக்கிருன். அவனது வலது கையான டேவிட் மாஸ்டரின் மந்திராலோசனை தேவையான பொழுது கிடைக்கிறது. சண்டியன் சங்கரப்பிள்ளை இராமலிங்கத்தின் மெய்க்காப்பாளன் போல இருக்கிருன். பலருக்குச் சாப்பாடும் குடிவகைகளும் மங்கள வாசத்தில் ஒழுங்காகக் கிடைக்கின்றன.

தனது வீட்டிற்குட் புகுந்த செந்தில்நாதனை சாராய நெடியே வரவேற்கிறது. இராமலிங்கத்தின் ஆதரவாளர்கள் குடிவெறியில் தங்களுக்கு ஏற்படப் போகும் மாபெரும் வெற்றியைப்பற்றிப் பெரிய சத்தமிட்டு உரையாடிக் கொண்டிருக்கிருர்கள் செந்தில்நாதன் முகத்தைச் சுளித்துக் கொண்டு அறைக்குள் போகிருர்.

அங்கே மங்களத்தைக் காணவில்லை. இராமலிங்கத்தின் மூத்த மகள் ஓடி வந்து சொல்கிருள், ''மாமா......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா அஞ்ரி டீ. எம். ஓ மாமான்ரை காரிலபோயிட்டா''

கோபத்தின் கோரப்பிடியில் செந்தில்நாதன் சிக்கி விடுகிருர். அது அவரது பொறுமையின் எல்லையை உதைக்கிறது. ஆஸ்பத்திரியில் சதா வேதனையும் விரக்தியையும் தரிசித்துவிட்டு வீட்டிற்கு வரும் அவரை அன்பு முகத்துடன் வரவேற்க வேண்டிய மனைவி இப்படிச் சுற்றித் திரிந்தால் அதன் அர்த்தமென்ன! அதுவும் திருமதி சிவநேசனைப்பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயமில்லை. இது முதற் தடவை அல்ல அடிக்கடி. மங்களம் இப்படித்தான் திருமதி சிவநேசன் கார் அனுப்புவாள், இவள் அங்குபோய் விடுவாள். சில நாட்களாக வீட்டில் இவருக்கும் ஒரே விவாதமும் மனக்கசப்பும், தொழில் நிமித்தமாக அடுத்த மாதம் தொடக்கம் செந்தில்நாதன் தெல்லிப்பழையில் வசிக்க வேண்டும். இவ்வளவு காலமும் வாரம் இரு தடவைகள் 'கிளினி'க்குக்கு மட்டும் போய்வந்தவர் அந்த ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்பட்டதால் அங்கேதங்கி மந்திகைக்கு வாரத்துக்கு இரு தடவைகள் மட்டும் வருவதற்கான பணிப்புரை மேலிடத்திலிருந்து கிடைத்திருக்கிறது. ஆனல் மங்களமோ எப்படியும் இந்த வருட முடிவில் கொழும்புக்கு மாறிப் போய்விட வேண்டுமென்றும் தன்னல் தெல்லிப்பழைக்கு வர முடியாதெனவும் அடம் பிடிக்கிருள். நோயாளர்களின் வாழ்க்கையின் இருண்டபகுதியைப் பார்த்துவிட்டு வருபவருக்கு வீடு இருண்டு கிடக்கிறது. ஆறு மணிக்குப் பிறகுதான் மங்களம் வீட்டிற்கு வருகிருள்.

''இவ்வளவு நேரமும் எங்கை போட்டு வாறீர்?'' எல்லைமீறிய கோபத்தில் வெளியே நிற்பவர்களையும் பொருட்படுத்தாது செந்தில்நாதன் சத்தமாகக் கேட்கிருர்:

,'எனக்கு இது என்ன மறியல் சாலையோ, அல்லது கடுழியமோ? கொஞ்ச நேரமும் வெளியில போனல் உப்பிடித் துள்ளுறியள். மிஸ்சிஸ் சிவநேசனைப் பாருங்கோ எங்கை எல்லாம் போட்டு வாரு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில்நாதன் கோபத்தில் தன்னை மறக்கிறார் "அவை இவையின்ரை கதை ஒண்டும் எனக்கு வேண்டாம். நான் சொல்லுற மாதிரி நீ நடக்கப் போறியோ? நீ சொல்லுற மாதிரி நான் நடக்கிறதோ?"

மங்களத்திற்கு ஒரே வெட்கமாக இருக்கிறது. 'வெளியே நிற்பவர்கள் அவர் சொல்வதைக் கேட்டு என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்'

"நான் கடைசி மட்டும் தெல்லிப்பழைக்கு வர மாட்டன் விருப்பமெண்டால் நீர் போம். அங்கை போய் ஒரு விசரியை வைச்சுக்கொண்டு விசரருக்கு மருந்து செய்யுமன். நான் உம்மைக் கட்டி என்ன சந்தோஷத்தைக் கண்டன். என்ரை தலைவிதி இப்படியாப் போச்சு. ராசாத்தி மாதிரி இருக்க வேண்டிய நான் இந்த வறண்ட ஊரில வந்து சிறையிருக்கிறன்."

"நான் ஏதோ சந்தோசமாயிருக்கிறனெண்டு நினைக்கிறியோ? என்ரை மன வேதனையை ஆருக்குச் சொல்லுறது. அந்த நாள் தொடக்கம் நீ திருந்துவாயெண்டு எவ்வளவு விட்டுக் குடுத்தன் கெஞ்சினல் மிஞ்சுருய்"

"நானென்ன மிஞ்சிறது? *'Don't speak nonsense'*" என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் புகுந்து உடுத்த சேலையை மாற்ருமலே படுக்கையில் விழுந்து அழுகிருள்.

செந்தில்நாதனுக்கு அங்கு இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும் போல இருக்கிறது. காரை எடுத்துக் கொண்டு வெளியே புறப்படுகிருர்.

இன்று அரசடிப் பிள்ளையார் கோயிலை அடுத்துள்ள புலவில் இராமலிங்கத்தை ஆதரிக்கும் முகமாக ஒரு தேர்தற் கூட்டம். இராமலிங்கத்தின் வற்புறுத்தலால் அவனது மனைவி குழந்தையுடன் கூட்டத்திற்குப் போய் விட்டாள். வீட்டில் மங்களமும் வேலைக்காரனும் மட்டும் தான் இருக்கிருர்கள்.

மங்களத்திற்குச் செந்தில்நாதன் சொன்ன சொற்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈடடியாகக் குத்திக் கொண்டிருக்கின்றன. தனக்கு இந்தத் திருமணத்தைச் செய்து வைத்த தகப்பனை மனதில் திட்டித் தீர்க்கிருள். 'அன்று என் காதலைச் சதி செய்ததாலே தான் இன்று நான் இப்படி வேதனைப்பட வேண்டியிருக்கின்றது.'

'கேற்'றில் ஒரு ஜீப் வந்து நிற்கிறது. யன்னல் சேலையை விலக்கிக் கொண்டு பார்க்கிருள். இன்ஸ்பெக்டர் மோகன் கம்பீரமான தோற்றுத்துடன் வீட்டு வாசற்படிகளில் ஏறுகின்ருன்.

எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு கண்ணுடியில் ஒரு தடவை தன்னைத்தானே பார்த்துவிட்டு மங்களம் முன் வாசலுக்கு வருகிருள். அவள் இருதயம் வேகமாகத் துடிக்கிறது. 'உள்ளே வந்திருப்பவரை எப்படி வரவேற்பது?' முன்பு இரு தடவைகள் இராமலிங்கத்தைத் தேடி வந்த மோகனை அவள் சந்தித்திருக்கிருள். அவன் எவ்வித பதட்டமும் இன்றி சுகம் விசாரித்தான். அவள் சபலங்களை வெளிக்காட்டாது ஓரிரு வார்த்தைகளில் உரையாடியிருக்கிருள். ஆனல் இன்று தனிமையில் மனமுடைந்த நிலையில் சந்திக்கிருள்.

''இருங்கோ, அண்ணை கூட்டத்துக்குப் போட்டார்.'' கதிரையில் அமர்ந்த மோகன் அவளை ஏற இறங்கப்பார்த்துக் கொண்டே கேட்கிருன் ''உங்களுக்கு என்ன, சுகமில்லையோ?'' அதே குரல், அதே வாஞ்சையான பேச்சு.

மங்களத்திற்கு மோகனின் பேச்சு ஆதரவாகப்படுகிறது. ஓர் ஆடவன் தன்னை இப்படி விசாரிப்பது நோவிற்கு ஒத்தடம் கொடுப்பது போல இருக்கிறது?

''எனக்கு வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை. எனது பலன் இப்படி வந்திட்டுது'' மங்களத்தின் குரல் கரகரக்கிறது;

''ஏன் என்ன நடந்தது? எனக்குத்தான் குடும்ப வாழ்வுக்குக் கொடுத்து வைக்கவில்லையென்ருல் நீங்களும் சந்தோஷமில்லாமல் இருக்கிறீர்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் உங்கள் மனைவி...... பிள்ளை குட்டிகள்?''

''என் மனைவி ஒரு விபத்தில்இறந்து விட்டாள், பிள்ளைகளுமில்லை. நான் தனியாகத் தான் இருக்கிறேன்''

''ஐயோ நாங்கள் இருவரும் அபாக்கியம் செய்தவர்களா!'' அவனை அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டே மங்களம் தொடர்கிறாள். ''நான் உங்களை ஏமாற்றிவிட்டேனென்று நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால் அது பொய். நாங்கள் இருவருமே ஏமாற்றப்பட்டு விட்டோம்'' மங்களம் தொடர்ந்து தங்கள் காதல் எப்படி முறியடிக்கப்பட்டது என்பதைக் கூறி முடிக்கிறாள்.

மோகனுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது. 'இப்படியா நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம்!' மங்களத்தின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிகிறது. ''மங்களம் நீ அழுவதைப் பார்க்க எனக்கும் கண் கலங்குகிறது. நடந்ததை நினைத்து யோசிப்பதில் பிரயோசனமில்லை. நீ என்றைக்கும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே எனது ஆசை.''

''எனது மிஸ்டர் என் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. நீங்கள் என்னைப் புரிஞ்சு கொண்ட அளவிற்கு அவர் என்னைப் புரிஞ்சு கொள்ளவில்லை. தான் எதை நினைக்கிறாரோ அதைத்தான் செய்கிறார். நான் உண்மையில் ஒரு வேலைக்காரி போலத்தான் இங்கே இருக்கிறேன்.''

மோகன் சுவர்களைப் பார்த்துக் கொண்டு எதையோ யோசிக்கிறான். எதையும் தாங்கும் சுபாவமுள்ள மோகனுக்கு இன்று மங்களம் கூறிய திடுக்கிடும் சம்பவம் நெஞ்சிலே பெரும் தாக்கத்தை உண்டாக்குகிறது. தொடர்ந்து அங்கு இருப்பது வேதனையைக் கூட்டும் என்பதால் அங்கிருந்து போக விரும்பி கதிரையை விட்டு எழும்புகிறான்.

''என் கையால் தயாரித்த ஒரு கோப்பை தேநீர் குடித்து விட்டுப் போங்கோ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுக்கிறாள். அதனைக் குடித்துவிட்டு, "*See you*" என்று கூறியபடி மோகன் ஜீப்பை நோக்கிச் செல்கிறான்.

நீண்ட நேரமாக ஓய்வு பெற்றிருந்த ரேடியோவை மங்களம் முடுக்கிவிடுகிறாள். காதலில் தோல்வியுற்ற இரு உடைந்த உள்ளங்கள் இசைக்கும் சோககீதம் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது.

கல்லும் மண்ணும் கலந்த ஒழுங்கையில் புழுதியை வாரி இறைத்துக் கொண்டு மோகன் செல்லும் ஜீப்பை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள் மங்களம்.

# 19

அரசடியூர்க் கிராமசபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரம் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊரில் எங்கெல்லாம் மக்கள் கூடுகிறார்களோ அங்கெல்லாம் அடுத்த மாதம் நடைபெறப் போகும் 'கிராமச் சங்க'மென வெகு ஜனங்களால் அழைக்கப்படும் கிராம சபைத் தேர்தல் பற்றியே பேச்சு. சந்திகளிலும் மதகுகளிலும் கூடும் வேலையற்றவர்களுக்கு இதுபற்றிப் பேசுவதே வேலை. அரசடிப் பிள்ளையார் கோயில் மடத்தில் கூடும் மகாநாடுகளின் மையக் கருத்தும் இதுவே; தோட்டத்தில் ஆடுகால் நிழலில் கூடுபவர்களும் இதைப்பற்றியே பேசுகிறார்கள்.

கந்தன் பனைச்சீவலை முடித்துவிட்டு பொன்னையா வீட்டு வேப்பமர நிழலுக்கு வருகிறான். அவன் தான் கொண்டு வந்த கள்ளு முட்டியை குதிக்காலால் மணலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழிபறித்துப் பவுத்திரமாக வைத்துவிட்டு, விருந்தையில் பொன்னையாவிடம் பேசிக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் சின்னையாவுடன் கதை கொடுக்கிறன்.

''சின்னையாக் கமக்காரனும் கிராமச் சங்கத் தெரிவிற்குக் காசு கட்டியிருக்கலா மாக்கும்.''

''என்ன கந்தன் பகுடி பண்ணுறியோ, நான் கேட்டால் உவை எல்லாரும் தோத்துப் போவினம்''

''உண்மை தானுக்கும்: ஊரில எத்தனை கலியாண வீடுகளை, செத்த வீடுகளை நாம் முன்னுக்கு நிண்டு நடத்தி முடிச்சிருக்கும். மாசத்தில எத்தனை சீட்டைப் பிடிக்குது. பெரிய இடங்களில் சகவாசம் இருக்கு: நமக்குத்தான் எல்லாரும் போடுவினம்?''

''அப்ப கந்தன் எந்தக் குறிச்சிக்குக்கேப்பம்: அரசடிக் குறிச்சிக்கோ இல்லாட்டி வடலியடைப்புக்கோ, இல்லாட்டி உன்ரை மோனேடை காரைத் தோட்டத்திலயோ கேக்கிறது.''

''ஒரு வேலை செய்யவாக்கும், சியமன் ஐயா கேக்கிறது போல அரசடி,வடலியடைப்பு ரெண்டுக்கும் கேக்கலாக்கும்''

''சும்மா விகடத்தை விட்டிட்டு இஞ்சால உள்ளுக்கு வா கந்தன். உன்ரை மோன் முருகனுக்கு எதிராக இந்த முறை போட்டியாமே?'' என்கிறர் பொன்னையா.

இவ்வளவு நேரமும் வெளியே நின்றுகொண்டிருந்த கந்தன், விருந்தைக்கு முன் இறக்கப்பட்டுள்ள சாய்ப்புக்குள் வந்து நிலத்தில் உள்ள மண்ணைக் கால்களால் தட்டிப்பரவி ஒப்புரவு செய்து கொண்டு இயனக் கூடு சத்தம் செய்யக் குந்துகிறன்;

''ஓமாக்கும் கல் வீட்டுக் கணபதியும் காசு கட்டியிருக்கிறன். அதை ஏனுக்கும் பேசுது, நாலு காசு கையில சேந்தாப்போல அவை இப்ப எங்களுக்கை பெரிய வெள்ளாளர்: கணபதியின்ரை தமையனுக்கு நான் கலியாணம் பேசிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோறும் குடுப்பிச்சது. இப்ப கணபதியின்ரை தங்கைப் பெட்டைக்குப் போனமாசம் கலியாணம் நடந்தது. வெள்ளாள வீட்டுக் கலியாண வீடு தோத்துப்போம். எனக்குச் சொல்லக்கூட இல்லை. பின்னைப் பாக்கவனுக்கும்''

''உன்ரை மோன் முருகன் இப்ப கணபதியின்ரை 'ரைக்டர்' ஓடுறதில்லையே?'' பொன்னையா கேட்கிறார்.

''அவன் விட்டு விலகி இப்ப ஒரு மாதத்துக்கு மேலையாச்சு. வேலைகூடவாம், சம்பளமும் ஆனவாயில தாறதில்லையாம். இப்ப சும்மாதான் இருக்கிறான். முருகேசுச் சட்டம்பியார், எங்கையாலும் ஒரு இடம் எடுத்துத் தாறதெண்டு சொன்னவர். அவனுக்கும் இப்ப ரெண்டு பிள்ளையளாச்சு பெரிய கஷ்டப்படுகிறானுக்கும்.''

''காரைத் தோட்டத்தை உங்களுக்கெண்டு வெள்ளாளரால ஒதுக்கித்தர நீங்கள் இப்ப போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது வடிவே. போன வருஷம் போட்டியில்லாமல் தானே அனுப்பினது'' என்று பொன்னையா சொல்கிறார்.

''கந்தன் உனக்கு வடலியடைப்புக் குறிச்சியிலதானே துண்டு. உன்ரை பக்கம் எப்பிடியிருக்கு'' சின்னையா கேட்கிறார்.

''பாருங்கோ கமக்காரன் இராமலிங்கம் ஐயா ரெண்டு குறிச்சிகளுக்குக் கேக்கிறதை பணக்கொழுப்பு எண்டுதானே சொல்ல வேணும். எங்கடை நடேசன் போன முறை கொஞ்சத்தாலதானே தோத்தது. இந்த முறை எப்பிடியும் வெல்லவைக்கோணும் எண்டுதான் முருகேசுச் சட்டம்பியாரும் முருகனும் வடலியடைப்பிலயும் வேலை செய்யினம். எனக்கெண்டால் சின்ன மணியகாரனுக்குத் தான் இந்த முறை வாய்க்கும் போல மனஞ் சொல்லுது. என்னத்தைச் சொன்னாலும் சின்ன மணியகாரன் எங்களுக்கு ஒரு பெரிய உதவியைச் செய்திருக்கு. இருக்கிறதுக்குக் குடிநிலத்தை அறுதியாகவே தந்திட்டிது. ஒரு மனிஷன் செய்த உதவியை ஐஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டு நாளுக்குள்ளே மறக்கிறதே. உங்கட பக்கம் எப்படி யிருக்காக்கும்? சியமன் ஐயாவுக்கு அரசடிக் குறிச்சி வாய்க் குமே?''

''இஞ்சையும் மூண்டு பேர் கேக்கினம். சரியான போட்டி தான். இராமலிங்கத்திற்குப் போன முறை மாதிரி வெற்றி கிடைக்குமெண்டு சொல்லேலாது. முருகேசு மாஸ்ட ருக்கும் பொடியள் நல்ல சப்போட். இனி எக்கவுண்டன் ஜெயராசாவுக்கு ஊரில நல்ல மதிப்பு இருக்கு. நீதி நேர் மைக்கு முன்னுக்கு வாற மனிஷன். வாசிகசாலைத் தலைவரா இருந்து, நெசவுசாலை, தையல் வகுப்பு எல்லாம் தொடங்கி நல்ல அலுவல் பாத்திருக்கிறார்.'' சின்னையா சொல்கிறார்.

''மெய்தான் 'அரிச்சந்திரன் வளவு' இராசு உந்த வேலைக்குத் தோதானுள் இப்ப இருக்கிறவங்கள் என்னடா வெண்டால், கிராமச் சங்கத்தையே குட்டிச் சுவராக்கிப் போட்டாங்கள். இந்தாள் வந்திட்டால் திருத்தி எடுத்துப் போடும்'' பொன்னையா கருத்துத் தெரிவிக்கிறார்.

''அத்தான் சொல்லிறது சரிதான் எக்கவுண்டனோடை நான் பிழங்கியிருக்கிறன். ஒண்டு சொன்னால் பேந்து மாத் திற வாடிக்கை அவரில இல்லை. அரிச்சந்திரன் போலத் தான். இப்ப எங்கடை கிராமச் சங்கத்தில இருக்கிறவை அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரரர்'' என்கிறார் சின்னையா.

''ஏன் இவற்றை தேப்பன் கோட்டில பொய்ச்சாட்சி சொல்லிப் போட்டனெண்டு ஏங்கிச் செத்து 'அரிச்சந்திரன்' எண்டு பேர் எடுத்தவரெல்லே'' பொன்னையா சிறிது உணர்ச் சிவசப்பட்டுச் சொல்கிறார்.

''அத்தான் நீங்கள் கோட்டடி எண்டு சொல்லத்தான் ஞாபகம் வருகுது. நேற்றெல்லோ எனக்குக் கட்டளை வந் திருக்கு. நான் சண்டியன் சங்கரப்பிள்ளையெட்டை வாங்கின காணித் துண்டுக்கு வெறிக் குட்டியர் மறிச்சுக் காசு கட்டின வரெல்லோ; அந்த வழக்கு எங்கடை தெரிவுக்கு மற்ற நாள் வருகுது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒளிக்கத் தெரியாதவன் உடையார் வீட்டுக் கோடியில ஒளிச்ச கதையாத்தான் கிடக்கு கமக்காரன். குட்டியர் ஊர் அப்புக்காத்து எண்டு பேர் எடுத்த மனிஷன். அப்புக்காத்து அருணைசலத்தாருக்கு காணி வழக்குகளுக்கு அடியெடுத்துக் குடுக்கிறது அந்தாள்தானே ஆக்கும்"

"கந்தன் நிலவுக்கஞ்சிப் பாதேசம் போறதே, ஏதோ அரசடிப் பிள்ளையார் இருக்கிறுர்"

அப்பொழுது பொன்னையாவின் இளைய மகள் கமலா ஒரு பனங்காயைக் கையிலே கொண்டு வந்து கொண்டே கேட்கிறுள் "அப்பு இந்தப் பனங்காய் தின்னலாமே. அக்கா சொல்லுரு இது தோரையாம் தின்னலாமாம்"

"பொன்னையா தூரத்திற் பார்த்துவிட்டே சொல்கிறுர். ஓம் மோனை. கொக்கா சொன்னது சரி உது தான் தோரை"

சின்னையா சொல்கிறுர். "என்ரை மோளுக்கு ஒரு இழவும் தெரியாது: பனங்காய் எப்பிடித் தின்னுறது பப்பா எண்டு இளைய மகள் மல்லிகா கேட்டாள், நான் சொன்னேன் உன்னைக் கொஞ்ச நாளைக்கு பொன்னையா மாமா வீட்டை கொண்டு போய் விடோணுமெண்டு"

"சண்டைக் காலத்துக்குப் பிறகு கூப்பன் மாவைப் பாவிக்கத் துவங்கிஞப் போல எல்லாத்தையும் மறந்திட்டம். முந்தி நாங்கள் சாமி, குரக்கன், ஒடியல், பிஞட்டு இதுகளைத் தானே சாப்பிடுறது. பிஞட்டு ஒரு சோக்கான சாமானெல்லே பசியைப் பிடிக்க. அண்ணுவி ஆழ்வார் அடிக்கடி சொல்லுறவர் 'பஞ்சந் தீர்க்கும் பனை' எண்டு. பனையில் எதைத்தான் தள்ளுறது குருத்தில இருந்து வேர் மட்டும் மனிசனுக்குப் பிரயோசனமானது தானே. இதையெல்லாம் நாங்கள் மறந்திட்டு மற்ருக்களெட்டைப் பிச்சையெடுத்துத் திரியிறம்" என்கிறுர் பொன்னையா.

"கமக்காரன் சொல்லுறது சரிதான், இப்ப நாங்கள் வாக்கிற 'தீர்த்த'மொண்டைத் தவிர மற்றப் பிரயோசன

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மெண்டும் ஆக்களுக்குத் தெரியிறேல்ல. சின்னையாக் கமக் காரனுக்கு இதால கூட பிரயோசனமில்லை"

"ஏன் கந்தன் அண்டைக்கு நீ வைச்சிட்டுப் போன கருப்பணிக்கு மாங்காய் போட்டுக் குடிச்சன். பொன்னம்மா முதல் நாள் அவிச்ச ஒடியல் புட்டையும் தந்தது. சோக்கா இருந்தது."

"இப்ப கவுண்மேந்து பனை மரங்களை நடச்சொல்லிச் சனங்களுக்குச் சொல்லியிருக்குதாம்: பேப்பரில கிடக் கெண்டு உவள் சரசு தான் சொன்னாள். திறமான விதை களும், வடலியளையும் விலைக்கு வாங்கிறதெண்டும் போட்டி ருக்காம்" பொன்னையா சொல்கிறார்.

"ஏன் எங்கடை எக்கவுண்டன் ஜெயராசா எங்கடை ஊரில ஒரு சங்கம் துவங்க வேணுமெண்டு அண்டைக்கு வாசிகசாலைக் கூட்டத்தில சொன்னவர் தானே. உவரைப் போல ஆக்கள் சியமனாக இருந்தால் இந்த மாதிரி எத்தனை அலுவல் செய்யலாம்" என்கிறார் சின்னையா.

"சொன்னாப்போல இந்தமுறை சியமனுக்கும் சரியான போட்டியாத்தான் இருக்கும்" என்கிறார் பொன்னையா.

"இராமலிங்கத்தில இந்தமுறை வேலையில்லை. ஊர்ச் சனங்களுக்கு நல்லா வெறுத்துப் போச்சு யூனியன் விஷய மாகவும் நல்ல பிரளி நடக்குது" என்கிறார் சின்னையா.

"பொன்னையாக் கமக்காரனுக்குக் கோவம் வந்தா லும் வரும் அந்தாளின்ரை நடத்தை ஒரு வெள்ளைச் சல்லிக் கும் உதவாது அந்தப் பரிசு கேட்டை ஏனைக்கும் பேசுவான். கல்வீட்டுக் கணபதியின்ரை கடைசித் தங்கைப்பெட்டைக்கு சட்டம்பிவேலை எடுத்துத் தாறனெண்டு மாத்தளை வழிய காரில கொண்டு திரிஞ்சாராம்."

மாட்டுக் கொட்டிலில் மாடு 'ம்மா' என்டு அழுகிறது.

"சரி உந்தக் கதையளைப் பேசிக் கொண்டிருந்தால் எங்கடை அலுவல்களை ஆர் பார்க்கிறது. மாடுகளை அவிட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய் கோயிலடிக் காணிக்க விட்டிட்டு வரப் போறன்'' என்று சொல்லிக் கொண்டே பொன்னையா எழும்புகிறார். தொடர்ந்து கந்தனும் சின்னையாவும் தங்கள் இருப்பிடத்தை விட்டு எழும்புகிறார்கள்.

பின் காணிக்குள் பனங்காய் ஒன்று காவோலையின் சலசலப்பைத் தொடர்ந்து திரிபருமுள் சிதறத் தொப் பென்று விழுகிறது.

# 20

வாடைக்காற்றுப் பெயர்ந்து விட்டது. யாழ்ப்பாணத் தில் மழைக் காலம் ஆரம்பித்து விட்டது. எங்கும் புழுதியை அடக்கி வைத்த ஈரவாடை மூக்கைத் துளைக்கிறது. மழை இரண்டு நாட்களாகப் பெய்து கொண்டே இருக்கிறது. வாழ்வை நோக்கி வரண்டு கிடந்த நிலமடந்தை தாகம் தீர்த்த புதுப்பொலிவுடன் சிலிர்த்துக்கொண்டு, தொடர்ந்து வானம் நீட்டும் மழைக் கரங்களின் அணைப்பிலே மயங்கிக் கிடக்கிறாள்.

புகையிலைத் தோட்டக்காரரின் நிலம் பக்குவப்படத் தொடங்கி விட்டது. தோட்டத்'தறை'களைக் கொத்தி, பசளை இட்டுப் பண்படுத்துவதில் தோட்டக்காரர்கள் மும் முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். வானம் பார்த்த வயற்பூமி 'ரைக்றர்'களால் உழப்பட்டு விதைப்பிற்குத் தயாராகிறது.

குவிக்கப்பட்டிருக்கும் எருவை அள்ளித் தோட்டத் 'தறை'களுக்குப் பரவுவதற்கு கணவனுக்கு ஒத்தாசை செய் வதற்காகப் பொன்னம்மா தோட்டத்திற்குப் போய் விட்டாள். வள்ளிநாயகி, மழைத் தூவானம் பட்டு சேருடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் பசுக்கன்றையும் ஆடுகளையும் காலாறக் கொஞ்ச நேரம் அவிழ்த்துவிட்டு, மாட்டுக் கொட்டிலைத் துப்பரவாக்கிக் கொண்டிருக்கிருன்.

காகம் ஒன்று வேப்ப மரத்திலிருந்து கரைகிறது. அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும் பொன்னம்மா காகத்தைத் துரத்துகிருள். அது பூவரசமரத்திற்குப் பறந்து சென்று, தொடர்ந்து கரைகிறது. மழையும் கோலம் கொள்கிறது. வீட்டிற்கு வந்ததும் வராததுமாகப் பொன்னம்மா கேட்கிருள். "பிள்ளை, இண்டைக்குத் தம்பி காயிதம் போட்டவனே? காகமும் ஒன்று பறந்து பறந்து கரையுது. என்ன கொண்டாட்டத்துக்கோ தெரியேல்ல"

"இல்லை அம்மா, இண்டைக்குத் தபாற்காரன் இன்னும் போகேல்லை. வழக்கமாய் இந்த நேரத்திற்கெல்லாம் எங்கடை படலையால போடுவன். இந்த மழை ஊரொத்த மழை போல கிடக்கு. 'றெயில்' இன்னும் வரேல்லையோ தெரியாது" என்று சொல்லிக் கொண்டே வள்ளிநாயகி தனது வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிருள்.

புளியடி வளவுக்காரரின் கலியாணப் பேச்சை பொன்னம்மா அன்றைக்கே கணவனிடம் சொன்னுள். அதனைக் கேட்ட பொன்னையா துள்ளிப் பாய்ந்தார். "உதென்ன கதை அதுகளுக்கு ஓமெண்டிட்டு பேந்து எந்த முகத்தோடை முடியாதெண்டு சொல்லுறது மனிஷனுக்கு வாக்கு நாணயம் வேண்டாமே? உயிர் போனுலும் உதுக்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டன்" பொன்னம்மா தொடர்ந்து இவருடன் பேசுவதில் வேலையில்லை என்பதை உணர்ந்து "சரி தம்பிக்கு ஒரு காயிதம் போட்டுப் பாப்பம்." என்று சொல்லிவிட்டு நடுவிலானைக் கொண்டு விஷயத்தை எழுதிவித்துப் போட்டாள்.

வள்ளிநாயகிக்கு அப்புவின் சொல் ஆறுதலை அளித்தது: 'தம்பியும் அப்புவைப் போலத்தான். அவனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சம்பந்தம் நல்ல விருப்பம். இதுக்குச் சம்மதிக்க மாட்டான்' என்ற முழு நம்பிக்கையுடன் அவளும் கணபதிப் பிள்ளையின் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'அவரோடை கதைச்சு நாளைக்கு ஒரு முடிவு சொல்லுறன்' என்று பொன்னம்மா சொன்னதை மனதில் வைத்து; சின்னம்மா அன்றிரவு பொன்னையாவும் பொன்னம்மாவும் பேசியதை வேலிக் கூடாகக் காதுகொடுத்துக் கேட்டாள். மறுநாள் 'தண்ணிக்கு'ப் போகும் போது பொன்னம்மா தேடி வந்து ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தாள் சின்னம்மா. அது நடக்கவில்லை. 'வீணு இவயளெட்டை வலியப்போய் மூக்கு உடைபட்டுப் போனம்' என்ற மனக்கவலையுடன் 'மன்னை' நீட்டிக் கொண்டிருக்கிறுள் அவள். பொன்னம்மா 'தம்பியின்ரை கடிதம் வரட்டும். அதுக்குப் பிறகு இதைப்பற்றிக் கதைப்பம்; என்ற எண்ணத்துடன் சின்னம்மாவைச் சந்திப்பதை ஒரு கிழமையாக வலிந்து தவிர்த்துக் கொண்டு வருகிறுள்.

வள்ளிநாயகி அவிழ்த்துவிட்ட ஆட்டுக்குட்டி பொட்டுக்குள்ளாற் சென்று சின்னம்மா வீட்டு முற்றத்தில் வைக்கப் பட்டிருந்த மாங்கன்றைச் சுற்றியுள்ள காவோலையைப் பிய்த்துக் கொண்டு உட்சென்று கடித்து விட்டது.

ஆட்டுக்குட்டி பொட்டுக்குள்ளால் மண்கத்துக்கத்திக் கொண்டு மாட்டுக் கொட்டிலை நோக்கி ஓடி வருகிறது. அதனைத் துரத்திக் கொண்டு பொட்டு வரையும் வந்து சின்னம்மா சந்தமாகப் பேசுகிறுள்; ''ஆட்டை அவிழ்த்து விட்டிட்டு தெருவிலை என்னடி பார்த்துக் கொண்டு நிக்கிறுய். பின்னையென்ன குமரை நேர காலத்தோடை கரை சேர்க்கோணும குமர் முத்திக் குரங்கு வத்திவிட்டால் அப்பிடித் தானே செய்யிங்கள்.''

இக்கடும் சொற்கள் வள்ளிநாயகியின் காதுடன் வந்து மோதிப் பெரும் வேதனையை உண்டாக்குகிறது. பொன்னம்மாவிற்குக் கடும் கோபத்தை மூட்டுகிறது. மழை பெய்யத் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுக் குட்டியைக் கட்டி அணைத்து அடிபட்ட அதன் காலைத் தடவிக் கொண்டிருக்கும் வள்ளிநாயகிக்கு அருகிலே சென்று அதனைப் பார்த்தபடி பொன்னம்மா பேசுகிறாள். "பாவம் வாயில்லாச் சீவன். இரக்கமென்றொண்டு இருந்தால் தானே பிள்ளை குட்டியளைப் பெத்து வளர்த்தால் தானே தெரியும் "

"என்னடி .....என்னை மலடி எண்டு பேசிறியோடி. உன்னைப்போல பன்டியள் மாதிரி 'வத வத'வெண்டு பெத்துத் தள்ளுறதோடி."

'ஊர்ச்சனங்கள் உவவைத் தாடகை எண்டு சொல்லுறது சரிதான். சும்மா இருந்த எங்களை வலியச் சண்டைக்கு இழுக்கிறாவே' என்று நினைத்துக்கொண்டு அடிபட்ட ஆட்டுக் குட்டியை மாட்டுக் கொட்டிலுக்குள் தூக்கிச் செல்கிறாள் வள்ளிநாயகி.

"உப்பிடிக் கொத்த இரக்கசிந்தை இல்லாதுகளுக்குக் கடவுள் பிள்ளையைக் குடுப்பாரே."

"என்னடி தோறை 'சீலம்பாய்'ப்பட்டுக் கிடந்த உங்களுக்கு இப்ப பெருமை வந்திட்டுதோடி. கண்டறியாத ஒரு உத்தியோகம் மோனுக்கு வந்தாப் போல துள்ளிக் குதிக்கிறாயடி. நான் மலடிதான்ரி உன்னைப்போல ஒரு புருசன் அடங்காமல் சின்னையரை வைச்சிருக்கிற மாதிரி இல்லையெடி." தூறும் மழையிலும் வேலிக்கு அந்தப் பக்கத்தில் சீலையைச் சிரைச்சுக் கட்டிக் கொண்டு தலைவிரிகோலமாகத் தாடகை போலவே காட்சி தருகிறாள் சின்னம்மா.

"எடி பொறுக்கி என்னடி சொன்னனி. உன்ரை வாயில புத்தெல்லோடி எழும்பப்போது. உன்ரை சீத்துவக் கேடு எனக்குத் தெரியாதெண்டு நெச்சியோடி. கலியாணம் கட்ட முன்னம் கீழ்ச்சாதிப் பொடியனோடை கலைவட்டதை மறந்து போனியோடி பரத்தை" பலமாகக் கத்துகிறாள் பொன்னம்மா சன்னதம் கொண்டவள் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடி முழக்கத்துடன் மழை பலமாகப் பெய்கிறது; உடுத்திருந்த சீலை உரிந்து விழுவது போல இருக்கிறது சின்னம்மாவுக்கு.

"எடியே வேசை நீ பத்தியெரிஞ்சு, பரிநாசமாய் போவாயடி." என்று மண்ணை அள்ளி வேலிக்கு மேல் வீசுகிறாள் சின்னம்மா.

இது பொன்னம்மா: "எடியேய் காந்தாரி உன்ரை குலுக்கல் எனக்குத் தெரியாதேடி"

உள்ளே படித்துக் கொண்டிருந்த சரசு, வசை புராணம் வாசிப்பதைக் கேட்டு வெளியே வந்து தாயின் கைகளைப் பிடித்த வண்ணம் சொல்லுகிறாள்; "அம்மா உள்ளுக்கு வாணை. உந்த மனிஷியின்ரை குணம் தெரியாதோ? நீ ஏன் கதை குடுத்தனி"

"எடி குமரி என்னடி சொன்னனி. முந்தநாள் பிறந்த நீயும் கதைக்க வெளிக்கிட்டிட்டியே"

"அயலட்டைக்கை ஒண்டுக்க ஒண்டு எண்டு பாக்கிறன் நீ எல்லாரோடையும் ஏறுப்படுறுயெடி எனக்கு வாயில வருகுது...... இவள் வேசைக்கு கீறிப்போட்டு உப்புப்போட்டாலும் எனக்கு இப்ப இருக்கிற ஆத்திரம் தீராது"

எப்படியோ தாயை இழுத்துக் கொண்டு குசினிக்குள் செல்கிறாள் சரசு.

வேலிப்பக்கமாகக் காறித்துப்பும் சத்தம் கேட்கிறது.

"குட்டி மாமா வந்திட்டார். சமா கூடப்போகுது" என்று சரசு சொல்கிறாள்.

சின்னம்மா புருசனைக் கண்டதும் ஒப்பாரி வைத்துத் தலையில் அடித்து ஒரு பாட்டம் அழுது தீர்த்துவிட்டு ஏதோ சொல்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறிக் குட்டியர் தொடங்கி விட்டார்.

அப்பொழுது மாடுகள் அழுது கேட்கிறது. படலையைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறார் பொன்னையா.

பொன்னம்மா நடந்ததைச் சொல்கிறாள். விறுந்தையில் சரிந்துகொண்டு பொன்னையா மனைவி வாசிக்கும் குற்றப் பத்திரிகையை ஒன்றுமே சொல்லாது கேட்டுக் கொண்டிருக்கிறார்.

''எழும்புங்கோவன் அடைக் கோழி மாதிரி மசிந்திக் கொண்டு நிக்கிறியள். வெக்கம் ரோசம் இல்லையே' அவளும் அவனும் கேக்கிற கேள்வி. அவன் மூக்கு முட்டக்குடிச்சிட்டு அமர்கொள்ளுறதை ஒருக்கால் காது குடுத்துக் கேளுங் கோவன்''

மழை சிறிது குறைகிறது. வெறிக் குட்டியரின் பேச்சுக் குறைந்தபாடில்லை. ''இப்ப இவையின்ரை தளகத்தன் உவன் சின்னையன் தான். உவனொரு தரவளி, உவனைப் பேக்காட்டி பெடிச்சியை கமஞ் செய்யிறவனுக்குக் கட்டிக் குடுத்திட்டு தன்ரை பிறுமோளுக்கு மாப்பிளை எடுக்கிற திட்டம். அவர் எண்ணேடையுமெல்லே காணிச் சங்கதியில மாட்டுப்பட்டிருக்கிறார். உவங்களுக்கெல்லாம் செய்யிறன் வேலை. ''டேய் பொன்னையா! இஞ்சால வாடா, உன்ரை பெண்டிலை அடக்கி வைக்கிறியோ அல்லாட்டி நான் அடக்கி வைக்கிறதோ.''

''புருசன் வர ஒண்டைப் பத்தாக்கி மூட்டிக் குடுத்திருக்கிறான்......கேட்டியளே வெறிக்குட்டியற்றை கதையை. உவள் சண்டாளி முதல்ல ஒரு கதை சொன்னாள், என்ரை வாயால சொல்லேலாமல் கிடக்கு. அவளைப் போல மற்றவையளும் தொடுப்பு வைச்சிருக்கினமே. பாவம் சின்னையாண்ணை ஒரு வஞ்சகமில்லாத சீவன்: உடன் பிறப்பு மாதிரி எங்களோடை வாராப்பாடாக இருக்கிறது அவளுக்குக் கண்ணுக்க குத்துது. இப்ப சொல்லுற கதையைக் கேளுங்கோவன். என்ன வாயை மூடிக்கொண்டு இருக்கிறியள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

":என்னப்பா அயலட்டைக்கை இருந்து ஒரு ஆத்திரம் அந்தரத்துக்கு ஓடி வாறது அவைகள் தானே. அவள் சின்னம்மாவைப் பற்றி உனக்குத் தெரியுந்தானே. அவள் பேசினல் நீ காதில விழாத மாதிரி இருக்கிறதுக்கென்ன."

"என்ன...... உப்புப்புளி இல்லாத கதை கதைக்கிறியள். அவ ராசாத்தி பேச நாங்கள் ஊமை மாதிரிக் கேட்டுக் கொண்டிருக்கிறதே. நீங்கள் நெடுகவும் உப்பிடித்தான். அது தானே அந்த அருமந்த காணியைத் தம்பியாருக்குத் தாரைவாத்துக் குடுத்தனீங்கள்."

பொன்னையாவுக்குப் பறிபோன அந்தக் காணியின் நினைவும் தம்பியாரின் நினைவும் நெஞ்சில் ஈட்டியாகக் குத்துகிறது. 'ஏதோ வயித்தெரிச்சலில் பேசுகிருள் பனுஷி' என்று தனது மனதை ஆற்றிக் கொள்கிருர்.

அடுத்த வீட்டில் குட்டியர் மனைவிக்குச் சொல்கிருர்: "கொட்டப் பெட்டிக்கை காசு கிடந்தால் ஒரு ஐஞ்சு ரூபா தாறியே குருசாமியின்ரை கடைக்கு ஒருக்கால் போட்டு வாறன். உவன் பெட்டையன் பொன்னையன் பேசாமல் கிடக்கிறன். உதுக்குள்ளை ஏதோ கிடக்கு. எல்லாத்துக்கும் நான் வாறன். இண்டைக்கு ரெண்டில ஒரு முடிவு எடுக்கோணும்."

"ம்...... இந்தாருங்கோ மழை வரப் போகுது, சில்லறையில்லை பத்து ரூபாத்தான் கிடக்கு. மழை வாறதுக்கிடையில சுணங்காமல் ஓடியாருங்கோ "

குசினிப் பக்கமாகப்போகும் பொன்னம்மா சொல்லிக் கொண்டு போகிருள், "புளியடி வளவாற்றை கலியாணப் பேச்சும் வேண்டாம். உவள் வேசையின்ரை உறவும் வேண்டாம்."

வாடைக் காற்று கார்கொண்ட மேகத்தைக் கீழ் வானத்திலிருந்து மேலே எடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

வானத்தில் இருள் சூழ்ந்ததால் ஆறு மணிக்கு முன்னதாகவே பொழுது இருண்டு விட்டது.

மருத்தவ ஆராய்ச்சிக்காக ஏதோ ஒரு குறிப்பைத் தேடி மருத்தவ நூல் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருக்கிருர் செந்தில்நாதன்.

மங்களம் செந்தில்நாதனுக்கு முன் இருக்கும் கதிரையில் இருந்து கொண்டு நெஞ்சில் முட்டியிருந்த வேதனையைச் சொற்களால் வடிக்கிருள் "என்னைப்போல இந்த உலகத்திலே பாவம் செய்தவை ஆர் இருக்கினம். ஆஸ்பத்திரிக்குப் போனுல் நேரத்துக்கு வீட்டுக்கு வாறதில்லை. எந்த நேரமும் விசர் ஆராய்ச்சி. உங்களுக்கு என்னத்துக்குக் குடும்ப வாழ்க்கை .... ? உங்கடை வெருட்டு ஒண்டும் இந்த மங்களத்தில சரிவராது. நான் கடைசி மட்டும் தெல்லிப்பழைக்கு வர மாட்டன். கொழும்புக்கு மாறிப் போறதெண்டால் நான் உங்களோடை வாறன் அல்லாட்டி எனக்கு வேறு வழி தெரியும்"

செந்தில்நாதன் கோபத்துடன் மங்களத்தைப் பார்த்துவிட்டு, புத்தகத்தில் தேடிய பகுதி கண்ணுக்கு அகப்படவே அதை வாசிக்கத் தொடங்குகிருர்.

மங்களம் கிட்ட வந்து' "நான் வாய் உளையச் சொல்லிக்கொண்டிருக்கிறன். நீங்கள் வாயை மூடிக்கொண்டு கண்டறியாத புத்தகத்தை வாசிச்சுக் கொண்டிருக்கிறியள்,' என்று சொல்லிக் கொண்டே அப் புத்தகத்தைக் கைகளால் தட்டி விடுகிருள். அது நிலத்தில் விழுந்து மடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில்நாதன் கோபத்தில் தன்னை மறக்கிறார். அவரது கை மங்களத்தின் கன்னத்தில் பளீரெனப் பதம் பார்க்கிறது. அன்றுதான் முதல் முறையாக அவர் கைநீட்டி மங்களத்திற்கு அடிக்கிறார்.

''ஐயோ என்னைக் கொல்லுறான்'' மங்களம் பெரிதாகச்சத்தம் வைக்கிறாள்.

அப்பொழுது தேர்தல் விடயமாக அலைந்து திரியும் இராமலிங்கம் 'தண்ணீர்'த்தாகம் தீர்ப்பதற்காக வீட்டிற்குள் வருகிறான்.

''இது என்ன வேலை?'' இராமலிங்கம் கேட்கிறான். மங்களம் அழுது கொண்டே சொல்கிறாள் '' என் வாழ்க்கையைக் கெடுத்து பெரிய டொக்டருக்குக் கட்டித் தந்தியள். நான் அடி உதைபட்டு வதைப்படுறன்.''

''நீர் ஒரு மனிஷனா?'' இராமலிங்கம் படபடக்கிறான்.

''இது எனது குடும்பப் பிரச்சினை. உமக்கு இதில் தலையிட வேண்டிய அவசியமில்லை.''

''குடும்பப் பிரச்சினையைக் குடும்பத்துக்கை தீர்த்து வைக்க முடியாமல் போனால் மற்றவை தானே தீர்த்து வைக்கோணும். பெரிய கதை கதைக்கிறீர்; நீர் பெரிய படிப்புப் படிச்சாப் போலயென்ன நாங்கள் உம்மைக் காசுக்கு வாங்கியிருக்கிறம். நல்லா யோசிச்சுப் பாரும் உம்மடை சகோதரி இண்டைக்கு நல்லா வாழ்கிறாள் எண்டால் அது நாங்கள் தந்த பணத்தாலதான். உம்முடைய அப்பர் ஜெயராசாவுக்கு அலுவல் பாக்கிறாராம். அவரெட்டையும் இதைப் போய்ச் சொல்லும்.''

செந்தில்நாதனுக்கு கோபத்தால் முகம் 'குப்' என்று வியர்க்கிறது, கண்கள் சிவக்கின்றன. என்ன செய்வது என ஒரு கணம் யோசிக்கிறார். மனக்கசப்பு – கோபமாகி இன்று ஒருவரை ஒருவர் வஞ்சம் தீர்க்குமளவிற்கு வளர்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு இந்த வீட்டில் இனி வேலையில்லை. நான் போறன், என்னைத் தேவையெண்டால் தெல்லிப்பழைக்கு வரலாம்.'' செந்தில்நாதன் காரை நோக்கிப் புறப்படுகிறார்

''உமக்குக் காரில அலுவல் இல்லை. அது நாங்கள் மங்களத்திற்குச் சீதனமாகக் குடுத்தது'' இராமலிங்கம் சத்தமாகச் சொல்கிறான்:

''சரி எனக்கு அதுவும் வேண்டாம்'' செந்தில்நாதன் மங்கள வாசத்தை விட்டு வெளியேறுகிறார்.

வானம் நன்றாக இருண்டு கொண்டு வருகிறது.

இவற்றையெல்லாம் தன் கண்களால் பார்த்து ஒன்றுமே பேச முடியாமல் வலி எடுக்கும் நெஞ்சுடன் சுவரிலே ஒரு கையைப் பாரப் படுத்திக் கொண்டு, 'என்ரை குடும்பத்திற்கு இப்படி ஒரு சீரழிவு வந்திட்டது', என்று பெரு மூச்சுடன் தூணோடு தூணாக நிற்கிறார் வட்டிக்கடை வைத்திலிங்கம்.

'நல்ல ஒரு மனிஷனுக்கு இப்படி ஒரு நிலையா?' எனக் கலங்குகிறது லட்சுமியின் நல்ல உள்ளம்.

வைராக்கியம் பிடித்த நெஞ்சுடன் தெருவில் நடந்து கொண்டிருக்கும் கணவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் மங்களம்.

டொக்டர் செந்தில்நாதன் நடந்து சந்திவரை வந்து விட்டார். மின்னல் ஒன்று வானத்தில் தோன்றுகிறது. சிறிது நேரத்திற்குப்பின் மங்கள வாசத்தின் பக்கமாக இடி விழும் சத்தம் காதைப் பிழக்க வைக்கிறது.

## 22

அரசடிப் பிள்ளையார் கோயிலில் வட்டிக்கடை வைத்திலிங்கமும், மருமகள் லட்சுமியும், பேரப் பிள்ளைகளும் கூடி நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அவர்களது புராணப் படிப்பு. தொடர்ந்து பல நாட்களுக்குக் கந்த புராணம் படிக்கப்படும். தை மாதத்தில் நல்லதொரு நாளில் ஊருக்கெல்லாம் சொல்லி கலியாணப்படிப்பு வைத்து, மறுநாள் பூசை கொடுக்கப்படும். அதற்குள் புராணம் படிப்பது முடிக்கப்பட்டுவிட வேண்டும். சில படிப்புக்களுக்கு ஊரில் உள்ள பெரிய பிரமுகர்கள் உபயமிட்டுச் சிறப்பான நைவேத்தியம் நடைபெறும்.

கந்த புராணத்தில் யுத்த காண்டம் தொடங்கி விட்டது. சிங்கப்பூர் சின்னையா இராகத்துடன் பாடலை வாசிக்கிறார். எக்கவுண்டன் ஜெயராசா அதே இராகத்துடன் உரை சொல்கிறார்.

'சூரனும் சிங்கனும் வச்சிரயாக்கை உடையோரான மையால் அவர்களுடைய உடலிற்பட்ட பாணங்கள் யாவும் துகள்களாயின; அவர்கள் மேற்பட்டசரங்கள் இன்பத்தையும் அறத்தையும் ஈட்டாது வீண்போகும் பொய்யர் செல்வத்தைப் போலாயின.... '

வைத்திலிங்கத்திற்குப் புராண வாசிப்புக் கேட்பதில் மனநாட்டம் செல்லவில்லை. இன்பத்தையும் அறத்தையும் ஈட்டாது வீண்போகும் தன் செல்வத்தைப் பற்றியே நினைத்து பிள்ளையாருக்கு முறையிட்டு, கிருபை செய்யும்படி வேண்டுகிறார். பெருமூச்சுடன் மகள் மங்களத்தைப் பற்றி நினைக்கிறார். என்றுமே இன்பத்துடன் இருக்க வேண்டுமென்பதற்காக மங்களத்தை 'டாக்குத்தர்' ஒருவருக்குக் கலியாணம் செய்து வைத்தார். அது இன்று இப்படி வந்துவிட்டது. 'இனி என்ன நடக்குமோ?,

மகன் இராமலிங்கமோ அறமற்ற வழியிலே சென்று கொண்டிருக்கிறான். கிராமச் சங்கத் தேர்தலில் சியமனாக வர வேண்டும் என்று அவன் செய்யும் கூத்துக்கள்...! 'நான் தேடி வைத்த சொத்துக்களை என் கண்ணுக்கு முன்னாலேயே அழிக்கிறான்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிள்ளையாரே இப்படி என்னை ஏன் சோதிக்கிறாய்!'

உள்ளே புராணப் படிப்பு தொடர்கிறது.

வெளியே பிரசாதம்வாங்க வந்திருப்பவர்கள் போடும் இரைச்சல் புராணப் படிப்பின் ஒலியை மழுங்க வைக்கிறது.

• • • •

மங்களத்திற்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறது. அன்று வீட்டில் நடந்த சண்டைக்குப் பிறகு போன செந்தில்நாதன் அன்றிரவு வரக்கூடும் என எண்ணினாள். வரவில்லை. மறுநாளாவது வரலாம் என எதிர்பார்த்தாள். அன்றும் வரவில்லை.

இன்று காலை தங்கையையும் கூட்டிக்கொண்டு தெல்லிப் பழைக்குப் போய்விட்டதாக திருமதி சிவநேசன் சொன்னாள்.

'நான் தன்னிடம் வந்து மன்னிப்புக் கேட்பேன் என்ற எண்ணம் அவருக்கு இருக்குப்போல. கடைசி மட்டும் நான் அங்கு போகப் போவதுமில்லை. மன்னிப்புக் கேட்பதுமில்லை'

இப்படி ஒரு நிலை தனக்கு வந்து விட்டதை எண்ணும் பொழுது மங்களத்திற்குக் கண்கள் கலங்குகின்றன.

அவள் என்றுமே செல்லப் பிள்ளைதான். பத்து வயது தொடக்கம் அம்மாவின் ஒரேயொரு செல்ல மகளாக இருந்தாள். தாய் என்றுமே அவளைக் கண் கலங்கவிடவில்லை. தாய் இறந்ததும், தாயில்லாப் பிள்ளை கண் கலங்கக் கூடாதென்று, அவள் எதைக் கேட்டாளோ அதை அப்பா தப்பாமல் வாங்கிக் கொடுத்தார். கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் 'போடிங்'கில் செல்வச் சீமான்களின் பிள்ளைகளின் சூழலிலே அவள் படித்தாள்.

படிப்பு முடிந்ததும் கொழும்பு வாழ்வால் கவரப்பட்ட மங்களம் யாழ்ப்பாணம் போக விரும்பாது கொழும்பில் கம்பனி ஒன்றில் உத்தியோகம் பார்த்துக் காலத்தைக் களிப்புடனே கழித்தாள். உழைக்க வேண்டிய அவசியம் அவளுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. தன்கையால் உழைத்ததை தானே செலவு செய்து யாருக்கும் அடிமை இன்றி சுதந்திரப் பறவையாக இருந்தாள். அப்பொழுது தான் அவளது வாழ்வில் இன்ஸ் பெக்டர் மோகன் குறுக்கிட்டான். அவனும் அவள் எதை விரும்பிக் கேட்டாலும் எங்கு சென்றுவது, எவ்வளவைச் செலவழித்தாவது வாங்கிக் கொடுத்து விடுவான்.

'இவர் ஒரு கஞ்சத்தனம் பிடித்தவர்...சீ சொன்னலே வெட்கம், ஐந்துசதக் காசுக்காசப் பத்துக் கடைகளில் விலை கேட்டுச் சாமான் வாங்குவார். இவரைப் போலத்தான் இந்த ஊரில கனபேர் இருக்கினம். இந்த வரண்ட ஊரையே விட்டு கொழும்புக்குப் போவது தான் நல்லது.'

மங்களத்திற்கு ஒரு வழியே தோன்றுகிறது. கொழும் புக்குப் போய் அதே கம்பனியில் கொஞ்ச நாளைக்கு வேலை செய்வது. அவளுக்கு இப்பொழுது அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையே நிம்மதியைத் தரும் போலத் தெரிகிறது.

அவளது சிந்தனையில் இன்னும் ஒரு பொறி தோன்று கிறது. இன்று திருமதி சிவநேசன் சொன்னவற்றை நினைவு படுத்துகிருள். 'நான் நினைக்கேல்ல நீர் உந்த ஆளோடை இனிச் சீவியம் நடத்தலாமெண்டு. ஒரே வழி 'டைவோஸ்' எடுத்துப் போட்டு வேறையாரையும் கலியாணம் செய்ய வேண்டியது தான். ஏன் உம்மடை பழைய காதலன் மோக னைக் கேட்டுப் பார்க்கலாம் தானே. அவன் தனிக்கட்டை தானே, *He is very smart gentleman*'

இந்நிலையில் மோகன் தன்னை ஏற்றுக்கொள்வாரோ என்று மங்களம் எண்ணிப் பார்க்கிருள். 'நீ என்றைக்கும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை' என்று அன்றைக்குச் சொன்ஞரே. அப்படியென்ருல் யார் கேட்பது? எப்படிக் கேட்பது?

மங்களத்திற்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

கோவிலுக்குப் போன பெரியையாவையும் அம்மாவை வும் எதிர்பார்த்துக் 'கேற்' றடியில் நின்று கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரப் பொடியன் ஓடிவந்து சொல்கிறான்;''அம்மா... இன்ஸ்பெக்டர் தொரை ஜீப்பிலை வாறாங்க''

இனம் புரியாத பரபரப்பும் ஆவலும் போட்டியிட மங்களம் வீட்டின் முன் வாசலுக்கு வருகிறாள்.

நிமிர்ந்த நெஞ்சு, நேர்கொண்ட பார்வை, அடர்ந்த அழகான கேசங்கள்' தனி அழகு கொஞ்சும் முகம்... அவன் பார்வைபட மங்களம் நிற்கிறாள். அவனைக் கண்டதும் அந்தச் சிரஞ்சீவிப் புன்னகையை அவன் சிந்துகிறான்.

''மங்களம் சியமன் எங்கை போயிட்டார்?''

''எலெக்ஷன் அலுவலாகத் தான் போயிட்டார்.'' என்று மங்களம் தடுமாற்றத்துடன் சொல்கிறாள்.

மோகன் மங்களத்தை உற்றுப் பார்க்கிறான். அவளது முகமும் குரலும் வித்தியாசமாக இருப்பதை அவன் கவனித்துக் கொள்கிறான். அவன் தானாகக் கதிரையில் உட்கார்ந்து கொண்டே கேட்கிறான்.

,'மங்களம்... ஏன் இப்பவும் உனக்கும் டொக்டருக்கும் ஏதாவது கரைச்சலா?''

அவள் பகீரதப் பிரயத்தனம் செய்து அடக்கி வைத்திருந்த அழுகையைக் கட்டவிழ்த்து விடுகிறாள்.

''ஐயோ மோகன் நான் இங்கை கிடந்து சித்திரவதைப்படுறன். இவரோடை இருந்தால் நானும் ஒரு '*Mental Patient*' ஆகத்தான் வருவேன்''

''ஏன் அப்படி உனக்கு என்ன வேதனை?''

மங்களம், நடந்து முடிந்தவற்றை ஒன்றும் விடாமல் சொல்லி விடுகிறாள். ''எனக்கு இனி இவரோடை வாழச் சரிவரா. 'டைவோஸ்' எடுக்கலாம் எண்டு யோசித்திருக்கிறன்''என்று சொல்லிவிட்டு நோயின் வேதனையைத் தாங்க மாட்டாத குழந்தை, தாயின் முகத்தைப் பார்ப்பது போல மோகனின் முகத்தைப் பார்த்து அழுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மங்களம் நீ அழுவதைப் பார்க்க என்னால் பொறுக்க முடியவில்லை. உனக்கு விருப்பமென்டால் நீ என்னோடை வா. நான் உன்னைக் கண் கலங்கவிடாது சந்தோஷமாக வைத்துப் பார்க்கிறன்.''

ஒரு மனோ வியாதிக்காரனுக்கு மின்சார அதிர்ச்சி யூட்டும் வைத்தியத்தின் பின் ஏற்படும் தெளிவு மங்களத்திற்கு உண்டாகிறது

''உண்மையாச் சொல்லுறீங்களா...? நீங்கள் இந்த மாதம் முடிய மாறிப் போறதெண்டு அன்றைக்குச் சொன்னியள்''

''எனது அடுத்த ஸ்டேசன் காலி. அடுத்த மாதம் பதினேஞ்சாந்தேதி அளவில தான் பாரம் எடுப்பன். இப்ப இரண்டு கிழமை லீவிலை. பண்டாரவளையில எனது சிநேகிதன் ஒருவன் எஸ்டேட் சுப்பிரீண்டனா இருக்கிறான் அங்கு போய் தங்கி விட்டுத்தான் பிறகு காலிக்குப் போவன்.''

மங்களம் எதையோ யோசிக்கிறாள்; ஒன்றுமே சொல்லவில்லை.

மோகன் கூறுகிறான்; ''மங்களம் நான் வரப்போறன். நீ இதுபற்றி தீர ஆலோசித்து ஒரு முடிவிற்கு வா. நான் உன்னை என்னுடன் வரும்படி வற்புறுத்தேல்லை. நீ அவரோடை சந்தோஷமாக வாழ முடியுமென்றால் எனக்கும் சந்தோஷந்தான்.''

''மோகன் இவர் இனி திருந்துவாரோ என்ற நம்பிக்கை எனக்குத் துப்பரவாக இல்லை''

''ஏதோ நீ நல்லாக யோசிச்சு எனக்கு ஒரு முடிவைச் சொல்லு. நான் வாறன்.''

அரசடிப் பிள்ளையார் கோவிலில் அன்றைய புராணப் படிப்பு முடிகிறது. வெளியே மோதகத்துக்கு வந்து நிற்பவர்களின் ஆரவாரம் இன்னும் ஓயவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

தேர்தல் தினத்தின் பரபரப்பு அக் கிராமத்தை இன்று சுறுசுறுப்பாக்கியுள்ளது.

அரசடி, வடலியடைப்பு, காரைத் தோட்டம் ஆகிய வட்டாரங்களின் வாக்குப் பதிவுகள் அரசடிப் பாடசாலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

டேவிட் மாஸ்டர் கூட்டுறவுச் சங்கத்தில் தனக்கு இருக்கும் செல்வாக்கைச் செவ்வனே பயன்படுத்தியுள்ளார். கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் ஓடியாடி உழைக்கிறார்கள்.

இன்ஸ்பெக்டர் மோகன் அடிக்கடி வந்து போகிறான். இதுகாலவரை இல்லாத அளவிற்கு வாக்களிப்பு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எப்பொழுது வாக்களிப்பு முடியும் எனப் போட்டியிடுபவர்களும் வாக்களிப்பவர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாக்களிப்பு முடிந்து வாக்குகள் எண்ணப்படுகின்றன.

இராமலிங்கம் தனது கையாட்கள் புடைசூழ இரு வட்டாரங்களிலும் தனக்கு வெற்றி கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கிறான். அவனுக்கு வெற்றி நிட்சயமெனப்படுவதால் மேலதிக வாக்குகள் பற்றியே கவலை.

மனேஜர் மாணிக்கவாசகர் 'பூசிப் புணர்த்தி' நிற்கிறார். அவரது கையாட்கள் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கவுண்டன் ஜெயராசா, மனேஜர் மாணிக்கவாசக ருக்கு அருகில் அமைதியாக நிற்கிறார்.

முருகேசு மாஸ்டரைச் சூழ்ந்து இளைஞர்கள் நிற்கிறார்கள். முருகனும், நடேசனும் மாஸ்டருக்குப் பக்கத்தில் நிற்கிறார்கள்.

இராமலிங்கத்துடன் உரையாடிவிட்டு வந்த கணபதி மனேஜர் மாணிக்கவாசகரின் பார்வைபட நிற்கிறான்.

இன்ஸ்பெக்டர் மோகன் முன்செல்ல, தேர்தல் முடிவை அறிவிக்கப் பாடசாலை வாசலுக்குத் தேர்தல் அதிகாரி வருகிறார். கூடி நிற்கும் சனங்களை விலக்கிக் கொண்டு இராமலிங்கத்தின் கையாட்கள் மாலைகளுடன் முன்னுக்கு வருகிறார்கள்.

முதலில் வடலியடைப்பு வட்டாரத்து முடிவே சொல்லப்படுகிறது. குறைந்த வாக்குகள் எடுத்தவர்களது பெயரே முதலில் சொல்லப்படும்.

''வைத்திலிங்கம் இராமலிங்கம் 161 வாக்குகள்; கட்டுக் காசை இழக்கிறார்''

அடுத்தது யார்? மனேஜர் மாணிக்கவாசகரின் இதயம் ஒரு கனம் நின்று துடிக்கிறது.

''வேலன் நடேசன்........''

தேர்தல் அதிகாரி இதனைச் சொல்லி முடிந்து அடுத்தவரின் வாக்குக்களைச் சொல்வதற்கு முன்பே, ''மனேஜர் ஐயாவுக்கு ஜே! ஜே!'' என்ற கோஷம் வானைப் பிழக்கிறது. மாணிக்கவாசகரது கழுத்தில் மாலைகள் வந்து குவிகின்றன.

இராமலிங்கத்திற்கு யாரோ கழுத்தில் பிடித்து அமுக்குவது போல இருக்கிறது.

அடுத்து எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் அரசடி வட்டாரத்தின் தேர்தல் முடிவு.

முருகேசு மாஸ்டரின் பெயரே முதலில் வாசிக்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தது யார்? இராமலிங்கத்தின் இதயம் மிக வேக மாகத் துடிக்கிறது. கைகள் நடுங்குகின்றன.

"வைத்திலிங்கம் இராமலிங்கம்........"

இராமலிங்கத்திற்குத் தலை சுற்றுகிறது. தேர்தல் அதிகாரி வாசிப்பதையே அவனால் நம்பமுடியவில்லை. தொடர்ந்து வாசிக்கப்படுவதை அவனால் கிரகிக்க முடியவில்லை. தேர்தல் அதிகாரி கடைசியாகச் சொல்லும் வசனம் அவன் காதுகளிலே தேய்ந்து ஒலிக்கிறது.

"நாற்பத்திரண்டு அதிகப்படியான வாக்குக்களால் வேலுப்பிள்ளை ஜெயராசா அரசடியூர்க் கிராமசபை அரசடி வட்டாரத்துக்கு அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்படுகிறார்"

வெறிக் குட்டியரும் இன்னும் சில ஆதரவாளர்களும் வெற்றிக் களிப்பால் துள்ளிக் குதிக்கிறார்கள்.

"எங்கள் ராசா........."

"ஜெய ராசா"

மாணிக்கவாசகர், தனக்குப் போட்ட மாலை ஒன்றைக் கழற்றி ஜெயராசாவுக்குப் போடுகிறார்.

அடுத்தது காரைத் தோட்டத்துத் தேர்தல் முடிவு அதுவும் அதிர்ச்சி தருவதாகவே இருக்கிறது.

முருகன், கணபதியால் தோற்கடிக்கப் பட்டான். தேர்தல் அதிகாரி யாராவது பேச விரும்பினால் பேசும்படி கேட்கிறார்.

முருகேசு மாஸ்டரே முதலில் பேசுகிறார்; "முதலில் எனக்கு வாக்களித்த மக்களுக்கு என் மனமார்ந்த நன்றி. சென்ற தேர்தலிலும் பார்க்க இந்தத் தேர்தலில் எனக்கு அதிகமான வாக்குக்கள் கிடைத்திருக்கின்றன. எமக்குத் தேர்தலில் நம்பிக்கையில்லை. நாம் எதிர்பார்க்கும் சமுதாய அமைப்பை தேர்தலால் அமைக்க முடியாது. ஆனால் அரசடி கிராமச் சபையில் இந்தத் தடவை எமது கட்சியைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் ஒருவருமே இல்லாதது பெருங் கவலையைத் தருகின்றது. காரைத் தோட்டத்திலும் எமது கட்சி தோல்வியடைந்தது சமுதாயத்தின் பிழையான போக்கையே காட்டுகிறது. கிராம சபையில் நடைபெறும் ஊழல்களை எடுத்துச் சொல்ல எங்கள் குரல் இனி கிராம சபைக் கூட்டங்களில் ஒலிக்காது என்றாலும் நாம் வெளியே நின்று போராடுவோம்.''

மனேஜர் மாணிக்கவாசகர் இரட்டிப்பான மகிழ்ச்சியால் ஒன்றுமே பேசவில்லை. குழுமி நின்றவர்களைக் கும்பிட்டுத் தன் நன்றியைத் தெரிவிக்கிறார்.

ஜெயராசா என்ன பேசப்போகிறார் என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

''அதர்மத்தின் ஆட்சி என்றுமே நிலைத்ததில்லை. கடைசியில் தர்மமே வெல்லும்; நாம் எல்லோரும் ஒத்துழைத்து ஒரு தார்மீக சமுதாயத்தை அமைப்போமாக!''

மனேஜர் மாணிக்கவாசகரை அவரது ஆதரவாளர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள். ஜெயராசாவையும் கூட வரும்படி மாணிக்கவாசகர் வலிந்து இழுத்துச் செல்கிறார்.

வெற்றியின் ஊர்வலம் ஊர்கிறது;

வெட்கத்தால் தலைகுனிந்து காரை நோக்கிச்செல்லும் இராமலிங்கம், வஞ்சம் தீர்க்கும் நெஞ்சுடன், ஊர்வலத்தின் முன் செல்லும் மாணிக்கவாசகரைச் சுட்டெரிப்பது போலப் பார்க்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

விடிந்து எவ்வளவோ நேரமாகியும் பொழுது இன்னும் தெரியவில்லை.

நேற்று நடைபெற்ற தேர்தலைப்பற்றி ஊரெல்லாம் 'பிரேதப் பரிசோதனை' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

'அட்வான்ஸ் லெவல்' படித்து, தரப்படுத்தலால் பலமாகப் பாதிக்கப்பட்டு, பல்கலைக் கழக அனுமதி கிடைக்காது வேறு தொழில்களுக்கு முயன்று கொண்டிருக்கும் சதானந்தனும் சோமுவும் மடத்தடியில் கூடியிருந்து நேற்று நடைபெற்ற தேர்தலைப்பற்றி மீளாய்வு செய்து கொண்டு இருக்கிறார்கள்.

''இராமலிங்கத்தார் ஆடின ஆட்டத்துக்கு எங்கடை சனங்கள் நல்ல பாடம் படிப்பிச்சுப் போட்டுதுகள்,'' சோமு கூறுகிறான்.

''என்னத்தைச் சொன்னாலும் சோமு எங்கடை ஆக்களைத் திருத்தவே ஏலாது. பேந்தும் பிற்போக்கான கொள்கைகள் உள்ள ஆக்களைத் தான் ஆதரிச்சிருக்குதுகள். மணியகாரன்ரை மோன் தானே பேந்தும் சியமனா வரப் போறார்.'' இது சதானந்தனின் கூற்று.

''நாங்கள் விரும்பிற மாற்றத்தை உந்த எலெக்ஷன்களால் கொண்டு வர முடியாது.''

''இப்ப இருக்கிற சமுதாய அமைப்பில உள்ளதுக்குள்ளை வள்ளிசாப் பாக்க வேண்டியதாத் தானே இருக்கு.''

''முருகேசு மாஸ்டரின் ஆதரவாளர்கள் ஒன்பது வட்டாரங்களிலே கேட்டு ஒன்றுகூடக் கிடைக்கேல்லை. சரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத் தோட்டத்தில எண்டாலும் வந்துதே. முருகன் தோத்தது எங்களுக்குப் பெரியதொரு விழுக்காடு'' சதானந்தன் கவலையுடன் சொல்கிறுன்.

''முருகேசு மாஸ்டர் சொல்லுவர், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் இருக்கிற சமுதாய அமைப்பு வேறை, முதலாளித்துவ சமுதாய அமைப்பில இருக்கிற சமுதாய அமைப்பு வேறை' எண்டு. அது உண்மைதான். கணபதி இண்டைக்கு தாழ்த்தப்பட்ட சாதியில பிறந்தாலும் பணக்காரன் தானே; அவன் ஒரு சாதி. முருகன் ஏழை என்ற படியால் வேறை சாதி.''

''சோமு நீ சொல்லிறது நூற்றுக்கு நூறு சரி.''

''இந்த முறை எப்பிடியும் மாணிக்கவாசகர் தான் சியமனுக வருவார். எங்கடை வட்டார ஜெயராசாவை 'வைஸ்' சியமனுக வைக்கிற திட்டம் போல இருக்கு.''

''சோமு, ராத்திரி வடலியடைப்பு, காரைத் தோட்டத்தில பெரிய குளப்பம் நடந்திருக்கு மனேஜற்றை ஆக்கள் தேர்தல் வெற்றியைக் கொண்டாடியிருக்கினம். இராமலிங்கத்துக்குச் சப்போட் பண்ணின வீடுகளுக்கு முன்னுலே போய் சத்தம் போட்டிருக்கிறுங்கள். மாணிக்கவாசகற்றை கையாட்கள் சிலர் நல்லாச் சாராயத்தைக் குடிச்சுப் போட்டுப் போய், இராமலிங்கத்தை ஆதரிச்ச சண்டியன் சங்கரப் பிள்ளையெண்டை கூட்டாளி சாண்டோ மார்க்கண்டு வீட்டில போய்ச் சத்தம் வைச்சிருக்கினம். அவன் விடுருனே. வெளியில வந்து இரும்புக் கம்பியால இவங்களை அடிச்சுப் பெரிய சண்டை நடந்திருக்கு. ரெண்டு பகுதிக்கும் காயம் போல கிடக்கு. மந்திகை ஆஸ்பத்திரியில கொண்டு வந்து போட்டியிருக்கினம்; ஐயனுர் கோயிலடியில புதிசாப்போட்ட வாசிகசாலை அத்திவாரக்கல்லை இராமலிங்கத்தாற்றை ஏவல் பேய்கள் உடைச்செறிஞ்சு போட்டுதுகளாம். பாவம் குட்டியருக்கு சண்டியன் சங்கரப்பிள்ளை கோப்பறேசனில் வைச்சு பாடாக அடிச்சுப் போட்டானும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது மடத்தடிக்குக் கூப்பிடு தூரத்தில் இருக்கும் ஆதாளிமணியம் காலையில் முகங் கழுவியதும் அங்கு வருகிறுன். நேற்றும், முந்தநாளும் வெள்ளிக்கிழமையும், புரட்டாசிச் சனியும் என்பதால் கள்ளுக் குடிக்காத சோட்டையுடன் இரண்டு நாட் சேடத்தையும் சேர்த்துக் குடிக்க ஆசையுடன் வெறிக்குட்டியரின் வரவை எதிர்பார்த்து அவன் மடத்திற்கு வருகிறுன்.

சதானந்தமும் சோமுவும் உரையாடுவதைச் செவிமடுத்த மணியம் சொல்கிறுன், "ஏன் எங்கடை வட்டாரத்தில மாணிக்கவாசகற்றை வால்கள் போல கிடக்கு ஒருவேலை செய்திருக்குதுகள். தன்ரை வீட்டுக்குப் போற ரேட்டுக்கு இராமலிங்கத்தார் 'லிங்கம் ஒழுங்கை' எண்டெல்லே பேர் வைச்சவர். அந்த போட்டை உடைச்சு பெற்ரேல் ஊத்தி எரிச்சிருக்கிறுங்கள்." "சதா, இது தான் ஜனநாயகம் !" சோமு ஏளனச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு சொல்லி முடிவதற்குமுன் விழுந்தடித்துக் கொண்டுவந்த வெறிக்குட்டியரின் குரல் ஒலிக்கிறது.

"மணியம் ஒரு சங்கதி கேள்விப்பட்டியோ? உவன் இராமலிங்கத்துக்கு உது வேணும். எலெக்ஷனிலே தோத்தான்; இப்ப உடுத்த சீலை உரிஞ்சு விழுந்த மாதிரி இது நடந்திட்டுது."

ஆதாளிமணியம் மட்டுமல்ல, சதானந்தம், சோமு எல்லோருமே குட்டியர் சொல்லப் போகும் அந்தச் சங்கதியைப் பற்றிய ஆவல் மேலிட அவரைப் பார்க்கிறுர்கள். குட்டியர் தனக்கே உரிய, கேட்பவருக்கு முதலில் ஆவலைத் தூண்டி விறுவிறுப்பான நடையில் கூறுகிறுர்.

"உவன் இராமலிங்கத்தின்ரை தங்கைப் பெட்டை, டாக்குத்தர்-ஆர் உவன் கந்தப்பற்றை மோனைக் கட்டினவள் ராத்திரி இன்ஸ்பெக்டரோடை ஓடி விட்டாளாம்."

எல்லோரும் திகைப்படைகிறுர்கள். மடத்தடிக்கு இன்னும் சிலர் வந்து சேர்கிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் மகள் இன்ஸ்பெக்டர் மோகனுடை ஓடிவிட்டாள்' என்ற தலைப்பில் மகாநாடு மடத்தடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## 25

அந்த அதிர்ச்சிதரும் செய்தி அரசடியூரையே திகைக் கவைக்கிறது.

'கிராமச் சங்கத் தெரிவொண்டு வந்து எங்கடை ஊருக்கு என்ன பிரமசத்தி பிடிச்சுது' இப்படியே பலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மடத்தில் தூணுக்குச் சால்வையை முண்டு கொடுத் துக்கொண்டு சாய்ந்தவாறு, வருவோர் போவோருக்கு எல் லாம் அந்த அதிர்ச்சிதரும் செய்தியைச் சாங்கோபாங்க மாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் ஆதாளிமணியம்.

''எங்கட ஊரில ஒரு பெரிய தலையைச் சரிச்சுப் போட் டாங்கள்......'' என்று ஆரம்பித்து; எத்தனையோ பேருக்குச் சொல்லியும் பொச்சம் தீராதவராய் தொடர்ந்து மனம் சலிக்காது, வாயுழையாது ஒரு கதையாகச் சொல்கிறார் மணியம்.

''மனேஜர் ராத்திரி மைம்லுக்க ஒருதற்றை முகம் ஒருதருக்குத் தெரியாத நேரம் கோயிலடியால வந்திருக்கிறார்: ஆரோ ஒருவன் வெளிக்காணிக்குள்ளை ஒளிச்சு நிண்டு சுட்டுப் போட்டு கிழக்கு வேலியால பாய்ஞ்சு வயலுக்குள்ளை விழுந்து ஓடிவிட்டான் மனிஷிக்காறி வெடிச் சத்தமும் அவர் குளறின சத்தமும் கேட்டுத் தெருவைச் சுத்தி வராமல் மேற்குப் பக்கத்துக் கடப்புக் குள்ளாலை வந்திருக்கு: வாற நேரம் சுட்டவன் ஓடினதையும், கம்பை கதியால்லை சிக்கி கொஞ்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் நிண்டு தடுமாறினதையும் கண்டிருக்குது. மணிய காரன் செய்த பாவம் சும்மா விடுதே......! வாய்ப்பிறப்பு ஒண்டும் சொல்லாமல் சீவன் போட்டுதாம்: பொலிஸ் வந்து. சுட்டவன் பாய்ஞ்சு ஓடின வேலியடியிலே ஒரு காயிதத்தைக் கண்டு எடுத்திருக்கிறுங்கள். அது இராமலிங்கம் எழுதின கடிதமாம்'' ''என்ன இராமலிங்கம் எழுதின கடிதமோ'' பக்கத்திலிருந்தவர் அதிர்ச்சியுடன் ஆதாளி மணியத்தை விஞவுகிருர். ''ஓம் ஓம், இராமலிங்கம் தான் தன் கை யாலே எழுதிக் குடுத்த கடிதம். அவன் கிராமச் சங்கத் தேர் விலே தோற்ற கோபத்திலே சண்டியன் சங்கரப்பிள்ளையை ஏவி மனேஜர் மாணிக்கவாசகரைச் சுடுவிச்சிருக்கிறுன். விஷ யத்தை முடிச்சுப்போட்டு சங்கரப்பிள்ளையை தலைமறைவாக வைச்சிருக்கிறதுக்கு தன்ரை கூட்டாளிக்கு மேற்படியான் காயிதமும் குடுத்து அனுப்பி இருக்கிறுன். இப்ப அந்தக்காயி தம் தான் இரண்டு பேரையும் பிடிச்சுக் குடுத்திருக்கு! இரண்டு பேரும் தலைமறைவாகத் திரியினமாம்.''

''அப்ப இந்த 'மேடரு'க்குக் கண்ணுலை கண்டசாட்சி ஒண்டும் இல்லையோ?''

''மாணிக்கவாசகற்றை மனிஷிக்காரி சங்கரப்பிள்ளை ஓடினதை தன்ரை கண்ணுலை கண்டதெண்டு பொலிஸ் விசா ரணையில வாக்கு மூலம் குடுத்திருக்குதாம்; இது சோக்கான வழக்காய் வரும். இராமலிங்கத்தாருக்கு இது வேணும், கொஞ்ச நாளாக குதிச்சுக் கொண்டு திரிஞ்சார்.''

ஆதாளிமணியம் இதுபற்றி வேறு ஏதாவது தகவல் கிடைக்குமோ என்ற அங்கலாய்ப்புடன் கூடிக்கள்ளுக் குடிக் கும் கூட்டாளி வெறிக்குட்டியரின் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிருர். ''என்ன சங்கதி ஆளைக்காணேல்ல: எங்கையாலும் குடிச்சுப்போட்டு விழுந்து கிடக்கிறுனே மனிஷன்.''

• • • •

மணியகாரன் வீடு செத்த வீடாகிவிட்டது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நோக்குக் கூட்டுறவுச்சங்க நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இராமலிங்கத்தின் பரம விரோதியாகிவிட்ட மனேஜர் மாணிக்கவாசகரின் மைத்துனன், இராமலிங்கத்தை உய்ய விடாமல் பூண்டோடு அழிக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்டு, தனது வியாபாரச் செல்வாக்கு முழுவதையும் செலுத்தி 'எஸ். பி.' வரைக்கும் சென்று அலுவல் பார்க்கிருன்.

திடீர் மரணவிசாரணை அதிகாரியாக இருந்து எத்தனையோ பேரின் மரணவிசாரணையை நடத்திய மனேஜர் மாணிக்கவாசகரின் பூதவுடல் கீறிக் கிழிக்கப்பட்டு மரண விசாரணை செய்யப்படுகிறது.

சண்டியன் சங்கரப்பிள்ளையையும் இராமலிங்கத்தையும் பொலிசார் வலைபோட்டுத் தேடுகிருர்கள்.

ஒரு காலத்தில் அரசடியூரின் முடி சூடாமன்னனுக இருந்த மணியகாரனின் கடைசிக் கொழுந்தாகிய மாணிக்க வாசகரின் இறுதி யாத்திரை ஆரம்பமாகிறது.

## 26

வாடைக் காற்றின் சீதளத்தன்மை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. வரண்டு கிடந்த ஊர் புல்பூண்டுகள் தழைத்ததால் எங்கும் பச்சைப் பசேலெனப் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. ஐப்பசி மாதம் பிறந்து விட்டது.

பொன்னையா வீட்டில் வழக்கம் போல இரவில் மாடுகளுக்குத் தீனியாகப் பனையோலை கிழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாடுகளுக்குத் தீனி போட்டு விட்டுத்தான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்கள் சாப்பிடுவார்கள். பின்னேரம் கந்தன் பனையால் வெட்டிப் போட்ட ஓலைகளைப் பொன்னையா கிழிக்க, கிழித்த ஓலையைத் தும்பாக்கிக் கொண்டிருக்கிறாள் பொன்னம்மா; வள்ளிநாயகி கிழிக்க முடியாத சிலும்பல் ஓலைகளைச் சிறகடிக்கிறாள்.

தோட்ட வேலைகள் தொடங்கி விட்டால் ஆறுதலாக இருந்து பேச அவர்களுக்கு ஓய்வு கிடைக்காது. ஓலைகிழிக்கும் பொழுது தான் ஊர்ப் புதினங்கள் தொடக்கம் வீட்டுப் பிரச்சினைகள் வரை பேசுவார்கள்.

''மெய்யப்பா, பொடிச்சியின்ரை கலியாண வீட்டுக்கு இன்னும் எத்தினை நாள் கிடக்கு? தோட்ட வேலை, தோட்ட வேலை எண்டிருந்தால் இந்த அடுக்குகளை ஆர் பாக்கிறது.'' என்கிறாள் பொன்னம்மா.

''ஓமப்பா இண்டைக்குத் திங்கள். திங்களோடை திங்கள் எட்டு மற்றத்திங்கள் பதினைஞ்சு செவ்வாய் பதினாறு புதன் பதினேழு இன்னும் பதினேழு நாள் தானே கிடக்குது. ஒரு சேனை வேலை கிடக்குது. 'வேலி விராயல்' எல்லாம் அடைக்கோணும்.'' பொன்னையா சொல்கிறார்.

''கிணத்தடி வேலியும் சீரழிஞ்சு போச்சுது: அதையுமொருக்கால் அடைக்கோணும், கிழக்குப் பக்கத்து வேலிக்கு ரெண்டு கிடுகு மட்டை வைச்சுக் கட்டோணும்: சொன்னுப் போல இக்கணம் எல்லைவேலி அடைக்க அவ மச்சாள் சன்னதம் கொள்ளப்போரு. நேத்து கந்தனெட்டை சின்னம்மா சொன்னவளாம், எல்லை வேலிக்கு கால் முட்டக் கிடுகு வைச்சுக்கட்டட்டால் வேலியை அடைக்க விடாமல் புடுங்கி எறிவளாம்! அவ வீட்டில குமர் இருக்குப் போல கிடக்கு......'' பொன்னம்மா ஆவேசத்துடன் சொல்கிறாள்.

படலையடியில் 'டோச்' வெளிச்சம் தெரிகிறது.

''ஆரோ ஒராள் வருகுது. இந்த மழையிருட்டுக்கை ஆரது'' பொன்னையா குரலைத் தாழ்த்தி மனைவிக்குச் சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் தான் அத்தான் கோயிலிலை படிப்பு முடிஞ்ச கையோடை இதால வாறன். ரெண்டு மூண்டு நாளா இந்தப் பக்கம் வராதது எனக்கு விடியாத மாதிரிக் கிடக்குது. ஒருக் கால் பாத்திட்டுப் போவமெண்டு வந்தனான்''

''நாங்கள் கலியாண வீட்டுச் செலவு சித்தாரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறம்'' என்கிறார் பொன்னையா.

''ஓம் அத்தான், அண்ணாவியார் வீட்டையும் அடுக் குப்பண்ணத் தொடங்கிட்டினம். அவை கொஞ்சம் பெரி சாப்பிடிக்கிற திட்டம். மாப்பிள்ளைக்கும் கிளிநொச்சிப் பொடியள் விடாங்கள். எங்கடை பிள்ளையார் கோயில் பொடியள் திருவிழா மாதிரி இருக்கும். ஏன் நீங்கள் அடக்க மாகச் செய்யிற யோசனையோ?''

''இல்லை சின்னையா நாங்களும் சிறப்பாகத்தான் செய் யப்போறம். ஊரிலயும் கொஞ்சம் கடன் நிக்குது. இதோடை வாங்கிப் போட்டால் நல்லது. இது மூத்த பெடிச்சியிண்டை சங்கதியெல்லோ'' என்கிறார் பொன்னையா.

''இனி எப்பெப்பவோ ஆர் ஆர் இருக்கிறமோ?'' என் கிறாள் பொன்னம்மா.

''மேளதாளம் சப்பறமணவறை எல்லாம் ஒழுங்கு செய்யத் தானே வேணும்'' சின்னையா சொல்கிறார்:

''அதுகள் இல்லாமல் மொட்டையா என்னெண்டு செய்யிறது. ஊரவை பேந்து நாக்கு வழிப்பினமெல்லோ'' என்கிறாள் பொன்னம்மா.

''சின்னையா காசும் கொஞ்சம் உதவி செய்யோணும். உன்ரை கடனும் கூடிக்கொண்டு போகுது. சீவனோடை இருந் தால் பொயிலை வித்துப் போட்டு சின்னையாவெண்டை கட னிலை ஒரு பகுதியைக் குடுக்கோணும்''

''அதுக்கென்ன. உங்களுக்குச் செய்யாமல் வேறை ஆருக்குச் செய்யிறது. நீங்கள் யோசிக்க வேண்டாம்; தேவை யானதை என்னட்டை மாறலாம். அந்தச் சீட்டை இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் நீங்கள் எடுக்கலாம். வேறை ரெண்டு மூண்டு பேர் கேட்டவை தான் அவை அடுத்தடுத்த மாதம் எடுக்கட்டன்''

''எந்தச் சீட்டைச் சொல்லிருய்?'' பொன்னையா கேட்கிருர்.

''ஏன் அத்தானுக்குத் தெரியாதே பொன்னம்மா சீட்டுப் போடுறது?'' சின்னையா கேட்கிருர்.

''எனக்கு ஏதும் வீட்டில நடக்கிற செலவுகள் தெரியுதே. பொயிலை வித்துப் போட்டு காசைக் கொண்டு வந்து பொத்திப் பிடிச்சபடி குடுக்கிறன். தாயும் மோளும் தான் கொண்டு நடத்துகினம்.''

''இது உங்கடை பொயிலைக் காசில்லை, பொடிச்சியும் நானும் பனங்கட்டி, பிளுட்டு வித்துச் சேகரிச்சது'' என்கிருள் பொன்னம்மா.

''சரி சரி இப்ப உதுகளை ஆரோ கேட்டதே சின்னையா செய்யிற உதவிகளுக்கு நாங்கள் என்னத்தை இக்கணம் செய்யப் போறம்'' என்கிருர் பொன்னையா.

''நான் அப்படி உங்களுக்கு என்ன கூடுதலாகச் செய்திட்டன். எங்கடை சந்ததி அடி எட்டிப் போகக் கூடாது எண்டிறது தான் என்ரை விருப்பம்''

''ஓம் சின்னையா இப்ப ரெண்டு சந்ததி போட்டுது. நீ வந்து உலாவிறபடியால் மாமா மாமா எண்டு எங்கடை பொடியள் உன்னைக் கூப்பிடுதுகள் உன்னோடை இந்த உருத்துப்போகாமல் செய்ய வேணுமெண்டுதான் நாங்களும் ஆசைப்படுறம், அரசடியான் என்ன நினைச்சிருக்கிருனே.''

''என்னை ஒரு நாளும் அவன் கைவிடான். வெறிக்குட்டியர், சண்டியன் சங்கரப்பிள்ளையெட்டைக் காணியை வாங்கிப் போட்டனெண்டு கொஞ்ச நாளாய் படுத்தினபாடு. இப்ப தன்ரை பங்கையும் வாங்கட்டாம். வழக்கையும் விடுருராம் எண்டு நேத்து ஆதாளிமணியம் வந்து கேட்டிது. சண்டியன் சங்கரப்பிள்ளை கோப்பிரேசனிலை வைச்சு அடிச்சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டானும்; காணியை வித்து அவனுக்கெதிராக வழக் காடப் போருராம். நான் முழுக் காணியையும் வாங்கப் போறன். கடைசி மோளுக்கு ஒரு வீட்டு நிலையம் கோலிப் போடலாம் தானே'' என்கிருர் சின்னையா.

அவர்களது உரையாடல் பலவற்றிற்கும் தாவி இன்று காலையில் நடைபெற்ற சியமன் தேர்வில் வந்து நிற்கிறது.

''அத்தான் இப்பதான் எங்கடை ஊருக்கு ஒரு நல்ல காலம் பிறந்திருக்கு எண்டு கோயிலடியில ஆக்கள் கதைச் சினம். உண்மை தான் எக்கவுண்டன் ஜெயராசா சியமனுக் குத்தோதான ஆள் தான் பிளை விடார்'' என்கிருர் சின்னையா.

''அவங்கடை பட்டடையும் நல்லது இனி இவற்றை குணம் போக்குகளும் மெத்தத் திறம்'' அபிப்பிராயம் கூறு கிருர் பொன்னையா.

சிறிது நேரம் யாருமே ஒன்றும் பேசவில்லை. சின்னையா சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொல்கிருர்.

''கலியாண வீட்டிற்குப் பிறகு உங்கடை தம்பி யாற்றை கதை ஒண்டும் பேசிறதில்லை எண்டு இருந்தனுன்; மனம் கேளாதாம். விஷயங்கள் கேள்விப்பட்டிருப்பியள் எண்டு நினைக்கிறன்''

''அதை ஏன் கேக்கிறியள் அண்ணை. நேற்று இரவுங் கூட தம்பியாற்றை கதை சொல்லி மனவருத்தப் பட்டார்; சாம்பலுக்குள்ளை இருக்கிற தணல் மாதிரி உள்ளுக்குள்ளை தம்பியாற்றை பாசம் இருக்கு'' என்று சொல்லிக் கொண்டு பொன்னம்மா குசினிப்பக்கம் போகிருள்.

''என்னத்தைச் சொன்னாலும் உடன் பிறப்பேல்லே'' என்று ஆரம்பித்து பொன்னையாவைக் குறிப்பாக ஒருக்கால் பார்த்துவிட்டுத் தொடர்கிருர் சின்னையா, ''அத்தான் உது பெரிய சங்கடத்தில தான் போய் முடியும் போல கிடக்கு. மணியகாரன் பகுதி நல்லாச் சிலவழிக்கிருங்கள்; ராமலிங் கத்தை தூக்குக்கு அனுப்பித் தான் பழி தீர்க்கிறதெண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறுங்கள். இப்பத்தை நீதவானும் கடுமையானவன். இராமலிங்கத்துக்கும் சண்டியன் சங்கரப்பிள்ளைக்கும் 'ஒப்பின வாறண்ட்' விட்டிருக்காம்''

பொன்னையா ஒன்றுமே பேசாது எதையோ யோசித்துக்கொண்டிருக்கிறுர். சின்னையா தொடர்கிறுர், ''அதுக்குள்ளை பெடிச்சி பரிசு கெடுத்திப் போட்டாள். கந்தப்பண்ணன்ரை டாக்குத்தர் பெடியன் எவ்வளவு தங்கமானவன். அவனைச் சரியில்லை எண்டிட்டு ஒடியிட்டாளே.''

பொன்னையா கரகரக்கும் குரலைச் செருமிச் சரிசெய்து கொண்டு சொல்கிறுர்; ''சின்னையா, வியாபாரி மூலைக்குள்ளை காசுக்கார நல்லதம்பி எண்டு ஒரு மனிஷன் இருந்தவர். முந்தி எங்களெட்டை பொயிலை கட்டுறவர். உனக்கு அவரைத் தெரியாது. அப்ப நீ சிங்கப்பூரில. நல்லதம்பியருக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளையும் ஒரு பொம்பிளைப் பிள்ளையும் தான். நல்லதம்பியர் நல்லா உழைச்சார், அநியாயமான முறையில சம்பாரிச்சார்; பெடி பெட்டையள் கண்கடை தெரியாமல் செலவழிச்சுதுகள். கடைசியில மனிஷன் விசராத்திரிஞ்சு கோயில் கிணத்தில் விழுந்து தான் செத்தது.''

இருவரும் ஏக காலத்தில் வைத்திலிங்கத்தின் குடும்பத்தையும் காசுக்கார நல்லதம்பியாரின் குடும்பத்தையும் ஒப்பு நோக்குகிறுர்கள். பொன்னையா பெரு மூச்சுவிட்டுக் கொண்டே சொல்கிறுர், ''காசுக்கார நல்லதம்பியார் சாகக்கை அண்ணாவியார் உயிரோடை இருக்கிறுர். அவர் அண்டைக்குசொன்னது இண்டைக்கும் காதுக்கை கேக்கிறமாதிரிக்கிடக்கு 'பொன்னையா எங்கடை பழைய ஆக்கள் ஏன் வண்டில் மாட்டிற்குப் பூட்டிற கயிற்றை நாணயக் கயிறு எண்டு சொல்லிறது தெரியுமே? அதிலை ஒரு பெரிய உண்மை இருக்கடா மோனை. வண்டில் காரனின் கையில் இருக்கிற நாணயக்கயிறு தான் வண்டிலை அடக்கி ஆளுறது. அதுபோலத் தான் நாணயம் எண்டு சொல்லுற காசும். பணத்தை ஆளத் தெரியாமல் கைவிட்டால் வாழ்க்கை என்ற வண்டிலும் குடைசாஞ்சுபோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையா ஆழமாக யோசிக்கிறார் 'நாணயக் கயிறு தான் வண்டிலுக்கு Steering, clutch, brake எல்லாமே.'

பொன்னையா தொடர்கிறார், "நாணயத்தைப் பற்றி அண்ணாவியார் இன்னுமொண்டு அடிக்கடி சொல்லுவார்; நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்குது. ஒரு பக்கத் தில இராஜ முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும், மறுபக்கத் தில நாணயத்தின் பெறுமதி இருக்கும். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்களும் முக்கியம், ஒரு பக்கத்தில் சின்னம் இல் லாட்டால் அது செல்லாக் காசு. அது போலத்தான் நாங்கள் தேடிற செல்வத்திற்கும் இரு பக்கங்கள் இருக்கு. எவ்வளவு தொகை தேடிறம் என்பது ஒரு பக்கம், அதை எப்படித்தேடி றம் என்பது இன்னுமொரு பக்கம். அநியாயமாத் தேடினல் அதுவும் செல்லாக் காசுதான்."

சின்னையா விடை பெற்றுச் செல்கிறார்.

"மழை இருட்டு, பூச்சி-புழு கவனம்" என்று சொல்லி அனுப்புகிறார் பொன்னையா.

குசினிக்குள் இருந்து வந்த பொன்னம்மாவுடன் மீண் டும் கலியாண வீட்டு ஏற்பாடுகள் பற்றிய உரையாடலைத் தொடர்கிறார் பொன்னையா.

"வெள்ளணக் கேக்கிறதெண்டிட்டு மறந்து போனன் கலியாண வீட்டுக்கு கிழக்கு மூலையாருக்கும் சொல்லோ ணுமே?"

"அதுவுமொரு நடப்புத்தான். உங்கடை ஆக்களெண் டால் விடுவியளே? அண்டைக்கும் சின்னத்துரை வாத்தி யாற்றை செத்தவீட்டிலைகிழக்குமூலைப் பெண்டுகள் எல்லாம் கட்டிப் பிடிச்சு அழுதவை. சொல்லுங்கோ பாப்பம் கிழக்கு மூலையார் என்ன தினத்துக்கு எங்களுக்குச் சொல்லாமல் விட் டவை. ஒவ்வொரு கலியாண வீட்டுக்கும் சோறு அனுப்பி றவை. வாங்கித்தின்னவுமிடக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிழக்கு மூலையாருக்குச் சொன்னல் லந்தை வளவாருக்கும் சொல்ல வேணும். மெத்தப் பெரிசாத்தான் பிடிக்கப்போறம்.''

தெற்குப் பக்கமாகப் பல்லி ஒன்று சொல்லுகிறது.

''என்ன கொண்டாட்டமோ தெரியேல்ல. பிள்ளையின்ரை கலியாணத்தைப் பற்றி யோசிக்க பல்லி பல்லியாச் சொல்லுது. நேற்று கமலாவின்ரை தலையில பல்லிவிழுந்துது. பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால் மரணம் எண்டு இருந்துதாம். அரசடியான் என்ன நினைச்சிருக்கிறனே'' பொன்னம்மா கவலை தொனிக்கும் குரலில் சொல்கிருள்.

''உந்த மாலைப் பல்லிகளை நம்பேலாது'' என்கிருர் பொன்னையா?

வடக்குப் பக்கமாக இன்னுமொரு பல்லி சொல்லுகிறது. இரவின் அமைதியில் பல்லியின் சத்தம் எதையோ சொல்லுவது போலத் தெரிகிறது.

# 27

அரசடிப் பிள்ளையார் கோயிலில் கந்த புராணத்தின் சூரபன்மன் வதைப்படலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இருட்டுவதற்கு முன் ஆரம்பித்தமழை இன்னும் ஓய்ந்தபாடில்லை. மழை சோனுவாரியாகப் பெய்கிறது. வீசும் காற்று ஊசி முனையாக மனிதனின் உடலைத் தீண்டுகிறது. வட்டிக்கடை வைத்திலிங்கம் தனது அறையில் படுத்திருக்கிருர். இன்று அவருக்கு நெஞ்சு வலி அதிகமாகவே இருக்கிறது. அந்தக் குளிசை ஒன்றை எடுத்து நாக்குக்குக் கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் கொள்கிறார். 'கடுங்குளிர் இப்படிப்பட்ட இருதய நோய்க்குக் கூடாது' என்று 'ஸ்பெஸ்லிஸ்ட்' ஒரு நாள் சொன்னதை வைத்திலிங்கம் நினைத்துப் பார்க்கிறார்.

'முந்தி இரண்டு தரம் வந்த அந்த யமநோய் பேந்தும் வரப் போகுதோ?'–நெஞ்சு வலி அந்தக் குளிகையில் கட்டுப் படாமல் போகும் பொழுதெல்லாம் அவர் அப்படித்தான் நினைத்து ஏங்குவார்.

மனத்தை அதிர்ச்சிபோலத் தாக்கும் சம்பவங்களும் 'கார்ட் அற்றக்' குக்கு காரணமாக அமையலாம் என்று முதற் தடவை இருதய நோயால் பாதிக்கப்பட்ட பொழுது டொக்டர் சொன்னதை அவர் என்றுமே மறக்கவில்லை.

முதல் முறையாக தனக்கு இந்த நோய் வந்ததற்குரிய காரணத்தை எண்ணிப் பார்க்கிறார் வைத்திலிங்கம். அப்பொழுது அவர் மாத்தளையில் இருந்தார். நீண்டகாலமாக வட்டிக்கடை வைத்திலிங்கம், துரைசாமி நாடாருக்குச் சொந்தமான இரண்டு வீடுகளில் ஒன்றில் வாடகைக்கு இருந்தார். அருகிலிருந்த மற்ற வீட்டில் நாடார் குடியிருந்தார். வைத்திலிங்கம் நாடாரின் மகனை வட்டிக்கடைக்குக் கணக்கப்பிள்ளையாக அமர்த்கிறார். துரைசாமி நாடார் அகால மரணம் அடைந்துவிட, அவரது மனைவியான பத்மாவுக்கு பலன் கருதி வைத்திலிங்கம் சில உதவிகளைச் செய்தார். பத்மாவின் அரிசிப்பல்லாலும் ஆட்கொல்விச் சிரிப்பாலும் ஆட்கொள்ளப்பட்ட வைத்திலிங்கத்திற்கு அவளை உதறித்தள்ள முடியவில்லை.

சிறிய தொகைப் பணம் செலவு செய்து அதிக பலனைப் பெறும் வியாபார நோக்குடைய வைத்திலிங்கம் அவளுக்குப் பல வாக்குக்களைக் கொடுத்தார். பொருள் பண்டத்திற்காகக் கலியாணம் செய்ததால் வாய்த்த மனைவி பாக்கியத்திடம் காணாத மையலையும் நளினத்தையும் பத்மாவிடம் கண்டார். தொடர்பு தொடர்ந்து பாக்கியம் நோய்வாய்ப்பட்டு இறந்ததும் உறவு வலுப்பெற்றது. இப்பொழுதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கத்தின் தேவையின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து கொண்ட பத்மா தனது கோரிக்கையை இறுக்கமாகப் பிடித்தாள்.

''கண்டிப்பா எம் மகனுக்கு ஒங்க கடையில நீங்க ஒரு பங்கு தரணும்'' எத்தனையோ சாட்டுக்கள் சொல்லியும் அவள் கேட்டபாடில்லை.

அன்று அவர் போய் கதவைத் தட்டினார். அவள் கதவைத் திறக்கவில்லை. பல தடவைகள் முயன்றும் அவர் படுதோல்வியுடன் வீடு திரும்பினார். 'எவ்வளவு உதவி செய்தும் நன்றி இல்லாதவள்' என்று குறைப்பட்டு நெஞ்சம் குமுறினார். தீராத தாகத்தால் தவித்தார். நெஞ்சில் ஒரு வலி ஏற்பட்டது. உடல் வியர்த்தது. நேரம் செல்லச் செல்ல நெஞ்சு வலி அதிகரித்தது. நெஞ்சைக் கைகளால் அழுத்திக் கொண்டு படுக்கையில் கிடந்து புரண்டார். வேலைக்காரன் பத்மாவிடம் போய்ச் சொல்லியும் அவள் வரவில்லை. கண்டி ஆஸ்பத்திரியில் மூன்று கிழமைகள் பூரண ஓய்விற்காகப் படுக்கையிற் கிடந்தார். அதற்கும் அவள் வரவில்லை. அப்பொழுது தான் மனைவி பாக்கியத்தின் தேவையை, அவளது தூய உள்ளத்தின் உயர்வை அவர் பூரணமாக உணர்ந்தார். ஊருக்குப் போய் மீண்டும் மாத்தளைக்கு வந்தார். பத்மா என்ன நினைத்தாளோ, தானாகவே வந்து அவருடன் பேச்சுக் கொடுத்து, உறவைத் தொடர்ந்து, மீண்டும் அந்தக் கோரிக்கையையும் விடுத்தாள். அந்தத் தடவை ஊருக்குப் போனவர் மீண்டும் மாத்தளைக்குத் திரும்பவில்லை.

இரண்டாவது தடவையாக அந்த நோய் வந்தது. மகள் மங்களத்தின் காதல் சங்கதியைக் கேட்டவுடன் தான் அது வந்திருக்க வேண்டும். அன்று மருமகள் லட்சுமி கூட நின்றாள். அவர் நெஞ்சு வலியால் துடித்த பொழுது உதவினாள். மூளாய் ஆஸ்பத்திரியில் இருந்த மூன்று கிழமைகளும் அவள் கூடவே நின்று கவனித்தாள். இருதய நோயின் இரண்டாவது பீடிப்புக்குப்பின் அவர் மாத்தளைக்குப் போகவில்லை. டொக்டர் பூரண ஓய்வு எடுக்கும்படி வற்புறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்; வைத்திலிங்கம் வீட்டிலேயே தங்கி விட்டார். இப்பொழுது மருந்தும் கையுமாகவே வாழ்ந்து வருகிறார்.

உக்கிரமான காற்று வீசுகிறது. பனைமரங்கள் தலைவிரி கோலமாகப் பேய் ஆட்டம் ஆடுகின்றன.

கிராமச்சங்கத் தேர்தலில் இராமலிங்கம் எவ்வளவோ காசைக் கொட்டி தோல்வியடைந்த கவலையில் மூழ்கியிருந்த வருக்கு மறுநாள் மங்களம் இன்ஸ்பெக்டர் உடன் ஓடினது தீராத வேதனையுடன் வெளியே வெளிக்கிட முடியாத வெட் கத்தைக் கொடுத்தது. மருந்தின் துணையுடன் வீட்டிற்குள் முடங்கிக் கிடந்தார்.

மனேஜர் மாணிக்கவாசகரைக் கொலை செய்வித்தது இராமலிங்கம்தான் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு இரண்டு மூன்று நாட்களாக பொலிஸ்மார்கள், இன்ஸ்பெக் டர் அவரை எத்தனை கேள்விகள் கேட்டார்கள்.

வைத்திலிங்கத்திற்கு நெஞ்சு வலி இரண்டு மூன்று நாட்களாக மிக மோசமாகவே இருக்கிறது.

வெளியே வீசும் காற்றின் வேகம் அதிகரித்துவிட்டது. இது காற்றல்ல, புயலா......?

இன்று மாத்தளையிலிருந்து வந்த அந்தத் தகவலைக் கேட்ட நேரந் தொடக்கம் அவருக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது. 'மாத்தளை வட்டிக்கடையை இராமலிங்கம் துரைசாமி நாடாற்றை மகனுக்கு விற்று விட்டான்' இச் செய்தியை வட்டிக்கடை வைத்திலிங்கத்தால் தாங்க முடிய வில்லை.

'வட்டிக்கடை.........!' அதுதானே அவருக்குப் பணத் தைச் சேகரித்துக் கொடுத்த ஸ்தாபனம், அதனைக் கொண்டு வியாபாரத்தை விருத்தி செய்தார். பேரும் புகழும் கிடைத் தது, நாலுபேர் மதிக்கக் கூடிய பெரிய மனிஷன் ஆனார். இன்று அதுவும் பறிபோய் விட்டதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டுக் கூரையையே பிய்த்து எறிவது போலக் கடுங் காற்று வீசுகிறது மரங்களுடன் மரங்கள் முட்டி, மரத் துடன் அதன் கிளைகளும் இலைகளுமே மோதிக் கொள்வதால் 'ஓ' என்ற ஊளையிடும் சத்தம் பயங்கரமாகக் கேட்கிறது. புயல்தான் வீசுகிறது.

வைத்திலிங்கத்திற்கு யாரோ நெஞ்சுக்குள் கத்தியால் குத்துவது போன்ற வலி ஏற்படுகிறது. அந்த வலி கைக ளெல்லாம் பரவுகிறது. தாங்க முடியாமல் கட்டிலில் புழு வாகத் துடிக்கிறார். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டு கிறது. சத்தியும் வருகிறது. அவருக்கு நன்றாகத் தெரிகிறது அந்த யமநோய் தான் இது, உட்கொண்ட குளிசைக்கு வலி கொஞ்சங்கூடக் குறையவில்லை: இருதய நோயின் மூன்றாவது பாதிப்பு தன்னைப் பிடித்து விட்டது என்பது வைத்திலிங்கத் திற்கு நிதர்சனமாகப் படுகிறது.

''ஐயோ ஐயோ'' அவரது அவலக் குரல் கேட்டு வர அங்கு யாருமே இல்லையே! அடுத்த அறையில் படுத்திருக்கும் லட்சுமி இன்று தொடமாட்டாளாதலால் பின் அறைக்குள் படுத்திருக்கிறாள். மாமாவிற்கு இரவு ஏதாவது வருத்தம் வந்தால் உதவிக்கு ஆள் வேண்டுமென்று வேலைக்காரப் பொடியனை வெளி விறாந்தையில் கிடக்கும்படி லட்சுமி சொல்லியிருந்தாள். மழையும் காற்றும் அதிகமாக இருந்த தால் அவன் குசினிக்குட் போய் படுத்து விட்டான்.

''ஐயோ லட்சுமி''

முணுகலில் தொடங்கி அவரது ஒலி மூர்க்கமாக ஒலிக் கிறது. வெளியில் வீசும் புயற்காற்றின் பேரிரைச்சலில் அவ ரது அவலக்குரல் தேய்ந்து போகிறது. இப்பொழுது உடனடி யாக அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். யார் எடுத்துச் செல்வது?

வைத்திலிங்கத்திற்கு உடல் வேதனையுடன் இன்று மனவேதனையும் அதிகமாகவே இருக்கிறது. தாங்க முடியாத வலியுடன் பல நிகழ்ச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக வேதனை யுடன் நினைவு கூருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை தேடி அலைந்து வந்தவனுக்கு வேலை பழக்கி, கணக்கப் பிள்ளையாக பதவி உயர்வு கொடுத்து வைத்திருந்த சுருட்டுக்கடை முதலாளிக்கு ஒரு சொல்லுச் சொல்லாமல் நாணயமற்ற முறையில் செட்டியாரது வட்டிக் கடைக்குக் கணக்குப் பிள்ளையாக போனது, உலக மகா யுத்தம் நடந்த போது செட்டியார் கடையில் இல்லாத வாய்ப்பைப் பயன் படுத்தி, சாமான்கள் பறிபோய்விட்டதாகச் சொல்லி அந்த முதலைக் கொண்டு வட்டிக்கடை வைத்திலிங்கமாக உரு வெடுத்தது, பெயரெடுத்தது; மாத்தளை வட்டிக்கடையுடன் ஆரம்பித்து பல துறைகளில் கிளைபெருக்கி செல்வத்தைச் சேர்த்தது கொள்ளை லாபம், கறுப்புச்சந்தை, பதுக்கல் கள்ளக்கடத்தல் வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது. பொருள் பண்டம் பெருகியது, ஊரில் அவசரத்தேவைக்குக் காணியை விற்பவர்களிடம் 'தவிக்க முயல் அடித்த' காணி பூமி சேர்த்தது உடன் பிறந்தவன் என்றும் பாராமல் பொன்னையா விடம் நம்பிக்கையாகக் கொடுத்த காணியை அபகரித்தது!

ஐயோ ஐயோ......''

வைத்திலிங்கத்தால் நெஞ்சு வலியைத் தாங்கவே முடியவில்லை. முன்பு இரு தடவைகள் வந்த நோவால் அவர் இப்படிக் கஷ்டப்படவில்லை.

புயலின் கோரத் தாண்டவம் உச்சக் கட்டத்தில் நிற்கிறது? ஊழிக்காலம் வந்து விட்டதோ!

அங்கும் இங்கும் புரண்டு வைத்திலிங்கம், மயக்கமடைந்தவராய், தெளிவற்ற உணர்வுகளுடன் கட்டிலில் அடங்கிக் கிடக்கிறார்.

புகார்ப்படலம் சூழ்ந்த புதிய உலகம் ஒன்று தெரிகிறது.

யாரோ ஒரு பெண் இரு கைகளையும் நீட்டி''வா வா'' என வைத்திலிங்கத்தை அழைக்கிறாள். அவர் கூர்ந்து பார்க்கிறார் அது...... அது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மா அல்ல அவளால் இப்படி உள் அன்போடும் வாஞ்சையோடும் அழைக்க முடியாது. கூறைகட்டி நெஞ்சில் தாலி தொங்க குங்குமப் பொட்டோடு நிற்பது......பாக்கியம் தான்.

அசைந்தாடி வருகிறுள் பாக்கியம்.

'பாக்கியம் நீ இல்லாமல்தான் நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன். இனி எனக்கு ஒரு துன்பமும் இல்லை: நீ என்னிடம் வரமுடியாத வெகுதூரத்தில் நிற்கிறுய். உன்னுல் இங்கே வர முடியாது. ஆனுல் நான் உன்னிடம் வந்து விடப் போகிறேன். நீ பெத்த பிள்ளைகள், உன் பெயருக்கே அவமானத்தைத் தேடித்தந்து விட்டார்கள். நீ என்ன சொல்கிறுய்? எனக்கு பிள்ளைகளிலும் பார்க்க நீங்கள் தான் பெரிசு என்று சொல்கிறுயா? அப்படித்தானே முன்பு ஒரு தடவை சொன்னுய்.

நான் நெருப்புக் காய்ச்சலால் மாறி மாத்தளைக்கு போகும் பொழுது என்னைப் பராமரிக்க நீயும் வர வேண்டுமென்றுய். அப்பொழுது மங்களத்திற்குச் சின்னமுத்து பிள்ளைகளிலும் பார்க்க நீங்கள் தான் முக்கியம் என்று அடம் பிடித்து வந்தாய். என்னை நீ எவ்வளவு அன்பாய்ப் பார்த்தாய் நான் வியாபார விஷயமாக வெளியிடங்களுக்குப் போய் எவ்வளவு நேரம் சுணங்கி வந்தாலும் சாப்பிடாது எனக்காகக் காத்திருப்பாய்... அங்கு உன்னை நிம்மதியாக இருக்க விட்டேனு பாவி. எனக்கும் பத்மாவுக்கும் உள்ள கள்ளத்தொடர்பை எப்படியோ நீ அறிந்து விட்டாய். நீ என்னைக் கண்டிக்கவில்லை. பத்மாவையே ஏசினுய். நீ பத்மாவை ஏசியதற்கு நான் உன்னை அடித்தேன். அவளது அரிசிப் பல்லில் மயங்கிய நான் உன்னை திருவலைப் பல்லுக்காரி என்று பழித்தேன். இன்று தான் உணர்கிறேன் பாக்கியம்!, அன்பு இருப்பது பல்லில் அல்ல: நஞ்சுதான் பல்லில் இருப்பது.'

பாக்கியம் பற்களைக் காட்டாது சிரித்துக் கொண்டு கைகளால் விரைவாக வரும்படி அழைக்கிறுள். வைத்திலிங்கம் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் கிடக்கும் வைத்திலிங்கத்தின் நாசித் துவாரங்களில் இருந்து மூச்சு மிக வேகமாகச் சென்று அடங்குகிறது.

எத்தனையோ மரங்களைச் சாய்த்த அந்தக் கோரப் புயலில் சிக்கி மங்கள வாசத்தின் கோடியில் நின்ற அந்த ஒற்றைப்பனை 'படார்' என்று நிலத்தில் சாய்கிறது.

# 28

இரவு வீசிய புயலின் அகோர விளைவுகள் விடிந்ததும் வெளிச்சமாகத் தெரிகிறது. பனைகள், கறிமுருங்கைகள் இன்னும் பல மரங்கள் முறிந்தும் வேரோடு சாய்ந்தும் கிடக்கின்றன. பனங்காணிகளில் மட்டைகள், கொக்காரைகள், பன்னாடைகள், காவோலைகள் போர்க்களமாகச் சிதறிக் கிடக்கின்றன.

பொன்னையாவுக்கு இரவு நித்திரை வரவில்லை, தோட்டத்தில் குடிலில் கட்டப்பட்டிருக்கும் மாடுகளையும், பட்டிக்குள், அடைக்கப்பட்டிருக்கும் செம்மறி ஆடுகள் பற்றியுமே இரவு முழுவதும் சிந்தித்தார். பாவம் வாயில்லாச் சீவன்கள். குடில்களைக் காற்று தூக்கி வீசியிருக்குமே. மாடுகள் குளிரில் கொடுகிப் போய் இருக்குமே. செம்மறியாட்டுப் படல்கள் பாறி என்னபாடு பட்டுதுகளோ.

கிழக்கு வெளிப்பதற்கு முன் தோட்டத்திற்குப் போய் விட்டார் பொன்னையா. குடில்கள் தூரத்தில் வீசப்பட்டிருக்கிறது. மாடுகள் சேறுடி, கொடுகி குளிரில் விறைத்துப் போய் நிற்கின்றன. வேதனையுடன் பார்த்துவிட்டு மாடுகளை அவிழ்த்து வெளிப்புலவுக்குத் துரத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றிரவு ஊரையே நாசம் செய்த புயலைப்பற்றி அவர் எண்ணிப் பார்க்கிறார். இப்படி ஒரு புயற் காற்றை அவர் தன் வாழ்க்கையில் முன் ஒரு தடவை தான் கண்டிருக்கிறார். அவருக்கு அப்பொழுது வயது பதின்மூன்று அல்லது பதிநான்கு தான் இருக்கும். 'கடுக்கண்டிட்டான்' என்று அவரை அப்பு சொன்ன பராயம். அன்று வீசிய புயலை அவர் வாழ்க்கையில் என்றுமே மறக்க மாட்டார். உடன் பிறப்பு இல்லையே என்று ஏங்கியிருந்த அவருக்கு அன்று தான் ஒரு தம்பி வைத்திலிங்கம் பிறந்தான்: அந்த நிகழ்ச்சியை எண்ணிப்பார்க்கும் பொழுது இன்றும் அவருக்கு இன்பமாகத் தான் இருக்கிறது.

பொன்னையாவின் பார்வை தற்செயலாகத் தோட்டப் பக்கம் திரும்புகிறது. சிங்கப்பூர் சின்னையா தன்னை நோக்கி அவசரமாக வருவது தெரிகிறது.

'என்ன நடந்திருக்கலாம். இரவு வீசிய புயற்காற்றினால் அவரது வீட்டிற்கு ஏதாவது சேதம் நடந்திருக்குமோ. அவசரமான அலுவல் என்றால் தானே அவர் தோட்டத்துக்குத் தேடி வருவார்.'

அருகில் வந்து விட்டார் சின்னையா. மூச்சிளைக்க ஒன்றுமே பேசாது பொன்னையாவின் முகத்தைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு நிற்கிறார்:

''ஏன் சின்னையா என்ன பிழை மோசம் நடந்திட்டுது''

''அத்தான் உங்கடை தம்பியார்......... ராத்திரி மோசம் போட்டார்'' தட்டுத்தடுமாறி பொல்லாத ஆசிரியருக்கு முன் பாடத்தை ஒப்புவிக்கும் மாணவன் போலச் சின்னையா சொல்லி முடித்துவிட்டு, பொன்னையாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

பொன்னையாவின் முகத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கண்டு சின்னையா திகைத்துப் போகிறார். அந்தக் குளிரிலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முகம் குப் என்று வேர்க்க, உடல் முழுவதும் நடுங்க பொன்னையா தலையில் கையை வைத்துக்கொண்டு அவர் அப்படியே நிலத்திலே அமர்கிருர். 'ஐயோ எனக்கு ஒரு தம்பிதான், அவனும் போட்டானே' அவரது உள்ளம் கறை குட்டி போட்ட செம்மறியாடாகக் கதறி அழுகிறது.

சின்னையா என்ன செய்வது என்று யோசிக்கிருர். எதனை எதிர்பார்த்து பயந்து பயந்து அங்கு வந்தாரோ அதற்கு மாருக மனம் கசியும் நிகழ்ச்சி இங்கு நடக்கிறதே! உண்மையில் 'இவன் எனக்குத் தம்பியில்லை. அவனைத்தானே அண்டைக்கே கை கழுவி விட்டிட்டன்' என்று தன்மேல் சீறி விழுவார் என்றே அவர் வரும் பொழுது நினைத்தார். ஆனல் இங்கே......!

சிறிது நேரத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஒன்றுமே பேசாது எங்கோ புறப்படுகிருர் பொன்னையா. சின்னையா மௌனமாக அவரைப் பின் தொடர்கிருர்.

அவரது வீட்டு ஒழுங்கை வந்து விட்டது. ஆனல்...... பொன்னையா வீட்டிற்குப் போகவில்லை.

பொன்னையா பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்த வீட்டு முற்றத்திலே இன்றுதான் அடியெடுத்து வைக்கிருர்.

அவருக்கு வேறு ஒன்றுமே தெரியவில்லை. பெண்களின் ஒப்பாரிகூட அவர் காணும் காட்சியைக் குழப்பவில்லை. எங்கும் அவரது ஒரே தம்பியான வைத்திலிங்கத்தின் உருவம் மட்டுமே தெரிகிறது.

வைத்திலிங்கம் வளர்த்தப் பட்டிருக்கிருர். அந்த மாடத்திற்கு அவர் வந்து விட்டார். தம்பியின் முகத்தை வாஞ்சையுடன் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிருர்.

''தம்பி எட தம்பி! நீ என்னை விட்டிட்டுப் போட்டியே. இனி நான் ஆரையடா தம்பி எண்டு கூப்பிடுவன்.''

தேம்பித் தேம்பி பொன்னையா அழுவதைப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையாவிற்கு மட்டுமல்ல, அங்கு குழுமி நின்ற எல்லோருக்குமே கண்கள் கலங்குகின்றன. பொன்னையாவின் சால்வை ஈரச் சீலையாகிறது. சின்னையா அவரைக் கைகளால் அணைத்துக் கூட்டிக் கொண்டுபோய் முற்றத்தில் இருக்க வைக்கிறார்.

முற்றத்தில் பந்தல் போடுவதற்குக் கிடங்குகள் கிண்டியிருக்கிறார்கள். பொன்னையாவின் சோக நெஞ்சில் இளவயது நினைவுகள் குற்றுயிராகத் துடிக்கின்றன.

இன்னும் சில நாட்களில் தம்பி ஒன்று பிறக்கப்போகிறான். ஆத்தை 'பிள்ளைத்தாச்சி' என்று அப்பு மயிர் களையாது, ஈமச் சடங்குகளில் பங்குபற்றாது, தூரப் பயணம் போகாது இருக்கிறார். ஏழாம் மாதம் நல்ல நாள் பார்த்து, பிள்ளைப் பெறுவிற்கு வேண்டிய நாட்சரக்கு வாங்கிக் கொண்டு வந்தார் அப்பு. அதற்குள் இருந்த மிளகுகளை பொன்னையா எண்ணிப் பார்த்தார். அது தொகையில் ஒற்றையாக இருந்ததால் தம்பிதான் பிறக்கும் என நம்பினார். ஆத்தைக்கு நிறைமாதத்தில் வயிற்றுநோக்காடு தொடங்க மழையும் தொடங்கி விட்டது. அப்பு அந்த மழைக்குள் சென்று மருத்துவிச்சியை அழைத்து வந்தார். கடூரமான புயல் அடிக்கும் பொழுதுதான் குழந்தை பிறந்தது. "வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி," என மருத்துவிச்சி வாழ்த்தியதிலிருந்து தம்பிதான் பிறந்திருக்கிறான் என இளங் கன்றாகத் துள்ளினார் பொன்னையா. மூத்தம்மான், ஆண் குழந்தை பிறந்ததை அறிவிக்க ஒரு தடியை எடுத்து வீட்டுக்கூரையிலே தட்டப் போனார். அதற்குள் அந்தப் புயற்காற்று கூரையைப் பிய்த்தெறிந்து விட்டது.

பந்தல் போட்டு முடிகிறது. இன்னும் வெள்ளை கட்டப்படவில்லை. பொன்னையா பெருமூச்சுடன் அடிவளவைப் பார்க்கிறார். அந்தக் காணியைத்தான் பொன்னையா வைத்தியலிங்கத்திற்குப் பறி கொடுத்தது. பொன்னையாவுக்கு அந்தக் காணி சொந்தமாக இருந்த காலத்தில் பனந்தோப்பாக இருந்தது. இப்பொழுது பனைகள் எல்லாம் தறிக்கப்பட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலமாக இருப்பதைப் பார்க்க அவருக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது: அந்தக் காணிக்குள் நின்ற ஒற்றைப் பனையும் நேற்று வீசிய புயலுக்கு முறிந்து விட்டது.

செத்த வீட்டிற்கு ஆட்கள் வரத் தொடங்கி விட்டார்கள்.

எல்லோரும் வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் நிலை கண்டு அனுதாபப் படுகிறார்கள்.

''பாவம் ரண்டு பிள்ளையளைப் பெத்தும் பிரயோசன மில்லாமல் போச்சு. சீவன் போகக்குள்ளை ஒருதரும் நிக் கேல்லையாம். செத்த வீட்டுக்குக் கூட ஒருதரும் இல்லை. பிள்ளையளைப் பெத்து வளவன்.........!''

''இரண்டும் தலை தெறிச்சுத் திரியுதுகள். ஒண்டு மனே ஜரைச் சுடுவிச்சுப் போட்டு, தேப்பன் செத்துக்கிடக்க ஒளிச் சுத்திரியுது. மற்றது கட்டின புருஷனை விட்டிட்டு கள்ளப் புருஷனோடை திரியுது. சீலக் கெட்டுதுகள்''

இரவு வந்து விட்டது.

எல்லோரும் இராமலிங்கம், மங்களம் வரவை நோக் கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

செவ்வாய்க்கிழமை இரவு நீள்கிறது.

# 29

இன்றைக்கு வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் ஈமச் சடங்கு என்பதைப் பறைமேளச் சத்தம் ஊரெல்லாம் பறை யடிக்கிறது.

அவ்வூரில் பலர் பறைமேளச் சத்தம் கேட்டே படுக் கையை விட்டு எழுந்தனர். 'செத்து மூண்டு நாளாக் கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவத்தை இண்டைக்குத்தான் எடுக்கப் போயினம் போல கிடக்கு. கொள்ளி வைக்கிறதுக்கு மோன்காரன் வந்திட்டா னுக்கும்.'

வைத்திலிங்கத்தின் மகன் இராமலிங்கமும் மகள் மங் களமும் வந்து விட்டார்களோ என்பதை அறிவதே, செத்த வீட்டை நோக்கி விரைபவர்களது ஆவல்.

மங்கள வாசத்தின் வாசலில் அமங்கலமாக இரு பெரிய மொந்தன் குலைவாழைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

முற்றத்தில் தட்டிப் பந்தல்போட்டு, வெள்ளை கட்டப் பட்டிருக்கிறது. பந்தலுக்குள் கிரியை செய்யப்படும் பகுதி யில் மாவிலைத் தோரணங்களைத் தொங்கவிட்டு, நான்கு வாழைக் குட்டிகள் கப்புகளில் கட்டப்பட்டிருக்கின்றன.

மங்கள வாசத்தின் 'கேற்' 'ஆ' வென்று திறந்திருக் கிறது.

ஆண்கள் உட்பந்தல், மதிற்கரை, வீட்டுவாசல், வெளித்தெரு ஆகிய இடங்களில் சிதறி நிற்கிறார்கள். பெண் கள் சிறு சிறு கூட்டமாக உள்ளே செல்கிறார்கள். புது ஆட் களின் வரவை அறிவிக்க மேளம் விட்டு விட்டு ஒலிக்கிறது. பறைமேளச் சத்தம் கேட்காத இடை வேளைகளில் ஒப்பாரிச் சத்தம் பலமாகக் கேட்கிறது.

ஆண்களுக்கு வெற்றிலை, சுருட்டுக் கொடுக்கும் வேலையை மேற்பார்வை செய்துவிட்டு சிங்கப்பூர் சின்னையா வெளியே வருகிறார். ''என்ன மூப்பனவை கைஓஞ்சு போச்சுப் போல கிடக்கு. வெத்திலை போடுறியளோ...? ஏதோ ஒத்து மேளி...... கொஞ்சம் இறுக்கித் தட்டுங்கோ, சுணங்காமல் சவம் எடுக்கோணும்'' பறைமேளம் அடிப்பவர்களுக்கு நோ காமல் உத்தரவைப் பிறப்பித்துவிட்டு, சின்னையா கேற்வரை யும் வந்து தெருவைப் பார்க்கிறார். 'இண்டைக்கெண்டா லும் மோன் பொடியன் வந்திட்டானெண்டால்......'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுநாட்களாக வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் மக்களின் வரவை எதிர்பார்த்திருந்த ஊற்றூர் உறவினர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகி விட்டது. மகள் மங்களம் தான் வராவிட்டாலும் இராமலிங்கமாவது வரக் கூடாதா என சின்னையாவின் மனம் ஏங்குகிறது.

'பாவம் இந்த மனுஷனுக்கு, பெத்து வளர்த்த பிள்ளை கொள்ளிவைக்கப் பலன் இல்லாமல் போட்டுது '

நேற்று இரவு நெருங்கிய உறவினர்களும் வயதுக்கு மூத்தவர்களும், ஊரில் பெரியவர்களும் ஒன்று கூடி இனி என்ன செய்வது என்று யோசித்தனர்.

வயது போன ஒருவர் சொன்னார்: ''இரண்டு நாளாப் போச்சு மகனைக் காணேல்ல. ஏதோ இண்டைக்கு இரவைக்கு அல்லாட்டில் நாளைக்கெண்டாலும் வந்தால் மெத்த நல்லது. அப்பிடி வராட்டால் வைச்சுக் கொண்டிருந்து என்ன செய்யிறது? எப்பிடியும் நாளைக்கு எடுத்துப் போடோணும். நாளையிண்டைக்கு வெள்ளிக்கிழமை. வெள்ளிக்கிழமை வீட்டை விட்டுச் சவம் எடுக்கக் கூடாது. இனி சனி மட்டும் என்னண்டு வைச்சிருக்கிறது. திங்கட்கிழமை இரவு செத்திருக்கிறார். எத்தினை மணிக்குச் செத்ததெண்டும் தெரியேல்ல......''

அப்பொழுது சின்னையா கேட்டார், ''ஆர் அப்ப கொள்ளி வைக்கிறது?''

''இராமலிங்கம் வராட்டால் என்ரை மருமோன் கொள்ளி வைக்கட்டன். பெரிய தேப்பனுக்கு பெறுமோன் கொள்ளி வைக்கலாம் தானே'' வைத்திலிங்கத்தின் மனைவி பாக்கியத்தின் அண்ணன் தனது மற்றைய தங்கையின் மகனைச் சிபார்சு செய்கிறார்.

வயதுக்கு மூத்தவர் தனது தனித் தன்மையை விட்டுக் கொடுக்கவில்லை. ''என்ன தம்பி தலை இருக்க வாலாடுறதே. அவன் தமையன் மலைபோல இருக்கிறான்; அவன் இருக்கபொம்பிளைவழிப் பெறுமோன் கொள்ளிவைக்கிறது எங்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை? இனி அண்டைக்கு வந்தவன். இஞ்சையே அடை கிடையாக் கிடக்கிருன். சின்ன வயதில தாய் தேப்பனைப் பறிகொடுத்த பிறகு அவன் தானே வளத்தவன். எனக்கெல் லோ தெரியும் அவன் இவனோடை பட்ட கஷ்டம்.''

'கலியாண வீட்டுக்கு வராதவனை எப்பிடி கொள்ளி வைக்கக் கேக்கிறது.' இப்படிக் கேட்கத்துணிந்த வைத்திலிங் கத்தின் மச்சான், வயதுக்கு மூத்தவரின் விளக்கத்துக்குக் கட்டுப்பட்டு நின்றார்.

இறுதியில், நாளைக்குச் சவம் எடுக்க வேண்டும் என் றும், இராமலிங்கம் வராவிடில் பொன்னையாவே கொள்ளி வைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. நேற்றி ரவே குடிமக்களுக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது.

அந்தச் செய்தியை சின்னையாதான் பொன்னையாவுக்கு எடுத்துச் சொன்னர். அதனைக் கேட்டதும் பொன்னையா விம்மி விம்மி அழுதார்.

'தம்பி......என்ரை கையால நான் உனக்குக் கொள்ளி வைக்கிற பலனே?'

பச்சைத் தென்னோலை வெட்டி, பாடை கட்டத் தொடங்கி விட்டார்கள். 'பூப்பாடை சோக்கா இருக்கோ ணும்' என்று சம்பந்தப் பட்டவர்களிடம் சொல்லிவிட்டு மீண்டும் தெருப்பக்கம் எட்டிப் பார்க்கிருர் சின்னையா. அவ ருக்கு நேரம் போகப் போக மனவேதனை கூடுகிறது.

நேற்றுக் காலை பயணத்தால் வந்து, செத்த வீட்டில் ஓடியாடி அலுவல் பார்த்துக் கொண்டிருக்கும் பொன்னையா வின் மகன் கணபதிப்பிள்ளை மேல் சின்னையாவின் பார்வை செல்கிறது. அவர் மனம் கணபதிப்பிள்ளையையும் இராம லிங்கத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறது.

ஒவ்வொரு வருஷமும் கோயிலில் புராணம் படிக்கும் சின்னையா கந்த புராணத்தில் வரும் காட்சிகளை அன்றாட வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த காண்டத்தில் சூரனின் மகன் இரணியன் யுத்த களத்தில் தோற்கடிக்கப்பட்டு களைத்த சமயத்தில் சொன்னான்: "எனது தந்தை முருகக் கடவுளது வேலால் இறப்பது திண்ணம்: அவர் மட்டுமல்ல அசுரர்கள் எல்லோருமே இறந்து விடுவார்கள். தந்தை இறந்தால் அவரது ஈமக் கிரியை செய்ய ஒருவரும் இல்லாவிட்டால் தந்தைக்கு வசை: ஆகவே நான் தொடர்ந்து போருக்குப் போகாது தந்தைக்கு ஈமச் சடங்கு செய்வதற்காக இருக்கப் போகிறேன். நான் போருக்குப் போகாததால் எனக்கு வசை வந்தாலும் வரட்டும், ஆனால் தந்தைக்கு ஈமச் சடங்கு செய்யாததால் வசை வரக்கூடாது."

சின்னையா பெருமூச்சுடன் மனத்துக்குட் சொல்கிறார். 'இரணியனுக்கு இருக்கும் இரக்க சிந்தை இராமலிங்கத்திற்கு இல்லையா?'

குருக்களும் அவரது கையாளும் கிரியை செய்வதற்கு வருகிறார்கள். அவர்களை அழைத்துச் சென்று குருக்களுக்கு மாந்தோல் போட்டு அமரச் செய்கிறார் சின்னையா.

அழுது ஓய்ந்த பெண்கள் குடும்பக் கதை, ஊர்ப்புதினங்கள் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொன்னம்மா, மாப்பிள்ளை வேல்முருகனின் தாய்க்குச் சொல்கிறாள் ',எங்கடை பொடியளின்ரை கலியாண வீடும் எட்டத்தான் வைக்கவேண்டி வரும்: ரெண்டு பேற்றை பலனும் இழுவட்ட பலனாக் கிடக்கு. அவர் தானே கொள்ளி வைக்கப்போறார். இனி ஆட்டத்துவசம் முடியத்தானே வைக்கோணும்."

வெளியே ஒரே பரபரப்பு. கார் ஒன்று வந்து நிற்கிறது: எல்லோரும் எட்டிப் பார்க்கிறார்கள். 'இராமலிங்கம் வந்து விட்டானோ? அல்லது மங்களம் வந்து விட்டாளோ?'

காருக்குள்ளிருந்து டொக்டர் செந்தில்நாதன் இறங்கி நிதானமாக வீட்டிற்குள் நுழைகிறார். ஓய்ந்திருந்த பறை மேளம் கொட்டுகிறது. மங்களமும் கூட வருகிறாளோ என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் விடுப்புப் பார்க்கிறார்கள். சின்னையா ஓடிவந்து அவரை உள்ளே அழைத்துச் செல்கிறார்:

டொக்டர் செந்தில்நாதன் சிங்கப்பூர் சின்னையாவைப் பார்த்து தலையை ஆட்டிக்கொண்டு பெருமூச்சுடன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, மாமனாக இருந்த வைத்திலிங்கத்திற்குத் தனது இறுதி மரியாதையைச் செலுத்த பூதவுடல் இருக்கும் இடத்தை நோக்கி வருகிறார்.

புதிதாக யாரும் நெருங்கிய உறவினர்கள் வந்து விட்டால் பெண்கள் ஓடிச்சென்று அவரது காலைப்பிடித்து அழுவது வழக்கம். செந்தில்நாதனைக் கண்டதும் லட்சுமி ஓடிச் சென்று அவரது காலில் தலையை அடித்து ஒப்பாரி வைத்து அழுகிறாள்.

''ஐயோ என்னைப் பெத்த ராசா......
எங்கடை ஆசை மாமாவின்
கண்களில் முளிக்கவில்லை
கைக்கடன் செய்யவில்லை
பக்கத்தே இருக்கவில்லை
பசுவின் பால் வார்க்கவில்லை,
எங்கள் மாமாவுக்கு
கொள்ளி இரவல்,
குடமோ இரவல்......''

டாக்குத்தரை கட்டி அழக் கூச்சப்பட்டோ என்னவோ லட்சுமியுடன் பொன்னம்மா மட்டும் தான் கூடி அழுகிறாள். இதனைப் பார்த்துக் கொண்டு இருக்க மனம் பொறுக்காத வெறிக்குட்டியரின் மனைவி சின்னம்மா எழுந்து சென்று லட்சுமியின் கழுத்தில் ஒரு கையையும் பொன்னம்மாவின் கழுத்தில் மறு கையையும் வைத்து ஒப்பாரியைத் தொடர்கிறாள்.

லட்சுமியின் சோக நிலையைக் கண்டதும் மனம் வெதும்பியபடி டொக்டர் செந்தில்நாதன், வைத்திலிங்கத்தை வளர்த்திருக்கும் [illegible] வந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவுடலை சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்து தனது இறுதி மரியாதையைச் செலுத்துகிறார் செந்தில் நாதன். பூதவுடலின் வாயும், கால்களும் வெள்ளைத்துணியால் கட்டப்பட்டிருக்கிறது. மேலே கூரையில் ஒரு வெள்ளைச்சீலை கட்டப்பட்டிருக்கிறது. தலைமாட்டில் ஒரு குத்து விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. சின்னையா குத்துவிளக்குக்கு எண்ணெய் விட்டுத் திரியைத் தூண்டி விடுகிறார்.

செந்தில்நாதன் சுவரைப் பார்க்கிறார். படங்கள் எல்லாம் திருப்பி மாட்டப் பட்டிருக்கின்றன. அவரும் மங்களமும் புதுத் தம்பதிகளாக எடுத்து பெரியதாக்கப்பட்ட கலியாணப் படத்தில் அவரது பார்வை சென்று திரும்புகிறது.

செந்தில்நாதன் பந்தலுக்குத் திரும்புகிறார். கொள்ளி வைக்கப் போகும் பொன்னையா தோய்ந்து கோடிவேட்டி உடுத்தி கிரியை செய்யும் இடத்தை நோக்கிப் போகிறார்.

குருக்கள் கும்பங்கள் வைத்திருக்கிறார். புதுச் சட்டி ஒன்றில் உமி இட்டு தடிச்சுள்ளிகளைக் குவித்து நெய்யை ஊற்றி நெருப்பை மூட்டுகிறார்.

சின்னையா ஓடிச் சென்று பறைமேளத்தை நிறுத்தும்படி சொல்லிவிட்டுத் திரும்புகிறார்.

பொன்னையா பூணூல் போட்டு விரலிலே தருப்பை இட்டு குருக்கள் முன் நிற்கிறார். மந்திரங்கள்" ஓதுகிறார் குருக்கள்.

கிரியைப் பந்தலுக்கு அருகில் இருந்தவரிடம் குட்டியர் சொல்கிறார் "ஐயரெட்டைச் சொல்லி சுணங்காமல் முடிக்கச் சொல்லுங்கோ. பிணம் நாறிப் போச்சு."

பக்கத்தில் இருந்த எக்கவுண்டன் ஜெயராசா சொல்கிறார், "கிரியை செய்யத் தொடங்கினப் போல அதை பிணமாக நினைக்கிறதில்லை. குருக்கள் அதைத் தெய்வமாக வைச்சுத்தான் எல்லாம் செய்வார். இதில் குற்றம் குறை இருந்தால் அந்த ஆன்மா அந்தரிச்சுப் பேயாகி வீட்டைச் சுத்துமாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர் செந்தில்நாதன் அங்கு நடைபெறும் சடங்குகளைக் கவனமாகப் பார்க்கிறார்.

''இனிக் குளிப்பாட்டலாம்'' எனக் குருக்கள் சிங்கப்பூர் சின்னையாவைப் பார்த்துச் சொல்கிறார்.

வயதுக்கு மூத்தவர்களால் ஏற்கனவே யோசித்து நியமிக்கப்பட்டிருந்த 'ஒன்றை விட்ட' மகன் வழியில் உள்ள மூவர் தண்ணீர் அள்ளத் தயாராகிறார்கள். சின்னையா அந்த மூவரில் ஒருவராக கணபதிப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

கோடிப் பக்கமாக கட்டிலுடன் சவம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கே மூன்று முருக்கங்கதியால் நாட்டி வெள்ளை கட்டப்பட்டிருக்கிறது. அரப்பு எலுமிச்சங்காய் உள்ள தட்டத்தை பரியாரி சவத்தின் தலைமாட்டில் வைக்கிறான்.

அரப்பும் எண்ணெயும் வைத்துக் குளிப்பாட்டி முடிகிறது; பட்டுவேட்டி கட்டி, மாறுகரைச் சால்வையும் போடுகிறார்கள். சவம் பந்தலுக்கு எடுதது வரப்படுகிறது. மீட்டும் குருக்கள் மந்திரங்கள் ஓதுகிறார்.

எக்கவுண்டன் ஜெயராசா திருப்பொற் சுண்ணம்பாட பொன்னையா சுண்ணம் இடிக்கிறார்.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி......

இந்தப் பாடலைப் படிக்கும் பொழுது ஜெயராசா பாடலின் கருத்தை மனதில் நினைத்து 'மெய்யெனும் மஞ்சள் நிறைய' என்ற அடிவரத் தலையை ஆட்டுகிறார்.

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் பேரப் பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய உறவினர்கள் வாய்க்கரிசி போடுகிறார்கள்.

ஒப்பாரி வைக்கும் பெண்கள் பகுதியில் பரபரப்பு ஏற்படுகிறது. சவப்பெட்டியின் மூடியைச் சின்னையா எடுத்து வருகிறார்:

பறை கொடூரமாக ஒலிக்கிறது.

பெண்களின் ஒப்பாரி உச்சஸ்தாயியை அடைகிறது.

''மாமா என்னையும் கூட்டிக் கொண்டு போங்கோ... நான் இஞ்சை இருந்து என்ன செய்யிறது நானும் வாறன்'' லட்சுமி நெஞ்சில் அடித்தடித்து சவத்திற்கு மேல் புறண்டு அழுகிறாள்

மூடும் பொழுது மூடியை விலக்கி விடுகிறாள் லட்சுமி பொன்னம்மாவும் சின்னம்மாவும் லட்சுமியை இழுத்து எடுக்கிறார்கள்.

செந்தில்நாதன் நடப்பவற்றைக் குறிப்பாகப் பார்த்து விட்டு, பலரை இனம் காண்கிறார். செத்த வீட்டில் மாரடிச்சு, குத்தி முறிஞ்சு தங்களது போலி அன்பை நடித்துக் காட்டுபவர்கள், பார்த்துப் பழகிய தோஷத்தால் ஒப்பாரி வைப்பவர்கள், அழாவிட்டால் மற்றவர்கள் தங்கள் அன்பைக் குறைத்து மதிப்பார்களோ என்ற தாழ்வுணர்ச்சியால் ஓலமிடுபவர்கள், என்றோ இறந்த தமது சொந்தக்காரரை நினைத்து ஏங்கி அழுபவர்கள், உண்மையான வேதனையால் துடிப்பவர்கள்.

சின்னையாவும் இன்னும் மூவரும் சவப்பெட்டியைக் கால்மாட்டால் தூக்கிக் கொண்டு வந்து பூப்பாடையில் வைக்கிறார்கள்.

பறைமேளம் விசாலித்து முழங்குகிறது.

குடிமக்களில் நால்வர் பாடையைத் தூக்குகிறார்கள்:

குருக்களிடம் இருந்து வாங்கிய தீச்சட்டியைப் பரியாரியிடம் கொடுக்கிறார் பொன்னையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருப்பவர்களில் சிலர் முன்னுக்குச் செல்கிறார்கள். சின்னையா, எக்கவுண்டன் ஜெயராசா, மற்றும் வயதுக்கு மூத்த சிலர் பிரேதத்திற்குச் சிறிது முன் செல்ல பொன்னையா அவர்களுக்கும் பிரேதத்திற்கும் நடுவில் தனியாளாகப் போய்க் கொண்டிருக்கிறார்.

கேற்வரைக்கும் ஒப்பாரி வைத்துக் கொண்டு லட்சுமி, பொன்னம்மா, சின்னம்மா இன்னும் சில மிக நெருங்கிய உறவினர்கள் வருகிறார்கள்.

''ஐயோ என்னைப் பெத்த ராசா........ இனி எந்தப் பிறவியில உங்களை நான் காண்பன். ஐயோ...... கைதவற விட்ட எங்கள் மாமாவைக் காசு கொண்டு போனாலும் தேடக் கிடக்காது......ஓ...ஓ...ஓ...'' தலைவிரி கோலத்தோடு நெஞ்சில் அடித்துக் கொண்டே கதறுகிறாள் லட்சுமி.

சின்னம்மாவும் பொன்னம்மாவும் லட்சுமியைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு வீட்டிற்குட் போகிறார்கள்;

பிரேத ஊர்வலம் ஆனைவிழுந்தான் சுடுலையை நோக்கிச் செல்கிறது.

கட்டாடி வழியெல்லாம் நிலப்பாவாடை விரித்துச் செல்கிறான். ஊர்வலத்தை நிறுத்தி சந்திக்குச்சந்தி பறைமேளச் சமா நடக்கிறது. பாடையில் கட்டப்பட்ட இளநீர்களை சந்திக் கொன்றாகபரியாரி கத்தியால் வெட்டி வீழ்த்துகிறான்.

அரசடிப் பிள்ளையார் கோயிலடிக்குக்கிட்ட ஊர்வலம் வந்ததும்பறைமேளம் அடிப்பது நிறுத்தப்படுகிறது கட்டாடி கோயிலுக்கும் பாடைக்கும் இடையே வெள்ளை பிடிக்கிறான்.

குச்சொழுங்கையில் ஆரம்பித்த ஊர்வலம் பல முடக்குளைத்தாண்டி தார்றேட்டுக்கு வந்து விட்டது.

பாடை தளம்புகிறதா என்பதைப் பார்த்து அறிவதற்கு, எக்கவுண்டன் ஜெயராசாவால் பின்னுக்கு அனுப்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சின்னையா செந்தில்நாதனைக் கண்டு உரையாடுகிறார். வைத்திலிங்கம் வீட்டில் சமீபத்தில் நடந்த சங்கதிகளில் மங்களம் ஓடிப்போன சங்கதிகளைத் தவிர்ந்த மற்றையவைப் பற்றி சின்னையா செந்தில்நாதனுக்கு அபிப்பிராயம் தெரிவித்துவிட்டு, ஆங்கிலத்தில் அழகாகச் சொல்கிறார். ''பணம் தான் உலகத்தில் உள்ள பாவங்களுக்கு முழுமுதற் காரணம்.''

அதற்கு டொக்டர் சொல்கிறார் ''பணம் எல்லோருக்கும் சமமாக இருக்கக் கூடிய ஒருநிலை வந்தால் பிரச்சினைக்கே இடமில்லை. அதுவே சரியான பரிகாரம்''

சுடலை வந்து விட்டது.

ஊர்வலத்தில் வந்தவர்கள் சுடலை மடத்திலும் மதிலுக்கருகிலும் சிதறி நின்று பலதும் பத்தும் பேசுகின்றனர்.

வட்டிக்கடை வைத்திலிங்கத்தின் வாழ்க்கையைப் பற்றிப் பலரும் பல கோணத்தில் இருந்து விமர்சனம் செய்கிறார்கள்.

''பாயில சீயில கிடந்து மனிஷன் அருந்தாமல் போய்ச் சேந்திட்டுது. இது இவருக்கு ஒரு நல்ல சாவு.''

சிலருக்குச் சுடலை ஞானம் பிறக்கிறது.

''மனிஷன்ரை சீவியம் உப்பிடித்தான். போன வியாழக்கிழமை என்னோடை என்ன மாதிரிக் கதைச்சுக் கொண்டிருந்தது இண்டைக்கு சுடலையிலை கிடக்குது''

''செட்டியாரட்டை தட்டியெடுத்த வட்டிக்கடையை நாடாரெட்டை பறிகொடுத்தாச்சு''

சிலர் தத்துவம் பேசினர் ''வட்டிக் காசு வாங்கிற குடும்பம் ஒரு நாளும் உய்யாது, வட்டிக்காசில் வளர்ந்த பிள்ளைகள் ஒரு நாளும் உருப்படாது செல்லாக் காசாத்தான் போகும். இராமலிங்கம் இவற்றை சொத்தை அழிக்கத்தான் பிறந்திருக்கிறான். காசு பணம் ஒரு நாளும் ஒரு இடத்தில நிக்காது. அதுதானே நாணயங்கள் வட்ட வடிவமான உருவமாயிருக்கு ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவட்டங்கள் கூடிநிற்கும் இடத்தில் சதானந்தன் சொல்கிறான் ''எங்களை சாதிக் கட்டுப்பாட்டைக் கட்டிக் காக்கும் இந்தக் குடிமை வேலைகளை நாங்கள் செய்தால் என்ன?''

குடிமை வேலை செய்யும் சின்னானால் அடுக்கப்பட்டிருக்கும் விறகின் மேல் பிரேதப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

சுவாரஸ்யமாக உரையாடலில் ஈடுபட்டிருப்பவர்களை வாய்க்கரிசி போட வரும்படி சின்னையா அழைக்கிறார் உறவினர்கள் ஒவ்வொருவராகச் சென்று சால்வையால் தலைப்பாகை கட்டி பிரேதத்தைச் சுற்றி வந்து கும்பிட்டு பரியாரியின் கையில் இருக்கும் சில்லறைக் காசுகள் கலந்தவாய்க் கரிசியை அள்ளிப் போடுகிறார்கள்.

வாய்க்கரிசி போட்டு முடிந்து விட்டது.

வட்டிக்கடை வைத்திலிங்கத்திற்கு நெஞ்சாக்கட்டை வைக்கப்படுகிறது. கொள்ளிக்குடம் பொன்னையாவின் தோளில் வைக்கப்படுகிறது. கொள்ளிக் கட்டையை வலது கையால் பின்புறமாகப் பிடித்துக் கொண்டு பொன்னையா மூன்று தடவைகள் பிணத்தைச்சுற்றி வருகிறார். ஒவ்வொரு தடவையும் பிணத்தின் தலை மாட்டுப் பக்கமாக வரும்போது பரியாரி கொள்ளிக் குடத்தைக் கத்தியால் கொத்துகிறான். கடைசித் தடவையாகப் பிணத்தைப் பின்புறமாகப் பார்த்துக்கொண்டு கொள்ளிக் குடத்தைப் போட்டு விட்டுக் கொள்ளிக் கட்டையைச் செருகுகிறார்.

தோளிலே இருந்த பூணூலை அறுத்துப் போட்டு விட்டுக் கலங்கும் கண்களுடன் பின்புறம் பாராது கைகளும் கால்களும் நடுங்க முன் செல்கிறார். சின்னையா அவரைக் கைத்தாங்கலாகப் பிடிக்கிறார்.

சவத்தை எரிக்கும் சின்னான் தோட்டம் செய்யக் காணி தாறதென்று ஆசைக் கதையைச் சொல்லி வேலை முடிந்ததும் ஏமாற்றிய நாணயமற்ற வைத்திலிங்கக் கமக் காரனின் செயலை எண்ணிப் பார்க்கிறான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அத்தான் நாளைக்குக் காலமை காடாத்துவம். சாம்பல் ஆறட்டும்'' சின்னையா ஆறுதலாகச் சொல்கிருர்.

பொன்னையா சுடலையுடன் சேர்ந்திருக்கும் பெருவெளியைப் பெருமூச்சுடன் பார்க்கிருர்.

'சுடலைக்காரர்' வீடு திரும்புகிருர்கள். பொன்னையாவின் பார்வை கொட்டில் ஒன்றைக் கோயிலாகக் கொண்டு சூலத்தின் உருவில் வீற்றிருக்கும் சுடலை வைரவர் மேல் சென்று தரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
★ 06 DEC 2021
LIBRARY

704531

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதை நிகழ்களங்களையும் கதை மாந்தர் உரையாடல்களையும் அமைப்பதிலே சதாசிவம் அவர்களிடம் அசாதாரண திறமை காணப்படுகிறது. அத்திறமையினைத் தமிழ் பேசும் நல்லுலகம் வரவேற்றுப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

-பேராசிரியர் சு. வித்தியானந்தன்
உப வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஒரு நாவலுக்குரிய இலட்சணங்கள் அனைத்தும் உங்கள் கையில் இருக்கும் 'நாணயம்' நாவலில் அமைந்துள்ளன. பிரதேச நாவல்போட்டியில் மலையகத்திற்கான முதற் பரிசு பெற்ற க. சதாசிவம் படைத்துள்ள மிகத்தரமான யாழ்ப்பாணப் பிரதேச நாவல் இது.

-இளங்கீரன்

Young Sathasivam works as Medical Practitioner in hill country. He may be described as one of the best talents to flower in the Seventies. His stories have won acclaim in South India too.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. S. SIVAKUMAR
'Tamil Writing in Sri Lanka'